நமது தலைமுறையில்
உலகை நற்செய்திமயமாக்குவது
எங்ஙனம்?

# ஆனந்த அறுவடை



R. ஸ்டான்லி

# ஆனந்த அறுவடை

**R. ஸ்டான்லி,** ক.ক., গ্ব.জ্যক্ষ্ট.,
*திருமறைப் போதகராய்*
*மாறிய ஒரு கட்டிடப் பொறியியலர்*

*வெளியிடுவோர்:*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
<bym@sancharnet.in> *www.BlessingYouthMission.org*

**HAPPY HARVEST** (Tamil)

Copyright 2002 R. STANLEY

First Edition : May 2002
This Edition : October 2009

*Typed by Mrs. Malliga Lal*

*Pagesetting by Mr. K. Gunasekaran*

இப்புத்தகத்தில் திருமறையின் புதிய மொழியாக்கங்கள் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுள்ளன.

*Printed by*
Bapuji Printers
5 Kurban Ali Street
Woods Road
Chennai 600 002

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | ஓர் அறுவடையாளனின் கதை | ... 5 |
| 2. | மிஷனரி பைபிள் | ... 15 |
| 3. | இரட்சிக்கவே இரட்சிக்கப்பட்டோம்! | ... 24 |
| 4. | பெந்தெகொஸ்தேயின் நோக்கம் | ... 31 |
| 5. | இருளுலகில் திருச்சபை | ... 39 |
| 6. | அது நற்செய்திதான்! | ... 49 |
| 7. | ஆண்டவருக்கு ஆள் சேர்ப்பது எப்படி? | ... 59 |
| 8. | இறுதி வாரமும் இழந்த உலகும் | ... 69 |
| 9. | மிஷனரிகளை அனுப்புவதென்றால் என்ன? | ... 80 |
| 10. | மிஷனரிப் பணிக்காய் ஜெபிப்போம்! | ... 91 |
| 11. | மிஷனரிப் பணிக்குக் கொடுப்போம்! | ... 100 |
| 12. | வா, உன்னை அனுப்புவேன்! | ... 109 |
| 13. | ஆனாலும் புறப்பட்டுப் போங்கள்! | ... 115 |
| 14. | பெற்றோருக்கு ஓர் அழைப்பு | ... 119 |
| 15. | மிஷனரிகளின் பிரச்னைகள் | ... 126 |
| 16. | துன்புறுத்தப்படும் மிஷனரிகளுக்கு ஒரு கடிதம் | ... 133 |
| 17. | வயலில் வீசும் காற்று | ... 138 |
| 18. | ஏழைக்கு இரங்கும் இறைவன் | ... 148 |
| 19. | எளியவரை ஆசீர்வதிப்பது எப்படி? | ... 159 |
| 20. | சங்கங்களும் சபைகளும் | ... 171 |
| 21. | திருச்சபைகளில் பரிதாபங்கள் | ... 179 |
| 22. | அடைக்க முடியாத கதவுகள் | ... 184 |
| 23. | அது முடியும், அது நடக்கும்! | ... 191 |
| 24. | மிஷனரி பாக்கிய வசனங்கள் | ... 198 |




**ஆசீர்வாத இளைஞர்**
**இயக்கத்தின்**
**மிஷனரிகளுக்கு**
**அர்ப்பணிப்பு!**
**அவர்களில்லாது**
**இப்புத்தகத்திலுள்ள**
**படிப்பினைகளை**
**நான் எப்படிக்**
**கற்றிருக்கமுடியும்?**

# 1

# ஓர் அறுவடையாளனின் கதை

**என்** வாழ்க்கையில் 1962 நவம்பர் 18 ஞாயிறு மாலையை ஒருபோதும் மறக்கமுடியாது. அப்பொழுதுதான் 16 வயது நிரம்பியிருந்த கல்லூரி மாணவனாகிய என்னை ஆண்டவராகிய இயேசு நித்திய இரட்சிப்பின் மகிழ்ச்சியினால் நிரப்பினார். மகிழ்ச்சியின் எவரெஸ்டு மலையுச்சியை எட்டிவிட்டேன்; அதற்கும் மேல் ஒன்றும் இருக்கமுடியாது என்று எண்ணியிருந்தேன். ஆனால் அது உண்மையல்ல என்பதை எனது சொந்தவூராகிய நாசரேத்தில் நடந்த வாரயிறுதி நற்செய்திக் கூட்டமொன்றில் எதிர்பாராத குதூகலத்துடன் கண்டுகொண்டேன். கிறிஸ்துவுக்கு வாலிபர் (YFC) எனும் இயக்கத்தின் இந்தியத் தலைவரான மறைந்த Dr. J. விக்டர் மனோகரம் அவர்கள்தான் அக்கூட்டத்தில் பிரசங்கித்துக்கொண்டிருந்தார்கள். கடைசி நாள் பிரசங்கத்திற்குமுன்னர் அவர் அதுவரை பகிரங்கமாகச் சாட்சி சொல்லாதவர்கள் எழுந்து ஒரு சில வார்த்தைகள் சொல்லுவதற்குத் தருணம் கொடுத்தார். மிகுந்த தயக்கத்துடன், நண்பர்களும், உறவினர்களும், அயலகத்தாரும் என்னைச் சுற்றியிருந்த அக்கூட்டத்தில் எழுந்து ஒருசில வார்த்தைகளைச் சாட்சியாய்ச் சொன்னேன். நான் உட்கார்ந்தபொழுது ஆனந்தத்தை என்னால் அடக்கிக்கொள்ளமுடியவில்லை; அந்தப் பரவசத்தினால் அன்று கூட்டத்தில் பிரசங்கியார் பேசியதைக்கூடச் சரியாய்க் கவனிக்கமுடியவில்லை. “குதிப்போம் அல்லேலூயா பாடி” என்று துள்ளிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தேன். நிசமாகவே அது விவரிக்கமுடியாத



ஆனந்தமே! இறைவனோடு நான் நடந்துவந்துள்ள கடந்த 40 ஆண்டுகளிலும் சாட்சி கொடுத்த வேளைகளிலெல்லாம் இரட்சிப்பின் மகிழ்ச்சியில் புதிய மலையுச்சிகளை எட்டியுள்ளேன்.

### அறுவடையின் ஆனந்தம்

கிறிஸ்துவுக்காய்ச் சாட்சிபகரத் தவறும் கிறிஸ்தவன் சீக்கிரம் மகிழ்ச்சியற்றவனாவான். அறுவடையின் மகிழ்ச்சிக்கு இணையேதுமில்லை. இடைவிடாது கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்துவர அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை சங்கீதம் 126இல் சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்பாடலை யூதர்கள் சீயோன் மலையில் ஏறும்போதோ எருசலேம் தேவாலயத்திற்குப் படிகள்மீது ஏறும்போதோ பாடுவார்களாம். “கண்ணீருடன் விதைக்கிறவர்கள் களிப்புடன் அறுப்பார்கள். அள்ளித் தூவும் விதைகளைச் சுமக்கிறவன் அழுதுகொண்டே போகிறான்; ஆனாலும் தான் அறுத்த கதிர்களைச் சுமந்துகொண்டு ஆனந்த சத்தத்தோடு திரும்பிவருவான்” (வச 5,6).

திருவசனத்திலிருந்தும் திருப்பணியாளர்களிடமிருந்தும், எனது வாழ்விலும் பணியிலும், ஒரு கல்லூரி மாணவனாய், ஒரு கட்டிடப் பொறியியலராய், ஒரு மிஷனரியாய்க் கற்றுக்கொண்டவைகளின் தொகுப்பே இப்புத்தகமாகும். புத்தக ஆக்கியோன் எவனும் எழுதும்போது தனது சரிதையை முழுக்க மறைத்துவிடமுடியாது. அந்த ஆக்கியோன் எழுதுகிறதை ஏன் எழுதுகிறான் என்று வாசகர்களுக்கு விளங்குமானால், எழுதப்பட்டவைகளை அவர்கள் மதிப்பார்கள்; தைரியமாய் அப்பியாசித்துப் பார்ப்பார்கள். எனவே இந்த முகவுரை அத்தியாயம் இப்புத்தகத்தின் ஆக்கியோனது பின்னணியை உங்களுக்கு அறிமுகம் செய்ய எழுதப்பட்டுள்ளது.

### அதிகாலையில் அறிவிப்போம்!

எனது சொந்தவூரில் அதிகாலை ஊழியம் சர்வ சாதாரணம். லெந்து நாட்களில் அது மிகவும் தீவிரமாயிருக்கும். தெருமுனைகளில் நின்றுகொண்டு மனந்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்பின் செய்தியை முழங்குவதற்காகத் தவறாமல் இக்குழுக்களோடு நான் சேர்ந்துகொள்ளுவேன். இந்த அனுபவமே 10 அல்லது 15 வாக்கியங்களில் எவ்விதம் சுவிசேஷத்தை அறிவிப்பது என்பதை எனக்குப் போதித்தது. அதிகாலை ஊழியத்தை முடித்துத் திரும்பிவந்து அனுதின வேதத்தியானத்தில் நான் உட்காரும்போது அது இரட்சிப்பின் ஊற்றுத்தண்ணீரில் குளிப்பதுபோலிருக்கும் (ஏசா 12:3). நட்சத்திர ஹோட்டல்களிலோ குற்றால அருவிகளிலோ சொகுசாய்க் குளிப்பதுகூட அவ்வளவு புத்துணர்வூட்டாது!

## கல்லூரி வளாகப் பயிற்சி

1963 முதல் 1968 வரை எனது பொறியியல் பட்டப்படிப்பின் நாட்களில் காரைக்குடியிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் நாங்கள் ஈடுபட்ட ஆத்துமாதாயப் பணிகளே பல்வேறு நற்செய்தி ஊழிய முறைகளுக்குப் பயிற்சிக்கூடமாய் அமைந்தன. எங்களது கல்லூரி ஜெபக் குழுவுக்கு "நற்செய்திக் குழு" (Gospel Team) எனப் பெயரிட்டிருந்தோம். தினமும் மாலை ஜெபிக்கவும் தியானிக்கவும் கூடுவதைத் தவிர்த்து, வாரயிறுதி ஊழியங்களுக்காய் சனி பிற்பகல் தோறும் மூன்றுமணி நேரம் மன்றாடிப் பிரார்த்திப்போம். *வருகையின் தூதன் (Herald of His Coming)* என்ற மாதாந்திரப் பத்திரிகை எங்களுக்கு உத்வேகம் தந்தது. "எங்களுக்கு ஆத்துமாக்களைத் தாரும்; இல்லையேல் நாங்கள் சாகிறோம்" என்றெல்லாம் ஜெபிக்கக் கற்றுக்கொண்டோம்.

## கத்திமுனையல்ல, பேனாமுனை!

கல்லூரி விடுதிகளில் அறை அறையாகவும், வீதிகளில் வீடு வீடாகவும் சென்று நற்செய்திப் பிரசுரங்களை வினியோகித்தோம். உள்ளேயிருப்போர் எங்களைப் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டால் சந்தோஷம்; அவர்கள் எங்களை முகம் சுளித்து அனுப்பிவிட்டால் கூடுதல் சந்தோஷம்! பல்வேறு இலக்கியச் சங்கங்களுக்கு எழுதி நற்செய்திப் பிரதிகள் வாங்கிக்கொண்டோம். ஆனால் எனது நண்பன் A. லயணல் மற்றும் பிற குழு அங்கத்தினரின் உதவியோடு நான் எழுதிய பிரதியையே அதிகம் பயன்படுத்தினோம். இப்பிரதி முதலில் *"விடுதலையின் நற்செய்தி"* என்ற தலைப்பில் வெளிவந்தது. இப்பொழுது *"உங்களுக்கு ஆசீர்வாதம்"* எனும் புதிய தலைப்பில் 10 இந்திய மொழிகளுக்குமேல் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தன்னைக் கேட்போரைப் பிரியப்படுத்த விரும்பினால் பிரசங்கியார் தனது செய்தியைக் கலப்படமாக்க முடியும். ஒரு நற்செய்திப் பிரதி ஒருபோதும் அப்படிச் செய்யாது. அது திரும்பத்திரும்ப சொன்னதையே மாற்றாமல் சொல்லிக்கொண்டிருக்கும். தன்னைக் கிழித்து விடுவார்களோ, எரித்து விடுவார்களோ என்ற பயமே அதற்குக் கிடையாது.

## இந்தியா கிராமங்களில் வாழ்கிறது!

எங்கள் குழுவின் கிராம ஊழியமே மிகவும் சவால் நிறைந்ததாயிருந்தது. அதில்தான் உரையாடலிலேயே நற்செய்தியறிவிப்பு, வெளிப்பிரசங்கம், வியாதியுள்ளோருக்காய் ஜெபித்தல், பிசாசு விரட்டுதல் போன்றவற்றைக்



கற்றுக்கொண்டோம். அடுத்து அதே கிராமங்களுக்கு நாங்கள் செல்லும் போது எங்கள் காதுகளில் விழும் கீழ்க்கண்டவை போன்ற சாட்சிகளால் என்னே ஆனந்தம்! "என் கணவர் குடிப்பதையும் என்னை அடிப்பதையும் நிறுத்திவிட்டார்!"... "இயேசு நாதர் எனக்குச் சொப்பனத்தில் வந்து அவர் தான் உயிருள்ள கடவுள் என்றார். வீட்டிலிருந்த விக்கிரகங்களையெல்லாம் எறிந்துவிட்டேன். நான் உங்களோடு சேரவேண்டும்!"... "எனது மகள் இப்பொழுது நன்றாக இருக்கிறாள். அவளிடமிருந்த பிசாசைத் துரத்தியதற்கு நன்றி!"... "இங்கிருந்து 4 கிலோமீட்டர் தொலைவிலுள்ள கிராமத்திற்கு என்னோடு வருவீர்களா? அங்கு எனது கணவரின் சொந்தக்காரர்களைக் கூட்டி வைத்து உங்களைக் கேட்கவைக்கிறேன்." ...."இப்பொழுதெல்லாம் இயேசு நாதரிடம் ஜெபம்பண்ணாமல் எனது ஆறு வயது மகன் சாப்பிடுவதே கிடையாதே!" அன்றைய எழுபது சீடரின் மகிழ்ச்சியும் அவர்களை அனுப்பிய ஆண்டவரின் திருப்தியும் எங்களுக்குக் கிடைத்த பரிசு (லூக் 10:17-24).

## ஏழையின் சிரிப்பு

திருமுழுக்கினன் யோவானால் அனுப்பப்பட்ட சீடர்களின் கேள்விகளுக்கு இயேசு கொடுத்த பதில் எப்பொழுதுமே எங்களைக் கவர்ந்தது. அதில் மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், "எளியவருக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது" என்பதே (மத் 11:5). இயேசுவே மேசியா என்பதற்கான இந்த நிரூபண அடையாளம் எங்களை வெகுவாய்க் கிளறியது. எளியவர்க்கும் ஒதுக்கப்பட்டோருக்கும் உருப்படியாய் எதையாவது செய்ய விரும்பினோம். கடவுள் எங்களை ஒரு சில தொழுநோயாளிகளிடம் நடத்தினார். எங்கள் கல்லூரியிலிருந்து ஏறத்தாழ 4 கிலோமீட்டர் தொலைவில் வயதான கிறிஸ்தவ மருத்துவர் ஒருவர் ஞாயிறுதோறும் அவர்களைக் கூட்டி அவர்களோடு ஜெபித்தும் அவர்களுக்கு மருத்துவ உதவி செய்தும் வந்தார். தனக்கு இருந்த சொற்பத்திலிருந்து தன்னால் இயன்றதை அவர் செய்துகொண்டிருந்தார். நாங்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் நாங்களும் அவர்களுக்குப் பணிசெய்யும்படி வியாழக்கிழமை மாலைகளிலும் பத்து பேராகிய அவர்களை மறுபடியும் கூடிவர ஏற்பாடு செய்தார். எங்கள் கைச்செலவு பணத்திலிருந்து பலகாரங்களும் பழவகைகளும் வாங்கிக்கொண்டுபோய் வாராந்தோறும் இரண்டுமணிநேரம் அவர்களோடு செலவழித்தோம். கலப்பையில் கை வைத்துக்கொண்டிருந்த எங்களுக்கு ஏழைகள்மீது கடவுள் கொண்டுள்ள கரிசனையும், எந்தச் சாக்குப்போக்கும் சொல்லாமல் நாம் அவர்களுக்கு உதவவேண்டிய பொறுப்புணர்வும் நடைமுறையில் விளங்கியது. தீண்டப்படாத இம்மக்களின் முகங்களில் புன்னகையைக் கொண்டுவந்தது எங்களுக்கு ஆனந்த தைல அபிஷேகமாயிற்று.

## நூறு வாலிபர் குழு

பொறியியலில் முதுநிலைப் பட்டப் படிப்பிற்காகச் சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரியில் (IIT) 1968இல் சேர்ந்தேன். தீவிர நற்செய்திப்பணிக்காக அப்பொழுதுதான் சுவிசேஷகர் N. ஜீவானந்தம் அவர்கள் 100 வாலிபர் குழு ஒன்றைத் திரட்டிக்கொண்டிருந்தார். நற்செய்திப்பணியில் அவருக்கிருந்த வைராக்கியம் தொத்துநோய் போன்றது. சகோதரன் கிளாடி ஈஸ்வரராஜின் அக்கார்டியன் இன்னொரு கவர்ச்சி. சகோதரர்கள் ஜான் பிரியதாஸ், ஜோசப் பாலச்சந்திரன் மற்றும் பொன்ராஜ் ஐசக் ஆகியோர் அண்ணன் ஜீவாவின் நெருங்கிய தோழர்களில் சிலர். IITயில் படிப்பு மிகுதியாயிருந்தது; ஆனாலும் இந்த நெருப்புப் பிளம்புகளோடு அடிக்கடி சேர்ந்து அழியும் ஆத்துமாக்களுக்கான தணியா தாகத்தைப் பெற்றுக்கொள்ள நேரமெடுத்துக்கொண்டேன்.

## வேலூர் மருத்துவமனை

வேலூரிலுள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் (Christian Medical College & Hospital) நான் பணியாற்றிய ஐந்தாண்டுகள் (1971-75) நற்செய்தி ஊழியத்திற்கு இன்னொரு அடித்தள வரிசையாய் அமைந்தன. இங்குள்ள அர்ப்பணிப்பு நிறைந்த மருத்துவர்களும் உதவியாளர்களும் உயிர்களைக் காப்பாற்ற கடைசிவரை எவ்வளவாய்ப் போராடுகிறார்களென்று கவனித்தது ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கான பயனுள்ள பாடங்கள் பலவற்றை எனக்குக் கற்பித்தது. ஒவ்வொரு நாளும் மனிதர் படும் வேதனைகளைக் கண்கூடாகக் கண்டேன். முடிந்த இடத்திலெல்லாம், முடிந்த நேரத்திலெல்லாம், சற்று நின்று நோயாளிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஆறுதலான சில வார்த்தைகள் சொல்லித் தைரியப்படுத்தினேன். மருத்துவரான லில்லியனுக்கும் எனக்கும் அப்பொழுதுதான் மணமாகியிருந்தது. நேரங்கெட்ட வேளைகளிலெல்லாம் அவள் அவசரத் தேவைக்காய் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டது எனக்கு எரிச்சல் மூட்டியது. நான் அவ்விதம் முறுமுறுக்கக்கூடாதென்று அவள் எனக்குப் பொறுமையாய் விளக்கிச் சொல்லுவாள். "நான் தியாகம் பண்ணாமல் பிறருக்கு ஆசீர்வாதமாயிருக்க முடியாதென்று எனக்குப் போதித்ததற்காய் நன்றி, ஆண்டவரே!"

CMC மருத்துவமனையில் அப்பொழுது தலைமைப் பொறியாளராயிருந்த திரு. C. சாமுவேல் அவர்கள்தான் எனக்கு அதிகாரியாயிருந்தார். கிராம ஊழியம் என்றால் அவருக்குப் பைத்தியம். உதவித் தலைமைப் பொறியாளராயிருந்த திரு. எட்வர்டு பாக்கியநாதன் அவர்கள் இன்னொரு தீவிர



ஆத்துமாதாயகர். எனது உதவியாளர் திரு. A. ஜெயராஜ் அவர்கள் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக எதையும் செய்ய ஆயத்தமாயிருப்பவர். மருத்துவமனையில் பலரும் இது என்ன எஞ்சினியரிங் டிபார்ட்மெண்டா இவாஞ்சலிசம் டிபார்ட்மெண்டா எனக் கேட்பர்! அந்த நாட்களில்தான் சகோதரன் D.G.S. தினகரன் அவர்கள் பொதுக்கூட்டங்கள் நடத்தத் துவங்கியிருந்தார். பலமுறை அவர் தனது பிரசங்க மேடையை எனக்குக் கொடுத்ததை நான் என்றும் நன்றியுடன் நினைவுகூருவேன். மேட்டூர் அணையில் நடந்த கூட்டங்கள் இன்னும் மனதில் பசுமையாயிருக்கின்றன.

## "இந்த வீண் செலவு என்னத்திற்கு?"

பொறியியலை விட்டுவிட்டு நான் ஏன் இறையியலில் இறங்கிவிட்டேனென்று வாலிபர்கள் அடிக்கடி என்னிடம் கேட்பார்கள். இதோ எனது பதில்: "நான் மறுபடி பிறந்த நாளிலிருந்து முழுக்க முழுக்கக் கடவுளுக்காகவே வாழ்ந்து அவரை மகிமைப்படுத்தவும் மக்களை இரட்சிக்கவும் வேண்டுமென்ற வெறி என்னைப் பிடித்திருந்தது. எனது மாணவப் பருவத்திலும் வேலை செய்த ஆண்டுகளிலும் அது படிப்படியாய்க் கூடிக்கொண்டேயிருந்தது. ஒரிசாவிலும் வேறு சில வட மாநிலங்களிலுமுள்ள ஆதிவாசிக் கிராமங்களுக்குச் சென்றுவந்தது என்னில் எரிந்துகொண்டிருந்த நெருப்பிற்கு எண்ணெய் வார்த்தது. மிஷனரிச் சுவிசேஷகர் T. L. ஆஸ்போர்னின் "தேவையே அழைப்பு" எனும் வார்த்தைகள் எனது காதுகளில் சத்தமாய் ஒலித்துக்கொண்டிருந்தன. எனது வாழ்வின் உசிதமான பகுதியை இறைப்பணியில் ஊற்றிவிட விரும்பினேன். ஊழியத்தின் பொறுப்புகள் அதிகரிக்க அதிகரிக்க, எனது வேலையில் சரிவரக் கவனம் செலுத்தமுடியவில்லை. ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகப் போதுமான அளவு நான் இன்னும் செய்யவில்லையே என்ற அதிருப்தியும் வளர்ந்துவந்தது. வேதத் தியானத்தின்போதும் தனி ஜெபத்தின்போதும் மேலோங்கி நின்றது மிஷனரி அழைப்பே. எனது தாயும் தாரமும் இதற்கு ஆதரவாய் இருந்தார்கள். நிறைவான சமாதானத்தோடு 1975இல் எனது மருத்துவமனை வேலையிலிருந்து விடுப்பு கேட்டுப் பெற்றுக்கொண்டேன்." "இந்த வீண் செலவு எதற்கு?" என்று பலர் கேட்டது உண்மை. ஆனால் என்னைப் பொறுத்த அளவு அது செலவு அல்ல, உறவு—அன்பர் இயேசுவோடு! நான் அன்று எடுத்த முடிவிற்காய் என்றும் வருந்தியதில்லை. இப்பொழுது (2002) எனக்கு வயது 56. ஏறத்தாழ 30 ஆண்டுகளை முழுவதுமாய் இயேசுவின் பாதங்களில் ஊற்றிவிட்டது என்னே திருப்தி!

எனது மனைவி CMC மருத்துவமனையில் குழந்தை மருத்துவத்தில் முதுநிலைப் பயிற்சிக்குப் பின்னர் முஸ்லீம்கள் நிறைந்துள்ள ஒரு பகுதியில்

தனி மருத்துவராய் ஏராளம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குச் சிகிச்சை யளித்து வந்தாள். ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் என்னோடு முழுநேரப் பணியாளராய் இணையும்வரை அவள் தனது வருவாயில் 51 சதவீதம் மிஷனரிப்பணிக்குக் கொடுத்துவந்தாள். இன்றுவரை அவள் இந்த இயக்கத் திலிருந்து சம்பளம் ஏதும் வாங்குவதில்லை. எங்களுக்கு ஒரு குறைவுமில்லை.

## தரிசனம் பெற்றெடுத்த இயக்கம்

தேவ நடத்துதலின்படி 1971இல் ஒருசிலரோடு சேர்ந்து நான் நிறுவிய ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (Blessing Youth Mission) இன்று இந்தியாவின் 11 மாநிலங்களில் கிளைவிட்டு வளர்ந்துவருகிறது. ஆங்கிலத் திலும் 10 இந்திய மொழிகளிலும் இவ்வியக்கத்திற்குப் பிரசுரிப்பு ஊழியம் உண்டு. சமீபத்தில் நேபாளி மொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்று 275க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் நாடெங்கும் பரவிச்சென்று, இருக்கும் சபைகளில் எழுப்புதலுக்காகவும், சபைகள் இல்லாத இடங்களில் நற்செய்தியறிவிப்பிற்காகவும் உழைத்துவருகின்றனர். இந்த அமைப்பில் நான் பணியாற்றியது நற்செய்தி அறிவித்தல் மற்றும் சபை நிறுவுதல் ஆகியவற்றின் தத்துவங்களை நடைமுறையில் புரிந்துகொள்ள அரிய வாய்ப்பாய் அமைந்தது.

## நாமும் புறப்பட்டுச் செல்லுவோம்!

இவ்வியக்கத்தின் ஊழியத்தை முதல் 17 ஆண்டுகள் நான் அதின் தலைமையகமாகிய வேலூரிலிருந்து ஒருங்கிணைத்து வந்தேன். பின்னர் நிர்வாகத்தை எனது முதல் வரிசை உதவியாளர்களிடம் ஒப்படைத்துவிட்டு 1987 முதல் மிஷனரிப் பணிக்களங்களில் தங்கி ஊழியம் செய்யும்படி என் மனைவியோடு புறப்பட்டேன். ஈராண்டுகள் கர்நாடக மாநிலத்திலும், மூன்றாண்டுகள் ஒரிசாவிலும், ஈராண்டுகள் மகாராஷ்டிரத்திலும், ஆறு மாதங்கள் தமிழகத்திலுள்ள சித்தேரி மலையிலும் இருந்துவிட்டு 1995இல் மத்தியப் பிரதேசம் சென்றோம். அடுத்து இராஜஸ்தான் செல்வதாய் இருந் தோம். ஆனால் 1996 ஏப்ரலில் எனக்குக் கடுமையான இருதய நோய் இருப்பதாய்க் கண்டறியப்பட்டது. உடனே என்னை வேலூர் CMC மருத்துவ மனைக்கு எடுத்துச்சென்றார்கள்; அங்கே எனக்கு இருதய அறுவை சிகிச்சை நடைபெற்றது. இந்த உடல்நிலை பாதிப்பையடுத்து, இனி பணிக் களங்களில் கடினமான சூழல்களில் தங்கச் செல்லவேண்டாம்; வேலூரி லேயே இருந்துகொண்டு இயக்கத் தலைவர்களுக்கு ஆலோசனை கொடுப் பதிலும், செய்திகள் எழுதுவதிலும், திருவசன உபதேச ஊழியத்திலும் நேரம் செலவழிக்கும்படி அறிவுறுத்தப்பட்டேன். ஆனந்த அறுவடையில்



இன்னும் பங்கேற்கும்படி எனது வாழ்நாட்களை நீட்டிக் கொடுத்த என் ஆண்டவரைத் துதிக்கிறேன்! நான் முப்பது வயதிற்குமுன் முழுநேர ஊழியத்தில் இறங்காமல் அதை ஐம்பது வயதிற்குப்பின் செய்யலாம் என்று நினைத்திருந்தால் உசிதத்தை இழந்திருப்பேனே!

## வயலின் வாசனை

மிஷனரிப் பணிக்களங்களில் நமது முன்னணி மிஷனரிகளோடு என் மனைவி லில்லியனும் நானும் செலவழித்த ஒன்பது ஆண்டுகளை எங்கள் ஊழிய வாழ்க்கையிலேயே மிகவும் பிரமாதமானவை எனலாம். மிஷனரி களோடு கிராமங்களுக்கு நடந்துசெல்லுதல், பல்வேறு மக்களினத்தவருக்கு அவர்கள் நற்செய்தியை அறிவிப்பதைக் கவனித்தல், முதல் தலைமுறைக் கிறிஸ்தவர்களோடு ஆராதித்தல் மற்றும் எளியவருக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபடுதல் போன்றவை மிஷனரியியலின் பாடங்களை வகுப் பறைக்கு வெளியே எங்களுக்குக் கற்பித்தன. மிஷனரிகளின் எளிய வாழ்க்கை முறையும் தங்கள் பிள்ளைகளையும் உறவினர்களையும் விட்டுப் பிரிந்து வாழ்வதென்றால் என்ன என்பதையும் நேரடியாய்க் கவனித்தது எங்களை உருக்கிவிட்டது. ஈராண்டுகளுக்கொருமுறை வீட்டுச் சாமான் களை அடுக்குவது அவிழ்ப்பது, துணிமணிகளைச் சூட்கேஸ்களிலேயே வைத்து எடுப்பது, மாற்றுக் கலாச்சாரம் மற்றும் வேற்று மொழியினரின் நட்பற்ற அயலகத்தில் வாழ்வது, மடக்குக் கட்டில் மடக்கு நாற்காலி களிலேயே காலம் தள்ளுவது, விருப்பமான சில உணவுப்பொருட்கள் கிடையாமை (எனக்கு மீனென்றால் உயிர்!), போதிய மருத்துவ வசதி யின்மை, போக்குவரத்து மற்றும் தொலைபேசி குறைவு, இதுபோன்ற பல காரியங்கள் எளிதாயில்லை, ஆனால் சவாலாயிருந்தன. எந்த மொழியென் றாலும் எனது மனைவி ஒரே மாதத்தில் படித்துவிடுவாள். எனக்கோ இரண்டு ஆண்டுகள் முடியும்போது அந்த மொழியில் சிரிக்கத்தான் தெரியும்! நட்பு நாட்டமும் பேச்சு விருப்பமும் நிறைந்த எனக்கு இது தர்ம சங்கடம்தான். ஆனாலும் ''வயலின் வாசனை'' எனக்குத் தெம்பூட்டிக்கொண்டிருந்தது.

## தீமோத்தேயுவுக்குப் பவுல்கள்

நான் பங்குபெற்ற முதல் அனைத்துலக மிஷனரி மாநாடு எடின் பரோ '80 ஆகும். அடுத்தது பில்லி கிரகாம் நற்செய்திப்பணி ஐக்கியத்தார் நடத்திய ஆம்ஸ்டர்டாம் '83. ரால்ப் வின்ட்டர், லெய்ட்டன் போர்டு, பேட்ரிக் ஜான்ஸ்டன் (*Operation World* புத்தக ஆக்கியோன்) போன்றோரைச் சந்தித்தது உலகத்தைக் குறித்த தரிசனம் பெறுவதற்குப் பேருதவியாயி ருந்தது. லியோனார்டு ரேவன்ஹில் (*எழுப்புதல் தாமதிப்பது ஏன்?* எழுதி யவர்), ஜார்ஜ் வெர்வர் (*Operation Mobilisation* நிறுவியவர்), டேவிட்

வில்கர்சன் *(Cross & the Switchblade* எழுதியவர்), ஆர்தர் வாலிஸ் *(God's Chosen Fast* எழுதியவர்), பேட் ராபர்ட்சன் *(The 700 Club)*, மற்றும் எட்வின் ஆர் *(Search me, O God!* இயற்றியவர்) போன்ற தேவ மனிதரோடு நான் செலவிட்ட நேரங்கள் கடவுளுக்காக நான் பைத்தியக் காரனாகும்படி என் இதயத்தைத் துளைத்தன. திருமறையிலிருந்து மிஷனரிப் பணியின் தாற்பரியத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள Dr. தியோடர் வில்லியம்ஸ் அவர்களது கருத்துக்கள் ஏதுவாயிருந்தன. உலகெங்குமுள்ள சபை மேய்ப்பர்களுக்கு Dr. சாம் கமலேசன் அவர்கள் கொடுத்த செய்திகள் என்னை வெகுவாய்ப் பாதித்தன. Dr. ஆஸ்வால்டு J. ஸ்மித் எழுதிய *Passion for Souls* என்ற நூலிலுள்ள மிஷனரிக் கோஷங்களை மனனம் செய்தேன். ஆத்துமாக்களை இரட்சிக்கும் பணி குறித்து எனது சிந்தையைச் செதுக்கிய இந்த பக்தர்களுக்காய் என் ஆண்டவரைத் துதிக்கிறேன்.

## அம்மாவும் அப்பாவும்

மன்றாட்டு ஜெபத்திலும் ஆத்துமாதாயப் பணியிலும் அம்மா தீவிர மாயிருந்தார்கள். சந்திப்பு ஊழியமென்றால் அவர்களுக்கு அலாதிப் பிரியம். வியாபாரத் துறையிலிருக்கும் மதுரை திரு. A. சிவப்பிரகாசம் அவர்கள்தான் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் முதலாவது பொருளாளர். அவரது மனைவிக்கு அம்மாதான் மருத்துவமனை சந்திப்பின்போது கிறிஸ்துவை அறிமுகப்படுத்தினார்கள். அந்தச் சகோதரி பின்னர் தன் கணவரையும், அடுத்து தனது குடும்பத்திலுள்ள பலரையும் இந்து மார்க்கத்திலிருந்து கிறிஸ்துவிடம் கொண்டுவந்தார்கள். கிராமங்களில் சிறுவருக்கென அம்மா நடத்திய ஞாயிறு பள்ளிகளிலிருந்து குறைந்தது மூவர் இன்று BYMஇல் முழுநேர மிஷனரிகளாயிருக்கிறார்கள். வீடுவீடாகச் சென்று வேதாகமங்களையும் ஜெபப் புத்தகங்களையும் அப்பா விற்றுவந்தார்கள். அவரிடம் புத்தகங்கள் வாங்கிய சிலர் அவர் இறந்த பின்னர் என்னிடம் பணம் கொடுத்தார்கள். காரைக்குடிக்கு அருகிலுள்ள கோட்டையூரில் அவர்கள் முதல் கிறிஸ்தவ ஆலயத்தைக் கட்டி அதைத் தென்னிந்தியத் திருச்சபையிடம் (CSI) ஒப்படைத்தார்கள். இந்துக்கள் நிறைந்திருந்த விருதுநகரில் அம்மாவின் மூத்த சகோதரி ஒரு பெயர்பெற்ற தாதியாயிருந்தார்கள். அவர்கள் இயேசுவைப் பற்றிச் சொல்லாமல் ஒருவரையும் விடமாட்டார்கள். இவ்விதமானதொரு குடும்பப் பின்னணியும் சூழலும் ஆத்தும அறுவடைப் பணிக்கு என்னைச் சிறப்பாய்ப் பக்குவப்படுத்தின. இவையெல்லாம் தற்செயலா ? நற்செய்திப்பணிமீது (evangelism) என் மனைவிக்கும் எனக்கும் இருக்கும் தாகத்தினாலேயே கடவுள் எங்களுக்குக் கொடுத்த ஒரே மகளுக்கு Evangeline என்று பெயரிட்டோம்.



இதற்குமேல் நீட்டிக்கொண்டே போய் உங்களுக்குச் சலிப்புண்டாக் காதபடி இங்கு எனது கதையை நிறுத்திக்கொண்டு காரியத்திற்கு வருகிறேன்.

## இப்புத்தகம்

நற்செய்தியறிவிப்பு மற்றும் மிஷனரிப்பணி குறித்த எனது முதல் புத்தகம் 1990இல் *"அழகிய பாதங்கள்"* என்ற பெயரில் வெளிவந்தது. அது பலமுறை மறுபதிப்பு செய்யப்பட்டபின் இப்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. அதிலுள்ள முக்கியமான அத்தியாயங்களை இப்புத்தகத்தில் சேர்த்துள்ளேன். தனியாள் ஆத்துமாதாயம், அயலக நற்செய்தியறிவிப்பு மற்றும் தொலைவிட மிஷனரிப் பணி ஆகிய மூன்று ஊழிய வட்டங்களை நெடுகவே வற்புறுத்தியுள்ளேன். இங்கு எழுதப்பட்டுள்ள சத்தியங்கள் அனைத்தும் அப்பியாசிக்கப்பட்டவை. சென்னையிலுள்ள இந்துஸ்தான் வேதாகமக் கல்லூரி (HBI) 2000ஆம் ஆண்டு எனக்கு Doctor of Divinity எனும் பட்டமளித்துக் கவுரவித்தபோது, இறையியலிலோ மிஷனரியியலிலோ பாண்டித்தியம் பெறாத என்னை ஏன் இதற்குத் தெரிந்தெடுத்தனர் என்று கல்லூரி வேந்தர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள், "திருச்சபையிலும் சமுதாயத்திலும் நற்செய்தியறிவிப்புப் பணியைக் குறித்துச் சிறப்பான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளீர்கள்" என்று பதில் தந்தனர். பட்டமளிப்பு விழா விருந்தினர்முன் தலைவணங்கி, "பாவிகளிலெல்லாம் பிரதான பாவி நான்; பரிசுத்தவான்களிலெல்லாம் மிகவும் சிறியவன்; தேவ ஊழியர் எல்லாரையும் விட மிகவும் சிறியவன்; நான் இருப்பது தேவ கிருபையினாலேயே; நான் செய்வது தேவ பலத்தினாலேயே; மற்றபடி என்னில் நன்மையேதும் காணேன்" என்று அறிக்கையிட்டேன். பிரிய வாசக நண்பரே, நீங்களும் ஊக்குவிக்கப்பட்டு ஆண்டவரது ***ஆனந்த அறுவடையில்*** இணையும்படி, அதே அறிக்கையோடு இப்புத்தகத்தை உங்கள் கைகளில் கொடுக்கிறேன்!

# 2

# மிஷனரி பைபிள்

நமது தேவன் மிஷனரி தேவன். அவர் இருதயம் மிஷனரி இருதயம். அவரது மகன் மிஷனரியாய் வந்தார். அவர் தமது ஆவியை அனுப்பியது மிஷனரிப் பணியை முடிக்கும்படிச் சபையை வல்லமையால் நிரப்பவே. அவரது வேதம் ஒரு மிஷனரிப் புத்தகம். அதின் அறுபத்தாறு புத்தகங்களில் மிஷனரிப்பணிக் குறிப்பில்லாதது ஒன்றுமில்லை. வேதத்தை வாசித்துவிட்டு மிஷனரிச் சிந்தையில்லாதிருப்பது சாத்தியமில்லை. வேதத்தின் ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் எடுத்துக்காட்டு வசனங்கள் இதோ:

**ஆதியாகமம்**

நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குப் போ... உன்னை ஆசீர்வதிப்பேன்... நீ ஆசீர்வாதமாக இருப்பாய்... உலகிலுள்ள மக்களினங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும். (12:1-3)

**யாத்திராகமம்**

வா, உன்னை அனுப்புகிறேன்! (3:10)

**லேவியராகமம்**

உங்கள் நாடெங்கும் எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும்... நாடெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறுங்கள்! (25:9,10)



**எண்ணாகமம்**

உங்கள் சகோதரர் யுத்தத்திற்குப் போகையில், நீங்கள் இங்கே இருப்பீர்களோ? (32:6)

**உபாகமம்**

நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி... வழியிலே நடக்கிறபோது அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக! (11:19,20)

**யோசுவா**

கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப் போகிறதற்கு, நீங்கள் எவ்வளவு காலம் அசதியாயிருப்பீர்கள்? (18:3)

**நியாயாதிபதிகள்**

தெபொராளாகிய நான் தாயாக எழும்புமளவும் கிராமங்கள் பாழாய்ப் போயின... நூதன தேவர்களைத் தெரிந்துகொண்டார்கள். (5:7,8)

**ரூத்**

உம்மையும் உமக்குப் பின்பு என்னையும் தவிர, அதை மீட்டுக்கொள்ளக் கூடியவன் வேறொருவனும் இல்லை. (4:4)

**1 சாமுவேல்**

இஸ்ரவேலில் கடவுள் ஒருவர் உண்டு என்று உலகிலுள்ள எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். (17:46)

**2 சாமுவேல்**

முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, சீக்கிரமாய் எழும்பிப் போ. (5:24)

**1 இராஜாக்கள்**

மக்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்! (18:39)

**2 இராஜாக்கள்**

நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; இப்போதும் நாம் போய்... அறிவிப்போம் வாருங்கள். (7:9)

## 1 நாளாகமம்

மக்களினங்களுக்குள் அவருடைய மகிமையையும், எல்லா மக்களுக் குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்... எல்லா இனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர். (16:24,26)

## 2 நாளாகமம்

என் பெயர் சூட்டப்பட்ட என் மக்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் நாட்டிற்குச் சேமத்தைக் கொடுப்பேன். (7:14)

## எஸ்றா

எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன்! (1:3)

## நெகேமியா

நான் பெரிய வேலையைச் செய்கிறேன். நான் (கீழே இறங்கி) வரக்கூடாது; நான் அந்த வேலையைவிட்டு உங்களிடத்தில் வருகிறதினால் அது மினக் கெட்டுப் போவானேன்? (6:3)

## எஸ்தர்

நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், உதவியும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்? (4:14)

## யோபு

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூவுலகின் மீது நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். (19:25)

## சங்கீதம்

என்னைக் கேளும், அப்பொழுது மக்களினங்களை உமக்குச் சுதந்தர மாகவும் பூவுலகின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன். (சங் 2:8)



## நீதிமொழிகள்

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன். (11:30)

## பிரசங்கி

காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்; மேகங்களை நோக்கு கிறவன் அறுக்கமாட்டான்... காலையிலே உன் விதையை விதை; மாலை யிலே உன் கையைத் தளரவிடாதே! (11:4,6)

## உன்னதப்பாட்டு

சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய், அருணோதயம்போல் உதிக்கிற இவள் யார்? (6:10)

## ஏசாயா

யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று கூப்பிடுகிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். அப்பொழுது அவர்: நீ போய்... சொல் என்றார். (6:8,9)

## எரேமியா

கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்; இரத்தம் சிந்தாதபடிக்குத் தன் பட்டயத்தை அடக்கிக்கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன். (48:10)

## புலம்பல்

பிள்ளைகள் அப்பம் கேட்கிறார்கள், அவர்களுக்குக் கொடுப்பாரில்லை! (4:4)

## எசேக்கியேல்

ஆசீர்வாதமான மழை பெய்யும்! அவர்களையும் எனது மேட்டின் சுற்றுப்புறத்தையும் நான் ஆசீர்வாதமாக்குவேன். (34:26)

## தானியேல்

உன்னதமானவர் மனிதருடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார். (4:17,25,32)

**ஓசியா**

நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள்; தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள்; உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியைப் பொழியும்வரை, அவரைத் தேடக் காலமாயிருக்கிறது. (10:12)

**யோவேல்**

நான் மனிதராகிய யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்... அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான். (2:28,32)

**ஆமோஸ்**

சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ!... யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற்போகிறார்கள். (6:1,6)

**ஒபதியா**

இரட்சகர்கள் சீயோன் மலையில் வந்தேறுவார்கள்; அப்பொழுது அரசு கர்த்தருடையதாய் இருக்கும்! (வசனம் 21)

**யோனா**

வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனிதரும், ஏராளம் கால்நடைகளும் இருக்கிற மாபெரும் நகராகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ? (4:11)

**மீகா**

சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி; நான் உன் கொம்புகளை இரும்பும், உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன்; நீ அநேக ஜனங்களை நொறுக்கிப்போடுவாய்; அவர்கள் தேடிச் சேர்த்ததை நீ கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியைப் உலகுக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவருக்கென்றும் நியமிப்பாய். (4:13)

**நாகூம்**

இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின் மேல் வருகின்றன! (1:15)



**ஆபகூக்**

கர்த்தாவே, ஆண்டுகளின் நடுவிலே உம்முடைய செய்கையை உயிர்ப்பியும், ஆண்டுகளின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும். (3:2)

**செப்பனியா**

அப்பொழுது மக்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் மொழியைச் சுத்தமான மொழியாக மாறப்பண்ணுவேன். (3:9)

**ஆகாய்**

சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான்... சகல மக்களையும் அசையப்பண்ணுவேன், எல்லா இனத்தவராலும் விரும்பப்பட்டவர் வருவார். (2:6,7)

**சகரியா**

அப்பொழுது கர்த்தர் உலகம் முழுவதிற்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய பெயரும் ஒன்றாயிருக்கும். (14:9)

**மல்கியா**

சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும், என் பெயர் மக்களினங்களுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்! (1:11)

**மத்தேயு**

விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், எல்லா மக்களையும் சீடராக்குங்கள். (28:18,19)

**மாற்கு**

என் பின்னே வாருங்கள், உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்! (1:17)

**லூக்கா**

அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். (10:2)

**யோவான்**

ஒருவனும் செயல்பட முடியாத இராக்காலம் வருகிறது! (9:4)

### அப்போஸ்தலர்

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் வலிமை பெற்று... உலகின் கடையெல்லைவரை எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். (1:8)

### ரோமர்

அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்து கொள்வார்களென்றும் எழுதியிருக் கிறபடியே, நான் மற்றொருவனுடைய அடித்தளத்தின் மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன். (15:20,21)

### 1 கொரிந்தியர்

நற்செய்தியை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! (9:16)

### 2 கொரிந்தியர்

சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். (9:6)

### கலாத்தியர்

ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். (6:9)

### எபேசியர்

நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள். (6:20)

### பிலிப்பியர்

இயேசுவின் பெயரில் விண்ணோர், மண்ணோர் மற்றும் கீழுலகத்தோரின் முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தேவன் தந்தருளினார். (2:10,11)

### கொலோசெயர்

கிறிஸ்துவினுடைய இரகசியத்திற்காய்க் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேசவேண்டிய விதமாய்ப் பேசி, அதை வெளிப் படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்த ருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்! (4:3,4)



### 1 தெசலோனிக்கேயர்

நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்கு கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர் களானபடியினாலே, எங்கள் உயிரையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்! (2:8)

### 2 தெசலோனிக்கேயர்

சகோதரரே, உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப் படுகிறதுபோல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படி எங்களுக்காகப் பிரார்த்தியுங்கள். (3:1)

### 1 தீமோத்தேயு

எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் கடவுள் சித்தமுள்ளவராயிருக்கிறார். கடவுள் ஒருவரே, கடவுளுக்கும் மனிதருக்கும் நடுவரும் ஒருவரே... கிறிஸ்து இயேசுவே அவர்! (2:4-6)

### 2 தீமோத்தேயு

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் கவனமாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. (4:2,5)

### தீத்து

எல்லா மனிதருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமானது. (2:11)

### பிலேமோன்

பவுலாகிய நான் முதிர்வயதுள்ளவனாகவும், இயேசு கிறிஸ்துவுக்காய் இப்பொழுது கட்டப்பட்டவனாகவும் இருக்கிறேன்! (வசனம் 8)

### எபிரெயர்

விசுவாசத்தினாலே அவர்கள் இராஜ்யங்களை ஜெயித்தார்கள்! (11:33)

### யாக்கோபு

தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியட்டும். (5:20)

### 1 பேதுரு

நீங்கள் உங்களை இருளிலிருந்து தமது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்துகொள்ளப் பட்ட சந்ததியாயும், ராஜரீகமான குருக்கள் கூட்டமாயும், பரிசுத்த இனத் தவராகவும், அவருக்குச் சொந்த மக்களாகவும் இருக்கிறீர்கள். (2:9)

### 2 பேதுரு

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத் தத்தைக் குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமை யுள்ளவராயிருக்கிறார். (3:9)

### 1 யோவான்

நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்! (5:4)

### 2 யோவான்

மனுவுருவில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர் உலகத்தில் தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்ச கனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான். (வச 7)

### 3 யோவான்

அவர்கள் புறவினத்தாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் கிறிஸ்துவின் பெயருக்காய்ப் புறப்பட்டுப் போனார்கள். ஆகையால் நாம் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்கும்படி அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம். (வசனம் 7,8)

### யூதா

பரிசுத்தவான்களுக்கு ஒரே தடவை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டும். (வச 3)

### வெளிப்படுத்துதல்

இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்! (3:8)



# 3

# இரட்சிக்கவே இரட்சிக்கப்பட்டோம்!

**பிறரை** இரட்சிக்கவே நாம் இரட்சிக்கப்பட்டோம். மற்றவர்களைக் கிறிஸ்தவராக்கவே நாம் கிறிஸ்தவராயிருக்கிறோம். மற்றவர்களை இறையரசுக்குள் கொண்டுவரவே நாம் மறுபடி பிறந்திருக்கிறோம். மற்றவர்களைத் தேவனது குடும்பத்திற்குள் கொண்டுவரவே நாம் தேவப் பிள்ளைகளாயிருக்கிறோம். மற்றவர்களைக் கிறிஸ்துவின் சீடராக்கவே நாம் அவரது சீடராயிருக்கிறோம். வெளியிலிருப்போரைச் சபைக்குள் கொண்டுவரவே நாம் சபையிலிருக்கிறோம். நீதியின் மார்க்கத்தைப் பிறருக்குக் காட்டவே நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். பரலோகத் திற்குப் போகும் நாம் வெறுங்கையாய் நமதாண்டவரைச் சந்திக்க முடியாது!

ஆத்துமாதாயம்—இதுவே நமது அடிப்படை அழைப்பாகும். "என் பின்னே வாருங்கள்; உங்களை மனிதரைப் பிடிப்போராக்குவேன்" (மத் 4:19). புதிய ஏற்பாட்டிலேயே கிறிஸ்துவின் முதல் அழைப்பு இதுதான். "பாவிகளை இரட்சிக்கவே" அவர் பிரதானமாக இவ்வுலகிற்கு வந்தார் (1 தீமோ 1:15). இது "உண்மையும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத் தகுதியுமானது!" முதலும் முடிவுமாக அவர் ஆத்துமாதாயகராகவே திகழ்ந்தார். அவரது பெயரிலேயே இரட்சிப்பு முழங்குகிறது (மத் 1:21). அவரைப் பின்பற்றுவோர் வேறுவிதமாய் இருக்க இயலுமோ?

"கிறிஸ்தவரில் இருசாரார் மட்டும் உண்டு — ஆத்துமாதாயகர் அல்லது பின்மாற்றக்காரர்" என்றார் பக்தன் ஆன்ட்ரு முரே. இது அவரது சொந்தக்

கருத்தல்ல, கிறிஸ்துவிடமிருந்து கடன் வாங்கியது. “என்னோடு சேர்க் காதவன் சிதறடிக்கிறான்” என்றாரல்லவோ கிறிஸ்து? (மத் 12:30). அந்தோ, சபையானது பின்மாற்றக்காரரால் நிறைந்துள்ளது! நற்செய்திப் பணியில் உங்களுக்கு உற்சாகமில்லையா, ஆத்துமாக்களைத் தேடி நீங்கள் செல்லவில்லையா, நிச்சயம் பின்வாங்கிவிட்டீர்கள்! குளிர்ந்துபோனீர்கள்! இளைய குமாரனைக் கெட்ட குமாரன் என்பர்; நான் மூத்தவனைத்தான் கெட்ட குமாரன் என்பேன். உவமையின் முடிவைப் பாருங்கள்: இளையவன் உள்ளே, மூத்தவன் வெளியே! காரணம்? தொலைந்தோரைத் தேடுவதில் அக்கறையற்றவன் அவன். இதுதான் சுயநல மார்க்கம். ஆத்துமாதாயகனின் இதயமோ பரம தந்தையோடு சேர்ந்து ஆத்துமாக்களுக்காய்ப் புலம்பும். சபைக்குள்ளிருக்கும் பின்மாற்றக்காரருக்கே மூத்தவன் அடையாள மானவன்.

சபையில் உற்சாகமோ பரபரப்போ இல்லையே என எண்ணுகிறீர்களா? நீண்ட முகங்கள், அனலின்மை, ஆரவாரமின்மை! காரணமென்ன? ஆத்துமாதாயம் இல்லை. தொலைந்த ஆட்டைக் கண்டுபிடித்த மேய்ப்பன் தனது நண்பரையும் இனத்தாரையும் அழைத்து “என்னோடு மகிழுங்கள்” என்றானே? தொலைந்த காசைக் கண்டுபிடித்த பெண்ணும், தொலைந்த மகனைத் திரும்பப் பெற்ற தந்தையும் அப்படித்தானே பூரித்தார்கள் (லூக் 15:1-31). அந்த மேய்ப்பன் தொலைத்தது ஒரு சதவீதம், அந்தப் பெண் தொலைத்தது பத்து சதவீதம், அந்தத் தந்தை தொலைத்தது ஐம்பது சதவீதம். அளவு காரியமல்ல. ஆத்துமாதாயம் பரலோகத்தைத் துள்ளச் செய்கிறது! (வச 7,10). ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணாதவன் பர லோகத்தோடு சரியான தொடர்பிலில்லை. நடனமாடித் துதிப்பது பெந்தெ கொஸ்தேகாரருக்குரியது என நினைக்கவேண்டாம். அது ஆத்துமாதாயகர் அத்தனை பேருக்கும் உரியது! (வச 25). “இறக்கும்வரை நமக்கின்பம் ஆத்துமாதாயமே” என்றார் பக்தன் சின்செண்டார்ப்!

ஆவியின் அபிஷேகமானது பரலோகத்திற்கு நுழைவுச் சீட்டு அல்ல; அது ஆத்துமாதாயப் பணிக்குப் பட்டம்! பரமெழுமுன் இயேசுவின் இறுதி வார்த்தை அதுவே (அப் 1:8). தாம் அபிஷேகம் பெற்றதும் கிறிஸ்து ஆத்து மாதாயம் செய்ய வெளிக் கிளம்பிவிட்டார் (அப் 10:38). அபிஷேகம் பெற்ற ஆதிச்சபை நகர்களை நற்செய்திமயமாக்கி, நரகை நடுங்கச் செய்து, உலகை உலுக்கிவிட்டது. ஒரே நாளில் மூவாயிரம்பேர் சபையில் உறுப்பினராயினர். இவர்களையெல்லாம் மேற்பார்க்கப் பேதுரு உட்கார்ந்துவிட்டானா? இல்லை, மக்களுக்குத் தன் நிழல் கிடைக்கும்படி தெருக்களில் நடந்து திரிந்தான்! (அப் 5:15). இன்னும் ஐவரோடு பந்தி விசாரணை செய்யவே ஸ்தேவானும் பிலிப்புவும் நியமிக்கப்பட்டனர். ஆனால் ஆத்துமாதாயமே தங்களது பிரதான



அழைப்பு என்பதை அவர்கள் மறக்கவில்லை. ஸ்தேவான் வெளியே சென்று நற்செய்தி அறிவித்து முதல் இரத்தசாட்சியாய் மடிந்தான். பிலிப்பு சமாரியா விற்கு ஆத்துமாக்களைத் தேடிச் சென்றுவிட்டான். அவனுக்குப் பெயரே “சுவிசேஷகனாகிய பிலிப்பு” என்றாகிவிட்டது! ஆதி விசுவாசிகள் யாவரும் சுவிசேஷக் கோஷ்டியினரே! (அப் 8:1-4). தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதிய நிருபங்கள் மேய்ப்பருக்குரிய நிருபங்கள் என்றழைக்கப்படுவதுண்டு. ஆனால் “சுவிசேஷகனுடைய வேலையைச் செய்” என்று பவுல் அவனுக்கெழுதினான் (2 தீமோ 4:5).

நற்செய்திப்பணியை நாசமாக்க பிசாசு எதையும் செய்வான். ஏனெனில் நற்செய்திப்பணியானது நரலோகைச் சூறையாடிப் பரலோகை நிறைத்து விடுமல்லவா? சபைச் சரித்திரம் முழுவதிலும் எப்படியாவது சபையைத் திசைதிருப்ப சத்துரு தனது தந்திரங்களை மாற்றி மாற்றி வந்திருக்கிறான். சமீப காலத்தில் “பூரணமாகுதல்” எனும் உபதேசத்தை ஓர் ஆயுதமாக எடுத்திருக்கிறான். அவனது பிரதிநிதிகள் இப்படிப் பிரசங்கிப்பர்: “உள்ளிருப் போரே சரியில்லாதிருக்க, வெயியிலிருப்போரைக் குறித்துக் கவலைப்படு வானேன்?” “நீயே பரிசுத்தமில்லாதிருக்க, இன்னொருவருக்கு உபதேசிப் பானேன்?” “உள்ளிருக்கும் 99 ஆடுகள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொண்டிருக்க, தொலைந்துபோன ஓர் ஆட்டைத் தேடிச் செல் வானேன்?” “பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்... அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நீ பரிசுத்தமாகிக் கொண்டேயிரு. அசுத்தமாயிருக்கிறவனைக் குறித்துப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.” இவ்வித உபதேசத்தின் தவறு தெளிவு. பிரியமானவரே, இவ்விதக் கிறுக்கர்களைக் குறித்து எச்சரிக்கை! பணிக்காகவே பரிசுத்த மடைந்தோம்! மோசே பரிசுத்தமாக்கப்பட்டு, பணிக்கப்பட்டான் (யாத் 3:5,10). அப்படியே தாவீது (சங் 51:12,13), ஏசாயா (ஏசா 6:5-9), எரேமியா (எரே 1:4,5), இன்னும் ஏராளமானோர். “எஜமானனது உபயோகம்... எந்த நற்செயலுக்கும் ஆயத்தம்.” இதுவே பரிசுத்தமாக்கப்படுதலின் நோக்கம் (2 தீமோ 2:21). தினமும் தூசி தட்டி அலமாரியில் வைக்கப்படும் பொம்மை களாகிவிடாதீர்கள்!

ஆவியின் வரங்கள்மீது எங்கும் காணப்படும் ஆர்வத்தைக் குறித்துப் பெரிதும் மகிழுகிறேன். அதே வேளையில் வரங்களின் நோக்கத்தைக் கிறிஸ்தவர் சரிவர அறியவில்லையேயெனத் துக்கிக்கிறேன். வீட்டில் இருந்து விட அல்ல, வெளியே புறப்பட்டுச்செல்லவே வரங்கள். கொசுகூட நுழைய முடியாத அறையிலிருப்போருக்குப் பாம்புகளைக் கையிலெடுக்கும் வரம் எதற்கு? குடிப்பதெல்லாம் மினரல் வாட்டர்; சுகாதாரமற்ற கிராமங்களுக்கும்

பின்தங்கிய இடங்களுக்கும் செல்லுவதேயில்லை; பின்னை ஏன் நஞ்சு போன்றதைக் குடித்தும் சேதமாகாதிருக்க வரம்? மருத்துவ வசதியில்லாத பின்தங்கிய பகுதிகளுக்கு உங்களது சுகமாக்கும் வரங்களை எடுத்துச் செல்லுங்கள். திரையுலகுப் பாணியில் பெருநகர்களில் பகட்டாய் ஊழியம் செய்யும் சுவிசேஷகனின் வானளாவிய விளம்பரக் கூட்டங்களைவிட, ஆதிவாசிக் கிராமங்களில் ஒதுக்கப்பட்ட மக்களிடையே சாதாரண விசுவாசிகள் மூலம் நடக்கும் அற்புத சுகங்களே அதிக மகத்துவமும் உண்மையுமுள்ளவைகளாயிருப்பதைப் பல்லாண்டுகளாய்த் தெளிவாய்க் கவனித்து வருகிறேன். உங்களுக்குத் தேவன் தந்துள்ள வரங்களைக் குறித்து அவர் துக்கிக்காதபடி தேவை நிறைந்த இடங்களுக்குப் புறப்பட்டுச் செல்லுங்கள்.

ஆத்துமாதாயப் பணிக்கு முதல் எதிரி சோம்பலாகும். ஐந்து தாலந்தைப் பெற்றவன் இன்னும் ஐந்தைச் சம்பாதித்தான். அப்படியே இரு தாலந்தைப் பெற்றவன் இன்னும் இரண்டைச் சம்பாதித்தான். ஒரு தாலந்தைப் பெற்றவனோ அதைப் புதைத்து வைத்திருந்தான். அவனது சோம்பலைத் தலைவன் வெகுவாய்க் கடிந்துகொண்டான். நம்மெல்லாருக்கும் தாலந்துகள் உண்டு. பயன்படுத்தாவிடில் பறிபோய்விடும். தீர்க்கன் ஆமோஸின் கதறலைக் கவனியுங்கள்: “சீயோனில் நிர்விசாரமாயிருக்கிற உங்களுக்கு ஐயோ!... தந்தக் கட்டில்களில் படுத்துக்கொண்டு... தாவீதைப்போல் கீத வாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி... ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமல் போகிறார்கள்!” (ஆமோஸ் 6:1-6). இன்றையச் சபை இப்படித்தானிருக்கிறது. சீயோனில் நிர்விசாரம்! திட்டங்கள் தீட்டினாலும் நிகழ்ச்சிகள் நடத்தினாலும் வசதிதான் முக்கியமானதாகிவிட்டது. ஆசீர்வாதம் வேண்டும், துன்பம் கூடாது! சிம்மாசனம் வேண்டும், சிலுவை கூடாது! தெபொராளே, விழி! பாராக்கே எழுந்திரு! தூங்கும் இராட்சதனென்னும் சபையே, கர்த்தரின் சத்தத்தைக் கேள்! ஒரு சில மாதங்கள் ஞாயிறு மாலை ஆராதனைகளை நிறுத்திவிட்டு, திரையரங்கங்கள், மதுக்கடைகள் போன்றவற்றிற்கருகிலும், வீதிகள், கிராமங்களுக்கும் சபையாரை அழைத்துச் சென்று இறைவனைப் புகழ்ந்துபாடி, அவரது புகழைப் பறைசாற்றினாலென்ன? கூடாதா? சபைதானே ஆண்டவரது மீட்பின் படை? தாக்கச் செல்லுவோம்! நரக வாசல்கள் தாக்குப்பிடிக்க முடியாது! (மத் 16:18). சிறைப்பட்டோரைச் சிறையாக்குவோம்! உடற்பயிற்சியில்லாததால் விசுவாசிகள் பலருக்கு உணவு செரிப்பதில்லை. *எழும்பிடுவீர், ஓ வாலிபரே* என்று பாடிவிட்டு உட்கார்ந்துவிடுகிறோம்! சபையின் இந்த அமைதிப் பெரும்பான்மையோரை உலுக்கிவிடும் எழுப்புதல் தேவை. “ஆலய மணியோசைக்கருகிலேயே தங்கியிருக்க சிலர் விரும்புவர்; நானோ நரக வாசலுக்கருகில் விடுதலைச் சாவடி அமைத்து மாந்தரை மீட்பேன்” என்றார் ஜெனரல் வில்லியம் பூத்!



சபையிலுள்ள ஒவ்வொருவரும் வெளியேயிருக்கும் ஒவ்வொருவரைச் சந்தித்தால் சபை வளர்ச்சி நமது கற்பனைகளையெல்லாம் தோற்கடித்துவிடுமே! 100 விசுவாசிகளைக் கொண்ட சபையொன்றை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் ஒரு மாதகாலத்தில் ஒருவரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவந்து அந்நபரை ஆத்துமாதாயகராக மாற்றட்டும். இது அப்படியே தொடருமானால், பெப்ருவரியில் 200 பேராகிவிடுவர், மார்ச்சில் 400, ஏப்ரலில் 800, மேயில் 1600, ஜுனில் 3200, ஜுலையில் 6400, ஆகஸ்டில் 12,800, செப்டம்பரில் 25,600, அக்டோபரில் 51,200, நவம்பரில் 1,02,400, டிசம்பரில் 2,04,800! பாதிப்பேர் பின்வாங்கிப் போய்விட்டாலும் சுத்தமாக ஒரு லட்சம் மிஞ்சும்! இப்படிப் பார்த்தால் நமது நிலை என்னே பரிதாபம்! சபையானது நிறுவனமாகும்வரை, குருக்கள் சபையார் என்ற அபத்தமான வேறுபாடு நுழையும்வரை, ஆதிச்சபையானது இப்படித்தான் வளர்ந்தது என நம்புகிறேன். விசுவாசிகள் அனைவருமே தேவனது புண்ணியங்களை அறிவிக்கும் குருக்கள்தான் (1 பேது 2:4-10). சமீபத்தில் வெளிவந்துள்ளதொரு புள்ளி விபரப்படி ஐரோப்பிய சபைகளில் தினம் 4242 உறுப்பினர் குறைகிறார்களாம். புலம்புவதற்கு இது போதாதா?

ஓர் அவசர உணர்வு நம்மைப் பற்றிப்பிடிக்க வேண்டும். நேரம் அதிகமில்லை. நிமிடத்திற்கு 80 பேர் இறக்கின்றனர். பூமியதிர்வுகளும், வெள்ளங்களும், விபத்துகளும் நிறைந்த இந்நாட்களில் எண்ணிக்கை இன்னும் அதிகமாயிருக்கும். அதாவது, கடிகார வினாடி முள் ஓடும் வேகத்திற்கும் அதிக வேகத்தில் மக்கள் மடிகின்றனர். நமக்குக் கவலையில்லையா?

“மீன் பிடிக்கவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?” ஆலயங்களில் பிரசங்கிக்கும்போது வழக்கமாக இக்கேள்வியைக் கேட்பேன். தூண்டில் அல்லது வலை வாங்கவேண்டும் என்பார் ஒருவர். புழு சேகரிக்கவேண்டும் என்பார் அடுத்தவர். இப்படிப் பல விடைகள் வரும். “மீன் எங்கேயோ அங்கே **போக** வேண்டும்” என்று எவரும் சொல்லமாட்டார்! பிரியமானவரே, ஆத்துமாதாயத்தில் முக்கியமானதே **புறப்பட்டுப் போவதுதான்!** ஜெபித்தலும் இதற்குப் பதிலாகாது. முழங்காலிலேயே இருந்துகொண்டு நடத்துதல் நாடிப் பலர் காத்திருப்பர். கர்த்தர் ஓர் ஆத்துமாவிடம் “நடத்தினாலன்றி” அவர்கள் அசையமாட்டார்கள். வேதம் போதிப்பது இதுவல்ல. நாம் “போய்க்கொண்டே” இருக்கவேண்டும், தேவன் “நடத்திக்கொண்டே” இருப்பார். நிறுத்தப்பட்ட காரைத் திருப்புவது கடினம்! பவுல் போய்க்கொண்டேயிருந்ததால் அவனது திசையைத் தம் விருப்பம்போல் திருப்புவது கடவுளுக்குச் சுலபமாயிற்று (அப் 16:6-10). மறைந்த இசைப்பாடகர் கீத் கிரீன் இப்படிச் சொல்லுவார்: “புறப்பட்டுப் போகவே கிறிஸ்து நமக்குக்

கட்டளை தந்திருக்கிறார். இரண்டாம் கட்டளை வரும்வரை முதற்கட்டளைக்குக் கீழ்ப்படிந்துகொண்டேயிருப்பதுதான் இராணுவச் சட்டமாகும். திரும்பிவரக் கிறிஸ்து நமக்கு இன்னும் கட்டளை தரவில்லையே!'' நமது திமிர்வாதத்தைக் கடவுள் குணமாக்குவாராக!

பெரும்பாலும் திறந்த வெளியிலேயே ஜான் வெஸ்லி பிரசங்கித்தார். ஒருமுறை எப்வொர்த் எனுமிடத்தில் ஆலயக் கதவுகள் அவருக்கு மூடப்பட்டபோது, தனது தந்தையின் கல்லறை மீது நின்றுகொண்டு ஒரு வாரம் மாலைதோறும் சுவிசேஷத்தை முழக்கினார். அப்படியே ஜார்ஜ் விட்பீல்டும் ஒரு வெளிப்பிரசங்க வேந்தராய்த் திகழ்ந்தார். பிரசங்க பீடங்களைத் தேடியலையாதீர் என்பதே என் இளம் நண்பர்களுக்கு எனது அறிவுரை. பாவிகளைச் சந்திக்கும் எவ்விடமும் உங்களுக்குப் பிரசங்க பீடம்தான். ஆத்துமாதாய மன்னர் இயேசு எங்கெல்லாம் பிரசங்கித்தார் என்றறிவோமே! கடலோரம், மலையடிவாரம், வயல்வெளி, எங்கும்! அப்போஸ்தலர் தங்கள் ஆத்துமாதாயத்தில் அருங்கனிகள் பல பெற்றது நதிக்கரையிலும் சிறைச்சாலையிலும்தான்! ''தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது''—இதுவே இயேசுவின் ஊழியத்திற்கோர் அடையாளச் சான்றாகும். தரித்திரர் என்றால் தள்ளப்பட்டோர், பின்தங்கியவர் என்றெல்லாம் பொருள். அவர்களை நோக்கிச் செல்வோம். வசதி படைத்தவன் ஒருவன் நற்செய்தியில் ஆர்வங்காட்டினால், ஒருவர் விடாது எல்லாப் பிரசங்கிகளும் அவன் ஒரு ''நல்ல'' ஆத்துமா என்று அவனைத் தரிசனம் காணச் செல்கின்றனர். சில ஆண்டுகட்குமுன் சென்னையில் ஒரு திரைப்பட நடிகன் நற்செய்தியில் ஆர்வங்காட்டினான். பிரசங்கிகளும் ஊழியரும் அவனை விட்டார்களா! விட்டால்போதும் என்று தப்பினான் நடிகன்! நண்பரே, ஆத்துமாதாயத்தில் இவ்வித இரகசிய இச்சைகள் வேண்டாம்! கடவுளுக்கு முன் எல்லா ஆத்துமாக்களும் அருமையானவர்களே!

பொதுக்கூட்டங்களில் காட்டுமளவு கிறிஸ்தவர்கள் தனியாள் ஊழியத்தில் ஆர்வங்காட்டுவதில்லை. டி. எல். மூடி ஒரு பெரிய பொதுக்கூட்டப் பிரசங்கியாயிருந்தாலும், கையால் பறிக்கப்பட்ட கனியே சிறந்தது என்பார்! நாட்டின் சட்டம் ஒருவேளை பொதுக்கூட்டங்களைத் தடுக்கலாம்; ஆனால் தனியாள் ஊழியத்தை எவரும் நிறுத்த முடியாது. சற்றுமுன் நான் கணக்கிட்ட புள்ளி விபரம் நினைவிருக்கிறதா? அவ்வித ஆத்துமாதாயப் பணிக்குச் செலவே கிடையாது எனலாம். ஆனால் இந்தியாவில் பல பொதுக்கூட்டங்களுக்கு லட்சக்கணக்கில் பணம் செலவழிக்கப்பட்டும், அதின் விளைவாக சபையில் சேரும் கிறிஸ்தவரல்லாதோரின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இவ்விதக் கூட்டங்களில் 90 சதவீதம் கிறிஸ்தவர்களே பங்குபெறுகின்றனர். இப்படிச் சொல்வது பொதுக்கூட்டங்களைப் பழிக்க அல்ல, வேறுபாட்டை விளக்கவே.



அறிவித்தோருக்கே அறிவிக்கும், சந்தித்தோரையே சந்திக்கும், ஆசீர்வதிக்கப்பட்டோரையே ஆசீர்வதிக்கும், திருமுழுக்குப் பெற்றோரையே முழுக்காட்டும், ஆற்றப்பட்டோரையே ஆற்றும், ஆனால் விடப்பட்டோரையோ விட்டுவிடும் நமது பாவத்திலிருந்து மனந்திரும்புவோம். பெரும்பாலும் சந்திக்கப்படாத 6 லட்சம் கிராமங்களிலேயே நாட்டின் 80 சதவீத மக்கள் உண்டு என்பதை மறக்கவேண்டாம். ''ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றட்டும்; நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்'' என்றார் இயேசு (யோ 12:26). இன்று இயேசு மனுவுருவில் இந்தியாவிலிருந்தால் எங்கிருப்பாரென்று நினைக்கிறீர்கள்? அப்படியே பவுல் இந்தியாவிலிருந்தால் பெரும்பாலும் அவனை எங்கே காணலாம்? (ரோ 15:21).

உங்கள் ஆத்துமாதாயப் பணியில் சிலவேளை கனிகள் நிறைவாயில்லாமலிருக்கலாம். சோர்ந்துபோக வேண்டாம். ''காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையைத் தளரவிடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே'' (பிர 11:6). உலகைக் கிறிஸ்தவ மயமாக்க அல்ல, நற்செய்தி மயமாக்கவே கட்டளை பெற்றிருக்கிறோம்! விதைப்பதும், நீரூற்றுவதும் நமது பொறுப்பு; விளையச் செய்பவர் கடவுளே (1 கொரி 3:6).

ஆத்துமாதாயப் பணிக்கு மகிமையான பலன்கள் உண்டு. ''ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் **ஞானம்** உள்ளவன்'' (நீதி 11:30). ''அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு **கம்பீரத்தோடே** திரும்ப வருவான்'' (சங் 126:6). கர்த்தரின் வருகையில் நமக்குச் சந்தோஷமும், மகிழ்ச்சியின் கிரீடமும், மகிமையுமாய் இருப்பது நமது கனிகளே! (1 தெச 2:19,20). எனது தாயார் ஆத்துமாதாயத்தில் தீவிரமாயிருந்தார்கள். அவர்கள் கல்லறையில் தானியேல் 12:3ஐ எழுதி வைத்திருக்கிறோம்: ''அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போல சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்!''

4

# பெந்தெகொஸ்தேயின் நோக்கம்

**ஆவியின்** அபிஷேகம் ஒரு குறிப்பிட்ட சபையினருக்கு மட்டும் உரியது என்ற காலமெல்லாம் மலையேறிவிட்டது. இவ்வனுபவத்தை எதிர்ப்போரின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. பெந்தெகொஸ்தே சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாத தலைவர்கள் மற்றும் இறையியல் வல்லுனர் பலர் தாங்களே இப்புதுத் திராட்சரசத்தை ருசித்துவிட்டதால் தங்கள் கோட் பாடுகளை மாற்றிக்கொண்டனர். ஆவியின் அபிஷேகக் கூட்டத்தாரிடை யேதான் திருச்சபை வளர்ச்சியும் அதிகம். அருள்மாரியின் கடைசிக் காலத்தின் கடைசிக் கட்டத்தில் வேறெப்படி இருக்கமுடியும்?

ஆனாலும் கவனிக்கவேண்டிய, கவலைக்கிடமான ஒரு காரியமுண்டு. அதாவது, பெந்தெகொஸ்தேயின் நோக்கத்தை நாம் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அபிஷேகத்தின் சுற்றுவட்ட நன்மைகளையே பெரிதுபடுத்தி, மையக்கருத்தையோ விட்டுவிட்டோம். முக்கியமானதை இதர ஆசீர்வாதங்கள் கிரகணம் போல் மறைத்துவிட்டன. இந்தியாவைப் பொறுத்தவரை பெரும்பாலான பெந்தெகொஸ்தே வட்டாரங்களில் இது மறுக்க முடியாதது.

பெந்தெகொஸ்தேயின் பிரதான நோக்கத்தை கிறிஸ்து பரமேறுமுன் தெள்ளத்தெளிவாய் இப்படிக் கூறினார்: “பரிசுத்த ஆவி உங்கள் மீது வரும்போது நீங்கள் வல்லமை பெற்று... பூவுலகின் எல்லையெங்கும் எனக்குச்



சாட்சிகளாயிருப்பீர்கள்” (அப் 1:8). இதைச் சரிவர புரிந்து கொள்வோம். கிறிஸ்துவுக்குச் சாட்சியாயிருக்க வல்லமை அருளுவதே பெந்தெகொஸ் தேயின் முதல் நோக்கம். பிற யாவும் பின்னரே.

பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவை குறித்து உலகைக் கண்டித் துணர்த்தவே ஆவியானவர் வந்திருக்கிறார் (யோ 16:8). பாவத்தைப் பாவிகள் அருவருத்து நீதியை அரவணைத்துக்கொள்ள அவர் ஆசிக்கிறார். வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை அறிவித்து எச்சரிக்கிறார். சபைதான் அவரது வாயாகும். ஜீவத் தண்ணீருக்கு அழைப்பு எனும் அவரது செய்தியைச் சொல்லால் அறிவிப்பது விசுவாசிகளே. “ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்... தாகமாயிருக்கிறவன் வரட்டும்” (வெளி 22:17).

பெந்தெகொஸ்தேயின் பெரிய அற்புதம் வான் சத்தமோ, பலத்த காற்றோ, அக்கினி நாவுகளோ, அந்நிய பாஷைகளோ அல்ல. இவை யெல்லாம் முன்னுரைதான். 3000 பேர் திருமுழுக்கு பெற்றதுதான் அந் நாளின் சிகரம்! நரலோகைச் சூறையாடிப் பரலோகை நிரப்புவதுதான் பெந்தெகொஸ்தே!

அன்று 120 “விசுவாசிகள்” பெந்தெகொஸ்தே வல்லமை பெற்றபோது 3000 ஆத்துமாக்களைப் பெற்றெடுத்தனர். இன்று பெந்தெகொஸ்தே அனுபவம் பெற்றிருக்கிறோமெனக் கூறும் “சபைகள்” சென்னை நகரில் மட்டும் குறைந்தது 120க்கு மேல் உண்டு. அந்தோ, ஒரே நாளில் ஓர் 1000பேர்கூட திருமுழுக்கு பெறுவதை இந்நகர் இன்னும் காணவில்லையே! பிரச்னை எங்கே? கூச்சலை எழுப்புதல் என்று நினைத்துவிட்டோமோ? நற்செய்தியைப் பொதுவிடங்களில் பறைசாற்றவே பெந்தெகொஸ்தே வல்லமை! “அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று... உரத்த சத்தமாய்...” (அப் 2:14). கிறிஸ்தோரே, எழுந்திருங்கள்! எடுத்தியம்புங்கள்!

உன்னத வல்லமையால் நிறையும்வரைதான் காத்திருப்பு! அடுத்து உடனே அவரது நாமத்தில் மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் பிரசங்கிக்கக் கால்கள் விரையவேண்டும் (லூக் 24:47-49). தமது சீடர்மீது இயேசு ஆவியை ஊதியதேன்? அனல் கொடுத்து அகமகிழச் செய்யவா? இல்லை! தமது மன்னிப்பு ஊழியப் பிரதிநிதிகளாக அவர்கள் எங்கும் செல்லவே அவர்கள் மீது ஆவியை ஊதினார் (யோ 20:22,23).

கோழைகளைப் பெந்தெகொஸ்தே தைரியசாலிகளாக்குகிறது. பெந்தெ கொஸ்தேக்கு முன்னரும் பின்னரும் பேதுருவைக் கவனியுங்கள். பேதமை,

படிப்பறிவின்மை, ஆனால் பயமின்மை! (அப் 4:13). நம்மிலிருக்கும் தேவ வரத்தை அனல் மூட்டி எழுப்பிவிடுவோம். "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோ 1:6-8). இருளின் ஆதிக்கங்களுக்கெதிராகப் "பலமாய்ப்" போராடி சாட்சி பகர! மாளும் மாந்தருக்கு "அன்புடன்" சாட்சி பகர! துன்பத்தில் துவளுவோருக்குத் "தெளிந்த புத்தியுடன்" சாட்சி பகர!

பதுக்கலுக்குப் பெந்தெகொஸ்தே பரம எதிரி! அது தன்னலத்தைத் தகர்க்கிறது. அதின் முதற்கனியே அன்புதானே! (கலா 5:22). இல்லாதோரோடு பகிர அது பணப்பையைத் திறக்கிறது. "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். உடைமைகளையும் சொத்துக்களையும் விற்று, ஒவ்வொருவருக்கும் தேவையானபடி அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" (அப் 2:44,45; 4:34,35). எனவேதான் பந்தி விசாரணைத் தலைவர்களும் "பரிசுத்த ஆவியால் நிறைந்தவர்களாய்" இருக்கவேண்டியதிருந்தது! (அப் 6:3).

*"எனக்கு அக்கறையுண்டு!"*— இதுவே பெந்தெகொஸ்தே விசுவாசியின் முழக்கமாயிருக்கவேண்டும். எளியோருக்கு நற்செய்தி அறிவிக்க அவன் செல்லவேண்டும். இதயம் உடைந்தோருக்குத் தைலம் எடுத்துச் செல்லவேண்டும். தேம்பியழுவோரைத் தேற்றவேண்டும். அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சான்டல் பவுடரையும், துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும் கொடுக்கவேண்டும். ஒடுங்கிய ஆவிக்குப் பதிலாக அவர்களுக்குத் துதியின் உடையை அணிவிக்கவேண்டும் (ஏசா 61:1-3).

தொழுகையானது பெந்தெகொஸ்தேயில் புதிய பிறப்படைகிறது (அப் 2:11). அப்படியே தொழுகையானது சாட்சிபகருதலைப் பிறப்பிக்கவேண்டும். அபிஷேகம் பெற்ற சீடர் "கடவுளைத் துதித்து (அத்துடன்) மக்களெல்லாரிடமும் தயவு பெற்றிருந்தார்கள்" (வச 47). தொழுகையில்லா சாட்சி அகமற்றது; சாட்சியில்லா தொழுகை அர்த்தமற்றது. சொல்லப்போனால், சாட்சிபகருதலே தொழுகையின் ஒரு வெளிப்பாடுதான். அது இருளிலிருப்போருக்கு இறைவனது மகத்துவங்களை அறிவிப்பதாம் (1 பேது 2:9,10).

ஆதிநிலையேகும் முயற்சிப்பணி இயக்கங்கள் தொழுகையில் தனிக் கவனம் செலுத்துகின்றன. நல்லது. தாவீதின் கூடாரத்தைத் திரும்ப எடுப்பித்தலைக் குறித்த பிரசங்கங்களும் ஏராளம். பிரமாதம். ஆனால்,



ஆதிநிலையேகுதலும் திரும்பக் கட்டுதலும் ஏன்? "மற்ற இனத்தாரும்... கர்த்தரைத் தேடும்படி!" (அப் 15:15-17). தேவப்புகழ் பாடுவதைத் தேவப்புகழ் பறைசாற்றுதலிலிருந்து பிரித்தல் கூடாது (ரோ 15:9-11). நெடுக்கும் குறுக்கும் ஆகிய இவ்விரு பரிமாணங்களில் ஒன்றில்லா விட்டாலும் இன்னும் நமது பெந்தெகொஸ்தே சரியாக "வரவில்லை" என்றுதான் சொல்லவேண்டும்!

வேதத்தைப் பாதி விசுவாசிப்போர் அற்புதங்களின் காலம் கடந்துவிட்டதென்பர். கடவுளின் மீந்த மக்களோ இவர்களுக்குச் செவிமடுக்காது, ஆவியின் வரங்களைக் குறித்து வேதத்தை ஆராய்ந்து படிக்கின்றனர். இதவாதிகளெனும் வெட்டுக்கிளிகளும், பச்சைப் புழுக்களும் அழித்துப் போட்டவைகளைக் கடவுள் சபைக்குத் திரும்பத் தந்துகொண்டிருக்கிறார். இங்கும் நாம் வரங்களின் நோக்கத்தை மறந்துவிடக்கூடாது. மனிதனின் சுய நன்மையெனும் பீடத்தில் தேவனின் உன்னத நோக்கு பலமுறை பலியாகிறது.

வரங்களின் குறுகியப் பட்டியலொன்றை இயேசு மாற்கு 16:15-18இல் தந்தார். அது நற்செய்திப்பணியையே மையமாய்க் கொண்டது. "நீங்கள் உலகெங்கும் போய்ப் படைப்பு அனைத்திற்கும் நற்செய்தியைப் பிரசங்கியுங்கள்... விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன..." பெந்தெகொஸ்தேயை அடுத்த முதல் அற்புத சுகம் சீடரின் எண்ணிக்கையை 5000 எனப் பெருக்கியது. ஆடவர் மட்டும் அத்தனை பேர்! (அப் 4:4). நற்செய்திப் பிரசங்கத்தை உறுதிப்படுத்துவதே அடையாள வரங்களின் பிரதான நோக்கம் (மாற் 16:20). "அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும்... பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், கடவுள்தாமே சாட்சி கொடுத்த இவ்வளவு பெரிய இரட்சிப்பு!" (எபி 2:3,4).

வரங்களைப் போதிக்கும் கருத்தரங்குகள், வரங்களைப் பயிற்சிக்க வேண்டிய களங்களுக்குப் பங்குபெறுவோரை விரையச் செய்யத் தவறினால் அது பெரும் தோல்வி. களங்களிலல்லவா கயவனின் கட்டுக்குள் கோடிகள் கலங்கி நிற்கின்றன! சில ஆதிவாசிக் கிராமங்களில் ஒருவர்விட்டு ஒருவருக்குப் பிசாசு பிடித்திருக்கிறது. பிசாசுகளைத் துரத்த அங்கு படையெடுங்கள். மருத்துவ வசதியேதுமின்றி கற்கால மனிதர் போல் ஆயிரங்கள் வியாதிகளில் சாகின்றன. குணமாக்கும் வரங்களை அங்கு போய்ப் பயிற்சியுங்கள். அறிவாளிகளையும் திக்குமுக்காடச் செய்யும் சூழல்கள் மிஷனரிக் களங்களில் ஏராளம். "அறிவையுணர்த்தும் வசனம், ஞானத்தைப் போதிக்கும் வசனம்" ஆகிய உங்கள் வரங்களை அங்கு

சென்று பயன்படுத்துங்கள். பகைவனை முறியடித்து மக்களை மீட்கப் புறப்படாவிட்டால் படைக்கலன்களால் பயனென்ன?

*“சந்தைவெளிகளில் வரங்கள்”* (Gifts for the Marketplace) எனும் காலத்திற்கேற்ற புத்தகத்தில் பண்டிதர் R. L. பிராண்ட் இப்படி எழுதியுள்ளார்: “படித்துக்கொண்டும், பரவசப்பட்டுக்கொண்டுமிருப்பதற்காக வரங்கள் கொடுக்கப்படவில்லை... ஆலயத்தின் நான்கு சுவர்களுக்குள்ளேயே வரங்கள் பெரும்பாலும் செயல்படவேண்டுமென்பது பெந்தெகொஸ்தே உலகின் பொதுவான கருத்து... ஆனால் ஆதிச்சபையின் சரித்திரத்தைக் கவனித்தால் ஜெபக்கூட்டங்களைவிட தெருச்சந்திகளிலேயே அதிகமாய் வரங்களைச் செயல்படுத்தினர் என்பது தெளிவாகிறது.” அமெரிக்க “அசெம்பிளி ஆப் காட்” தலைவர் ரேமண்ட் கார்ல்சன் இப்புத்தகத்திற்கு எழுதியுள்ள அணிந்துரையில் ஆசிரியரது கருத்தை அப்படியே ஆமோதிக் கிறார்.

முறையே சுய பக்திவிருத்திக்கும், சபை பக்திவிருத்திக்கும் அருளப்படும் அந்நிய பாஷைகளும் தீர்க்கதரிசனமும்கூட நற்செய்திப்பணிப் பயனுள் ளவை என்பதைக் கவனியுங்கள். அந்நிய பாஷைகள் கேட்டுக்கொண்டி ருக்கும் “அவிசுவாசிகளுக்கு” ஓர் அடையாளம். தீர்க்கதரிசனமானது உள்ளே வரும் “அவிசுவாசியொருவனுக்கு” உணர்த்துவிப்பாயிருக்கிறது (1 கொரி 14:22,24,25).

ஆவியானவரின் எழுப்புதலின் அழகிய சித்திரமொன்று எசேக்கியேல் 37இல் உண்டு. தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் சொன்னதும் உலர்ந்த எலும்புகளுக்குள் கர்த்தர் ஆவியை நுழையச் செய்தார். சத்தம், அசைவு, எல்லாம் உண்டாயிற்று. ஆனால் அவைகள் மகா பெரிய சேனையாய்க் “காலூன்றி” நிற்கும்வரை வேலை முடியவில்லை! நற்செய்தியை அறிவிக்க விரையும் அழகிய பாதங்கள்!

தனி நபரின் உயிர்மீட்சிக்குச் சங்கீதம் 51க்கு இணையான ஜெபம் வேறில்லை. “தேவனே... உமது சமூகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்” என்று தாவீது கதறினான். ஏன்? “**அப்பொழுது** பாதகருக்கு உமது வழிகளை உப தேசிப்பேன்; பாவிகள் உம்மிடம் மனந்திரும்புவார்கள்” (வச 11-13).



எழுப்புதல் கூட்டங்களுக்கு ஒன்று தவறாமல் போகிறோமே, விளை வென்ன? நமது சாட்சி கேட்டு எத்தனைபேர் மனந்திரும்பியிருக்கின்றனர்? கணக்கெடுப்போம்.

பெந்தெகொஸ்தே மாரியைத் தொடர்ந்து தீர்க்கதரிசனம், சொப்பனம், தரிசனம், இவையெல்லாம் வரும் (அப் 2:17,18). ஆனால் இவைகளின் விளைவு என்னவாயிருக்கவேண்டும் தெரியுமா? “அப்பொழுது கர்த்த ருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக் கப்படுவான்” (வச 21). முதலும் முக்கியமுமாக ஆத்துமாக்களை இரட்சிப் பதிலேயே தேவன் நோக்கங்கொண்டுள்ளார் என்பது தெளிவாகிறதல் லவா? தேவ ஆசீர்வாதங்கள் நம்மில் தேங்கிவிடக்கூடாது, நம்மிலிருந்து புறப்பட்டு ஓடவேண்டும் (யோ 7:37,38). “நான் உன்னை ஆசீர்வதிப் பேன்... நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்” என்பதே இறைவாக்கு (ஆதி 12:2).

இன்று தரிசனங்களுக்கும் சொப்பனங்களுக்கும் ஒரே கிராக்கி. நடபடிகள் புத்தகத்திலுள்ள தரிசனங்கள், சொப்பனங்களைக் கவனித்தால் அவற்றில் பெரும்பாலானவை மிஷனரிப்பணியை அடுத்தவையே என விளங்கும். பேதுருவுக்கு வந்த தரிசனம் புறவினத்தாருக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல அழைப்பு (அப் 10). பவுலின் தரிசனங்களில் ஒன்று மக்கெதோனியாவுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல அழைப்பு (அப் 16). இன்னொரு தரிசனம் எதிர்ப்பு நிறைந்திருந்த இடத்திலும் தைரியமாய்ச் சாட்சிபகர தேவன் அவனுக்குத் தந்த உயிர்ப்பிப்பு (அப் 18). பொன் மாளிகைகள், பொன் கிரீடங்கள் என்றெல்லாம் தரிசனம் பார்த்ததாகச் சொல்லுகிறார்கள். அபாரம்! ஆனால், அறுப்புக்கு ஆயத்தமாயிருக்கும் பொன்னிற வயல் நிலங்கள் தரிசனத்தில் வரவில்லையோ? சொப்பனக் காரார் செயல் வீரராய் மாறவேண்டும்.

இந்தியாவிலுள்ள பெந்தெகொஸ்தே சபைகள் பிற சபைகளை விட அதிகமாக மிஷனரிப் பணிக்குச் செல்லும், செலவிடும் நாள் என்று வரும்? வருமா? திரள்கள் அழிவதைக் கண்டு கடவுள் முடிவில்லாது பார்த்துக் கொண்டிருப்பாரோ? கடவுள் உலகில் இவ்வளவாய் அன்புகூர்ந்து தமது ஒரே குமாரனைத் தந்துவிட்டார். நாமோ நமது குமாரர், குமாரத்திகளில் அவ்வளவாய் அன்புகூர்ந்து உலகை மறந்துவிட்டோம்! அநியாயம்!

நடபடிகள் புத்தகத்தில் “சந்தோஷம்” என்பது பெரும்பாலும் நற்செய்திப் பணியை அடுத்தே கூறப்பட்டுள்ளது. சீடர் தங்களது சாட்சிக்காக அடிபட்டபோது அகமகிழ்ந்தனர் (5:40,41). பிலிப்புவின் நற்செய்திப் பணியால்

சமாரியாவில் சந்தோஷம் (8:8). அந்தியோகியாவில் பலர் மனமாறுவதைக் கண்டபோது பர்னபா பரவசமடைந்தான் (11:22,23). அப்போஸ்தலர் சுவிசேஷத்தோடு தங்களிடம் வந்தது புறவினத்தாருக்குப் பூரிப்பு (13:47,48). பவுலையும் பர்னபாவையும் அடித்துத் துரத்தியதைக் கேட்ட சீடருக்கு ஆவியின் ஆனந்தம் (13:50-52). பெனிக்கே, சமாரியா நாடுகளில் புறவினத்தார் மனந்திரும்பிய செய்தி கேட்ட சகோதரர்க்கு ஒரே சந்தோஷம் (15:3). அறுவடையினால் பொங்கும் குதூகலமே ஆவியானவரின் ஆனந்தம். ஏனெனில், அவரே மிஷனரிப்பணியின் இயக்குநர் (13:4).

ஆவியானவரைக் குறித்து இயேசு சொன்ன வசனங்களில் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள ஒன்று மாற்கு 13:11 ஆகும். "என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள்; அந்நொடியிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங் கள்; ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்." நண்பரே, பிரசங்கிப்பதைக் குறித்து இப்பகுதி பேசவேயில்லை. அதுவும் ஆயத்தமில்லாத சோம்பேறிப் பிரசங்கத்தை இது குறிப்பிடவேயில்லை! சொல்லப்பட்ட இடம், பொருள், காலத்தைக் கவனியுங்கள்: "எல்லா இனத் தாருக்கும் நற்செய்தி முதலாவது பிரசங்கிக்கப்படவேண்டும். அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போது..." (வச 10,11).

இந்தியாவில் கிறிஸ்தவத்திற்கு எதிராக தங்கள் பேய்த்தலைகளை உயர்த்தும் சக்திகள் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. பெந்தெகொஸ்தே என்றால் சித்திரவதை, சிறைவாசம், சிரச்சேதம், இப்படி எல்லாம் உண்டு. யார் உண்மையான பெந்தெகொஸ்தேகாரர் என்பது நாளடைவில் புலப்படும்! "நீங்கள் கிறிஸ்துவின் பெயருக்காகப் பழிக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் கடவுளின் ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்" (1 பேது 4:14).

பூரணப்படுதல் பற்றிய விபரீத உபதேச வலையில் சிக்கிக்கொண்டோரு முண்டு. அவர்கள் தங்கள் காலணிகளுக்குப் பாலிஷ் போட்டுக்கொண்டே இருப்பார்கள் — பணிக்களம் நோக்கி நடக்க அல்ல, ஜமுக்காளம் விரித்த மொசைக் தரையில் சுற்றிச்சுற்றி வர! வெளியே போய்விட்டால் காலணிகளில் தூசி படிந்துவிடுமே என்ற பயம்! அப்பா, ஏமாற்றுவதில் பிசாசு எத்தனை கில்லாடி!

நம்மிலுள்ள பதரையெல்லாம் எரித்து நம்மைத் தூய்மையாக்கத்தான் ஆவியின் அக்கினி என்பது உண்மை. அவர் நம்மை உள்ளும் புறமும்



தூய்மையாக்குகிறார். ஆனால் எதற்காக? அலமாரியில் வைக்கவா? இல்லை, "எஜமானுக்குப் பயனுள்ளதும், எந்த நற்செயலுக்கும் ஆயத்த மாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாய்" இருக்க! (2 தீமோ 2:21). இயேசுவைப்போல் இருப்பதென்றால் அவரைப்போல் இயங்கவும் வேண்டும். ஒன்றில்லாது அடுத்தது முற்றுப்பெறாது.

ஆவியின் முதல் அருள்மாரியைத் தொடர்ந்து சீடர்கள் மகிழ்ச்சியோடு தேவனது மகத்துவங்களைப் பேசினார்கள் (அப் 2:11). இரண்டாம் அருள் மாரியைத் தொடர்ந்து, அவர்கள் தைரியத்தோடு தேவனது வசனத்தைப் பேசினார்கள் (4:31). இதோ, பெந்தெகொஸ்தேயின் நோக்கம் தெளிவாகி விட்டது: **திருவசனத்தை மகிழ்வோடும் துணிவோடும் அறிவிப்பது!**

# 5

# இருளுலகில் திருச்சபை

**திருச்சபைதான்** "உலகிற்கு உப்பும் வெளிச்சமும்" (மத் 5:13,14). சமுதாயத்தின் ஆசீர்வாதத்திற்குரிய சாவி திருச்சபையின் கையில் தான் இருக்கிறது.

எடுத்துக்காட்டாக ஆதியாகமம் 18:23-26ஐ வாசியுங்கள். ஆபிரகாம் தேவனுக்கு முன்பாக நின்று சோதோம், கொமோரா நகர்களுக்காய்ப் பரிந்து பேசிக் கொண்டிருந்தான். அங்குள்ள மக்களின் பாவம் மிகவும் கொடியதாயிருந்தது. நியாயத்தீர்ப்பு வாசலில் இருந்தது. ஆபிரகாம் ஆண்டவரைப் பார்த்து, "நகருக்குள்ளே ஒரு வேளை ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள். அந்த ஐம்பது நீதிமான்களுக்காக இரட்சியாமல் அந்த இடத்தை அழிப்பீரோ?" என்றான். அதற்குக் ஆண்டவர்: "நான் சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால் அவர்களுக்காக அந்த இடம் முழுவதையும் இரட்சிப்பேன்" என்றார். அதன்பின் ஆபிரகாம் 45, 40, 30, 20 என்று கடைசியாக 10 நீதிமான்களுக்காகப் போராடிக்கொண்டிருந்தான். அதற்கும் அவர், "பத்து நீதிமான்களுக்காக அதை அழிப்பதில்லை" என்றார்.

சமுதாயத்தைக் குறித்துச் சபையின் பொறுப்பு 2 நாளாகமம் 7:14இல் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. "என் பெயர் சூட்டப்பட்ட என் மக்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் நாட்டிற்குச் சேமத்தைக் கொடுப்பேன்."



எந்த நாட்டையும் தண்டிக்கவோ, அழிக்கவோ தேவன் விரும்புவதில்லை, அவர் மீட்பர். நாட்டிற்கு அழிவு வருவதற்கு மூல காரணம் அதின் பாவமல்ல, கடவுள் தமது நியாயத்தீர்ப்பை நிறுத்தும்படி, அவரிடம் பரிந்து பேச ஆளில்லாததே காரணம். எசேக்கியேல் 22:29-31ஐப் பாருங்கள். "நாட்டின் மக்கள் இடுக்கண் செய்து, கொள்ளையடிக்கிறார்கள்... நான் நாட்டை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனிதனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். ஆகையால், நான் அவர்கள் மேல் என் கோபத்தை ஊற்றினேன்."

சரித்திரம் இவ்வுண்மையைத் தெளிவாக நிரூபிக்கின்றது. "கர்த்தாவே, சபையை வளைத்து உலகை வளமாக்கும்" என்று இவான் ராபர்ட்ஸ் ஜெபித்தார். வேல்ஸ் நாட்டில் தேவாசீர்வாதம் மழைபோல் ஊற்றப்பட்டது. ஜான் வெஸ்லியின் மூலம் ஏற்பட்ட எழுப்புதல் இங்கிலாந்தின் இயல்பையே மாற்றிவிட்டது. சார்லஸ் ஃபின்னியின் ஊழியம் அமெரிக்காவுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது. தற்காலத்தில் வெகு முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் ஒன்று தென் கொரியா. மேனாட்டுச் சந்தையில் கொரியா சரக்குகளுக்கு அதிகக் கிராக்கி. இதின் இரகசியம்? சியோல் நகரில் மட்டுமே 2000 ஆலயங்கள் இருக்கின்றன. சட்டசபை அங்கத்தினரில் மூன்றிலொரு பங்கு கிறிஸ்தவர்கள்!

நாட்டிலுள்ள திருச்சபையின் மூலம்தான் கடவுள் அந்நாட்டை ஆசீர்வதிக்கிறார். பண்டையக் காலத்திலிருந்தே இது கடவுளுடைய பண்டைய, ஆனால் மாறாத முறை. இது ஆபிரகாமில் துவங்குகிறது. "உன்னை ஆசீர்வதிப்பேன்; நீ ஆசீர்வாதமாயிருப்பாய். பூமியிலுள்ள இனங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று கடவுள் அவனிடம் சொன்னார் (ஆதி 12:2,3).

சமுதாயத்தைக் குறித்துச் சபையின் மூன்று முக்கிய பொறுப்புகளை இங்கு கவனிப்போம்.

## 1. பரிந்து பேசுதல்

இதுவே அடிப்படையான, பிரதான பொறுப்பு. "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனிதருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்" (1 தீமோ 2:1,2). தலைவர்களுக்காகவும், மக்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

*அ) தலைவர்களுக்காக*

தலைவர்களின் கைகள் சுத்தமாக இருக்கவும், அவர்கள் நேர்மையாய் வாழவும் ஜெபிக்கவேண்டும். ராஜாவாகிய லேமுவேலின் தாய், ''பெண்களுக்கு உன் பலத்தையும் ராஜாக்களைக் கெடுக்கும் காரியங்களுக்கு உன் வழிகளையும் கொடாதே. திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல'' என்று அவனுக்குப் போதித்தாள் (நீதி 31:3,4). தலைவர்களுக்காகத் தேவனிடம் மன்றாடாமல், அவர்களது அநீதியைச் சுட்டிக்காட்டுவதில் எவ்விதப் பயனுமில்லை. அவனது சகோதரன் மனைவியை வைத்திருப்பது சரியல்லவென்று ஏரோது அரசனை யோவான் ஸ்நானகன் கடிந்துகொண்டான். ஆனால் யோவான் ஒரு ஜெப வீரன் என்பதை நாமறிவோம். அவன் தன் சீடர்களுக்குக்கூட ஜெபிக்கக் கற்றுக்கொடுத்திருந்தான்.

மாறிவிடும் தன்மையுள்ள மனிதர் மூலம் பெறும் தற்காலிகக் கீர்த்தியைச் சார்ந்திராமல், சகல அதிகாரங்களுக்கும் மூல காரணராகிய தேவன்மேல் தலைவர்கள் சார்ந்திருக்க ஜெபிக்கவேண்டும். இவ்வுண்மையைத் தாவீதரசன் சங்கீதம் 21இல் அழுத்திக் கூறுகிறான். ''கர்த்தாவே, உம்முடைய வல்லமையிலே ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார்; உம்முடைய இரட்சிப்பிலே எவ்வளவாய்க் களிகூறுகிறார்! ... ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்; உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார்'' (வச 1, 7). மன்னன் நேபுகாத்நேச்சார் இப்பாடத்தைக் கடின முறையில் கற்றுக்கொண்டான். (தானி 4:28-37).

தலைவர்களுக்கு நல்ல ஆலோசனைக்காரரையும், ஆலோசனைக்கு செவிகொடுக்கும் மனதையும் தேவன் கொடுக்க ஜெபிக்கவேண்டும். உலகில் வாழ்ந்தவர்களிலேயே மிகவும் ஞானமுள்ள அரசன், ''ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜாவைப் பார்க்கிலும் ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே மேலானவன்'' என்று சரியாகச் சொன்னான் (பிர 4:13). அரசன் ரெகொபெயாம் ''முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்து தனக்குமுன் நிற்கிற வாலிபரோடே ஆலோசனை பண்ணினான்'' (1 இரா 12:8). இதனால் அவன் இராஜ்யம் ஈடுசெய்ய முடியாதபடி இரண்டாகப் பிரிந்தது. தன்னைச்சூழ தன்னலமுள்ள மனிதரைக் கொண்ட தலைவனின் நிலை மிகப் பரிதாபம். நம் தலைவர்களுக்குத் தேவையான பகுத்தறிவைத் தேவன் தரும்படி நாம் மன்றாடவேண்டும். ''இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனிதருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனிதரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை'' (யோ 2:24,25).



தலைவர்கள் நீதியுள்ள நியாயத்தீர்ப்புச் செய்யயும்படி ஜெபிக்கவேண்டும். முதலாவது ஏழைகள். ''ஏழைகளுடைய நியாயத்தை உண்மையாய் விசாரிக்கிற ராஜாவின் சிங்காசனம் என்றும் நிலைபெற்றிருக்கும்'' (நீதி 29:14). அடுத்து பொல்லாதவர்கள். ''ஞானமுள்ள ராஜா துன்மார்க்கரைச் சிதறடித்து, அவர்கள் மேல் உருளையை உருட்டுவான்'' (நீதி 20:26). பலமே உரிமை எனப்படும் இக்காலத்தில், ஏழைகளைத் தாங்கும் தயவுள்ள தலைவர்களும், பலவான்களாயிருந்தாலும் துன்மார்க்கராயிருந்தால் அவர்களைத் தண்டிக்காமல் விடாத தைரியமுள்ள தலைவர்களும் நமக்குத் தேவை. அரசியல் தலைவர்கள் அனைவரும் பட்சபாதம் எனும் பயங்கர பாவத்தினின்று விடுபட வேண்டும். அநியாயத்திற்கும், லஞ்சத்திற்கும் வழி நடத்தும் பொருளாசை அவர்களைப் பற்றிப் பிடித்துவிடக்கூடாது. நம் தலைவர்கள் தினமும் நீதிமொழிகளில் ஓர் அத்தியாயம் படித்தால் நலமாயிருக்கும்!

தலைவர்களது பாதுகாப்பிற்காகவும் ஜெபிக்கவேண்டும். நாடுகளைக் கொலை ஆவியினால் சாத்தான் நிரப்பிப்கொண்டிருக்கிறான். நாம் இயேசுவின் நாமத்தில் இந்த இரத்தவெறி கொண்ட சாத்தானின் ஆவிகளைக் கடிந்து தலைவர்களைக் காக்கும் தூதர்களுக்குக் கட்டளையிட வேண்டும். பாதுகாப்பு ஒழுங்குகளும், மெய்க்காவலர்களும் அவசியமே. ஆனால் ''கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா'' (சங் 127:2). இந்திரா காந்தி அம்மையாரும் அதையடுத்து ராஜீவ் காந்தியும் கொலை செய்யப்பட்டது இந்தியக் கிறிஸ்தவர்கள் தங்கள் தலைவர்களின் பாதுகாப்பிற்காகத் தவறாமல் ஜெபிக்கவேண்டுமென்பதற்கு ஒரு முக்கிய படிப்பினை. கடவுள் தாவீதை சவுலின் பொறாமைக்கும், வெறிக்கும் எப்படி விலக்கிப் பாதுகாத்தார் என்பதை வேதத்தில் வாசிக்கிறோம். ''சவுல் தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக்குத்திப் போடுவேன் என்று ஈட்டியை அவன்மேல் எறிந்தான். ஆனாலும் தாவீது விலகி இரண்டு தடவை அவனுக்குத் தப்பினான். கர்த்தர் தாவீதோடு இருக்கிறார் என்று சவுல் கண்டு, தாவீதுக்குப் பயந்தான்'' (1 சாமு 18:11,12).

தலைவர்களது திட்டங்களையெல்லாம் தேவன் நடத்த ஜெபிக்க வேண்டும். அரசியல் பதவிகள் அனைத்திற்கும் பின்னால் ஆவிகளின் சக்திகள் இருக்கின்றன என்பதை வேதம் தெளிவாகப் போதிக்கிறது. தானியேல் 10:12-21இல் ஒரு தெளிவான எடுத்துக்காட்டு உள்ளது. தானியேலின் ஜெபத்திற்குரிய பதில் அவனை எட்டாதபடி அது வானத்தில் இருபத்தொரு நாட்கள் பெர்சியா ராஜ்யத்தின் அதிபதியால் தடுக்கப்பட்டது. பிரதான தூதன் மிகாவேல் உதவிக்கு வந்தபின்பே, பதிலைக் கொண்டுவந்த

தூதன் தானியேலிடம் வந்துசேர முடிந்தது. “ஏனெனில் சதையோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இவ் வுலகின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால்... எல்லா வேளைகளிலும் ஜெபம் பண்ணுங்கள்...” (எபே 6:12,18). ஒரு நாட்டின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுவது பாராளு மன்றத்திலல்ல, பரமனுடைய வீட்டில்!

*ஆ) மக்களுக்காக*

“எல்லா மனிதருக்காகவும்” ஜெபிக்கும்படிப் பவுல் கூறுகிறான். ஜெபிக்க வேண்டிய எல்லாக் குறிப்புகளையும் இங்கு வரிசைப்படுத்த முடியாது. ஆனால் இதோ சில முக்கியக் குறிப்புகள்—

மக்கள் மனந்திரும்பவும், நாட்டில் தேவன் நீதியைப் பொழியவும் ஜெபிக்க வேண்டும். “நீதி மக்களை உயர்த்தும்; பாவமோ எந்த மக்களுக்கும் இகழ்ச்சி” (நீதி 14:34). ஓசியா தீர்க்கதரிசி, “கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியைப் பொழியும்வரை அவரைத் தேடக் காலமாயிருக்கிறது” என்று மக்களிடம் கூறினான் (10:12). துஷ்டத்தனத்தின் ஆவியும், கலகத்தின் ஆவியும் எல்லா நாடுகளிலும் நடமாடிக்கொண்டிருக்கிறன. கடவுள் குறுக்கிடாவிட்டால் உலகமுழுவதும் வெகு சீக்கிரத்தில் நாசமாகுமென் பது உறுதி. “உமது சித்தம் விண்ணகத்தில் செய்யப்படுகிறதுபோல மண்ணகத்திலும் செய்யப்படுவதாக” என்று ஜெபிக்க இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார். ஜெபத்தின் மூலம் சாதிக்கலாம் என்ற உணர்வு நம்மை நம்பிக்கையுள்ளவர்களாக்கட்டும். நாம் மனந்தளரவே கூடாது.

எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட ஜெபிக்கவேண்டும். வேதத்தை அறிந்த ஒருவருக்கு உடனே விசாலமான வழியும், நெருக்கமான வாசலுமே நினைவிற்கு வரும். உண்மைதான். ஆனால் தேவனுடைய பரிபூரண சித்தத்தைப் பாருங்கள்: “எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்” (1 தீமோ 2:4). தேவனுடைய விருப்பத்தின்படி நாம் ஜெபிக்கவேண்டும். தேவன் இவ்வளவாய் “உலகத்தில்” அன்புகூர்ந்தார் என்பதை நினைவுகூருங்கள். உங்கள் அயலகத்தார், உங்கள் தெருவிலுள்ளோர், உங்கள் சமுதாயத் திலுள்ளோருக்காக ஜெபிக்கத் துவங்குங்கள். தேசப் படத்தையும், உலகப் படத்தையும் வாங்குங்கள். வாழ்க்கையில் ஒருமுறையாவது ஒவ்வொரு மொழியினரும், இனத்தினரும் உங்கள் ஜெபத்தில் இடம் பெறட்டும்.



வேதத்திலுள்ள சில எடுத்துக்காட்டுகள் மிகவும் சவாலாயிருக்கின்றன:

**மோசே**: “ஐயோ, இந்த மக்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங் களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும் தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புத்தகத்திலிருந்து என் பெயரைக் கிறுக்கிப்போடும்” (யாத் 32:31,32) என்று ஜெபித்தான்.

**தானியேல்**: “என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி, பாவ அறிக்கை செய்து... நாங்கள் பாவம் செய்து, அக்கிரமக்காரராயிருந்து துன்மார்க்கமாய் நடந்து, கலகம் பண்ணி... என் தேவனே... நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம். ஆண்டவரே, கேளும்; ஆண்டவரே, மன்னியும்” (தானி 9:4,5,18,19) என்று மக்களுடைய பாவங்களைத் தன் பாவங்களாக அறிக்கையிட்டு, இரக்கத் திற்காகக் கெஞ்சினான்.

**பவுல்**: “சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டுமென்பது என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப் பமுமாயிருக்கிறது;... எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மன வேத னையும் உண்டாயிருக்கிறது... என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவை விட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேன்” (ரோ 10:1; 9:1,3) என்று ஜெபித்தான். மோசேயின் ஆவி பவுலையும் பிடித்திருந்தது. பரலோகப் புத்தகத்திலிருந்து மக்களுக்காகத் தனது பெயர் நீக்கப்படவும் மோசே ஆயத்தமாயிருந்தான். தனது நாட்டி னருக்காகச் சபிக்கப்படவும் பவுல் ஆயத்தமாயிருந்தான்.

அடுத்து, நாட்டைக் குறித்து சபையின் இரண்டாவது பொறுப்பைக் கவனிப்போம்.

## 2. பரிசுத்தமாயிருத்தல்

திருச்சபை உள்ளும், புறமும் தனது பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளாவிடில், அது தேவன் நியமித்த பணியை உலகில் நிறைவேற்ற முடியாது. திருச்சபை தவறினால் நாடு பாழாகும். வேறெந்த வகையிலும் கடவுள் நாட்டை ஆசீர்வதிக்க முடியாது.

*அ) உள்ளே பரிசுத்தம்*

நாட்டின் நலன் திருச்சபையின் பரிசுத்தத்தைச் சார்ந்துள்ளது. இவ்வுண்மை 2 நாளாகமம் 7:14இல் நன்றாக விளக்கப்பட்டுள்ளது. "என் பெயர் சூட்டப்பட்ட என் மக்கள் தங்களைத் தாழ்த்தி... தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் நாட்டுக்குச் சேமத்தைக் கொடுப்பேன்." நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கவேண்டும். பரிசுத்தமற்ற சபை ஒரு முரண்பாட்டுச் சொல். சபை போகிற போக்கில்தான் சமுதாயமும் போகும். இவ்வுலகில் பல மதங்கள் உள. ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே நம்முடைய பாவங்களை மன்னித்து, பரிசுத்த வாழ்வு வாழ வல்லமை அருளும். நரக வாழ்விலிருந்து நாட்டை விடுவிக்க சபை பரிசுத்தமாய் வாழவேண்டும். பரிசுத்த அக்கினியைச் சபை இழந்துவிட்டால், பாதாள அக்கினிக்குப் பல்லாயிரங்கள் இரையாகும்.

"நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீடர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்று இயேசு மொழிந்தார் (யோ 13:34,35). பாட்ஜுகளை சட்டைகளில் அணிந்துகொள்வதும், நமது பொருட்களில் வசன ஸ்டிக்கர்களை ஒட்டிக் கொள்வதும் நல்லதுதான். ஆனால் கிறிஸ்தவரிடம் உண்மை அன்பைக் கண்டாலொழிய, இவை என்றும் உலகத்தாரைக் கவர்ச்சிப்பதில்லை. மாறாக, இதெல்லாம் பிரச்சாரச் சரக்கு என்று வெறுத்து எதிர்ப்புணர்வுதான் கொள்வார்கள். "நீங்கள் பூவுலகிற்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று இயேசு கூறினார். அதன் பொருள் என்ன? மாற்கு 9:50, "உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும் இருங்கள்!"

*ஆ) புறம்பே பரிசுத்தம்*

"நீங்கள் உலகிற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றார் இயேசு. அதாவது மெய்யான ஒளியாகிய இயேசு உலகிற்கு நம் மூலம் பிரகாசிக்கின்றார். இயேசு இன்று மனுவுருவில் இவ்வுலகிலில்லை. இன்று உலகம் அவரை நேரடியாகக் காணமுடியாது. "அவர் இருக்கிறவிதமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" என்று யோவான் அப்போஸ்தலன் கூறுகிறான் (1 யோ 4:17). நாம் அவரது பிரதிநிதிகள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் சூழலில் ஒரு குட்டிக் கிறிஸ்துவாக இருக்கவேண்டும்.



இயேசுவின் செயல்களை மக்கள் கண்டபோது, அவர்கள் விண்ணகத் தந்தையை மகிமைப்படுத்தினார்கள். மேலும், "மனிதர், உங்கள் நற்செயல்களைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகக் பிரகாசிக்கட்டும்" என்றார் கிறிஸ்து (மத் 5:16). "இந்தியா ஒரு கிறிஸ்தவனைக் காண விரும்புகிறது" என்றார் சாது சுந்தர்சிங்!

கிறிஸ்தவர்கள் மற்றவர்களைவிட அதிகமாக அரசாங்க அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். பின்வரும் பகுதி நம் இருதயத்தில் நன்றாகப் பதியவேண்டும்: "எந்த மனிதனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயத்தீர்ப்பை வருவித்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால், நீங்கள் தண்டனைக்காக மட்டுமல்ல, மனச்சாட்சிக்காகவும் கீழ்ப்படியவேண்டும்" (ரோ 13:1,2,5). மேலும் அதிகாரிகளைக் குறித்து அவதூறாகப் பேசக்கூடாது. "நியாயாதிபதிகளைத் தூஷியாமலும், உன் ஜனத்தின் அதிபதியைச் சபியாமலும் இருப்பாயாக" என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது (யாத் 22:28). ஓர் அதிகாரி புத்தியீனமாக நடந்துகொண்டாலும் ஒரு கிறிஸ்தவக் குடிமகன் கிறிஸ்தவனாகவே இருக்க வேண்டும். "மனிதருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கடவுளுக்காகக் கீழ்ப்படியுங்கள்... நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியில்லாத மனிதருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. எல்லாரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" (1 பேது 2:13-17).

கிறிஸ்தவன் வரி செலுத்தத் தவறக்கூடாது. அவன் "இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும்" செலுத்தவேண்டும் (மத் 22:21). தேவனுக்குக் கொடுப்பதை சொல்லுமுன்னர் வரி செலுத்துவதைப் பற்றிக் கூறியிருப்பதைக் கவனியுங்கள். தசமபாகம் செலுத்தி வரி ஏமாற்றக்கூடாது. அரசுக்கு சேரவேண்டிய எந்தப் பணத்தையும் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. அரசாங்கம் தேவனால் அமைக்கப்பட்டது. பிரிய கிறிஸ்தவ நண்பரே, நாம் நமது நாட்டு மக்களை நம்மைப் பின்பற்றச் சொல்லிச் சவாலிட முடியுமா?

திருச்சபைச் சண்டைகள் நீதிமன்றம் வரை சென்றுவிடுகின்றன. இது அவமானம். பவுலின் கடிந்துகொள்ளுதலைக் கேளுங்கள்: "உங்களில்

ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதிக்காரரிடத்தில் போகத் துணி கிறதென்ன ?... உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லு கிறேன். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கக்கூடிய விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா ? சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான். அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான்!'' (1 கொரி 6:1-6). இன்னொரு வகையில் சொல்லப்போனால், சபைக்குள்ளிருக்கும் சண்டைக்காக நீதிமன்றம் செல்லும் சபையில் அத்தனை பேரும் முட்டாள்கள், ஞானி ஒருவனுமில்லை.

நாட்டைக் குறித்து சபையின் மூன்றாவது பொறுப்பு—

## 3. பகிர்ந்தளித்தல்

நாம் சொல்லிலும் செயலிலும் தேவனுடைய அன்பைப் பகிர்ந்தளிக்க வேண்டும். அது ஜீவ ஆகாரத்தையும், ஜீவனத்துக்கான ஆகாரத்தையும் பகிர்ந்துகொள்வதாகும்.

### *அ) ஜீவ ஆகாரம்*

திருச்சபையின் இன்றையப் பிரதான கடமை கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றுவதே. “போய்... சீடராக்கி... ஞானஸ்நானம் கொடுத்து... உபதேசம் பண்ணுங்கள்'' (மத் 28:19,20). கிறிஸ்து நம்மிடம் உலகைக் கிறிஸ்தவ மயமல்ல, நற்செய்தி மயமாக்கவே கட்டளை கொடுத் தார். மக்களை இருளிலிருந்து ஒளிக்குள் கொண்டுவரும் தேவனுடைய கருவி சபையே. “நீர் பூவுலகின் எல்லையெங்கும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை மக்களினங்களுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேத வாக்கியத் தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்'' (அப் 13:47). சுவிசேஷம் கேள்விப்படாத, கவனிப்பாரற்ற மக்கள் கோடிக்கணக்கில் உண்டு. கிறிஸ்து உனக்காக மரித்தாரென்று கடைசி மனிதனுக்குச் சொல்லும்வரை நாம் இளைப்பாற முடியாது. சபையின் மிக முக்கிய வேலை மிஷனரிப்பணி—இழந்துபோனதைத் தேடும் வேலை. கிறிஸ்தவன் கீழ்ப்படிய முடியாத ஒரே அரசியல் சட்டம் மதமாற்றத்திற்கு எதிரான சட்டமே. கிறிஸ்தவன் கிறிஸ்துவைப் பின்பற்றுபவன். அவன் மனிதரைப் பிடிக்காமல் கிறிஸ்தவனாய் இருக்க முடியாது. ஏனெனில் “என் பின்னே வாருங்கள், உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்'' என்றார் இயேசு (மத் 4:19). சுவிசேஷத்தைக் கூறி, மக்களைக் கிறிஸ்துவின் சீடராக்கும்



அதிகாரத்தை நாம் எந்த அரசாங்க அதிகாரியிடமிருந்தும் பெறத் தேவையில்லை. கிறிஸ்து, “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல இனத்தாரையும் சீடராக்குங்கள் என்றார்'' (மத் 28:19). அதிகாரிகள் ஆதி அப்போஸ்தலரை சுவிசேஷம் சொல்லக்கூடாதென்று பயமுறுத்திய போது, அவர்கள் “மனிதருக்குக் கீழ்ப்படிகிறதைவிட தேவனுக்குக் கீழ்ப் படிகிறதே அவசியமாயிருக்கிறது'' என்று சாதாரணமாகக் கூறிவிட்டார்கள் (அப் 5:28,29).

### *ஆ) ஜீவனத்துக்கான ஆகாரம்*

கிறிஸ்துவானவர் நற்செய்தியைப் பிரசங்கித்து நோயுற்றோரைக் குணமாக்கினார். அவர் ஆன்மாவிற்கும் உடலுக்கும் ஆண்டவர். சுவி சேஷமானது முழு மனிதனையும் உயர்த்துகிறது. உலகின் ஏழ்மைக்கும், பசிக்கும் பதில் பொதுவுடைமைக் கொள்கையல்ல. கிறிஸ்தவமே பதில். ஒரு மனிதனுக்கு உணவளித்துப் பின்பு அவனை நித்திய நரகத்திற்கு அனுப்புவதில் என்ன பயன் ? “மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும், தன் ஆன்மாவை இழந்துவிட்டால் அவனுக்கு லாபம் என்ன ?'' (மாற் 8:36). மிஷனரி ஊழியம் ஆன்மாவையும், உடலையும் சேர்த்துக் கவனிக்கிறது.

சமூக சேவையில் கிறிஸ்தவ ஊழியர் பலருக்கும் இருக்கும் கவனக் குறைவை அங்கீகரிக்க முடியாது. “நாட்டில் எளியவர்கள் இல்லாதிருப் பதில்லை. ஆகையால் உன் நாட்டிலே சிறுமைப்பட்டவனும், எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்'' என்று தேவன் கூறுகிறார் (உபா 15:11). பெந்தெகொஸ்தே நாளில் ஆதி அப்போஸ்தலரின் பணப்பைகளும் அபிஷேகிக்கப்பட்டன— உடனே தேவையுள்ளவர்களுக்குக் கொடுத்தார் கள் (அப் 2:44,45). விண்ணரசர் தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்துச் சொல்லுவதை எண்ணிப் பாருங்கள்: “வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்கு ஆகாரம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்;... மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத் 25:31-46).

# 6

# அது நற்செய்திதான்!

**மின்னுவதெல்லாம்** பொன்னல்ல. அப்படியே இன்று பிரசங்கிக்கப்படுவதெல்லாம் சுவிசேஷமாகிவிடாது. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றாற்போல் மாற்றுகிறோம் என்று சொல்லி இறையியல் நிபுணர் பலர் சுவிசேஷத்தைச் சத்தற்றதாக்கிவிட்டனர். சில வாரங்களுக்குமுன் ஆப்பிரிக்க ஆதிவாசிகளுக்குப் பிரசங்கித்த அதே செய்தியையே கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலை மாணவர்க்கும் பிரசங்கிக்க ஆண்டவர் பண்டிதர் பில்லி கிரஹாமைப் பணித்தாராம். அவர் கீழ்ப்படிந்தார். அறிவுபடைத்த பலநூறு மாணவர் எளிய அந்த சுவிசேஷம் கேட்டு இரட்சிக்கப்பட்டனர்.

உலகில் மதங்கள் ஏராளம்; சுவிசேஷமோ ஒன்றுதான்! காரணம் சுவிசேஷத்தின் மையம் சிலுவையாம். அறிவு, அந்தஸ்து, அகம்பாவம், அநியாயம், அக்கிரமம் அனைத்தும் அதிகரித்துள்ள இச்சமுதாயத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்க வழியுண்டோ ? இதோ பவுல் தரும் பதில்: ''இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரைத் தவிர, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்'' (1 கொரி 2:1-5).

இயேசுவே இறைவன் அனுப்பிய பிரதான சுவிசேஷகர். சிலுவையிலிருந்து அவர் மொழிந்தவை சுவிசேஷத்தின் அத்தனை கூறுகளையும் உள்ளடக்கியுள்ளன. சிலுவை வசனங்கள் ஒவ்வொன்றும் சுவிசேஷத்தின் ஒரு குறிப்பிட்ட



பகுதியை வலியுறுத்துகின்றது. கிறிஸ்துவின் சுவிசேஷம் உண்மையாகவே ஒரு நற்செய்திதான். ஏனெனில் அது—

### 1. மன்னிப்பின் செய்தி

*''பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' (லூக் 23:34).*

தேவனது மன்னிப்பின் செய்தியைச் சுமந்து வருவதே சுவிசேஷமாகும். அதைத்தான் பிரசங்கிக்க இயேசு சீடர்களுக்கு கட்டளையிட்டார். ''மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் துவங்கி எல்லா நாட்டினருக்கும் அவரது பெயரால் பிரசங்கிக்கப்பட வேண்டும்'' (லூக் 24:47).

தேவனது மன்னிப்பு அளவிட முடியாதது. தேவன் முதலும் முக்கியமுமாகப் ''பாவியை'' மன்னிக்கிறார்; அப்பொழுது அவனது ''பாவங்களும்'' மன்னிக்கப்பட்டுவிடுகின்றன. பாவம் செய்ததால் நாம் பாவிகளாகவில்லை; பாவிகளாயிருப்பதால்தான் பாவம் செய்கிறோம்! தேவன் வேரில்தான் கை வைப்பார், கிளையில் அல்ல. இளைய மகன் தனது பாவப் பட்டியலை முடிக்குமுன் தந்தை அவனை அணைத்து ஏற்றுக்கொண்டார். நாம் கிறிஸ்துவுக்குள் முற்றிலும் மன்னிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறோம்.

மன்னிக்கப்பட்ட பாவி என்று வேதம் ஒருபோதும் ஒரு கிறிஸ்தவனையும் அழைப்பது கிடையாது. நாம் நம்மை அப்படி அழைத்துக்கொள்வது மாயமான தாழ்மைதான். தேவன் நம்மைப் பரிசுத்தவான்கள் என்றழைக்கிறார். பரிசுத்தமாய் இருப்பதால் நாம் பரிசுத்தவான்களாவது கிடையாது; பரிசுத்தவான்களாய் இருப்பதால் பரிசுத்தமாய் இருக்கவேண்டும். பல குறைகள் இருந்த கொரிந்து விசுவாசிகளும் பரிசுத்தவான்கள் என்றழைக்கப்பட்டனரே (1 கொரி 1:2).

இரு திருடருக்கிடையில், விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவில், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இயேசு சிலுவையில் தொங்குகையில் நமது ''எல்லாப்'' பாவங்களுக்கும் பரிகாரம் செலுத்திவிட்டார். கடந்தகால, நிகழ்கால, எதிர்காலப் பாவங்கள். இனி வேறு பலியில்லை. நமது பாவங்கள் ஒருபோதும் செய்யப்படாததுபோல், அந்த அளவுக்கு, அவை மன்னிக்கப்பட்டுவிட்டன. முழு நிராகரிப்பு!

கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது நாம் பிறக்கவும் இல்லையே; அப்படியானால் நமது பாவங்களை அவர் சுமந்துவிட்டார் என்பது எப்படி ?

சரித்திரத்தின்படி அவர் இறந்து 2000 ஆண்டுகட்கு முன்புதான் என்றாலும், நித்திய நோக்கில் அவர் உலகம் உருவாவதற்கு முன்னரே அடிக்கப்பட்டார். நாமும் உலகம் உண்டாவதற்கு முன்னரே அவருக்குள் தெரிந்துகொள்ளப் பட்டோம் (வெளி 13:8; எபே 1:4).

இன்று நாம் பாவம் செய்தால் பிதாவின்முன் கிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுகிறார். ஆனால் நாம் ஒளியில் நடந்துகொண்டிருக்கவேண்டும். அதாவது நமது பாவத் தன்மையை ஒத்துக்கொண்டு அவருக்குமுன் வெளியரங்கமாய், ஒளிவுமறைவின்றி நடந்துகொண்டிருக்கவேண்டும். அப் பொழுது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் நம்மைக் கழுவிக்கொண்டே யிருக்கும். கூழாங்கற்கள் மீது வற்றா நதி ஓடிக்கொண்டேயிருப்பதுபோன்று இம்மானுவேலரின் இரத்த வெள்ளம் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டேயிருக்கும் (1 யோ 1:7; 2:1). செய்ய வேண்டியதைச் செய்யாத பாவங்களே செய்யக் கூடாததைச் செய்த பாவங்களைவிட அதிகம். எனவே கிறிஸ்துவின் இரத்தத்திற்கு வெளியே நொடிப்பொழுதும் இருக்க முடியாது!

சிறைக்குள் அல்ல, வெளியேதான் சிறைவாசிகள் ஏராளம். குற்றவுணர்வு எனும் சிறைவாசம். சுவிசேஷமோ விடுதலை மணியடிக்கிறது! அது உண்மையாகவே நற்செய்திதான்!

## 2. நிச்சயத்தின் செய்தி

*“இன்றைக்கு நீ என்னுடன் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” (லூக் 23:43).*

இடதுபுறமுள்ளவனோ, வலதுபுறமுள்ளவனோ தெரியாது, இரு திருடரில் ஒருவனிடம் இயேசு இந்த நிச்சய வார்த்தைகளை உறுதியாய் மொழிந்தார். தண்டனையில் தவித்துக்கொண்டிருந்த அவன் நொடிப்பொழுதில் பரதீசுக்கு நுழைவுச் சீட்டு பெறுகிறான். “மெய்யாகவே!”

நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று இன்று திட்டமாகச் சொல்ல முடியாது என்று வாதாடுவோர் உண்டு. “நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று அறிய முடியுமா?” இது பலரையும் குழப்பியுள்ள கேள்வியாகும். நிச்சயம் அறியமுடியுமென்று திட்டமாய்த் திருவசனம் அறிவிக்கிறது.

“இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டுவந்தார்” (அப் 2:47). இதோ சபை எனும் சொல்லுக்கு வரையறை: இரட்சிக்கப்படாதோர் உள்ளே இல்லை; இரட்சிக்கப்பட்டோர் வெளியே இல்லை!



“நாம் மனிதருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைவிட தேவனது சாட்சி அதிகமாயிருக்கிறது... தேவ குமாரனிடம் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள் **கொண்டிருக்கிறான்;...** தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் **தந்திருக்கிறார்...** குமாரனை உடையவன் ஜீவனை **உடையவன்...** உங்களுக்கு நித்திய ஜீவன் **உண்டென்று** நீங்கள் **அறியவும்...** உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்” (1 யோ 5:9-13). இதிலும் தெளிவு வேண்டுமோ?

இரட்சிப்பை முக்கால நிலையிலும் புரிந்துகொள்ளத் தவறுவதாலேயே இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறித்துப் பலரும் தடுமாறுகின்றனர். கடந்த கால இரட்சிப்பானது பாவத்தின் *தண்டனையிலிருந்து* விடுதலை; நிகழ்கால இரட்சிப்பு பாவத்தின் *வல்லமையிலிருந்து* விடுதலை; வருங்கால இரட் சிப்போ பாவத்தின் *பிரசன்னத்திலிருந்தே* கிடைக்கும் விடுதலையாகும். இதைத்தான் வரிசைக்கிரமமாக நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப் படுதல், மகிமைப்படுத்தப்படுதல் என அழைக்கிறோம். முதலாவது அனுபவம் குறிப்பிட்டதொரு நொடிப்பொழுதில் நடப்பது; அடுத்தது நெடு கவே நடந்து கொண்டிருப்பது; மூன்றாவதானதும் ஒரு நொடிப்பொழுதில் நடக்கும். நாம் ஏற்கனவே பாவத் தண்டனையிலிருந்து விடுதலை பெற்றுவிட்டோம்; இப்பொழுது பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டிருக்கிறோம்; இனி ஒரு நாள் பாவத்தின் பிரசன்னத் திலிருந்தே விடுதலை பெற்றுவிடுவோம்.

சோதனை, பிரச்னை, வேதனை வழியாகச் செல்லும்போது நமது நிச்சயம் அசைக்கப்படலாம். இவ்விதச் சூழலில் “நாம் தேவனுடைய பிள்ளைகளா யிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நமது ஆவியுடன் சாட்சி கொடுக் கிறார்” (ரோ 8:16,18). இப்பூவுலகில் நமக்கு மூன்று சாட்சிகள் உண்டு— ஆவியானவர், வார்த்தை, இரத்தம் (1 யோ 5:8).

*அதைக் கல்வாரியின் இரத்தத்தாலே மூடியாச்சுதே;*
*அது வானம் பூமி போல நீங்கிற்றே!*
*அன்பர் மறதிக் கடலுள்ளே ஆழ்ந்ததும் நன்றே;*
*ஆமென், சுத்தமானேன்!*

## 3. குடும்பத்திற்குச் செய்தி

*“மாதுவே, அதோ, உன் மகன்... சீடனை நோக்கி: அதோ, உன் தாய்” (யோ 19:26,27).*

பாடுபடுகிறவன் எவனும் பரிதாபத்திற்காய் ஏங்குவான். இங்கேயோ பாடுபடும் இரட்சகர் பிறருக்காய்ப் பரிதபிக்கிறார். இறைவன் ஒவ்வொரு

குடும்பத்தின்மீதும் எவ்வளவாய்க் கரிசனை கொண்டுள்ளார் என்பதையே இயேசுவின் இக்கூற்று வெளிப்படுத்துகிறது.

குடும்பம்தான் கடவுளின் படைப்பில் அடிப்படையானதாகும். அது அவரது நித்திய திட்டம். சபைக்கு இன்னொரு பெயர் குடும்பம்தான். விண்ணகத்திலும் நாம் குடும்பமென்றே அழைக்கப்படுவோம். தேவனானவர் நமது தந்தை; குமாரனானவர் நமது மணவாளன்; ஆவியானவர் நமது உதவியாளர்!

ஒரு நபர் தேவன்மீது விசுவாசம் வைக்கையில் அவர் எவ்வளவாய் அக்குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட விரும்புகிறார் என்பதை நிரூபிக்கும் வேதச் சான்றுகள் ஏராளம். நோவாவோடு அவனது குடும்பத்தையும் ஆண்டவர் இரட்சித்தார். ராகாபோடு அவளது குடும்பத்தையும் காப்பாற்றினார். சகேயுவின் குடும்பம் முழுவதுக்கும் இரட்சிப்பு வந்தது. இரட்சிக்கப்பட "நான்" என்ன செய்யவேண்டுமென்று அந்த பிலிப்பி நகர் சிறைச்சாலை அதிகாரி ஒருமையில் கேட்ட கேள்விக்கு "நீயும் உன் வீட்டாரும்" என்று பன்மையில் பதில் வந்தது!

இப்படிச் சொல்வதால் தனி நபர்களுக்குப் பொறுப்பில்லை என்று பொருளல்ல. புதிய உடன்படிக்கையைக் குறித்து எரேமியா இவ்விதம் தீர்க்கதரிசனம் உரைத்தான்: "தந்தையர் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்திற்காகவே சாவான்" (எரே 31:29,30). அதே சத்தியத்தை எதிரொலிக்கும் தீர்க்கன் எசேக்கியேல் இவ்விதம் தொடருகிறான்: "இதோ, எல்லா ஆன்மாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆன்மா எப்படியோ, அப்படியே மகனின் ஆன்மாவும் என்னுடையது; பாவம் செய்கிற ஆன்மாவே சாகும்" (எசேக் 18:1-4). ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட, சமமான சிலாக்கியமும் பொறுப்புமுண்டு. ஆயினும் ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, தேவனது பிள்ளை என்ற ரீதியில் தனது முழுக் குடும்பத்துக்கும் இரட்சிப்பை உரிமை பாராட்டிக் கேட்க ஏராளம் வாக்குகள் உண்டு. குடும்பத்தினர் அத்தனை பேரையும் சிலுவையண்டை கொண்டுவர அவன் தன்னாலியன்ற அத்தனையும் செய்ய வேண்டும். குடும்பம்தான் அவனது முதல் சபையார். அப்பொழுது அப்போஸ்தலர் 16:31ஐ தேவன் அவனுக்குப் பலிக்கச்செய்வார்.

குழந்தைகளைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தும் பொறுப்பு தந்தைக்கும் தாய்க்கும் சமமாக உண்டு. சொல்லப்போனால், தந்தை மீதுதான் பொறுப்பு அதிகம்! "என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே" (நீதி 1:8). தந்தைதான் முதலில் வருகிறார்



அல்லவா? ஆபிரகாமைக் குறித்த தேவனது பிரதான மெச்சுதல் இதோ: "அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்... கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்" (ஆதி 18:19). சொந்த வீட்டில் அவன் நல்ல தந்தையாயிருந்ததால் அல்லவோ தேவன் விசுவாச வீட்டார் யாவருக்கும் அவனைத் தந்தையாக்கினார்!

## 4. ஐக்கியத்தின் செய்தி

*"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத் 27:46).*

இதுவே சிலுவையிலிருந்து வந்த மையக் குரல். ஒருபோதும் நாம் கைவிடப்படாதபடி கிறிஸ்து நொடிப்பொழுது கைவிடப்பட்டார்!

பாவத்தைக் குறித்த அறிவு நியாயப்பிரமாணத்தினால் வந்தது. பாவம் நம்மை தேவனைவிட்டுப் பிரித்தது. "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகின்றன" (ஏசா 59:2). சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த இயேசுவின்மீது நமது பாவங்கள் அனைத்தும் சுமத்தப்பட்டபோது, தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணராகிய தேவன் தமது முகத்தைக் குமாரனுக்கும் மறைத்து விட்டார்.

கிறிஸ்துவின் உடல் நொறுக்கப்பட்டபோது, பிரித்து நின்ற சுவர் நொறுங்கி விழுந்தது. நாம் ஒருநாள் "புறவினத்தவராய்... கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாய்" இருந்தோம் (எபே 2:11,12). இப்பொழுதோ கிறிஸ்துவின் இரத்தத்தால் சமீபமாய் வந்துவிட்டோம். இப்பொழுது "அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடு ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாய்" இருக்கிறோம் (வச 19).

இயேசு உயிர்விட்டபோது தேவாலயத் திரைச்சீலை கிழிந்தது. பூமி அதிர்ந்தது. கல்லறைகள் திறந்தன. இனி எதுவுமே தடுக்க முடியாது. மகா புனிதத் தலத்திற்கு வழி திறக்கப்பட்டாயிற்று. இப்பொழுது தைரியமாய்க் கிருபாசனம் செல்லலாம். எல்லாம் சிலுவையினாலேயே!

எல்லா வேளைகளிலும் ஒன்றுபோல் தேவப் பிரசன்னத்தை நாம் "உணர" முடியாதுதான். ஆனால் மாறிக்கொண்டேயிருக்கும் நமது உணர்ச்சிகளை

நாம் சார்ந்திருக்க வேண்டியதில்லை. "இம்மானுவேல்!"—இதுதான் உண்மை—தேவன் நம்மோடிருக்கிறார்! தேவன் நம்மோடிருப்பதற்கும் மேலான தொன்றுமில்லை என்றார் ஜான் வெஸ்லி. என்னே ஐக்கியம்!

யோவான் நிருபத்தை ஐக்கியத்தின் நிருபம் எனலாம். அதை அவன் இவ்விதம் துவங்குகிறான்: "எங்கள் ஐக்கியம் தந்தையோடும் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" (வச 3). நாம் இவ்வுலகில் தனியாக இல்லை; தேவன் நம்மோடு இருக்கிறார்; கிறிஸ்து நமக்காக இருக்கிறார்; இதைவிடப் பேராசீர்வாதம் உண்டோ? இவ்வுலகில் தேவன் நம்மோடிருக்கிறார்; அவ்வுலகில் நாம் அவரோடிருப்போம்!

கிறிஸ்து இருந்தால் கிடங்கும் சிங்காசனமாகும்; கிறிஸ்து இல்லையேல் சிங்காசனமும் நரகமாகும் என்றார் மார்டின் லூத்தர். தேவனோடு ஐக்கியங்கொள்ளுதலே பரலோகத்தின் துவக்கம் என்றார் இன்னொருவர். விண்ணை மண்ணில் அனுபவிக்க வழிவகுத்த சிலுவைக்காய் அல்லேலூயா! சிலுவையின் செய்தி நற்செய்தியே!

## 5. திருப்தியின் செய்தி

*"தாகமாயிருக்கிறேன்" (யோ 19:28).*

நாம் தாகமாகாதபடி கிறிஸ்து தாகமானார். நமக்காகத் திறக்கப்பட்ட ஊற்றாகும்படி அவர் பிளக்கப்பட்டார் (சக 13:1). அடிக்கப்பட்ட மேய்ப்பனாகிய அவர் மந்தையைவிட்டு ஓடவில்லை. அவர் மந்தையை "அமர்ந்த தண்ணீர்கள்" அருகில் கொண்டுபோய் "நன்மையும் கிருபையும்" அளித்து ஆடுகளைத் திருப்தியாக்குகிறார் (சக 13:7; சங் 23).

இயேசு நமக்குத் தண்ணீர் கொடுப்பதோடல்லாது நமக்குள்ளேயே ஓர் ஊற்றையும் வைத்துவிடுகிறார் (யோ 4:14). கிறிஸ்தற்றோரின் சோக நிலையாவது ஒன்றுமே அவர்களைத் திருப்திப்படுத்துவதில்லை. சம்பாதித்துப்பார்க்கிறார்கள், திருப்தியில்லை. பணம் கடல் நீர் போன்றது. குடிக்கக் குடிக்கத் தாகம் கூடும். அடுத்து பாலுணர்வுப் பாவங்களைப் பருகிப் பார்க்கிறார்கள். தாகம் தீர்ந்தபாடில்லை. பின்னர் தங்கள் சாதனைகளை வணங்கிப்பார்க்கிறார்கள். தங்கள் கைகளின் செயல்களைப் பார்த்து "நீங்களே எங்கள் தெய்வங்கள்" என்கிறார்கள். அங்கும் ஏமாற்றம். காற்றைப் பிடிக்க ஓடும் ஓட்டம் சிலுவைக்கு வந்தால்தான் நிற்கும். சிலுவைதான் இறைவனின் கூட்டல் அடையாளம். அங்குதான் மனிதன் திருப்தி அடைகிறான். அப்பழஞ் சிலுவைக்குமுன் சிற்றின்பங்களும் சம்பத்துகளும் அர்த்தமற்றுப்போகின்றன.



அவருக்குள் நமக்கு எல்லாம் கிடைக்கும்படி இயேசு சிலுவையில் எல்லாவற்றையும் விட்டார். "ஆன்மீக ஆசிகள் அத்தனையும்" இன்று நமக்குச் சொந்தம் (எபே 1:3). நமது "குறைவையெல்லாம்" அவர் நிறைவாக்குகிறார் (பிலி 4:19). கண்ணீரில் மிதக்கையிலும், புரிந்துகொள்ள முடியாத தேவ சமாதானம் இதயத்தின் ஆழத்தில் திடமாயிருக்கும். சாதாரணப் பசிகூட நம்மைவிட்டு எடுக்கப்படும் நாள் வரும். "இவர்கள் இனிப் பசியடைவதுமில்லை, இனித் தாகமடைவதுமில்லை... ஆட்டுக்குட்டியானவரே இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளருகே நடத்துவார்" (வெளி 7:16,17).

ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப்பட்டதால் என்னே ஆசீர்வாதம்!

## 6. முற்றுப்பெற்றதின் செய்தி

*"முடிந்தது" (யோ 19:30).*

பழுதொன்றுமின்றி தம் உடலையும், குற்றமொன்றுமின்றி தமது இரத்தத்தையும் அவர் கொடுத்தபோது பரிசுத்தமும் நீதியுமுள்ள தேவனது நிபந்தனைகள் அத்தனையும் நிறைவேற்றப்பட்டன. இயேசுவின் பலி பூரணமானதாயிருந்தது. அதோடு நாம் ஒன்றையும் கூட்ட முடியாது, தேவையுமில்லை.

சிலுவையில் முடிக்கப்பட்ட வேலையினால் இரட்சிப்பு இன்று நமக்கு இலவசம். ஈவைச் சம்பாதிக்க முடியாது; பெற்றுக்கொள்ளவேண்டும். தேவனைப் பொறுத்தமட்டில் இரட்சிப்பு முழுக்க முழுக்க கிருபையினாலானது. நம்மைப் பொறுத்தமட்டில் அது முழுக்க முழுக்க விசுவாசத்தினாலானது. நல்ல "செயல்களினால்" அல்ல, நல்ல "செயல்களுக்காய்" இரட்சிக்கப்பட்டோம் (எபே 2:8-10). தங்களால் முடிந்த அத்தனையும் செய்து தோல்வி அடைந்தவர்க்குரியதே சுவிசேஷம் என்றார் ஒருவர்!

ஈவுகளிலெல்லாம் பெரியதான இரட்சிப்பை வெறுமனே விசுவாசத்தால் எவ்விதம் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதே மனித அறிவைக் குழப்புகிறது. ஏதாவதொன்றைச் "செய்து" அதைச் சம்பாதிக்கவேண்டுமென்றே மனிதனின் பெருமை விரும்புகிறது. தேவனோ "செய்தாயிற்று" என்கிறார். சிலுவையின் செய்தி எளிமையில் மகிமை, மகிமையில் எளிமை! இங்குதான் மார்க்கவாதி தடுமாறுகிறான்.

கிறிஸ்துவை விசுவாசித்ததோடு விருத்தசேதனமும் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று யூதேயாவிலுள்ள போதகர் சிலர் விசுவாசிகளை ஏவிய

போது, அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் "மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும்" உண்டானது (அப் 15:12). சிலுவையோடு எதையும் கூட்ட எவரெழுந்தாலும் சிறுத்தைபோல் பாய்ந்தனர் அப் போஸ்தலர்.

கலாத்தியாவில் சிலர் கிறிஸ்துவின் கிருபையோடு பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தைச் சேர்க்க விரும்பினர். "நீங்கள் கிருபையினின்று விழுந் தீர்கள்" என்று அடித்தான் பவுல் (கலா 5:4). கிறிஸ்து அவர்களைவிட்டு விலகிவிட்டார் என்றே சொல்லிவிட்டான் (4:19). ஆம், சட்டமும் கிருபையும் சேர்ந்திருக்க முடியாது. இஸ்மவேலும் ஈசாக்கும் ஒன்றித்திருப்பது எங்ஙனம்? "இதையும் செய்துகொள்வது பாதுகாப்பு" என்று சிலர் சொல்லக் கேட்டி ருக்கிறேன். இது அழகாய்த் தோன்றுகிறது; ஆனால் "முடிந்தது" என்ற சிலுவைக் கூற்றுக்குமுன் இது அபத்தம்.

பவுலின் நிருபங்களை திரும்பத் திரும்ப வாசித்துக் கிருபையினாலுண் டாகும் இரட்சிப்பைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளுங்கள். நாம் இருப்பதும், இருக்கப்போவதும் தேவ கிருபையினாலேயே.

*கிருபையிதே தேவ கிருபையிதே*
*தாங்கி நடத்தியதே*
*இயேசுவிலே பொன் நேசரிலே*
*அகமகிழ்ந்தே நான் ஆனந்திப்பேன்!*

## 7. பாதுகாப்பின் செய்தி

*"பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக் 23:46).*

நாளையைக் குறித்துக் கலங்கத் தேவையில்லை. கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். இருந்தவரும், இருப்பவரும், இருக்கப் போகிறவரும் அவரே. துவக்கமும் முடிவும் அவரே.

"நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை; ஒருவனும் அவைகளை என் கையி லிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் தந்தை எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் தந்தையின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது" என்றார் இயேசு (யோ 10:28,29). இயேசுவின் கரங்களில்! பிதாவின் கரங்களில்! என்னே பாதுகாப்பு.



எனவேதான் பவுல் இவ்விதம் முழங்கினான்: "நான் விசுவாசித்திருக் கிறவர் இன்னார் என்றறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோ 1:12).

வழுவாதபடி நம்மைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்தவும் அவர் வல்லவராயிருக்கிறார் (யூதா 24).

அப்படியானால் ஒரு கேள்வி— இரட்சிப்பை ஒருவர் இழக்க முடியுமா? வேத வல்லுனர்கள் இக்கேள்வியில்தான் இரு பிரிவாய் நிற்கிறார்கள். முதல் பிரிவினர் தேவன் செய்வதை அழுத்திக் கூறுகிறார்கள்; அடுத்தவர் மனிதன் செய்யவேண்டியதை வற்புறுத்துகிறார்கள். இரண்டையும் இணைத் தால் வேதத்தின் சமநிலைச் சத்தியம் கிடைக்கிறது. என்னைக் காக்க தேவன் வல்லவர்; அவரால் முடியும். அவரிடமிருந்து பிசாசு என்னைப் பறித்துச்செல்ல முடியாது. ஆனால் அவர் கரத்தை நான் பற்றிக்கொள்ள வேண்டும். என்னை இல்லாது அவர் ஒன்றும் செய்ய *மாட்டார்;* அவர் இல்லாது நான் ஒன்றும் செய்ய *முடியாது!*

### அது நற்செய்திதான்!

காலாகாலமாக சுவிசேஷத்தை எதிர்த்து வருவோர் ஏராளம். அதை அழிக்க முயற்சித்தோர்தான் அழிந்து போனார்கள். நண்பரே, பயமோ பாரபட்சமோ இல்லாது எங்கும் சென்று சுவிசேஷத்தைப் பறைசாற்றுவீர்! கெட்ட இவ்வுலகிற்கு நல்ல செய்தி அது ஒன்றே. சரிந்த இச்சமுதாயத்தைச் சரியாக்குவது சுவிசேஷம் ஒன்றுதான்!

## 7

# ஆண்டவருக்கு ஆள்சேர்ப்பது எப்படி?

**ஆத்துமாதாயமே** உலகில் *மிகப்பெரிய* வேலையாகும். ஏனெனில், மனிதன் உலகம் முழுவதையும் சம்பாதித்துக்கொண்டாலும் தன் சொந்த ஆன்மாவை இழந்துவிட்டால் அவனுக்கு லாபமென்ன? (மாற் 8:36).

ஆத்துமாதாயமே இகத்தில் *ஞானம் பெருத்த* தொழிலாகும். ஏனெனில், தனது அயலானை நித்திய வாழ்வுக்காக ஆயத்தப்படுத்துபவனைவிட ஞானி யார்? (நீதி 11:30; தானி 12:3).

ஆத்துமாதாயமே *மிக மகிழ்ச்சியான* பணியாகும். ஏனெனில், தொலைந்த ஆட்டைக் கண்டுபிடித்த மேய்ப்பன், தொலைந்த வெள்ளிக்காசைக் கண்டுபிடித்த பெண்மணி, தொலைந்த மகனைத் திரும்பப் பெற்ற தந்தை ஆகியோரின் மகிழ்ச்சிக்கு இணையேது? (லூக் 15:5-7,9,10,23,24).

ஆத்துமாதாயமே மனுக்குலத்திற்கு *மிகவுன்னத* தொண்டாகும். ஏனெனில், மனிதருக்கு மகிழ்ச்சியும் சமாதானமுமான செய்தியைத் கடவுளிடமிருந்து கொண்டுவரும் அவரது தூதுவராயிருப்பதைவிட மதிப்பானது எது? (2 கொரி 5:18-20).

ஆத்துமாதாயமே கிறிஸ்தவ ஊழியங்களிலெல்லாம் *வாய்ப்பு மிகுந்தது.* ஏனெனில், அதைச் செய்யக்கூடாத கிறிஸ்தவனும், செய்யமுடியாத இடமும், செய்யவியலாத நேரமும் உண்டோ?



ஆத்துமாதாயப்பணி இவ்வளவு உயர்வானதாயிருந்தும் கிறிஸ்தவர்களில் வெகுசிலரே ஆத்துமாதாயகராயிருக்கின்றனர். ஏன்? காரணங்கள் பல. அவற்றில் இரண்டு முக்கியமானவை.

முதலாவது, கிறிஸ்தவரில் பலரும் தங்களது அடிப்படை அழைப்பை அறிந்துகொள்ளவில்லை. மன்னவரைப் பின்பற்றுவோர் மனிதரைப் பிடிப்போராய் இல்லாது இருக்க முடியாதென இன்னும் அவர்களுக்குத் தெரியவில்லை (மத் 4:19). ஆத்துமாதாயப் பணியிலிருந்து நமக்கு விடுப்போ விடுவிப்போ கிடையாது.

இரண்டாவது, ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதெப்படியென இன்னும் பெரும்பாலான கிறிஸ்தவருக்குப் போதிக்கப்படவில்லை. உவமைகள் மூலமாகவும் உதாரணங்கள் மூலமாகவும் இயேசு தமது சீடருக்கு ஆத்துமாதாயத்தை விளக்கினார். அழியும் மாந்தரைத் தேடிப்போகும்படி, மேய்ப்பர்களும் பிரசங்கிகளும் சபையில் சும்மா இருக்கும் பெரும்பான்மையோரைக் கிளறிக் கிளப்பிவிடவேண்டும். "மீன் பிடிக்கப் போகிறேன்" என்று பேதுரு தனது நண்பரிடம் சொன்னதும் அவர்கள், "நாங்களும் உன்னுடன் வருகிறோம்" என்றனராம்! (யோ 21:3).

ஆண்டவருக்கு ஆள் சேர்க்கும் பணியில் வெற்றிகரமாயிருக்கத் தேவையான பத்துக் காரியங்களை இங்கு கவனிப்போம்.

### 1. தூய்மை (Purity)

வார்த்தையை வாழ்க்கையில் காட்டுவதுதான் நற்செய்திப்பணியில் முதற்படியாகும். கிறிஸ்தவத்தை மக்கள் விரும்பச் செய்வதும் கிறிஸ்தவர்தான்; கிறிஸ்தவத்தை மக்கள் வெறுக்கச் செய்வதும் கிறிஸ்தவர்தான். நமது சொல்லும் செயலும் ஒத்திருக்கவேண்டும்.

பாவத்திலிருந்து இரட்சிக்கிறவராக இயேசுவை ஆத்துமாதாயகன் அறிமுகம் செய்கிறான். அவனுக்கே பாவத்தில் வெற்றியில்லையேல், அது வழுக்கைத் தலையன் கூந்தல் தைலம் விற்ற கதைதான்! பவுலின் தெளிந்த வாழ்வும், நற்செய்தியின் தெளிவான விளக்கமும் ஊழல் நிறைந்த அதிகாரி ஒருவனை அதிரச் செய்தது (அப் 24:16,24,25). நற்செய்திக்கு நமது செயல்கள் மானிட நிரூபணமும், தேவனது செயல்கள் தெய்வீக நிரூபணமுமாகும் என்கிறார் டேவிட் பாசன் (மத் 5:16; மாற் 16:20).

அப்படியானால் பூரணமடையும்வரை நாம் காத்திருக்கவேண்டுமென்று பொருளல்ல. பாதி எரிந்த பிறகல்ல, கொளுத்தியவுடன் மெழுகுவர்த்தி

வெளிச்சம் கொடுக்கிறதல்லவா? குறிப்பென்னவெனில், ஆத்துமாதாயகன் பாவத்தில் *வாழக்கூடாது.* தேவனுக்கு முன்பும் மனிதருக்கு முன்பும் அவன் உண்மையாக நடந்துகொள்ளவேண்டும். தெரிந்த பாவங்களை உடனே அறிக்கையிட்டு அகற்றிவிடவேண்டும். பரமனுக்குப் பயனுள்ள பரிசுத்த பாத்திரமாய்த் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும் (2 தீமோ 2:21).

வலை பழுதுபார்ப்பதை வீணடிக்கும் நேரமாக மீனவர் கருதுவதில்லை. கடலுக்குள் செல்லுமுன் வலைகளைச் சரிபார்த்துவிடுவர். அப்படியே வசன வெளிச்சத்தில் ஆவியானவர் மூலம் தினமும் நம்மைப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும்.

## 2. வாஞ்சை (Passion)

தனது இனத்தினர் அதினால் பரலோகம் செல்லக் கூடுமானால், தான் நரலோகம் செல்ல ஆயத்தமென்று பவுல் தனது ஆத்தும வாஞ்சையை அப்பட்டமாக்கினான் (ரோ 9:1-3). குருட்டாட்டத்திலுள்ளோருக்கான அவனது ஊழியம் குமுறிய உள்ளத்தின் வெளிக்கொட்டலாகும் (அப் 17:16,17).

ஆத்துமாதாயகன் ஒரு மேய்ப்பன். அவனை ஆடுகளைத் தேடியலையச் செய்வது கருணையும் கரிசனையுமே (மத் 9:36). இவ்வித உள்ளம் இன்றியமையாதது என்பதை வலியுறுத்தவே உயிர்த்தெழுந்த கர்த்தர் அன்பைக் குறித்துப் பேதுருவிடம் மும்முறை வினவினார் (யோ 21:15-17). ஆத்துமாக்கள் மீதும் ஆண்டவர்மீதுமுள்ள அன்பு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாகும்.

நம்மைப்போல் பிறரை நேசித்தாலன்றி நரகத்திற்கு விரையும் அவர் களைத் தடுக்க நம்மாலியன்ற அத்தனையையும் செய்யமாட்டோம். நரக வேதனையைக் குறித்த தரிசனம் ஆத்துமாதாயகருக்குக் கட்டாயம் தேவை என்று வலியுறுத்தினார் வில்லியம் பூத். நரகுக்கு ஆயத்தமாயிருந்த தனது ஐந்து சகோதரரை ஆதாயப்படுத்த நகருக்கு லாசருவை அனுப்பும்படி அச்செல்வந்தன் கதறவில்லையா? (லூக் 16:27,28).

வாஞ்சையை ஜெபமாக்கவேண்டும். எல்லா மனிதரும் இரட்சிக்கப்படும் படி ஜெபிக்கக் கட்டளை பெற்றுள்ளோம் (1 தீமோ 2:1-4). ஆத்துமாக்களைத் தேடியலையுமுன் ஆத்துமாக்களுக்காய்த் தேம்பியழ வேண்டும். இரத்தக் கண்ணீரின்றி இதயங்களைக் கவ்விடமுடியாது. "ஆத்துமாக்களைத் தாரும், இல்லையேல் என் ஆத்துமாவைத் தீரும்" என்று ஜெபித்தார் ஒருவர்!



## 3. வல்லமை (Power)

ஆத்துமாக்கள் நித்தியமானவை. அவைகளை நித்திய ஆவியின் வல்லமையின்றி இரட்சிக்க முயலுவது மடமை. பிசாசின் பிடியிலிருந்து ஆத்துமாக்களைப் பிடுங்குவதே ஆத்துமாதாயமாகும். மனித ஞானமோ உடல் பலமோ பிசாசை அசைக்காது. அவனிலும் பெரிய வல்லமை தேவை. அப்பொழுதுதான் அவன் தன் சிறைக்கைதிகளை ஒப்படைப்பான். அதுதான் ஆவியின் வல்லமை (ஏசா 61:1).

உன்னத பலத்தால் நிரப்பப்படும்வரை உலகை நற்செய்தி மயமாக்கச் செல்ல சீடரை இயேசு அனுமதிக்கவில்லை (லூக் 24:48,49; அப் 1:8). நாம் பரிசுத்த ஆவியால் நிறையும்போதுதான் ஜீவ நதிகள் நம்மிலிருந்து புறப்பட்டு ஓடி வறண்ட ஆத்துமாக்களை வளமாக்கும் (யோ 7:37-39). காயப்பட்டோரையும் களைத்துப்போனோரையும் களிப்பாக்கும் "12 நீரூற்று களும், 70 பேரீச்ச மரங்களும்" நாம்தானே (யாத் 15:26,27). இயேசு அனுப்பிய 12 மற்றும் 70 சீடர் நினைவுக்கு வருகிறார்களா?

"இரும்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிக பலத்தைப் பயன்படுத்த வேண்டியதாகும்" (பிர 10:10). மொட்டைக் கத்தி கறியைச் சிதைத்துவிடும்! என்னே சித்திரம்! தினமும் தேவ சமூகத்தில் காத்திருந்தால்தான் நமது ஆன்மீகம் கூர்மை பெறும். நாம்தான் ஆண்டவரின் படைக்கலன்கள். பரிசுத்த ஆவியானவர் நம்மைக்கொண்டே எதிரியின் கோட்டைகளைத் தகர்த்து அடைபட்டோரை விடுவிக்கிறார் (எரே 51:20-23).

நூற்றுக்கு நூறு ஆவியானவர்மீது சார்ந்திருந்ததே ஆதி விசுவாசிகளின் ஆத்துமாதாயப்பணியின் இரகசியமாகும். "நாங்களும் பரிசுத்த ஆவியும் சாட்சி" என்று அவர்கள் எதிர்த்தோர்முன் முழங்கினர் (அப் 5:32). ஆவி யானவரும் ஆத்துமாதாயகனும் சேர்ந்து "வா" என்றழைப்பதே வசனத்தின் படியான நற்செய்திப்பணியாகும் (வெளி 22:17). தைரியமாகச் சாட்சி பகருவது ஆவியின் நிறைவின் உடனடி வெளிப்பாடாகும் (அப் 4:31).

## 4. வேதனை (Pain)

ஆத்துமாதாயம் என்றால் இனவிருத்தி ஆகும். அது இறையரசுக்குள் குழந்தைகளைப் பெற்றெடுப்பதாம் (யோ 3:3). பிரசவ வேதனையின்றி பிள்ளைப் பேறுண்டோ? (ஏசா 66:7). சிதறுண்ட பாவிகளையும், சீர்கெட்ட பரிசுத்தவான்களையும் திரும்பக் கிறிஸ்துவிடம் கொண்டு வர அப்போஸ் தலன் பவுல் பிரசவ வேதனைப்பட்டான் (கலா 4:19).

“அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்” என்று நமது ஆத்துமாதாயத் தலைவரைக் குறித்துச் சொல்லப்பட்டது (ஏசா 53:11). உவமைகளிலுள்ள அந்த மேய்ப்பன், பெண், தகப்பன் ஆகியோரது கவலையின் ஆழத்தை அவர்கள் தாங்கள் தொலைத்தவை களைக் கண்டுபிடித்தபோது அனுபவித்த களிப்பின் உயரமே அளக்கிறது!

நற்செய்தியைப் பகிர்வதென்றால் வெறுமனே நசரேயனாகிய இயேசுவின் கதையைச் சொல்வதல்ல. அது கண்ணீரோடு விதைப்பதாம் (சங் 126:5,6). அதாவது, ஆத்துமாதாயகன் தன்னையே தனது செய்திக்குள் ஊற்றி விடுகிறான். பயபக்தியோடும் நடுக்கத்தோடும் அவன் ஆத்துமாக்களோடு இடைபடுகிறான். வாழ்வு அல்லது சாவைத் தீர்மானிக்கும் சமயமன்றோ அது? இருதய அறுவை சிகிச்சையின்போது மருத்துவர் எவ்வித உணர்வு டனிருப்பாரென்பது ஓரளவு பொருத்தமான எடுத்துக்காட்டாகும்.

சுவிசேஷத்தின் எதிரியானவனும் சுவிசேஷத்தை எதிர்ப்பவர்களும் ஆத்துமாதாயகனைப் பார்த்துப் பற்கடிப்பர். யோசேப்பு கனிதரும் செடி யாயிருந்தான். “வில்வீரர் அவனை மனமடிவாக்கி, அவன்மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள்” (ஆதி 49:22,23). பாடுகளின்றி பாட்டுகளில்லை!

விடுதலைச் சிங்கங்களாக விரைய விரும்புவோருக்கு தேவன் சொல்லும் ஆயத்தம்: “இரவும் பகலும் நதியளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கருவிழி சும்மாயிருக்கவிடாதே. எழுந்திரு, இராத்திரியிலே முதற் சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு” (புல 2:18,19).

எவ்வளவு வேதனைப்பட்டாலும் அது ஆத்துமாதாயத்திற்குத் தகும். பிள்ளை பெற்றவுடன் உலகில் ஒரு குழந்தை பிறந்தானென்கிற ஆனந்தத் தினால் தாயானவள் எல்லா வேதனைகளையும் மறந்துவிடுகிறாள் (யோ 16:21). ஒரு பாவி மறுபிறப்படையும்போது பரத்திலுள்ள தேவதூதருக்கும் இகத்திலுள்ள தேவ தூதுவருக்கும் மகிழ்ச்சி கொஞ்சமா இருக்கும்?

## 5. சாதகச் சிந்தை (Positiveness)

பாதகவாதிகள் ஒருபோதும் நல்ல ஆத்துமாதாயகராக மாட்டார்கள். நற்செய்திப்பணி ஆபத்தானதுதான்; ஆனால் நற்செய்திப்பணி செய்யா திருப்பது அதைவிட ஆபத்தானது! “வழியிலே சிங்கம்” “நடுவீதியிலே சிங்கம்” (நீதி 26:13). பழைய பாம்பின் இப்பொய்களை அப்படியே நம்பி ஆயிரமாயிர விசுவாசிகள் வீட்டுக்குள்ளேயே இருந்துவிட்டனர்.

ஒன்றும் எதிர்பாராது மீனவர் கடலுக்குள் செல்லுவார்களா? ஒன்றும் எதிர்பாராது விவசாயிகள் பயிரிடுவார்களா? ஒன்றும் எதிர்பாராது படைவீரர்



போர்க்களம் செல்லுவார்களா? ஆனால், நற்செய்திப் பணிகளில் ஈடு பட்டுள்ள கிறிஸ்தவர் பலர் பிரமாதமாக ஒன்றுமே எதிர்பார்ப்பதில்லை. எனவேதான் விளைச்சல் குறைவு. “உங்கள் விசுவாசத்தின்படியே உங்க ளுக்கு ஆகட்டும்” என்றாரல்லவா இயேசு?

சாதகச் சிந்தையென்றால் தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்த்து அவருக்காகப் பெரிய காரியங்களை முயற்சிப்பதாகும். மிஷனரி வில்லியம் கேரியின் இந்த ஆவி நம்மைப் பற்றிப் பிடிக்கட்டும். பெரிய ஆத்துமாதாயகர் யாவரும் தரிசனமுள்ளோராகவே இருந்திருக் கின்றனர். சூழ்நிலைகள் தங்களை மேற்கொள்ள அவர்கள் மறுத்தார்கள். எதிர்மறைச் சிந்தனைகளை மடங்கடித்தார்கள். பெரும்பான்மையினரின் கருத்துக்களை மதியாதிருந்தார்கள். “நாம் உடனே போய் அதைச் சுதந் தரித்துக்கொள்வோம்” என்ற காலேபின் வார்த்தைகளை மறவாதிருந் தார்கள் (எண் 13:30). “எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டி ருக்கிறது; ஆகையால் புறப்பட்டுப் போங்கள்” என்ற கர்த்தரின் வார்த்தை களை ஆத்துமாதாயப் பணிக்குச் செல்லும்போதெல்லாம் நாமும் மன திலிருத்திக்கொள்ளுவோம். நாம் கொண்டுவரப்போகும் ஆத்துமாக் களுக்காக, ஆஹா, இயேசு ஏற்கனவே மன்றாடிவிட்டார்! (யோ 17:20).

நம்மைப் பற்றிய குறைவுணர்வினாலும் நம்மில் பலர் பாதிக்கப்பட்டிருக் கிறோம். விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் மிஞ்சியுள்ள உலகைக் கண்டு பயப்படுகிறோம். ஆனால் உண்மை என்ன தெரியுமா? மக்க ளெல்லாம் வெறும் புல்தான். “புல் உலர்ந்து, பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றும் நிற்கும்!” (ஏசா 40:6,7). சுவிசேஷமானது எல்லாச் சோதனைகளையும் தோற்கடித்துவிட்டது. அந்த சிங்கத்தைத் திறந்து விட்டுப் பாருங்களேன்!

## 6. இனிமை (Pleasantness)

ஆத்துமாக்களைப் பிடிக்கவேண்டுமானால் அவர்களைக் கவரவேண்டும். புன்முறுவலணியாது ஆத்துமாதாயகன் வெளிச்செல்லக்கூடாது. அவன் சுமந்துசெல்வது மகிழ்வூட்டும் செய்தியன்றோ? அகத்தின் பாரத்தை முகத்தில் காட்டக்கூடாது! சங்கீதம் 45:1இல் ஆத்துமாதாயகனைக் குறித்த நேர்த்தியான வருணனை ஒன்றுண்டு: “என் இருதயம் நல் விசேஷத்தினால் பொங்குகிறது; நான் ராஜாவைக் குறித்துப் பாடின கவியைச் சொல்லு கிறேன்; என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி!”

பாவிகளின் “சிநேகிதன்” என்ற பட்டப்பெயர் இயேசுவுக்குக் கிடைத்தது. மக்களை இறையரசுக்குள் கொண்டுவர ஒரு தூண்டில் புழுவாக நட்பு பயன்படுகிறது. ஒரு கைகுலுக்கல், அன்பானதொரு விசாரிப்பு, ஓர்

அணைப்பு, ஒரு மெச்சு வார்த்தை, இவையெல்லாம் மக்களை நம்மிடம் நெருக்கிக் கொண்டுவரும் (லூக் 15:20). அந்தந்த கலாச்சாரத்திற்குரிய பண்பாடுகளும் பழக்கவழக்கங்களுமுண்டு. நாம் அவற்றை மதிக்கவேண்டும். ஆத்துமாதாயகனுக்கு நகைச்சுவை கைகொடுக்கும். சத்துரு பொய்யை இனிப்பாய் விற்கிறானே; நாம் மெய்யைப் புளிப்பாய்ப் பரிமாறலாமோ ?

“கடுஞ்சொல்லால் கல்லெறிந்து மக்களைக் கிறிஸ்துவிடம் துரத்துவதல்ல, கனிவான கருத்துக்களால் அவர்களைக் கிறிஸ்துவிடம் இழுப்பதே ஆத்துமாதாயம்” என்றார் வில்லியம் குர்னால் எனும் பக்தன். “உங்கள் சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருப்பதாக” என்று பிலிப்பிய விசுவாசிகளுக்குப் பவுல் எழுதினான் (பிலி 4:5). சாந்தகுணமென்பது அருள் நிறைந்திருப்பதைக் குறிக்கும். “உமது உதடுகளில் அருள் பொழிகிறது... உமது ஆடைகளெல்லாம் வெள்ளைப்போளம், சந்தனம், லவங்கம் இவைகளின் வாசனை நிறைந்தவையாயிருக்கின்றன” என்று இயேசுவைக் குறித்துத் திருப்பாடல்களில் வாசிக்கிறோம் (சங் 45:2,8). கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே எல்லா இடங்களிலும் இந்த நறுமணத்தை வீசவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (2 கொரி 2:14,15).

## 7. முறைமை (Procedure)

செய்தி மாறாதது, ஆனால் நபருடைய தன்மைக்கும் தேவைக்கும் ஏற்றவாறு முறைகளை மாற்றிக்கொள்ளவேண்டும். கண்ணை மூடிக் கொண்டு எல்லாரோடும் ஒரே பாணியில் பேசக்கூடாது. ஒவ்வொருவரோடும் இயேசு ஒவ்வொரு விதத்தில் இடைபட்டார். அப்போஸ்தலரும் அப்படியே தங்கள் முறைகளை அவ்வப்போது மாற்றிக்கொண்டனர்.

“உளுந்து கோலினால் அடிக்கப்படும்; சீரகமோ மிலாற்றினால் அடிக்கப்படும்! ஆலோசனையில் ஆச்சரியமும் செயலில் மகத்துவமுமான கர்த்தராலேயே இந்த அறிவு உண்டாகிறதென்கிறான்” ஏசாயா (28:26-29). தினமும் காலையில் அவர்முன் காத்திருக்கும்போது “சோர்படைந்தவனுக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை” சொல்ல அவர் நமக்குப் போதிக்கிறார் (ஏசா 50:4).

நாம் சொல்வது நடைமுறைக்குப் பொருத்தமும் பயனுள்ளதுமாயிருக்கும்படி இவ்வுலகில் நடப்பவைகள் நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். இன்றையப் பித்தலாட்டங்கள், போராட்டங்கள், நாட்டங்கள், பதட்டங்கள் முதலியவற்றை நாம் அறிந்திருக்கவேண்டும். செய்தித்தாளுக்கு நாம் அன்னியராயிருக்கக்கூடாது.

மனந்திரும்புதலுக்கு முன்னுள்ள நமது பின்னணியை நாம் சாதகமாகப் பயன்படுத்தவேண்டும். யூதப் பாரம்பரியத்திலிருந்து வந்த பவுல் யூதச்



சமுதாயத்திற்குத் திட்டமும் தெளிவுமாகச் சுவிசேஷத்தை விளக்க முடிந்தது. நீங்கள் இந்துவாயிருந்து மனந்திரும்பியிருந்தால் உங்கள் இந்து நண்பர் சத்தியத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்பதே உங்கள் பிரதான நோக்கமாயிருக்கட்டும் (ரோ 9:1-5; 10:1-4). இந்துப் பின்னணியிலிருந்து வந்த இந்தியச் சுவிசேஷகர் பலர் தங்கள் நேரத்தில் பெரும்பகுதியை கிறிஸ்தவர்களோடேயே செலவழிப்பது வருந்தத்தக்கது. 80 சதவீதத்திற்கும் அதிகமான இந்துக்களை விட்டுவிட்டு எல்லாரும் 3 சதவீதத்திற்கும் குறைவான கிறிஸ்தவர்களையே மொய்க்கிறார்களே!

இன்னொரு காரியம் — தனித்தாள் ஆத்துமாதாயப் பணியைக் கூடிய மட்டும் அதே பாலருக்கும், ஏறத்தாழ அதே வயது வகுப்பினருக்கும் செய்வது நன்று.

## 8. பொறுமை (Patience)

ஆத்துமாதாயப் பணிகளில் இன்று காணப்படும் பெருந்தவறுகளிலொன்று அவசரமாகும். இயேசு நிக்கோதேமுவிடம் அவசரப்பட்டாரோ ? எவ்வளவு பொறுமையாக அவனோடு இடைபட்டார் பாருங்கள்! ஐந்து நிமிடத்தில் அவன் இரட்சிக்கப்பட்டுவிடவில்லை! நமது ஆத்திரத்தில் வயிற்றைத் திறந்து பிள்ளையெடுத்துவிடுகிறோம். மனந்திரும்புதலைச் சுலபமாக்க செய்தியைத் தண்ணீர்க் கலப்படம் செய்துவிடுகிறோம். இது பேராபத்து. தீர்மானம் எடுக்கும்படி வருந்தியழைக்கலாம், பிடித்துத் தள்ளக் கூடாது. மறுபிறப்பு ஓர் அற்புதம் (யோ 3:7,8). கைபோட்டுக் கெடுத்து விடாதீர்கள். உதவி செய்யத்தான் செவிலியர். அகாலப் பிறவிகளை வளர்ப்பது கடினம்! தள்ளிப் பழுத்த பழம் எப்படியிருக்கும் ?

விதைத்தபின் ஆத்துமாதாயகன் அறுவடைக்காக விவசாயியைப் போலப் பொறுமையாகக் காத்திருக்கவேண்டும் (யாக் 5:7). வலை போட்டபின் அவன் மீன்களுக்காக மீனவனைப் போலப் பொறுமையாகக் காத்திருக்கவேண்டும். எத்தனை முறை தோல்வியடைந்தாலும் விடக் கூடாத பணியது. தொலைந்த ஆட்டைக் கண்டுபிடிக்கும்வரை மேய்ப்பன் கவனமாகத் தேடினான். அப்படியே தொலைந்த வெள்ளிக்காசைக் கண்டுபிடிக்கும் வரை அப்பெண் கவனமாகத் தேடினாள். சீக்கிரம் விட்டு விடக்கூடாது. முடியாது என்று எவரையும் எவ்விடத்தையும் தீர்த்துவிடக் கூடாது.

## 9. தூங்காமை (Preparedness)

ஆத்துமாதாயம் ஒரு பொழுதுபோக்கல்ல. திடீர் திடீரென்றல்ல, எப்பொழுதுமே நற்செய்திப்பணிச் சிந்தையுடனிருக்கவேண்டும். நாம் “எவரெடி” சாட்சிகளாயிருக்கவேண்டும். “சமயம் வாய்த்தாலும் வாய்க்கா

விட்டாலும்!'' (2 தீமோ 4:2). ஆதிக் கிறிஸ்தவர்கள் எங்கும் என்றும் சாட்சி பகர்ந்தனர். "அசாதாரண வேளைகளில், அசாதாரண இடங்களில், அசாதாரண முறைகளில் நாம் சாட்சிபகரவேண்டும்'' என்று எழுப்புதல் பிரசங்கியார் ஜேம்ஸ் ஏ. ஸ்டுவர்ட் சவாலிடுகிறார். சுவிசேஷமே நாம் பேசும் விசேஷமாயிருக்கட்டும்!

அதே நபரைத் திரும்பச் சந்திப்பதரிது. மட்டுமல்ல, இன்றைவிட நாளை வசதியாயிருக்குமென்று எப்படிச் சொல்லமுடியும்? (நீதி 27:1). "இப்பொழுதே'' சிறந்த வேளை (2 கொரி 6:2). நாம் எப்பொழுதும் விழிப்புடன் ஆயத்தமாயிராவிடில் குழிக்குள் விழுந்த கழுதையையோ மாட்டையோ உடனே தூக்கமுடியாமல் அது மாண்டுவிடும்! (லூக் 14:5).

## 10. கை கோர்வை (Partnership)

"தனியாள்'' ஆத்துமாதாயப் பணியென்றால் தனித்தே செய்யவேண்டிய பணி என்று பொருள்படாது! இயேசு ஆத்துமாதாயத்திற்குச் சீடரை இரண்டிரண்டு பேராக அனுப்பினார். அவரும் அவர்களோடு கைகோர்த்து ஊழியம் செய்தார். "தாம் போகும் எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்குமுன்'' அனுப்பினார் (லூக் 10:1).

இயேசு சொன்னதின்பேரில் வலையைச் சீமோன் பேதுரு ஆழத்தில் போட்டபோது அவர்களுக்கு வலை கிழிய மீன்கள் அகப்பட்டன. "அப்பொழுது மற்ற படகிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும்படிச் சைகை காட்டினார்கள்!'' (லூக் 5:5-7). கூட்டுச் சேர்ந்து செய்யப்படவேண்டிய ஆத்துமாதாயப் பணிக்கு இதுவோர் அருமையான எடுத்துக்காட்டு!

பவுல் நடுகிறான், அப்பொல்லோ தண்ணீர் விடுகிறான், தேவன் விளையச் செய்கிறார். தேவனது களத்திலும் கட்டிடத்திலும் நாம் "உடன் வேலையாட்களாய்'' இணைந்து செயல்பட்டால் விளைச்சலும் விளைவும் பன்மடங்காகும் (1 கொரி 3:6-9).

நீங்கள் சந்தித்த நபர்களை உங்கள் உடன் விசுவாசிகளுக்கு அறிமுகம் செய்யுங்கள். ஆத்துமாதாயத்தில் உங்களது வெற்றிகளையும் தோல்விகளையும் பிற கிறிஸ்தவரோடு பகிர்ந்துகொண்டு ஜெபிக்கச் சொல்லுங்கள். தனித்தாட்டம் வேண்டாம். "திருச்சபையோடு இணையாத ஊழியம் களஞ்சியமில்லாத விதைப்பும் அறுப்புமாகும்; அது பயனுள்ளதுதான், ஆனால் முழுமையானதல்ல'' என்று பிரசங்க வேந்தன் ஸ்பர்ஜன் சொன்னது சரியே.



## என் பின்னே வாருங்கள்!

இந்தப் பத்துக் காரியங்களும் சமாரியப் பெண்ணைக் கிறிஸ்து ஆதாயம் செய்த சம்பவத்தில் தெளிவாகக் காணப்படுகின்றன (யோவான் 4:1-42ஐ வாசியுங்கள்).

*தூய்மை:* இயேசு மெய்யாகவே ஒரு தேவ மனிதனென்று நெறி தவறி நடந்துகொண்டிருந்த அவளால் கண்டுகொள்ள முடிந்தது (வச 19).

*வாஞ்சை:* தமது தாகத்தைவிட அவளது தவனம் பெரிதென இயேசு உணர்ந்தார் (வச 10).

*வல்லமை:* அவளது பிரச்னையைத் துல்லியமாகத் தொட்டுக் காண்பித்தார் (வச 16).

*வேதனை:* அவர் தமது களைப்பையும் பசியையும் பெரிதாக நினைக்கவில்லை (வச 6).

*சாதகச் சிந்தை:* அவளைக் கண்டனம்பண்ணாமல் அவளனுபவித்துக் கொண்டிருந்ததைவிட மேலானதை அவள் முன் வைத்தார் (வச 17,18,13,14).

*இனிமை:* அவர் அவளிடம் பண்போடு கேட்டார். தனது மூதாதையரைக் குறித்து அவள் தாராளமாகப் பேச இடங்கொடுத்தார். (வச 7,12,20).

*முறைமை:* உரையாடல் தானாகவே படிப்படியாக வளரவிட்டார்.

*பொறுமை:* அவளது கேள்வி களுக்குப் பொறுமையாகப் பதில் தந்தார் (வச 9,11,12). அவளை மனந் திரும்புதலுக்குள் நடத்துமுன் ஆசீர்வாதத்தை அவள் மீது திணிக்கவில்லை (வச 19).

*தூங்காமை:* தேவையிலுள்ளோருக்கு உதவ எதுவும் அவருக்கு ஏற்ற சமயம்தான் (வச 6).

*கை கோர்வை:* அவரது சீடர் திரும்பி வந்தபோது, அந்தச் சூழலில், "விதைக்கிறவன் ஒருவன், அறுக்கிறவன் ஒருவன்'' எனும் சத்தியத்தை அவர்களுக்குப் போதித்தார் (வச 37).

ஆள்சேர்க்கும் கலையை ஆண்டவரைப்போல் நமக்குக் கற்றுக்கொடுக்க யாரால் முடியும்?

# 8

# இறுதி வாரமும் இழந்த உலகும்

**கடவுள்** தமது குமாரனை மிஷனரிப் பணிக்கென்றே இவ்வுலகிற்குள் அனுப்பினார். "பாவிகளை மீட்கவே இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார் என்னும் வார்த்தை உண்மையானது, எல்லாரும் ஏற்றுக்கொள்ளத் தக்கது" (1 தீமோ 1:15). அவரது ஏறத்தாழ 40 மாத ஊழியத்தில் நமது ஆண்டவருக்கு வேறெதுவும் இரண்டாவதாகவே இருந்தது. முதலும் முடிவுமாக அவர் ஆத்துமாதாயகராகவே இருந்தார். அவரது பூவுலக ஊழியம் முடிவடையும் நாட்களில் அவரது ஆத்தும வாஞ்சை உச்சக் கட்டத்தை எட்டிற்று. தொலைந்துபோனோரை இரட்சிக்க அதே அவசர உணர்வுக்குள் தம்மைப் பின்பற்றினவர்களையும் நடத்த அவர் முழுமூச்சாய் முயன்றார். பாடுகளின் வாரச் சம்பவம் ஒவ்வொன்றும் மிஷனரி நற்செய்திப் பணி குறித்த முக்கிய பாடம் ஒன்றை நமக்குப் போதிக்கிறது. குருத்தோலை ஞாயிறு முதல் பெரிய வெள்ளி வரை நடந்தவற்றில் ஏழு சம்பவங்களை இங்கு கவனிப்போம்.

## 1. கட்டப்பட்டிருந்த கழுதை

"இயேசு சீடரில் இருவரை நோக்கி: உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்திற்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனுடன் ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடம் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதா



கிலும் சொன்னால்: இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்" (மத் 21:1-3).

கிராம ஊழியத்தைக் குறித்த நேர்த்தியான சித்திரம் இது. இந்தியா கிராமங்களிலேயே வாழுகிறது. மக்கட்தொகையில் 80% கிராமத்தினரே. "கிராமங்கள் செழித்தால், நாடு செழிக்கும்" என்றார் மறைந்த பிரதமர் மொரார்ஜி தேசாய். ஆனால் துர்ப்பாக்கியமாக மக்கட்தொகையில் 20 சதவீதத்தை மட்டும் அடக்கியுள்ள பட்டணங்களிலும் நகர்களிலுமே 80 சதவீதக் கிறிஸ்தவ ஊழியம் நடைபெறுகிறது. இந்தியாவின் 6,00,000 கிராமங்கள் பெருவாரியானவற்றில் நற்செய்திக்கு ஒரு சாட்சிகூட கிடையாது. ஏராளமான இக்கிராமங்களுக்கு ஒருமுறைகூட ஓர் ஊழியன் சென்றதில்லை.

அக்கழுதையைப் போலவே மக்களும் மூட நம்பிக்கைகளினாலும், வாழ்நாளெல்லாம் பயங்களினாலும் கட்டப்பட்டிருக்கின்றனர். சீதை சபித்து விடுவாள் எனும் புராணக் கதையை நம்பி ஒரிசாவிலுள்ள போண்டோ இனப் பெண்கள் உடையணிய மறுக்கிறார்கள். தடுப்புச் சட்டம் இருந்தாலும் குழந்தைத் திருமணங்கள், கோயில் விபச்சாரம் போன்ற மனிதாபிமான மற்ற பழக்கங்களை அரசாங்கம் நிறுத்தமுடியவில்லை. பயனற்ற கிழட்டுப் பசுக்களை அடிப்பதைவிட ஆகாரக் குறைவினால் மனிதர் சாவது மேல் எனக் கருதப்படுகிறது! நெடுங்காலத் தலைவலி, வயிற்றுவலி போன்ற வற்றால் வேதனைப்படுகிறவர்களுக்குச் சுகமளிக்கிறோமென்று பில்லி சூனிய மருத்துவர்கள் பழுத்த கம்பிகளால் உடலில் சூடுபோடும் வழக்கம் இன்னுமுண்டு. விடுதலையின் நற்செய்தி அறிவிக்கப்படாத ஒரே காரணத்தினால் மக்கள் அனுபவிக்கும் இவ்விதக் கொடுமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

*கட்டப்பட்ட மனிதரெல்லாம்*
*கட்டவிழ்க்கப்பட வேண்டும்*
*காயப்பட்ட மனிதரெல்லாம்*
*கல்வாரி வர வேண்டும்*
*கர்த்தர் உம்மைக் காண வேண்டும்!*

கழுதை மட்டுமல்ல, குட்டியும் கட்டப்பட்டிருந்தது. பாவமறியாத குழந்தைகளும் வேறு வழியில்லாது தங்கள் பெற்றோர் பின்பற்றும் சாபக்கேடான முறைகளுக்கு அடிமைகளாகின்றனர். எக்கிராமத்திற்குச் சென்றாலும் உடனே ஒரு கூட்டம் சிறுவர் ஆவலாய்க் கூடிவிடுவர்.

இளமையிலேயே அவர்களைப் பிடியுங்கள். களைந்துவிடவேண்டியவை அவர்களிடம் அதிகமில்லையே. விண்ணரசு அவர்களுடையது என்றார் இயேசு. அவர்களுக்கு நற்செய்திப் பாடல்களையும் கதைகளையும் சொல்லிக்கொடுங்கள். அவர்கள் தங்கள் பெற்றோருக்கும் முதியோருக்கும் செய்தியைக் கொண்டு சென்றுவிடுவர். நாங்கள் சபை நிறுவியுள்ள பல கிராமங்களில் எங்களது முதல் சபையினரெல்லாம் சிறுவர்தான். ஒருபோதும் அவர்களை அற்பமாய் எண்ணவேண்டாம்.

கழுதையையும் குட்டியையும் அவிழ்த்துவர இயேசு தமது சீடரில் "இருவரை" அனுப்பினார். கிராமப்புற நற்செய்திப்பணியில் இரண்டிரண்டு பேராகச் செல்லும் தத்துவம் என்றுமே பயனுள்ளது (லூக் 10:1). கிராம ஊழியத்திற்கு 10 அல்லது 12 பேர் சேரட்டுமென நீங்கள் காத்திருக்க அவசியமில்லை. இன்னும் ஒரு விசுவாசியைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டு விடுங்கள். கணவன் மனைவி ஆகிய இருவர் குழு அபாரம். பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்து ஒரு குடும்பமாகச் சென்றால்அது இன்னும் மகிமை!

எதிர்ப்புகளுக்கும் பயமுறுத்துதல்களுக்கும் அஞ்சவேண்டாம். தங்களது கிராமத்தில் நீங்கள் ஏன் இயேசு நாதரைப் பற்றிப் பிரச்சாரம் செய்கிறீர்களென சிலர் கேட்கத்தான் செய்வார்கள். "ஆண்டவர் உங்களை நேசிக்கிறார்; நீங்கள் அவருக்கு வேண்டும்" என்று பண்பாய்ப் பதிலளியுங்கள். நற்செய்தி அறிவிக்க நமக்கு உத்தரவு உன்னதத்திலிருந்தல்லவா வருகிறது? "விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் புறப்பட்டுப் போங்கள்!" என்றார் இயேசு (மத் 28:18,19).

## 2. திறந்தவெளிப் பவனி

"கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் ஆடைகளைப் போட்டு, அவரை ஏற்றினார்கள்... முன்சென்றோரும் பின்வந்தோருமான திரளான மக்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!... என்று ஆர்ப்பரித்தனர். அவர் எருசலேமுக்குள் வந்தபோது நகர் முழுவதும் பரபரப்புற்று, இவர் யார்? என்று கேட்டது" (மத் 21:7-10).

சமுதாயங்களை நற்செய்தியால் பாதிக்க தெருப்பிரசங்க ஊழியம் இன்னும் மிகச் சிறந்ததொரு முறையாகும். முதல் குருத்தோலை ஞாயிறன்று நடந்த ஊர்வலத்தினால் நகர் முழுவதிலும் பரபரப்பும் ஆச்சரியமும் உண்டானது. தேவனது புகழைப் பாடிக்கொண்டு மக்கள் வீதிகளுக்குச்



சென்றனர். இன்றோ நாம் ஆலயத்தையே சுற்றிச்சுற்றி வருகிறோம். நமது ஆலயத்தின் நான்கு சுவர்களுக்குள் இன்னும் எத்தனை காலம் நாம் ஆண்டவரைச் சிறையாக்கி வைத்திருப்போம்? ஆலய வளாகத்திற்கு வெளியே எப்போது சென்று அவரது இரட்சிப்பைப் பிரகடனப்படுத்துவோம்?

அக்காலத்து இரட்சண்ய சேனை சபையினர் உள்ளத்தை உருக்கும் இசையோடும் மேளதாளங்களோடும் அடிக்கடி தெருக்களிலும் சந்திகளிலும் நற்செய்திப் பவனிகள் நடத்தினர். வீணான பிரச்னை உருவாகக் கூடிய ஒருசில இடங்கள் தவிர்த்து, சிறு குழுக்களாகவாவது திறந்த வெளிகளில் நாம் பாடல் பிரசங்கங்களுடன் பவனி செல்லலாம். ஒவ்வொரு சபையும் நகரில் ஒரு பகுதியைத் தெரிந்தெடுத்து இவ்விதம் ஊழியம் செய்யலாம். பொது விடுமுறை நாட்களில் அவ்வூரிலுள்ள அனைத்து சபைகளும் சேர்ந்து பொதுப்பவனி செல்லலாம். கூட்டம் கூட்டமென்று உள்ளே உட்கார்ந்திருப்பதைவிட்டு வெளியேயுள்ள கூட்டங்களுக்குள் ஊடுருவிச் செல்லக் காலமாயிற்று (அப் 17:17).

*கிதியோன்களே புறப்படுங்கள்*
*எதிரிகளைத் துரத்திடுங்கள்*
*தீபங்களை ஏந்திடுங்கள்*
*தெருத்தெருவாய் நுழைந்திடுங்கள்!*

ஆலயத்திற்கு வெளியே திறந்தவெளியில் இறையரசின் செய்தியை முதலாவது முழங்கியது யோவான் ஸ்நானன். "யோவான் ஸ்நானன் காலமுதல் இதுவரை பரலோக இராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்" (மத் 11:12). தெருக்களிலும், சாலைகளிலும், சந்திகளிலும் சென்று தொலைந்து போனோரை, தொய்ந்துபோனோரை, தொடப்படாதோரை தேவனது விருந்து சாலைக்கு வருந்திக் கட்டாயமாய் அழைத்துவாருங்கள் (லூக் 14:23).

தெருப்பிரசங்க ஊழியம் கடினமானதுதான். உங்கள் ஆடைகள் தூசிபடிந்து, அழுக்கடையத்தான் செய்யும் (மத் 21:7,8). ஆனால் தேவனது கோபாக்கினையின் ஆலையைத் தனியாய் மிதித்து தமது ஆடைகளை இரத்தத்தினால் கறைப்படுத்திக்கொண்ட இரட்சகருக்காக நாம் இதைக் கூடச் செய்யக்கூடாதா? (ஏசா 63:3).

அர்த்தமுள்ள அடையாளங்கள் மற்றும் கொள்ளை கொள்ளும் கோஷங்களைப் பல வண்ணங்களில் எழுதித் தொங்கல்களும் அட்டை

களும் தயாரித்துக்கொள்ளுங்கள். கலைத்திறன் ஆவியானவரின் ஒரு வரமாகும் (யாத் 31:1-5). தெருக்களிலுள்ள மக்களைக் கவரும் வகையில் நற்செய்தியை அறிவிக்கத் தங்கள் திறமைகளைப் பயன்படுத்த வாலிபருக்கு நாம் விடுதலை தரவேண்டும். கழுதையைக் கொண்டுவாருங்கள் என்றுதான் ஆண்டவர் சொன்னார். கிளைகளையும் உடைகளையும் தெருவில் பரப்பியது மக்களாகவே செய்தது! பிரதான ஆசாரியர், வேதபாரகரைப் போல் சபை மேய்ப்பர்கள் தங்களது வாலிபரின் உற்சாகத்தை அணைத்துவிட முயலக்கூடாது (மத் 21:15,16). வாலிபரைத் திரட்டி நற்செய்திப்பணியில் அவர்களை ஈடுபடுத்தத் தவறியது சபையின் பெருங்குற்றங்களில் ஒன்றாகும்.

## 3. துர்ப்பிரயோகிக்கப்பட்ட ஆலயம்

“அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள். இயேசு தேவாலயத்தில் நுழைந்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும் வாங்குகிறவர்களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய இருக்கைகளையும் கவிழ்த்து... என்னுடைய வீடு எல்லா இனத்தாருக்கும் ஜெப வீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார்” (மாற் 11:15-17).

நமது ஆலயக் கட்டிடங்கள் ஊழல் மற்றும் வழக்கு மையங்களாகிவிட்டது ஏன்? அவைகளின் பிரதான நோக்கத்தை நாம் மறந்துவிட்டோம். ஆலயங்களில் இடையறாது நடக்கவேண்டியது ஜெபமே. நமது ஆலயங்களுக்குப் பலவிதமான பெயர்களைக் கொடுத்துள்ளோம். ஆனால் ஏசுோவாவும் ஏசுவும் ஆலயத்திற்குக் கொடுத்த பெயர் “ஜெப வீடு” (ஏசா 56:7; மாற் 11:17). இங்கும் ஒரு மிஷனரி நோக்கு இருப்பதைக் கவனியுங்கள். அது “எல்லா இனத்தாருக்கும்” ஜெப வீடாம்!

அரசன் சாலமோன் மிஷனரிப் பாரத்துடனேயே ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தான். இஸ்ரவேலனல்லாத “அன்னியன்” ஒருவன் அங்கு பண்ணும் ஜெபத்திற்குக் கிருபையாய்ப் பதிலளிக்கும்படி பிரதிஷ்டை ஜெபத்தில் சாலமோன் தேவனிடம் வேண்டினான். “பூமியின் மக்களெல்லாம்” கர்த்தரின் நாமத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்பதே அவனது பாரமும் தரிசனமுமாயிருந்தது (1 இரா 8:41-43). மிஷனரி ஜெபக்கூட்டமே ஆலயத்தின் முக்கிய நிகழ்ச்சியாயிருக்கவேண்டும். வார நாட்களில் நடக்கும் மிஷனரி ஜெபக் கூடுகைகளில் அநேகர் பங்கு பெறுவதில்லை. ஒன்று விட்டு ஒரு ஞாயிறு ஆராதனையை மிஷனரி ஜெபக்கூட்டமாய்



மாற்றினால் என்ன? பிரிய சபை மேய்ப்பர்களே, இப்படியெல்லாம் மக்களை மாற்றி விடமுடியாதெனச் சொல்லாதீர்கள். சபையையே மாற்ற முடியாவிடில் சமுதாயத்தை மாற்றுவதைப்பற்றி பேசுவானேன்?

நற்செய்திப்பணியில் உற்சாகமற்ற சபை உறைந்துபோகும் என்றார் பண்டிதர் ஆஸ்வால்டு J. ஸ்மித். நமது கட்டிடங்களைப் பற்றிப் பெருமையடித்தது போதும். அவைகள் வெறும் நினைவுச் சின்னங்களாகக்கூட இருக்கும்படித் தேவன் விட்டுவைக்கமாட்டார். “அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படும்போது, அவரது சீடரில் ஒருவன் அவரிடம்: போதகரே, இதோ பாரும், எத்தகையக் கற்கள்! எத்தகையக் கட்டிடங்கள்! என்றான். இயேசு அவனுக்கு மறுமொழியாக: இப்பெரிய கட்டிடங்களைப் பார்க்கிறாயே, ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடி எல்லாம் இடிக்கப்பட்டு போகும் என்றார்” (மாற் 13:1,2). கி.பி. 70இல் ரோமானியர் இந்த ஆலயத்தை அழித்தபோது எழுத்தின்படி இயேசுவின் வார்த்தைகள் அப்படியே நிறைவேறின. எச்சரிக்கை!

இச்சம்பவத்தில் இன்னொரு முக்கியமான அடிப்படைப் படிப்பினையும் உண்டு. ஆலயத்திற்குள் புறாக்காரரும் காசுக்காரரும் வியாபாரம் நடத்தியதற்கு “மத சம்பந்த” காரணங்கள் இருந்தன. எப்படியெனில், மோசேயின் பிரமாணத்தின்படி பலிகள் செலுத்துவதற்காகவே புறாக்கள் விற்கப்பட்டன. அப்படியே கிரேக்க மற்றும் ரோமானிய நாணயங்களை ஆலய வரிக்காக மாற்றுவதற்காகவே அங்கு காசுக்காரர் செயல்பட்டுக்கொண்டிருந்தனர். அப்படியிருந்தும் அவ்வளவு ஆவேசமாக இயேசு இவ்வியாபாரங்களை எதிர்த்தது ஏன்? ஆம், மார்க்கம் ஒருபோதும் வியாபாரமயமாகிவிடக்கூடாது. “தேவ பக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணும்” பிரசங்கிமாரையும் ஊழியரையும் ஒன்று அகற்ற வேண்டும்; அல்லது நாம் அவர்களை விட்டு அகல வேண்டும் (1 தீமோ 6:5). மிஷனரிச் சுவிசேஷகராகத் தமது சீடரை இயேசு அனுப்புகையில் ஊழியத்திற்கு விலை பேசிவிடக்கூடாதென்று எச்சரித்தார். “இலவசமாய்ப் பெற்றீர்கள்; இலவசமாய்க் கொடுங்கள்” என்றார் (மத் 10:8).

## 4. கனியற்ற மரம்

“காலையில் அவர் நகருக்குத் திரும்புகையில் பசியுற்றார். வழியோரத்தில் ஓர் அத்திமரத்தைக் கண்டு அதை அணுகி, அதில் இலைகளையன்றி வேறொன்றையும் காணாமல், இனி ஒருக்காலும் காய்க்கவேமாட்டாய் என்று கூறினார். உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று” (மத் 21:18,19).

கனியற்ற கிறிஸ்தவன் ஒரு முரண்பாடு. கனி கொடுத்தல் என்றால் பெருக்குதல் எனப் பொருள். பிறரை மீட்கவே நாம் மீட்கப்பட்டோம்; பிறரை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டோம். "நீங்கள் போய்க் கனிகொடுக்கவும், உங்கள் கனி நிலைத்திருக்கவும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்றார் இயேசு (யோ 15:16). மனிதரைப் பிடிப்பதே நமது அடிப்படை அழைப்பு என்பதை மறவாதிருப்போம் (மத் 4:19). கனி கொடுப்பது நமது விருப்பத்தை அடுத்ததல்ல; அது நமது கடமை. கனியின்மை சோம்பேறித்தனத்தினால் இருக்கலாம்; ஆனால் அது "பொல்லாப்பு" என்றழைக்கப்படுகிறது (மத் 25:26).

இயேசு அவ்வத்திமரத்தை அணுகிய காலத்திலிருந்து ஆறு வாரங்கள் கழித்தே சாப்பிடக்கூடிய ருசியான கனிகள் இருக்கும்; ஆனால் அப்பொழுது ருசியற்ற முற்கனிகள் இருந்திருக்கவேண்டும் (மாற் 11:13). முற்கனிகளின்றி இலைகள் மட்டுமே இருந்தால் அம்மரம் அவ்வாண்டு காய்க்கவே காய்க்காது. அதின் மாய்மாலத்திற்காகவே இயேசு அம்மரத்தைச் சபித்தார். இறையரசின் விரிவாக்கத்திற்காக நாம் செய்பவைகளைப் பல சமயங்களில் நாம் மிகைப்படுத்தி அல்லது பொதுவாகச் சொல்லிவிடுகிறோம். கணக்கொப்புவிக்க வேண்டிய நாள் வருகிறது. ஐந்து தாலந்து அல்லது இரண்டு தாலந்து பெற்றவனைப்போல் நமக்கு தேவனருளிய ஆவிக்குரிய, உடலுக்கடுத்த, பொருளாதார ஆசீர்வாதங்களைக்கொண்டு என்ன செய்திருக்கிறோமெனக் குறிப்பாய்ச் சொல்லத் தெரியவேண்டும் (மத் 25:20,22). அதிகம் ஆசீர்வதிக்கப்பட்டவரிடம் அதிகம் எதிர்பார்க்கப்படும் (லூக் 12:48).

இச்சம்பவத்தில் இயேசு அம்மரத்தை உடனே சபித்துவிட்டார். ஆனால் இன்னொரு இடத்தில் அவர் சொன்ன அத்திமர உவமையில் கனியற்ற மூன்றாண்டுகளுக்குப் பிறகு கிருபையாக இன்னோர் ஆண்டு கூட்டிக் கொடுக்கப்பட்டது (லூக் 13:6-9). ஒருவேளை இதுவே உங்களது நாலாவது—அதாவது கடைசி—ஆண்டாக இருக்கலாம்! உங்கள் நேரத்தையும் பலத்தையும் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணச் செலவிடுங்கள். இனியும் காலந்தாழ்த்தாமல் உங்களது மிஷனரி அழைப்பிற்குக் கீழ்ப்படியுங்கள். இவ்வுலகிற்கடுத்த சிற்றாசைகளை அவ்வுலகிற்காக விட்டுவிடுங்கள். தனியாள் ஆத்துமாதாயத்திலும் சுற்றுப்புற நற்செய்திப்பணியிலும் உங்களை ஈடுபடுத்துங்கள். இன்னும் ஏனோதானோவென்றிருந்தால் மரம் வெட்டப்படும்; அல்லது தோட்டம் வேறொருவருக்குக் கொடுக்கப்படும் (மத் 21:40,41).



## 5. தியாகப் பெண்மணிகள்

பஸ்கா பண்டிகைக்கு இருதினங்களுக்கு முன்னர் செவ்வாயன்று கொடுக்கப்பட்ட இரு தியாகக் காணிக்கைகளைக் குறித்து சுவிசேஷங்களில் வாசிக்கிறோம் (மத் 26:2). கொடுத்த இருவருமே பெண்களாவர். கடைசியாய்த் தனக்கிருந்த இரண்டே காசுகளைக் கொடுத்துவிட்ட விதவை ஒருத்தி (மாற் 12:41-44; லூக் 21:1-4). தன்னிடமிருந்த விலையுயர்ந்த தைலத்தை இயேசுவின்மீது கொட்டிவிட்ட பெண்மணி அடுத்தவள் (மத் 26:6-13; மாற் 14:3-9). இவ்விரு செயல்களையும் இயேசு வெகுவாய்ப் பாராட்டினார்.

அழியாத படிப்பினை ஒன்று இங்குண்டு. இவ்விரு பெண்களும் தங்கள் எதிர்காலத்தைவிட ஆண்டவரைப் பெரிதாகக் கருதினர். அவ்விதவை ஏற்கனவே வறுமையிலிருந்தவள். ஆனால் "தனக்குள்ளதையெல்லாம்" அவள் போட்டுவிட்டாள். தனது எதிர்காலத்திற்காய்த் தேவனை முழுவதுமாய் நம்பித் தனக்குள்ளதை முழுவதுமாய்க் கொடுத்துவிட்டாள்—வெறுமனே தசமபாகத்தையல்ல! தைலத்தைப் பொறுத்தவரை அது ஓராண்டுக்குரிய சராசரிக் கூலியாகும். அவளது குடும்பத்தில் அது ஒரு பரம்பரைச் சொத்தாகவோ, அல்லது அவளுக்கு வரும் மணமகனுக்குப் பரிசளிக்கவோ வைக்கப்பட்டிருந்திருக்கலாம். அத்தைலப் புட்டியைத் திறந்துவிட்டால் முழு மணத்துடன் அத்தைலத்தை ஒருமுறைதான் அனுபவிக்கமுடியும். அவளுக்கோ அவளது ஆண்டவர் அவளது எதிர்காலத்திலும் சிறந்தவர். இச்செயலை இயேசு உடனே அகிலவுலக நற்செய்திப்பணியோடு இணைத்தது எத்தனை ஆச்சரியம்! "இச்சுவிசேஷம் உலகில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கெல்லாம் இவள் செய்ததும் இவள் நினைவாகக் கூறப்படும் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத் 26:13).

அகிலவுலக நற்செய்திப்பணியில் உண்மையான நாட்டங்கொண்டோர் எவரும் பழைய ஏற்பாட்டுத் தசமபாக மனப்பான்மையிலிருந்து வெளிவந்தேயாகவேண்டும். நியாயப்பிரமாணமானது நம்மைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தும் "உபாத்தியாய்" மட்டுமே நியமிக்கப்பட்டது (கலா 3:24,25). அதாவது சிறு பிள்ளைகளைப் பத்திரமாய்ப் பள்ளிக்குக் கூட்டிக்கொண்டு போய், அக்கம்பக்கச் சிதறல்களுக்குப் பாதுகாத்து, கவனமாய் வீட்டுக்குத் திரும்பக் கூட்டிவரும் "வழித்துணை" என்ற கிரேக்கப் பழக்கமே இங்கு குறிப்பிடப்படுகிறது! இந்தப் பாலர் அல்லது துவக்கப் பள்ளி நிலையிலிருந்து என்றுதான் வளர்ந்து முதிர்ச்சியடைவோமோ?

துக்ககரமாக, அதே நாளில், அவள் இயேசுவின் மீது தைலத்தை ஊற்றியதையடுத்து உடனே, யூதாஸ் ஸ்காரியோத் பிரதான ஆசாரியரிடம் சென்று தனது ஆண்டவரை முப்பது காசுகளுக்கு விற்றுப்போட்டான் (மத் 26:13-16; மாற் 14:9-11). அப்பெண்மணிக்கு அவளது ஆண்டவர் ஓராண்டு சம்பாத்தியத்தைவிட விரும்பப்படத்தக்கவராயிருந்தார்; யூதா சிற்கோ ஒரு மாத ஊதியமே அவனது ஆண்டவரைவிடப் பெரிதாகத் தெரிந்தது. நீங்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்? உண்மையாய்ச் சொல்லுங்கள்!

## 6. பயமற்ற சாட்சி

“பிலாத்து அவரைப் பார்த்து : அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு மறுமொழியாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இவ்வுலகில் வந்தேன் என்றார்” (யோ 18:37).

இயேசுவிற்கும் சீடருக்கும் என்னே வித்தியாசம்! காட்டிக்கொடுப்பவன் தலைமையில் திரளான மக்கள் இயேசுவைப் பிடிக்க வாள்களோடும் தடிகளோடும் வந்தபோது சீடர் அனைவரும் காற்றாய்ப் பறந்தனர். வாலிபனொருவன் தனது ஆடைகளைக்கூட விட்டுவிட்டு நிர்வாணமாய் ஓடிவிட்டான் (மத் 26:56; மாற் 14:50-52). இயேசுவோ சிங்கம்போல் நின்று “நான்தான் அவர்!” என்று மும்முறை முழங்கினார் (யோ 18:4-8). பேதுரு இயேசுவை மறுதலித்தான், அவருக்கெதிராய்ச் சத்தியம் பண்ணினான், அவரைச் சபித்தான். இயேசுவின் அஞ்சா நெஞ்சத்தின் இரகசியம் என்ன? அவர் ஏற்கனவே தம்மை நன்கு ஜெபத்தில் ஆயத்தப்படுத்தியிருந்தார். பலவீன உடலை மேற்கொள்ள உற்சாகமுள்ள உள்ளத்தைப் பலப்படுத்தியிருந்தார் (மத் 26:41). இங்குதான் சீடர் தவறினர். குறட்டை விட்டுக் கோட்டைவிட்டனர். சாட்சி பகருவதில் நாம் பலவீனமாயிருப்பதற்கு அடிப்படைக் காரணம் முழங்கால் தோல்வியே. “ஜெப வேளையைத்” தவறாது கடைப்பிடித்ததாலேயே எவ்வித அச்சுறுத்தலுக்கும் ஆதிச்சபை அசையவில்லை (அப் 3:1). பவுலைப் போன்ற துணிந்த அப்போஸ்தலன் கூட தனது “தைரியத்திற்காய்” ஜெபிக்கும்படித் திரும்பத் திரும்ப விசுவாசிகளை வேண்டினான் (எபே 6:19).

இயேசுவின் தைரியத்திற்கு இன்னொரு காரணம் அவர்மீதிருந்த ஆவியின் அபிஷேகமாகும். மிஷனரிப் பணியும் நற்செய்தி ஊழியமும் பிசாசின் வல்லமைக்கெதிரான நேரடிப் போராட்டங்களாம். பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, சேனைகளின் கர்த்தரின் ஆவியினாலேயே



பாதாளத்தின் வாசற்கதவுகளை மோதியுடைத்து சிறைப்பட்டோரை விடுவிக்க முடியும் (லூக் 4:17-21). ஆன்மீகப் போராட்டத்தை மூளையறிவு, பேச்சுத்திறன், தொழில் நுட்பம், செல்வாக்கு, பணபலம் போன்றவை கொண்டு மேற்கொள்ள முனைவது மடமையிலும் மடமை.

விசுவாசத்திற்காகத் தளராது போராடவும், சுவிசேஷத்தைத் தயங்காது பறைசாற்றவும் வாலிபன் தீமோத்தேயுவை உற்சாகப்படுத்தியபோது, “பொந்தியுபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவைப்” பவுல் அவனுக்கு நினைப்பூட்டினான் (1 தீமோ 6:12-14). இயேசு மரிக்கவும் ஆயத்தமாயிருந்ததால் எதற்கும் அஞ்சவில்லை. தம்மைப் பின்பற்றுவோருக்கு அவர் வைத்த எதிர்பார்ப்பு இதுவே: “தன் உயிரைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; எனக்காகத் தன் உயிரை இழந்துபோகிறவனோ அதைக் கண்டடைவான்” (மத் 10:32,39).

*உமக்காகத்தானே ஐயா – நான்*
*உயிர் வாழ்கிறேன் ஐயா*
*என் உடலும் உள்ளமெல்லாம் – அன்பர்*
*உமக்காகத்தானே ஐயா*

## 7. சிலுவைக் கள்ளன்

“சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்... அவரை இகழ்ந்தான்... மற்றவன்... இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடன் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்” (லூக் 23:39-43).

அவரைக் கேட்கவும் அவரால் குணமடையவும் பெருங்கூட்டம் அவரை எப்பொழுதும் நெருக்கிக்கொண்டிருந்தாலும் இயேசு தனி நபர்களையும் அவர்களது தேவைகளையும் ஒருபோதும் கவனியாது விடவில்லை. நிக்கொதேமுவுக்கும் சகேயுவுக்கும் நேரம் கொடுத்தார். தொழுவத்திலிருந்த தொண்ணூற்றொன்பது ஆடுகளைவிடத் தொலைந்துபோன ஓர் ஆட்டைப் பற்றியே அவருக்குக் கவலை அதிகம். முழுநேர ஊழியத்திலிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் வாழ்நாள் முழுவதும் “தனியாள்” ஆத்துமாதாயகனாய் இருக்கவேண்டும். எந்த நேரமும் ஆத்துமாதாய நேரமாம்; எவரும் ஓர் ஆத்துமாவாம். சிலுவைக் கள்ளனை ஆதாயப்படுத்தியதின் மூலம் இக்கருத்தையே இயேசு நிலைப்படுத்தினார்.

தனியாள் ஆத்துமாதாயத்தின் அளவிலா சாத்தியத்தை நாம் சரிவர உணராது பொதுமேடைக் கூட்டங்களில் ஏராளம் நேரம், பணம், பலத்தை வீணடிக்கிறோம். பொதுக்கூட்டங்களுக்கு ஒருவேளை அரசு தடை விதிக்கலாம்; ஆனால் தனியாள் ஆத்துமாதாயப் பணியை யார் தடுத்து நிறுத்தமுடியும்?

தனியாள் ஆத்துமதாயப் பணியில் மறுமலர்ச்சி உண்டாவதே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தைத் திரும்பக் கண்டுபிடிப்பதாகும் என்று மிஷனரி சுவிசேஷகர் T. L. ஆஸ்போர்ன் அழுத்திக் கூறுகிறார். நாம் எதிர்பார்த்திருக்கும் முடிவான எழுப்புதல் இதுவே. அழியும் ஆத்துமாக்களுக்குச் சிலுவைச் செய்தியை அறிவிக்க நாம் ஒவ்வொருவரும் நம்மை அர்ப்பணித்தால் சிலுவையிலறையப்பட்ட இரட்சகர் "தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்!" (ஏசா 53:11).



# 9

# *மிஷனரிகளை அனுப்புவதென்றால் என்ன?*

**மிஷனரிப்பணியில்** எங்கும் காணப்படும் ஆர்வம் இறுதிக்காலத்தின் நிச்சயமானதோர் அடையாளம். அகிலவுலகை நற்செய்திமயமாக்கும் திருப்பணியில் தீவிர ஈடுபாடு கொள்ளப் பரிசுத்த ஆவியானவர் திருச்சபையைத் தட்டி எழுப்பிக்கொண்டிருக்கிறார். மக்கட்தொகையில் இரண்டாம் இடத்திலுள்ள இந்தியாவில், இருபதாம் நூற்றாண்டின் இறுதியான இருபது முப்பது ஆண்டுகளில், உள்நாட்டு மிஷனரி இயக்கங்கள் பல எழும்பியுள்ளன. புராதனச் சபைகளிலும் புதிய சபைகளிலும் கிறிஸ்தவர்கள் சந்திக்கப்படாதோரைச் சந்திப்பதில் பெருமளவில் உற்சாகங்காட்டி வருகின்றனர். மிஷனரிகளை அனுப்பும் ஆராதனைகள் பெருகிவிட்டன. ஆயினும், மிஷனரிகளை அனுப்புவதில் என்னவெல்லாம் உள்ளடங்கியுள்ளதென்பது முழுமையாய் அறியப்படாதது வருந்தற்குரியது. மிஷனரிகளை அனுப்புவோரின் பல்வேறு பொறுப்புகளைப் போதிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

மிஷனரிப் பணியை ஒரு நாடகத்திற்கு ஒப்பிட்டால் அதில் குறைந்தது ஐவகை நடிகர் குழுக்கள் உண்டு. அவர்களை மிஷனரி பவுல் ரோமர் 10:12-15இல் நமக்கு வரிசைப்படுத்தி அறிமுகம் செய்கிறார். அவர்கள் *அனுப்புவோர், பிரசங்கிப்போர், கேட்போர், விசுவாசிப்போர்* மற்றும் *ஆராதிப்போர்* ஆவர். காட்சியில் முதலாவது தோன்றுவதே அனுப்புவோர்தான் என்பது வெளிப்படை. அன்னார் செயல்படத் துவங்கும்வரை நாடகம் ஆரம்பமாகாது! ஆம், மிஷனரிகளை அனுப்புவதே மிஷனரிப்பணியில் அடித்தளச் செயல். அனுப்புவதில் குறைந்தது ஐந்து பொறுப்புகள் உண்டு.

## 1. மிஷனரிப்பணிக்காய் ஜெபித்தல்

"ஆகையால் புறப்பட்டுப்போங்கள்" என்ற இயேசுவின் கூற்றிற்கு "ஆகையால் வேண்டிக்கொள்ளுங்கள்" என்பது முந்தி வந்துவிட்டது! (மத் 9:37,38; 28:18-20). பன்னிரு சீடரைத் தெரிந்தெடுத்து அனுப்புமுன்னர் இயேசு ஜெப அழைப்பு ஒன்று விடுத்தார் (10:1). ஜெபத்தில் முளைத்து ஜெபத்தில் முழுகாத மிஷனரிப் பணி கடவுளின் நோக்கங்களை முன் தள்ளாது. என்றுமே வேலையாட்களைவிட வேலை மிகமிக அதிகம். அறுவடைக்குப் போதுமான அறுவடையாளர்கள் இருந்தனரென்று சபைச் சரித்திரத்தில் ஒரு நாளும் இருந்ததில்லை (9:37). முடிவுவரை அப்படியே தான் இருக்கும். இங்குதான் கடவுளின் சர்வசக்தி இன்றியமையாததாகிறது. நாம் ஜெபிக்கும் அளவுக்குத்தான், அதாவது எவ்வளவாய் அவரை நோக்கி நாம் அங்கலாய்க்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான், அது வெளிப்படும். அதிக ஜெபமென்றால் அதிக வல்லமை, குறைந்த ஜெபமென்றால் குறைந்த வல்லமை, ஜெபமில்லையென்றால் வல்லமையில்லை.

வேறெந்தக் காரியத்திற்கும் மேலாக ஜெபத்தை வைத்ததாலேயே அப்போஸ்தலன் பவுல் மிஷனரிப் பணியில் அமோக வெற்றி கண்டான். அவன் எல்லா மனிதருக்காகவும் ஜெபங்களையும் துதிகளையும் "முதலாவது" ஏறெடுக்கவேண்டுமென்று தேவ மக்களுக்கு அறிவுறுத்தினான் (1 தீமோ 2:1).

ஜெபப் பலிபீடத்திற்குப் போதிய விறகு இல்லாததினால்தான் கிறிஸ்தவர்கள் மிஷனரி ஜெபத்தில் அனல் குன்றிப்போகிறார்கள். அவ்வப்போது மிஷனரி நிறுவனங்கள் அறிவிக்கும் சிறப்புத் தேவைகள் தவிர்த்து, மிஷனரிப் பணிக்காய் ஜெபிக்கும்போதெல்லாம் மனதில் வைக்கவேண்டிய குறிப்புகள் சிலவுண்டு.

☐ நற்செய்தியை அறிவிக்கப் புறப்பட்டுப்போனவர்களின் தைரியத்திற்காய் ஜெபியுங்கள். துணிச்சல் நிறைந்த பவுலைப் போன்றதோர் அப்போஸ்தலன்கூட தனது தைரியத்திற்காய் ஜெபிக்கும்படி விசுவாசிகளிடம் கெஞ்சினான். "நான் பேசும்போது நற்செய்தியின் மறைபொருளைத் துணிவுடன் தெரியப்படுத்துவதற்கான வார்த்தைகளைக் கடவுள் எனக்குத் தந்தருளுமாறு எனக்காக மன்றாடுங்கள்" (எபே 6:19,20).

☐ நற்செய்தியைக் கேட்போரின் இருதயங்களைக் கர்த்தர் திறக்குமாறு ஜெபியுங்கள். வெளிப் பிரசங்கம் ஒன்றைக் கேட்கவும் அதை விசுவாசிக்கவும் லீதியாளின் இருதயத்தைத் திறந்தது கர்த்தரே (அப் 16:14). நற்செய்தியின் மாட்சிமையான ஒளியைக் காணமுடியாதவாறு சாத்தான் மக்களுடைய மனதைக் குருடாக்கியிருக்கிறான். இந்த இருளை அகற்றி அவர்கள் மீது ஒளியைக் கடவுள் மட்டுமே வீசச் செய்யமுடியும் (2 கொரி 4:3-6).



☐ எதிர்க்கிறவர்களுக்காய் ஜெபியுங்கள். மனிதனுக்கும் மகிபனுக்கும் எதிராளியின் கையில் சிக்கிக்கொண்டு பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் தான் அவர்கள். துன்புறுத்தல் அதிகரிக்கும்போது அசாதாரண அற்புத அடையாளங்களை நிகழ்த்துவது தேவனுக்கு வாடிக்கை. அவரது தெய்வீக வல்லமை எதிர் பேசுவோரின் நாவை அடக்கிவிடும் (அப் 4:16,29,30).

☐ புதிய விசுவாசிகளுக்காய் ஜெபியுங்கள். நமது மிஷனரிக் கனிகளுக்காய் இயேசு ஏற்கனவே ஜெபித்துள்ளாரென அறிவது எத்தனை ஊக்கம்! தமது பிரதான ஆசாரியத்துவ ஜெபத்தில், "பிதாவே, நான் இவர்களுக்காக மட்டும் வேண்டவில்லை; இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கப்போகிறவர்களுக்காகவும் வேண்டுகிறேன்" என்றார் (யோ 17:20).

☐ மிஷனரிகளின் நலனுக்காய் ஜெபியுங்கள். அவர்கள் மனதில் தெளிவாகவும், உடலில் ஆரோக்கியமாகவும், ஆன்மீகத்தில் உறுதியாகவும், பொருளாதாரத்தில் நிலையாகவும், சமுதாயத்தில் நட்புடனும் இருக்க வேண்டும். வருமுன் காப்பதே மேல். பரிசுத்தக் குலைவு, வியாதி, சோர்பு, பிரிவினை மற்றும் அபாயங்களிலிருந்து (defilement, diseases, depressions, divisions and dangers) மிஷனரிகள் காக்கப்பட ஜெபியுங்கள்.

*அகத்தூண்டுதலின்படி* ஜெபியுங்கள். திடீரெனப் பரிசுத்த ஆவியானவர் ஒரு குறிப்பிட்ட பணிக்களம் அல்லது பணியாளரை நினைவுபடுத்தி ஜெபிக்கப் பாரப்படுத்துவார். அங்கு அல்லது அவருக்கு ஏதோவொரு பிரச்னை இருக்கலாம். இவ்வித சாட்சிகள் ஏராளம்.

*அறிவிக்கப்பட்டபடி* ஜெபியுங்கள். மிஷனரி இயக்கங்களின் பத்திரிகைகள், சுற்றுக்கடிதங்கள் மற்றும் பொதுவான செய்தித்தாள்களிலிருந்து நமக்குப் போதுமான ஜெபக்குறிப்புகள் கிடைக்கும். Patrick Johnstone என்பவர் தொகுத்த *Operation World* எனும் நூலைத் தினமும் பயன்படுத்தினால் உலகிலுள்ள அத்தனை நாடுகளுக்காகவும் ஜெபித்துவிடலாம்.

*கற்பனைசெய்து* ஜெபியுங்கள். முன்னணி மிஷனரிப் பணியைக் குறித்து எத்தனையோ பிரச்னைகள், சவால்கள் மற்றும் தேவைகளை நாம் கற்பனை செய்து பார்க்கலாம். கற்பனைகளைப் பிரார்த்தனைகளாக்குவோம்.

## 2. மிஷனரிப் பணிக்குக் கொடுத்தல்

கிறிஸ்தவப் பணியைச் சபை நிறுவுதல், சபை வளர்த்தல் என இரு பிரிவாகப் பிரிக்கலாம். பவுல் நடுவான்; அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சுவான் (1 கொரி 3:5,6). இயேசு பயன்படுத்திய ஒப்புமைகளின்படிச் சொன்னால், சபை நிறுவுபவர்கள் மீனவர்; சபையை வளர்ப்பவர்கள் மேய்ப்பர். எபேசியர் 4:13இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள திருச்சபையின் ஐந்து பிரதான திருப்பணியாளரில், அப்போஸ்தலரும் சுவிசேஷகரும் முக்கியமாகச் சபை நிறுவுபவர்கள்; தீர்க்கதரிசிகளும், மேய்ப்பரும், போதகருமோ சிறப்பாகச் சபை வளர்ப்பவர்கள். வேறுவிதமாய்ச் சொன்னால், முதற்குழுவினர் மலையிலிருந்து கல் உடைப்பவர்கள்; அடுத்தவர் கல்லில் செதுக்கும் சிற்பிகள். ஒன்று அடுத்ததற்கு வழி நடத்தும். அவை தனிப்பட்டவையல்ல, ஒன்றையொன்று சார்ந்தவை. உயிர்த்தெழுந்த கர்த்தரால் வல்லமை பெற்றுள்ள இவ்வூழியர் ஒருவருக்கொருவர் உதவுபவர்கள் (1 கொரி 3:5,6).

கிறிஸ்தவ ஊழிய உலகில் சபை சாரா ஊழியங்களென எதுவுமே கிடையாது. வெளியே பரிசுத்தவான்களோ, உள்ளே பாவிகளோ இல்லாத குழுதான் சபை என்பதால் தேவ மக்கள் எந்தப் பெயரில் ஊழியம் செய்தாலும் அது முழுக்க முழுக்க சபை ஊழியமே. அவற்றில் சில உள்ளூர் ஊழியங்கள்; மற்றவை பலவூர் ஊழியங்கள். கிறிஸ்துவின் உடலாகிய சபைக்கு உள்ளூரிலும், அதே வேளையில் பரந்த உலகிலும் செயல்பாட்டு வெளிப்பாடு உண்டு. இந்த அறிவுதான் சந்தேகக் கண்ணோட்டங்களை ஒழித்து, பல்வகை ஊழியங்களுக்கிடையில் கனிநிறை உறவுகளை வளர்க்கும்.

கர்த்தருக்கென்று நீங்கள் எடுத்து வைக்கும் பணத்தை மேலே விளக்கியுள்ள இருவகை ஊழியங்களுக்கும் பிரித்துக்கொடுங்கள். அப்பொழுது சந்திக்கப்படாதோரைச் சந்திப்பதிலும் சந்திக்கப்பட்டோரை வளர்ப்பதிலும் உங்களுக்குப் பங்கிருக்கும். மிஷனரி ஊழியத்திற்குக் கொடுப்பது கிரமமாகவும் தியாகமாகவும் இருக்கவேண்டும்.

*அ) கிரமமாய்க் கொடுங்கள்.*

மிஷனரி நிறுவனங்களுக்கு மாதந்தோறும் கட்டாயச் செலவுகள் உண்டு. அவற்றில் சில: மிஷனரிகளுக்குச் சம்பளம், மிஷனரிக் குழந்தைகளுக்குக் கல்விச் செலவு, வீட்டு வாடகை, கட்டிடம் மற்றும் வாகனப் பராமரிப்பு, ஊழியச் செலவுகள், பயணச் செலவுகள்,... ''எனக்குத் தோன்றும்போதெல்லாம் அல்லது முடியும்போதெல்லாம் கொடுப்பேன்'' என்று சொல்லாதீர்கள்.



உங்களை வேலைக்கு அமர்த்துபவர் இப்படிச் சொன்னால் நீங்கள் அந்த வேலையில் சேருவீர்களா? மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை வாக்களியுங்கள். அப்பொழுதுதான் வருடாந்திரத் திட்டமிடு கூடுகைகளில் சரியான தீர்மானங்கள் எடுக்க மிஷனரித் தலைவர்களுக்கு எளிதாயிருக்கும்.

உங்கள் விருப்பத்திற்கும் வசதிக்கும் ஏற்றவாறு தெரிந்தெடுக்க மிஷனரி இயக்கங்களில் பலவிதத் திட்டங்கள் உண்டு. பகுதியாக அல்லது முழுமையாக ஒரு மிஷனரிச் சம்பளத்தை நீங்கள் கொடுத்துவிடலாம். ஒரு பணிக்களத்தைப் பொறுப்பெடுத்து அதற்கு ஆகும் செலவுகளைச் செலுத்தலாம். ஓர் ஆலயம் அல்லது மிஷனரிகளுக்கான வீடு கட்ட மொத்த தொகையளிக்கலாம். இருசக்கர அல்லது நாற்சக்கர வாகனங்கள் வாங்க உதவலாம். அல்லது ஓரிரு இலட்ச ரூபாய்கள் வைப்பு நிதியில் வைக்க மிஷனரி இயக்கங்களுக்குக் கொடுத்து அதிலிருந்து வரும் வட்டியில் ஒரு மிஷனரிக்குச் சம்பளம் கொடுக்கச் சொல்லலாம். தொழிற்கல்லூரிகளில் நமது பிள்ளைகளுக்கு இடம் கிடைக்க எத்தனை இலட்சங்களை அள்ளி வீசுகிறோம்!

*ஆ) தியாகத்துடன் கொடுங்கள்.*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையில் வளருவதே கிறிஸ்தவ வளர்ச்சியாகும். கொடுப்பது ஒரு கிருபையே. "நீங்கள் எல்லாவற்றிலும் பெருகியிருப்பதுபோல இந்தக் கிருபையிலும் பெருகவேண்டும்'' என அப்போஸ்தலன் பவுல் கொரிந்து நகர்க் கிறிஸ்தவரை ஊக்குவித்தான் (2 கொரி 8:7). இவ்வசனத்தின் சூழமைவு கிறிஸ்தவ ஈகையாகும். நம்மைப் பாதிக்கும்வரை நாம் கொடுத்துக்கொண்டேயிருக்கவேண்டும். பத்திலொன்று கொடுக்கும் பழைய ஏற்பாட்டுப் பாரம்பரியம் மிகக் குறைவான அளவே. அதில் துவங்கலாம், தங்கிவிடக்கூடாது.

நியாயமானதொரு அனுபோகத்தைத் துறந்து அதற்காக ஆகக்கூடும் செலவை மிஷனரிப் பணிக்குக் கொடுத்துவிடும்போது உண்டாகும் மகிழ்ச்சிதான் என்னே! கல்வாரித் தியாகத்திற்கு முன் எதுவும் நிற்க முடியுமோ? தியாகக் காணிக்கை கர்த்தருக்கு முன் சுகந்த வாசனையாய் எழும்பிச் செல்லும். இறைமக்கள் இறைப்பணிக்குத் தசமபாகத்திற்குக் கூடுதலாய்க் கொடுக்காவிடில் உலகம் ஒருபோதும் நற்செய்திமயமாகாது. மரியாள் வாசனைத் தைலத்தை இயேசுவின் மீது ஊற்றியபோது அந்த வீடு முழுவதும் வாசனையால் நிரம்பிற்று. இத்தியாகச் செயல் இயேசுவுக்கு உடனே

அகிலவுலக நற்செய்திப் பணியெனும் கற்பனைத் தேராயிற்று (மாற் 14:9). கிறிஸ்துவின் சுவிசேஷம் சரித்திரத்தில் நிகரற்ற தியாகக் கதை. தியாக உணர்வின்றி அதைப் பறைசாற்றுவது சாத்தியமோ?

சென்ற ஆண்டைவிட மிஷனரிப்பணிக்கு இவ்வாண்டு நீங்கள் கூடுதல் கொடுக்காவிடில், மிஷனரிகளுக்குச் சம்பள உயர்வு வேண்டாம் அல்லது அவர்கள் ஊழியத்தை விரிவாக்க வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள் என்பதே பொருள். சிந்திப்பீர்!

### 3. மிஷனரிகளுக்குப் புத்துணர்வூட்டுதல்

மிஷனரிகள் தேவ தூதரல்ல. அவர்கள் அபூர்வப் பிறவிகளுமல்ல. அசாதாரண வேலைக்கு அழைக்கப்பட்ட சாதாரண மக்கள் அவர்கள். கிறிஸ்தவ ஊழியரில் அறிவும் திறமையும் படைத்தவர்கள் கன்னிக் களங்களுக்கு மிஷனரிப்பணி செய்யச் செல்லாது கிறிஸ்தவர்கள் நடுவிலேயே ஊழியம் செய்யத் தங்கிவிடுகின்றனர் என்பது எவரும் அறிந்தது. மிஷனரிப் பணியென்பது போர்க்களத்தின் முன்வரிசையாகும். எனவே மிஷனரிகளுக்குத் தனிக் கவனிப்பும் பராமரிப்பும் தேவை. அவர்களில் பெரும்பாலானோர் எதிர்ப்பு நிறைந்த சுற்றத்திலேயே வாழுகின்றனர். உற்றார் உறவினரை விட்டு முற்றிலும் மாறுபட்ட கலாச்சாரத்தில் வாழ்க்கை நடத்துகின்றனர். தனது உடன் ஊழியன் தவிர்த்து, தனது தாய் மொழியில் மிஷனரி யாரோடுதான் பேசமுடியும்? எவ்வளவு கடினம்! “நான் அன்னியனும் பரதேசியுமாய் இருக்கிறேன்” என்று கீரியாத் அர்பாவில் சொன்ன ஆபிரகாமைப் போலவே மிஷனரிகள் உணருகின்றனர் (ஆதி 23:4).

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி இயேசு அனுப்பிய சீடர்கள் பல்வேறு இன்னல்கள், இறுக்கங்கள் மற்றும் இளைப்புகளுக்கு ஆளாவார்களென்று அவர் நன்கறிந்திருந்தார். எனவேதான் அவர்களுக்குக் கொடுத்த பணிப் புரையின் இறுதியில், “உங்களை ஏற்றுக்கொள்பவர் என்னை ஏற்றுக் கொள்கிறார்... ஒருவருக்கு அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார்” என உறுதியளித்தார் (மத் 10:40,42). மிஷனரிகளைப் புத்துணர்வடையச் செய்ய இதோ சில வழிமுறைகள்—

*அ) மருத்துவ உதவி*

வேலை மிகுதி, சமவிகித உணவின்மை, சுகாதாரக் குறைவு, கடுங் குளிர், எரிக்கும் வெயில், இவை போன்றவை முன்னணி மிஷனரிகள்



பலரது உடல் நலத்தைப் பாதித்துள்ளன. தரமான மருத்துவ வசதியின்மை நிலைமையை இன்னும் மோசமாக்குகிறது. அளவான பணவசதியையே கொண்டுள்ள மிஷனரி இயக்கங்கள் மிஷனரிகளின் பெரிய அறுவை சிகிச்சைகள் மற்றும் சிறப்பான மருத்துவங்களுக்கு முழுமையாகச் செலவழிக்க முடிவதில்லை. இவ்விதத் தேவைகள் மிஷனரிப் பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவரும்போது கவனமாய் வாசித்து உங்கள் குடும்பத்தில் ஒருவருக்குச் செலவழிப்பதுபோல் நினைத்துத் தாராளக் காணிக்கையொன்றை அனுப்பிவையுங்கள். ஊழியரின் நெருக்கடித் தேவைகளைச் சந்திப்பதற்கு இயக்கங்களுக்கு உதவும்படி நிறுவப்பட்ட Missionaries Upholders Trust (MUT) எனும் ஊழியத்திற்காய்த் தேவனைத் துதிக்கிறோம். (தொடர்பு முகவரி: Mr. J. J. ரத்னக்குமார், MUT, 2/9 J-1 பாரதிதாசன் தெரு, கமலாட்சிபுரம், வேலூர் 632 002. தொலைபேசி: 0416-265187).

*ஆ) குழந்தைகளின் செலவுகள்*

குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளைச் சந்திப்பதற்கே எவ்வளவு பணம் செலவாகிறது என்பதைப் பெற்றோர் எவரும் நன்கறிவர். மிஷனரிகளின் சம்பளத்தில் இது இன்னும் கடினம். நல்ல கல்வி என்றால் ஏராளம் செலவழிக்கவேண்டும். மட்டுமல்ல, மிஷனரிக்களங்கள் பலவற்றில் நல்ல பள்ளிகளோ கல்லூரிகளோ கிடையாது. மிஷனரிகளின் பிள்ளைகள் வேறெங்கோ விடுதிகளில் தங்கித்தான் படிக்கவேண்டும். மிஷனரிகளைத் தாங்கும் சபைகள் மற்றும் குழுக்களில் பல மிஷனரிகளின் இப்பெருந் தேவையைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. பிள்ளைகள் நன்கு கவனித்துக் கொள்ளப்படுவார்களானால் மிஷனரிகள் நிம்மதியாய்த் தங்கள் பணியில் கூடுதல் கவனம் செலுத்துவர்.

*இ) துணிமணிகள், சாதனங்கள், முதலியன*

“எதை உடுத்துவது என்று கவலைகொள்ளாதீர்கள்... இரண்டு அங்கிகளை எடுத்துக்கொண்டு போகவேண்டாம்... ஏனெனில் வேலையாளர் தம் கூலிக்கு உரிமை உடையவரே” என்று இயேசு தமது சீடரை உற்சாகப்படுத்தி அனுப்பினார் (மத் 6:25; 10:10; லூக் 10:7). மிஷனரிகளை அனுப்புவோரும் மிஷனரிகளால் அருளடைவோருமே மிஷனரிகளின் துணிமணித் தேவைகளைப் பொறுப்பேற்கவேண்டுமென்பதே இதின் பொருள். மிஷனரிகள் நன்கு உடுத்தவேண்டும். அவர்கள் விண்ணரசரின் செய்தியாளராச்சுதே! ஆடம்பரமாயல்ல, ஆனால் அழகாய் அமைப்பாய் மிஷனரிகள் உடுத்தவேண்டுமென்பது என் கருத்து. ஆசீர்வாத இளைஞர்

இயக்கத்தில் நாங்கள் மிஷனரிகளுக்குக் குளிர்ப் போர்வைகள், குளிரா டைகள் போன்றவை வழங்குகிறோம். அவர்கள் வாங்கும் சம்பளத்தில் இவையெல்லாம் வாங்குவது சுலபமன்று. மேலும், மிஷனரிகளுக்கு நவீன சமையலறைச் சாதனங்கள் போன்றவற்றையும் வாங்கிக் கொடுக்குமாறு ஊழியத் தாங்கிகளை ஊக்குவிக்கிறோம்.

*ஈ) விடுமுறையும் ஓய்வும்*

விடுமுறை காலங்களில் மிஷனரிகள் சொந்த மாநிலம் வரும்போது ஓரிரு வாரங்களோ மாதங்களோ அவர்களை வீட்டில் வரவேற்று விருந் தோம்பும் உறவினர்கள் பலருக்கு இல்லை. இவ்விதத் தேவையுள்ள மிஷனரிகளை வீட்டில் வைத்து விருந்தோம்ப முன்வந்து, மிஷனரி இயக்கங்களுக்கு எழுதுங்கள். பணிக்களங்களின் நிலைமைகளை நேரடி யாய்க் கேட்டறியவும், எதிர்ப்பான சூழல்களில் பணியாற்றும் மிஷனரி களின் விசுவாச வாழ்வின் அனுபவங்களைக் கேட்டுச் சவால் பெறவும் உங்கள் இல்லத்தார் அனைவருக்கும் இது சிறந்ததொரு வாய்ப்பாக அமையும். தன் உள்ளத்திற்குப் "புத்துணர்வூட்டிய" ஸ்தேவானோ, பொர்த்துணர்த்து, அக்காயிக்கு ஆகியோரைக் குறித்துப் பவுல் மகிழ்ந்தான் (1 கொரி 16:17,18). அவன் விலங்கிடப்பட்டிருக்கும்போது பன்முறை அவனது "உளம் குளிரப்பண்ணிய" ஒனேசிப்போரின் வீட்டாரைப் பாராட் டினான் (2 தீமோ 1:16-18). விருந்தினர் அறையொன்றைத் தனக்கு ஆயத்தம்பண்ணும்படிப் பிலேமோனுக்கு அவன் எழுதினான் (பிலே 22). களைத்த மிஷனரிகள் "தனித்து வந்து சற்று இளைப்பாறும்படி" நாங்கள் ஒருசில மிஷனரிகள் இளைப்பாறும் இல்லங்கள் கட்டியுள்ளோம் (மாற் 6:31).

மிஷனரிகளை இன்னும் எப்படியெல்லாம் புத்துணர்வடையச் செய்ய லாமென்று கற்பனை செய்துபாருங்கள். மிஷனரிகளைக் குறித்துக் காயு என்பவருக்கு அப்போஸ்தலன் யோவான் எழுதியதைக் கவனியுங்கள்: "நீர் அவர்களைக் கடவுளுக்கு உகந்த முறையில் வழியனுப்பிவைத்தால் நல்லது. ஏனெனில் அவர்கள் புறவினத்தாரிடமிருந்து ஒன்றும் வாங்காமல் கிறிஸ்துவின் பெயருக்காகப் புறப்பட்டுப்போனார்கள்" (3 யோ 6,7).

## 4. களப்பணியை ஊக்குவித்தல்

மிஷனரிகளது பிரச்னைகளில் முக்கியமானதொன்று தனிமையே. கன்னிக் களங்களிலும் தொலைவிடக் கிராமங்களிலும் உழைப்போருக்கு ஆன்மீக சகவாசம் மிகக் குறைவு. மிஷனரிக்குத் தேவையான ஆன்மீக ஐக்கியம் புதிய கள விசுவாசிகளிடமிருந்து கிடைத்துவிடாது. ஊழியத்தைத்



தாங்கும் சபையினர் மற்றும் குழுவினர் அவ்வப்போது பணிக்களங் களுக்குச் சென்றுவருவது மிஷனரிக்குப் பேரூக்கம் தரும்.

ஊழியத் தாங்கிகள் களங்களுக்குச் சென்று வருவது புதிய சபை யினரையும் உற்சாகப்படுத்தும். தாங்கள் தனியாக இல்லை; பெரிய கூட்டமொன்றில் சேர்ந்திருக்கிறார்களென்று அவர்கள் உணருவர். கிறிஸ் தவ வட்டாரங்களைப் போலல்லாது, சிலைவணக்கம் அல்லது இயற்கை வணக்கப் பின்னணிகளிலிருந்து மனந்திரும்பி வருவோருக்குத் தங்கள் இனத்தார் மற்றும் அயலகத்தாரிடமிருந்து வரும் பிரச்னைகள் கொஞ்ச நஞ்சமல்ல. தங்கள் விசுவாசத்திற்காய் இப்புது விசுவாசிகள் கிரயம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் நாம் அவர்கள் குடில்களுக்கும் வயல்களுக்கும் சென்று, சுகநலன் விசாரித்து, அவர்களது கலாச்சாரத்தை ஆவலாய்க் கண்டறிந்து, அவர்களோடு உணவருந்தி, ஆராதனையில் கலந்துகொள்ளும் போது அவர்கள் எவ்வளவாய் மலர்ந்துவிடுகின்றனர்! இவ்வித விஜயங்கள் தங்கள் ஊழியத்தை வெகுவாய்த் தூக்கிவிடுகின்றனவென்று மிஷனரிகள் சாட்சி பகருகின்றனர்.

தமது சீடர்களை ஊழியத்திற்கு அனுப்பிவிட்டு இயேசு சும்மா உட்கார்ந்துவிடவில்லை. இதோ சரித்திராசிரியன் லூக்கா எழுதியது: "ஆண்டவர் வேறு எழுபதுபேரை நியமித்து, அவர்களைத் தாம் போக விருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார்" (லூக் 10:1). நமது பிள்ளைகள் நாம் அவர்களது பள்ளி விழாக்களில் கலந்துகொள்ளும்போது பரவசப்படுவதில்லையா? மிஷனரிப்பணியில் நாம் முழு மனதுடன் ஈடுபாடு கொண்டுள்ளோம் என்பதற்குப் பணிக்களச் சந்திப்புகள் நடைமுறை நிரூபணம்.

நாம் களங்களுக்குச் செல்வதால் மிஷனரிகளும் புதுச் சபையினரும் உற்சாகமடையும் அதே வேளையில் நாமும் பெரும் சவாலடைகிறோம். நேரில் பார்ப்பதற்கு நிகரில்லை. நமது ஜெபங்கள் பின்னர் கூடுதல் அர்த்த முள்ளவைகளாகின்றன. அரசும் பல தனி நிறுவனங்களும் தங்கள் பணியாளருக்கு விடுமுறைப் பயணச் சலுகைகள் (LTC) அளிக்கின்றன. தூரவிடப் பணிக்களங்களுக்குச் சென்றுவர நீங்கள் இதை ஏன் பயன் படுத்தக் கூடாது? வெளிநாடுகளில் பணிபுரிந்து விடுமுறையில் தாயகம் வரும் இந்திய நண்பரே, மிஷனரிப் பணிக்களம் ஒன்றையாவது பார்த்துவிட்டு வரவேண்டுமென்று இந்தியா வருமுன்னரே திட்டமிடுங்கள். துர்ப்பாக்கிய மாக, இவ்வித நண்பர் பலர் இன்னும் ஓர் ஆசீர்வாத ஜெபம் நாடி சுயாதீன சுவிசேஷ ஊழியரைத் தரிசிப்பதிலேயே கரிசனை கொண்டுள்ளனர்! எது

முக்கியமென்று தீவிரமாய்ச் சிந்தியுங்கள். மேய்ப்பனற்ற திரள்களை நோக்கியே நல் மேய்ப்பரின் இருதயம் சென்றுகொண்டிருக்கிறது (மத் 9:36-38). அவரது ஆடு தேடும் படலத்தில் சேருவீர்!

## 5. ஆத்துமாதாயப் பணியில் ஈடுபடுதல்

“போ *அல்லது* அனுப்பு” என்பது மேற்கத்திய நாட்டு வாலிபரைக் கிழக்கு நாடுகளின் மிஷனரிப் பணியில் ஈடுபடச் செய்யும்படி கனடா நாட்டு மிஷனரிப்பணி மேதை பண்டிதர் ஆஸ்வால்டு J. ஸ்மித் (1890-1986) என்பவர் எழுப்பிய முழக்கமாகும். இந்தியாவைப் பொறுத்தவரை, அதுவும் இப்படிப்பட்ட காலகட்டத்தில், இம்முழக்கம் நம்மை முடக்கிப்போடும். போதல் *அல்லது* அனுப்புதல் என்று நாம் தெரிந்துகொள்ள இடமில்லை. தன்னால் முடிந்த இடங்களுக்கெல்லாம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் போகவேண்டும். *அத்துடன்,* தான் போகமுடியாத இடங்களுக்குப் பிறரை அனுப்ப அவன் உதவவேண்டும். “போ *அத்துடன்* அனுப்பு” என்பதே நமது முரசொலியாயிருக்கவேண்டும். இதுவே திருவசனத்திற்கும் நெருங்கியது.

இயேசு தமது சீடரை அறுவடைக் களத்திற்கு அனுப்பிவைத்தார். தாமும் புறப்பட்டுச் சென்றார். பவுலும் அப்படியே. சுற்றுப்புறச் சுவிசேஷப்பணியின் விரிவாக்கமே தொலைவிட மிஷனரிப்பணி. இதை உயிர்த்தெழுந்த நமதாண்டவர் பரமேறுமுன் விரிந்துகொண்டே செல்லும் நான்கு வட்டங்கள் வரைந்து அழகாய் விளக்கினார் (அப் 1:8). எருசலேம், யூதேயா, சமாரியா, அகிலவுலகு! ஒன்றன்பின் ஒன்றல்ல; ஒன்றோடு ஒன்று.

மிஷனரிகளைத் தாங்குவோர் தனியாள் ஆத்துமாதாயகராகவும் இருக்கவேண்டும். ஆத்துமாதாயகரைவிட ஊழியத் தாங்கிகளின் எண்ணிக்கையே சபையில் கூடினால் அது பரிதாபம். தூண்கள் அவசியம்தான்; ஆனால் அரங்கம் முழுவதும் தூண்களாயிருந்தால் எப்படி? ஊழியத்தைத் தாங்குவோரைக் கண்டுபிடிப்பதிலேயே மிஷனரித் தலைவர்களுக்குப் பல சமயங்களில் கரிசனை கூடிவிடுவதால், சபையினரைச் சுற்றுப்புறச் சுவிசேஷப் பணியில் ஈடுபடுத்தும் ஆர்வம் இல்லாது போகிறது. முழுநேர மிஷனரிப் பணிக்குத் தரமான நபர்கள் சபைகளிலிருந்து நமக்குக் கிடையாததற்கு இது ஒரு காரணம். முன்னணிப் பணிக்குப் படைவீரரை அனுப்பும் பயிற்சிக் கூடமாய் உள்ளூர்ச் சபை திகழவேண்டும். மாற்றுக் கலாச்சார மிஷனரிப் பணிக்குச் சென்ற முதற்குழு பவுலும் பர்னபாவுமே. அவர்கள் ஓர் உள்ளூர்ச் சபையிலிருந்தே புறப்பட்டுச் சென்றனர் (அப் 13:1-4).



மிஷனரி ஊழியத் தாங்கிகள் ஆத்துமாதாயகராய்ச் செயல்படாவிடில் நாளாவட்டத்தில் அவர்களது தரிசனமும் தாகமும் குன்றிவிடும். மீன் பிடிப்பதிலும் பயிர் அறுப்பதிலும் கிடைக்கும் மகிழ்ச்சியே அன்னாரைத் துடிப்பாயிருக்கச் செய்யும். மற்றபடி மிஷனரிப் பணிக்காய்ப் பணம் திரட்டுவதும் இன்னொரு வியாபாரமாகிவிடும். ஆத்துமாதாயகரே ஆத்துமாதாயகரின் போராட்டங்களை நன்குணர முடியும். அயலகமோ அயலூரோ எங்கு ஆத்துமாதாயம் செய்தாலும் அது சாத்தானின் பிடியிலிருந்து கைதிகளை விடுவிக்கும் போராட்டமே. “ஒவ்வொரு கிறிஸ்தவனையும் ஆத்துமாதாயப் பணிக்குள் உந்தித் தள்ளும் எழுப்புதலே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை முடிவாய்த் திரும்பக் கொண்டுவரும்” என்று மிஷனரி சுவிசேஷகர் T. L. ஆஸ்போர்ன் தீர்க்கமாய் எழுதினார்!

**தொகுத்துக்கூறின்,** மிஷனரிகளை அனுப்புவது பணிக்காகவும் பணியாளருக்காகவும் ஜெபிப்பதையும், தாராளமாய்க் கொடுப்பதையும், மிஷனரிகளுக்குப் புத்துணர்வூட்டுவதையும், நேரில் சென்று மிஷனரிகளையும் புது விசுவாசிகளையும் உற்சாகப்படுத்துவதையும், சுற்றுப்புறச் சுவிசேஷப் பணியில் நேரடியாய் ஈடுபடுவதையும் உள்ளடக்கும். இவைகளை உத்தமமாய்ச் செய்தால், போவோரைப் போலவே அனுப்புவோரும் பரிசு பெறுவர்! (1 சாமு 25:13; 30:24; 3 யோ 8).

## 10

# மிஷனரிப் பணிக்காய் ஜெபிப்போம்!

**நாமே** கடைசித் தலைமுறையாய் இருக்கலாம். நாம் நுழைந்துள்ளது இந்த யுகத்தின் இறுதிப் பத்தாண்டாய் இருக்கலாம். அப்படியானால் நாம்தான் சபைச் சரித்திரத்தின் இறுதி அத்தியாயத்தை எழுதி முடிப்போம். நடபடிகள் புத்தகத்தின் 29ஆம் அத்தியாயம் நம்மைப் பற்றித்தான் இருக்கும்!

*"கி.பி.2000க்குள் அகிலவுலக நற்செய்திப் பணிமயம்."* இதுவே கிறிஸ்தவ உலகெங்கும் இன்றைய முழக்கம். மிஷனரிப்பணி மீது என்றுமில்லா ஆர்வம். இதை ஒரு மிஷனரி யுகம் எனலாம். தனது மிஷனரிக் கடமையை நிறைவேற்ற சபையானது விழித்தெழுகிறது. மிஷனரி இயக்கங்கள் தங்கள் வேகத்தைக் கூட்டுகின்றன. புதிய திட்டங்கள் பல உருவாகின்றன. என்றுமில்லாத அளவு முசுக்கட்டைச் செடிகளின்மீது செல்லும் இரைச்சல் நமது காதுகளில் விழுகின்றது.

ஆனால் இவ்வளவு விறுவிறுப்பாய் மிஷனரிப் பணியில் ஈடுபடுகையில் மிக முக்கியமான வேலையாகிய **"ஜெபம்"** என்பதை மறக்க அல்லது குறைக்க வாய்ப்புண்டு. "ஆகையால் புறப்பட்டுப்போங்கள்" என்று கட்டளையிடுமுன் "ஆகையால் வேண்டிக்கொள்ளுங்கள்" என்று இயேசு கற்பித்தார் (மத் 9:38; 28:19).

ஜெபத்தில்தான் மிஷனரி இயக்கங்கள் பிறக்கின்றன என எவரும் அறிவர். ஆனால் அவைகள் ஜெபத்தாலேயே இயக்கப்படாவிட்டால் ஆவியில் துவங்கியது மாம்சத்தில் முடிவடையும்.



### மிஷனரிப்பணிக்காக ஜெபிப்பதென்றால் என்ன?

அது மிஷனரி நாடகத்தில் நடிக்கும் ஐந்து குழுவினருக்காக ஜெபிப்பதாகும். ரோமர் 10:14,15இல் பவுல் அவர்களை வரிசைப்படுத்துகிறான்: *அனுப்புவோர், போவோர், கேட்போர், விசுவாசிப்போர், தொழுவோர்.*

### 1. அனுப்புவோர்

சொல்லப்போனால் அறுவடைக்குச் சொந்தமான ஆண்டவர்தான் தமது அறுவடைக்கு ஆட்களை அனுப்புபவர். ஆனால் முதல் மிஷனரிகளைக் குறித்து அவர்கள் பரிசுத்த ஆவியானவராலும் சபையினராலும் அனுப்பப்பட்டனர் என வாசிக்கிறோம் (அப் 13:3,4). பவுல், பர்னபா ஆகியோர் மீது தலைவர்கள் வெறும் சடங்குக்காகக் கைகளை வைக்கவில்லை. கைகளை வைக்குமுன் அவர்கள் "உபவாசித்து ஜெபித்தார்கள்." இது அவர்களது கரிசனையைக் காட்டுகிறதல்லவா? மிஷனரிகளென்றால் முன்னணிப் போர்வீரர் என அவர்கள் உணர்ந்தனர். பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, ஆவியானவராலேயே ஆகும் என்று அறிக்கையிடுவது தான் உபவாச ஜெபம்.

அனுப்பும் சபைகளும் குழுக்களும் மிஷனரிகளை எப்பொழுதும் இருதயங்களில் சுமந்து செல்ல ஜெபியுங்கள். சொந்த, உள்ளூர்ப் பிரச்னைகளில் சிக்கும் வேளைகளில் மிஷனரிகளின் பிரச்னைகளை மறந்துவிடக் கூடாது. ஜெபக்குழு அங்கத்தினர்களை விசையுடன் ஜெபிக்க உந்தும்படி குழுத் தலைவர்களின் தரிசனமும் தாகமும் அதிகரித்துக்கொண்டேயிருக்க ஜெபியுங்கள்.

ஜெபிப்பதிலும், கொடுப்பதிலும் துவக்கத்தில் இருந்த உற்சாகம் நாளடைவில் குறையலாம். வெகுசிலரே இறுதிவரை அதே உற்சாகத்தோடிருப்பர். கொடுக்கல் வாங்கல் காரியத்தில் ஒரு சமயம் பிலிப்பியரைத் தவிர வேறு எந்தச் சபையினரும் பவுலுக்கு உதவவில்லை (பிலி 4:15). அரசும் தொழிற்சாலைகளும் ஆண்டுதோறும் தங்கள் ஊழியருக்கு ஊதியத்தைக் கூட்டிக்கொண்டேயிருக்கின்றன. இந்த எளிய தத்துவத்தை மிஷனரிகளை அனுப்புவோர் புரிந்துகொண்டு தாங்கள் கொடுப்பதை ஆண்டுதோறும் கணிசமாகக் கூட்ட ஜெபியுங்கள்.

மிஷனரி இயக்கங்களின் தலைவர்களும் அனுப்புவோர் பட்டியலில் சேர்வர். ஆவியானவரின் நடத்துதல் அவர்களுக்குத் தெளிவாய்த் தெரிய

ஜெபியுங்கள். பணிக்களத்திலுள்ள ஒவ்வொரு ஊழியன்மீதும் அவர்களுக்கு உண்மையான கரிசனை இருக்கவேண்டும். மிஷனரிகளையும் களச் செய்திகளையும் வெறுமனே முன்னேற்றப்பணிச் சரக்குகளாய் அவர்கள் பயன்படுத்தக்கூடாது. தலைவர்கள் எப்பொழுதும் தங்களை மிஷனரி களுக்குப் பணியாளர்கள் என்று உணர்ந்திருக்க ஜெபியுங்கள். ஊழிய ருக்கு இடம் நியமித்தல், இடம் மாற்றுதல் ஆகியவற்றில் ஆவியானவர் தலைவர்களைத் தெளிவாய் நடத்தவேண்டும். இங்கு கவலையீனம் ஊழியனின் எதிர்காலத்தையே நாசமாக்கும்.

மிஷனரிப் பணியைத் தாங்கும் தனிக் கிறிஸ்தவர் எப்பொழுதும் இறையன்பினால் நெருக்கி ஏவப்படவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் மன்றாட்டு வீரராயிருக்க ஜெபியுங்கள். வீட்டில் வடிக்கும் கண்ணீர் களத்தில் அருள்மாரியாய்க் கொட்டும்.

## 2. போவோர்

அப்போஸ்தலன் பவுலுக்கு இருந்த ஆன்மீக வலுவும் தைரியமும் அசாதாரணமானவை. ஆனால் அவன் கெஞ்சுவதைக் கேளுங்கள்: "நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்க வாக்கு எனக்கு கொடுக்கப்பட எனக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்" (எபே 6:20).

மிஷனரிகளைத் தேவதூதர் அல்லது அபார மனிதர் என நினைத்து விடக்கூடாது. அவர்களும் நம்மைப்போல பாடுகளும் பிரச்னைகளும் உள்ளவர்கள்தான். அவர்கள் சென்றுவிட்டனர், நாம் தங்கிவிட்டோம், இதுதான் வித்தியாசம். நண்பர்கள், ஐக்கியம், ஆகாரம் அத்தனையும் நிரம்ப இருந்தும் நாம் எவ்வளவாய்ப் பிரச்னைகளில் தவிக்கிறோம்! பணிக்களத்திலோ மிஷனரி தனியாய் நிற்கிறான். அவனது **ஆன்மீகப்** பிரச்னைகள் ஏராளம். தன்னைப் போன்றே போராட்டத்தில் தவிப்பவன்தான் அவனது உடன் ஊழியன். அவர்களுக்கு நமது ஜெபம் எவ்வளவாய்த் தேவை! சோதனைகளில் அவர்கள் விழுந்துவிடாதிருக்க விழித்திருந்து ஜெபிப்போம்.

மிஷனரிகளின் **உடலுக்கடுத்த** பிரச்னைகளுக்காக ஜெபியுங்கள். அதிக வெயில், அதிகக் குளிர், சுகாதார வசதிக்குறைவு, மருத்துவ வசதியின்மை போன்ற காரணங்களால் உடல்நலக்கேடு சாதாரணம். பயணங்களிலும், காட்டு மிருகங்கள், விஷப்பூச்சிகள், விபத்துகளிலிருந்தும் பாதுகாக்கப்பட



ஜெபியுங்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் இளம் மிஷனரி ஒருவர் மணமாகி ஒரு மாதத்திற்குள் இராஜஸ்தானில் ரயில் நசுக்கி மரணமடைந்தது நினைவிலிருக்கிறதா ?

அடுத்து **மனநிலைப்** பிரச்னைகள். பிள்ளைகள், இனத்தார், நண்பர் ஆகியோரை விட்டுப் பிரிந்திருத்தல், பணிக்களத்திலுள்ள மக்களின் எதிர்ப்பு, ஊழியருக்கிடையே உறவுப் பிரச்னை, ஊழியத்தில் கனியின்மை போன்றவை இதற்குக் காரணங்களாகும். தேவன் உற்சாகமான ஆவியினால் மிஷனரிகளைத் தாங்கி சொல்லமுடியா மகிழ்ச்சியினாலும் சமாதானத் தினாலும் அவர்களை நிரப்பும்படி ஜெபியுங்கள். "கன்னானாகிய அலெக் சந்தர்" போன்றவர்களால் மிஷனரிகள் மிரண்டுவிடாதிருக்க ஜெபியுங்கள் (2 தீமோ 4:14). நமது ஜெபமே எல்லாச் சூழலிலும் அவர்களைத் தைரியமாயிருக்கச் செய்யும் (அப் 4:24-31).

மிஷனரிகள் மிக எளிய வாழ்க்கைத்தரத்தை மேற்கொண்டாலும் அவர்களுக்குப் **பொருளாதாரப்** பிரச்னைகள் உண்டு. நிறுவனம் தரும் மாதாந்திர உதவித்தொகையில் சமாளிப்பது அவ்வளவு எளிதல்ல. எதிர்பாராத பல்வேறு செலவுகளுக்கெல்லாம் ஒருவழியுமில்லை. பணம்தான் காரியம் என்றில்லையென்றாலும் காரியங்களுக்குப் பணம் தேவைதானே! பண நெருக்கடியினால் ஊழியங்களை விட்டுப் போவோர் ஒரு சிலரல்ல.

மிஷனரியின் **ஊழியப்** பிரச்னைகளுக்காகவும் ஜெபிக்கவேண்டும். அவை ஒன்றிரண்டல்ல. திடீரென்று குழுவிலிருந்து தேமா விலகுகிறான் (2 தீமோ 4:10). ஒரு சிறிய காரியத்தைக் குறித்த வாக்குவாதத்தால் பர்னபா பிரிந்து செல்கிறான் (அப் 15:36-40). துரோப்பீமு வியாதிப்படுவதால் குழுவினரின் எண்ணிக்கை குறைகிறது (2 தீமோ 4:20). ஊழியரின் இதுபோன்ற பிரச்னைகளைக் கற்பனை செய்து ஜெபிக்கவேண்டும்.

ஆவியானவரின் சத்தத்திற்கு மிஷனரியின் செவிகள் திறந்திருக்க ஜெபியுங்கள். வனாந்தரத்திலுள்ள ஒருவனோடு அவன் பேச வேண்டுமென ஆவியானவர் விரும்புகையில், நகரில் நடந்துகொண்டிருக்கும் வெற்றி கரமான கூட்டத்தில் மிஷனரி சிக்கிக்கொள்ளக்கூடாது (அப் 8). தேவப்பணியை தேவப்பாணியில் தேவனது வேளையில் செய்யும் தேவனது வேலையாளே மிஷனரி என்றொரு விளக்கம் உண்டு. சங்கீதம் 32:8ஐ அவனுக்காக உரிமை பாராட்டுங்கள். பலப்படவும் பரிசுத்தப்படவும் அபிஷேகம் அவன்மீது அனுதினம் இறங்க ஜெபியுங்கள். இயேசுவை அறிவித்துக்கொண்டே செல்லும் மிஷனரி அவரை அதிகமதிகமாய் அறிந்து கொண்டும் இருக்கவேண்டும். சோர்பு, தளர்ச்சி போன்றவற்றினின்று நமது ஜெபம் மிஷனரியைக் காக்கவேண்டும்.

## 3. கேட்போர்

கிராமங்களிலும் தொலைவிடங்களிலும் நற்செய்தியைக் கேட்க ஒரு கூட்டத்தைக் கூட்டுவது அவ்வளவு எளிதல்ல. ஆனால் மக்கள் கேட்காமல் விசுவாசிக்க முடியாதே. விசுவாசம் திருவசனத்தைக் கேட்பதினால்தானே வரும் ? (ரோ 10:17). மிஷனரி எனும் வெளியூரான் ஒருவன் பேசுவதைக் கேட்க மக்களுக்கு இருக்கும் தயக்கத்தைக் கடவுள் அகற்றிப்போட ஜெபியுங்கள். ஆவியானவர் மக்கள் நடுவில் ஓர் ஆவலையும் உற்சாகத் தையும் உருவாக்கவேண்டும்.

நற்செய்தியின் ஒளி அவர்கள்மீது பிரகாசிக்காதபடி இவ்வுலகின் அதிபதி மக்களின் கண்களைக் குருடாக்கியிருக்கிறான். கர்த்தர் அவர்கள் கண்களைத் திறக்க ஜெபியுங்கள். ஏமாற்றங்கள் மற்றும் தொல்லைகள் காரணத்தினால் தாழ்த்தப்பட்ட மக்கள் சிலவேளை வெளியிலிருந்து வரும் எவரையும் கேட்க விரும்புவதில்லை. சில கிராமங்களில் காரணமேயில்லாது மக்கள் வேண்டாவுணர்வு கொண்டு நற்செய்திக்கான எவ்வித அழைப் பையும் சட்டைசெய்வதேயில்லை. இவ்விதச் சூழல்களில் ஆண்டவரே வெற்றி தரவேண்டும்.

மனிதனெவனும் பூட்டமுடியாத திறந்த வாசல்களைக் கிறிஸ்து வாக்க ளித்துள்ளார். ஆனால் வாக்குத்தத்தம் எதுவும் உரிமைபாராட்டிக் கேட்கப் படவேண்டும். பொதுவாக திறந்த வாசல்களும் எதிர்ப்புகளும் சேர்ந்தே வரும் (1 கொரி 16:9).

மட்டுமல்ல, கிராமியச் சூழலில் மக்கள் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே பல சந்தடிகள் உருவாகும். திடீரென்று வயலுக்குள் ஆடு மாடு நுழைந்துவிடும். ஒரு மூலையில் இருவர் ஏதோவொன்றிற்கு வாய்ச்சண்டை துவங்கிவிடுவர். அல்லது சிறு குழந்தையொன்று அழ, தாய் அதைப் பார்த்து அலற அல்லது அதை அடிக்க, அத்தனை பேரும் அப்பக்கம் திரும்ப... அப்பப்பா இப்படி எத்தனை! கிராமத்தார் கவனத்தை ஒரு பத்து நிமிடம் இழுத்துப் பிடிப்பதே சிலசமயம் போதும் போதும் என்றாகிவிடும். பிசாசின் முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட ஜெபியுங்கள்.

உலகைக் கிறிஸ்தவமயமாக்க அல்ல, நற்செய்திமயமாக்கவே கிறிஸ்து நமக்குக் கட்டளையிட்டுள்ளார். ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நற்செய்தி ஒருமுறையாவது தெளிவாய் விளக்கப்படவேண்டும். பல மைல் நடந்து ஒரு கிராமத்தை அடையும் மிஷனரி அங்கு ஓர் உற்சவம் அல்லது அடக்கம் என்பதால் வசனம் கேட்க மக்கள் ஆயத்தமில்லை எனக்கண்டு



சோர்படைகிறான். சிலசமயம் அறுவடை அல்லது வேட்டை என்று மக்கள் அதிலேயே தீவிரமாயிருப்பர். ஒருமுறை அன்பாய் வரவேற்று நிற்கும் மக்கள் அடுத்தமுறை அலட்சியமாய்க் காணப்படுவர். ஒன்றுமே புரியாது. எந்தச் சூழலையும் மிஷனரியானவன் சாதகமாக்கிக் கொள்ள ஜெபியுங்கள்.

கிராமப்புற மக்களுக்கு நற்செய்தி அவ்வளவு எளிதாக உடனே விளங்குவதில்லை. பலமணம், மதுவருந்துதல் போன்றவை சாதாரணப் பழக்கங்களாயிருக்குமிடங்களில் பாவத்தைப் பற்றிப் பிரசங்கிப்பது சுலப மல்ல. பல தெய்வங்களை வணங்குவோரும், இயற்கை வணக்கத்தாரும் ஒரே கடவுள் எனும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளப் பெரிதும் தயங்குவர். சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ள கல்வியறிவு கட்டாயமில்லை எனினும், பட்டணத்தில் வளர்ந்து கல்லூரியில் பயின்ற மிஷனரியின் மொழி நடையும் பேச்சுப்பாணியும் மக்களுக்குப் புரிவது கடினம்தான். கேட்போரின் கலாச் சாரத்தையும் சிந்தனை ஆற்றலையும் தெளிவாகப் புரிந்து அதற்கேற்றவாறு தங்கள் பேச்சை உடனடியாக மாற்றிக்கொள்ளும் தாலந்து ஒரு சிலருக்கே உண்டு. ஜெபியுங்கள்.

இயேசுவின் ஊழியத்திலும் அப்போஸ்தலரின் ஊழியத்திலும் அற்பு தங்கள் திரள்களைக் கவர்ந்தன. இன்றும் அப்படியே. ஆண்டவர் அற்புதங் களை நிகழ்த்தி நோயாளிகளைக் குணமாக்குவதால் மிஷனரியைக் கேட்க பெருவாரியாய் மக்கள் கூடும்படி ஜெபியுங்கள். பிசாசுகள், பில்லிசூனியம் ஆகியவற்றிற்கு எதிராக தேவ வல்லமை அசாதாரணமாய் வெளிப்பட வேண்டும்.

## 4. விசுவாசிப்போர்

எல்லா நிலங்களிலும் விளைச்சல் ஒன்று போலிராது. நற்செய்தி விதைப்பின் பலனும் இடத்துக்கிடம் மாறும். நல்ல பலன் கிடைத்துவிட்டது என்பதால் ஊழியக்காரனும் அவனது முறையும் பிரமாதம் என்று சொல்லி விடமுடியாது. "விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற **தேவனாலேயாம்**" (ரோ 9:16). கொர்நேலியுவின் வீட்டில் நடந்ததை விவரிக்கையில், **தேவன்** புறவினத்தாருக்கு மனந்திரும்புதலைக் கட்டளையிட்டார் என்றான் பேதுரு (அப் 11:18). தங்கள் முதல் மிஷனரிப் பயணமுடிவில், **தேவன்** புறவினத்தாருக்கு விசுவாசக் கதவைத் திறந்தார் எனப் பவுலும் பர்னபாவும் சபைக்கு அறிவித்தனர் (அப் 14:27). **கர்த்தர்** அவள் இருதயத்தைத் திறந்தார் என்று முதல் ஐரோப்பிய விசுவாசியாகிய லீதியாளைக் குறித்துச் சொல்லப்பட்டது (அப் 16:14). பெருவாரியாய்

தேவன் மக்களை இரட்சிக்க ஜெபிக்கவேண்டும். “எல்லா மனிதரும்” இரட்சிக்கப்பட அவர் விரும்புகிறார்; ஆனால் நாம் அதற்காகப் பிராத் திக்கவேண்டும் (1 தீமோ 2:1-4).

தங்கள் இருதயங்களில் உணர்த்தப்பட்டாலும், ஆதிவாசிப் பகுதி களிலுள்ள கடும் சமுதாயக் கட்டுகளினால், மக்கள் வெளியரங்கமாய் முன்வரத் தயங்குவர். கிறிஸ்துவுக்காய்த் தீர்மானிக்க அவர்கள் பெருங் கிரயம் செலுத்த வேண்டியதிருக்கும். குடும்பமும், சுற்றமும், அவர்களைத் தூக்கியெறிந்துவிடும். உயிருக்கே ஆபத்து வரலாம். முன்வருவோருக்கு சில இயக்கங்கள் உடனே திருமுழுக்கு கொடுக்காமல் கணிசமானதொரு எண்ணிக்கை சேரக் காத்திருப்பர். இதற்கு நடைமுறைக் காரணங்கள் உண்டு. மிஷனரிகள் பொதுவாகக் கிராமத் தலைவன் அல்லது அந்த ஆதிவாசி இனத் தலைவனைக் குறிவைப்பர். அவன் மனந்திரும்பிவிட்டால் காரியங்கள் சற்று சுலபம் (மத் 10:11). ஆவியானவர் சூறாவளியாய்ச் செயல்பட ஜெபியுங்கள்.

மதச்சார்பற்ற நமது அரசு இந்தியர் எவரும் தங்களுக்கு விருப்பமான மதத்தைத் தழுவவும், பறைசாற்றவும் சட்டத்தின்படி விடுதலை கொடுத் துள்ளது. ஆனால் ஒரு சில மாநிலங்களில் மதமாற்றத் தடுப்புச் சட்டம் உண்டு. அங்கெல்லாம் மாவட்டத் தலைவர் முன்னிலையில் கையெழுத் திடாமல் எவரும் திருமுழுக்கெடுத்து கிறிஸ்தவராக முடியாது. பயத்திலும், பின்தங்கிய நிலையிலும் வாழும் கிராமப்புற மக்கள் இவ்விதம் அதிகாரிகள் முன்னிலைக்குச் செல்ல எவ்வளவாய்த் தயங்குவர்! மட்டுமல்ல, கிறிஸ் தவத்திற்கு எதிரான பல நபர்களும் இயக்கங்களும் உண்டு. எங்கும் எலிமாக்கள் உண்டு (அப் 13:8). “பொல்லாத மனிதர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படி வேண்டிக்கொள்ளுங்கள்” என்று பவுல் தெசலோனிக் கேயருக்கு எழுதினான் (2 தெச 3:1,2).

மக்கள் திரள் திரளாய் சபையில் சேர ஜெபியுங்கள். நடபடிகள் புத்த கத்தில் இதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம். பெந்தெகொஸ்தேயன்று மூவாயிரம் பேர் மனந்திரும்பினர் (2:41). சீக்கிரம் அது ஐயாயிரமானது (4:4). சமாரியாவில் மக்கள் “திரளாய்க்” கர்த்தரிடம் திரும்பினர் (8:6,12). யோப்பா எங்கும் “அநேகர்” கர்த்தரை விசுவாசித்தார்கள் (9:42). அந்தி யோகியாவிலும் அப்படியே (11:19-21). பிசிதியாவிலுள்ள அந்தியோகி யாவில் “நகர் முழுவதுமே” சுவிசேஷத்தில் ஆர்வங்காட்டிற்று (13:14,44). தெசலோனிக்கேயாவில் கிரேக்கர் “அநேகர்” கர்த்தரைச் சேர்ந்தனர் (17:1,4). இப்படிப் பல. தினமும் மக்கள் சபையில் சேருவதை மிஷனரிகள்



தங்கள் பணிக்களத்தில் பார்க்கவேண்டும் (2:47). ஆதி அப்போஸ்தல ருக்குக் கிடைத்தது ஆயிரங்களானால், நமக்கு இலட்சங்கள் கிடைக்க வேண்டுமே! மக்கள் பெருக்கத்தைப் பாருங்கள். அதற்கேற்ற விகிதம் வேண்டாமோ?

## 5. தொழுவோர்

ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் கிறிஸ்துவைத் தொழுதுகொள்ளும் ஒரு கூட்டத்தை எழுப்புவதே மிஷனரிப்பணியின் இறுதிக்கட்டம். இதுவே பிதாவின் தணியா தாகம் (யோ 4:23). ஊருக்கொரு சபை எழும்பவேண்டும். சுவிசேஷ ஊழியக் கிருபையோடு, சபை கட்டும் “வரமும்” மிஷனரிகளுக்கு இருக்க ஜெபியுங்கள்.

தங்களது புது விசுவாசிகள் விசுவாசத்தில் வேரூன்றி நிலைத்திருக்க ஜெபியுங்கள். தங்களது உன்னத அழைப்பையும் கிறிஸ்துவுக்குள்ளான சுதந்திரத்தையும் அறிந்துகொள்ளும் ஞானத்தையும் அறிவையும் கடவுள் அவர்களுக்குத் தரவேண்டும் (எபே 1:15-21). மறுபடி பிறந்துள்ள ஆன்மீகக் குழந்தைகளை வளர்ப்பது ஒரு சிலாக்கியமும் அதே வேளையில் பெரும் பொறுப்புமாகும். மிஷனரிகள் இப்பொழுது மேய்ப்பர்களாய்ச் செயல்பட வேண்டும். ஒவ்வொரு ஆட்டையும் தகுந்தவாறு மேய்க்க அவர்களுக்குப் போதுமான தெளிவும் அறிவும் தேவை.

புது விசுவாசிகளின் பொருளாதாரத் தேவைகளும் கவனிக்கப்பட வேண்டும். நிவாரணப் பணிகள், மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை மேற்கொள்ளப்படவேண்டும். நெடுந்தொலைவிலும் காடுகளிலுமுள்ள சில பகுதிகளில் கைதேர்ந்த வேலையாட்கள் கிடைப்பது அரிது. எனவே இவ்வித வேலைகளிலும் மிஷனரி தனிக்கவனம் செலுத்த வேண்டியதிருக்கும். இவ்விதம் பளு கூடுகிறது. மிஷனரி இயக்கங்களோடு கை கோர்த்து உழைக்கும் World Vision, EFICOR போன்ற நிவாரண நிறுவனங்களுக்காக ஜெபியுங்கள். இத்திட்டங்களுக்குப் போதுமான பணம் கிடைக்க ஜெபியுங்கள்.

இறையரசிற்குள் நுழைவதே உபத்திரவங்கள் வாயிலாகத்தான் (அப் 14:22). இறப்புகள் அல்லது இழப்புகள் காரணமாகப் புது விசுவாசிகளின் விசுவாசம் ஆடிவிடாதிருக்க ஜெபியுங்கள். உபத்திரவம் அவர்களை உட்கார வைத்துவிடாது உந்தித்தள்ளவேண்டும். அனுப்பும் சபையின் விசுவாசிகள் பணிக்கள சபைகளில் விசுவாசிகளின் பிரச்னைகளைத் தங்கள் சொந்த

பிரச்னைகள் போல் பாவித்து ஆவன செய்யவேண்டும். அவர்கள் இப்பொழுது நமது சொந்த சகோதரரும் சகோதரிகளுமாயிருக்கிறார்களே! நமது ஜெபமே அவர்களைப் பின்மாற்றமடையாது பாதுகாக்கவேண்டும். எல்லாச் சபைகளையும் குறித்துப் பவுல் அனுதினமும் பாரங்கொண்டிருந்தான் (2 கொரி 11:28).

அந்தந்த சபைகளில் அங்குள்ள மக்களிடையே இருந்தே தலைவர்கள் எழும்ப ஜெபியுங்கள் (தீத்து 1:5). இல்லாவிடில் மிஷனரிகள் அடுத்து புதிய பகுதிகளுக்குச் செல்லமுடியாமல், ஒரே இடத்தில் தங்கிவிட நேரிடும். புதிய சபையானது கனி கொடுக்கவேண்டும். ஆவியின் வரங்கள் செயல்படவேண்டும். விசுவாசிகள் தனியாள் ஆத்துமாதாயகராய் மாறவேண்டும். பணிக்களத்தில் நிறுவப்பட்ட புதிய சபையே சீக்கிரம் அனுப்பும் சபையாகவும் மாறிவிடவேண்டும். அந்த விசுவாசிகள் கொடுக்கப் பழகவேண்டும். நாளடைவில் இவர்களும் பெயர்க் கிறிஸ்தவர்களாய் மாறிவிடாதபடி எப்பொழுதும் எரிந்து பிரகாசிக்க ஜெபியுங்கள்.

### முழங்காலிலேயே முன்னணிக்கு...

எல்லாரும் தொலைவிடங்களிலுள்ள கன்னிக் களங்களுக்கு மிஷனரிப் பணியாளராய்ச் சென்றுவிட முடியாது. ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் முழங்காலில் அங்கே செல்லலாமே!



# *11*

# *மிஷனரிப் பணிக்குக் கொடுப்போம்!*

**மிஷனரிப்** பணிக்குக் கொடுப்பது கிறிஸ்தவர் ஒவ்வொருவர் மீதும் விழுந்த கடமை. “சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்” (1 கொரி 9:14). போகாதோர் போவோருக்குத் தோள் கொடுக்கும் தோழராகவேண்டும் (1 கொரி 9:7). உயிரையே கொடுத்துவிடத் தயாராயிருப்போரைத் தாங்க உள்ளதைக் கொடுத்துவிடத் தயங்கலாமோ? கயிற்றைப் பிடித்தால்தானே குதிப்பார்கள்?

### மிஷனரி ஏற்பாடு

புதிய ஏற்பாட்டின் ஏறத்தாழ அத்தனை புத்தகங்களும் மிஷனரிகளாலேயே எழுதப்பட்டவை. அதை வாசித்த எவரும் மிஷனரிப்பணியில் ஈடுபாடு கொள்ளாதிருப்பது எப்படித்தான் சாத்தியமோ? புதிய ஏற்பாட்டை மிஷனரி ஏற்பாடு என்றால் மிகையாகாது.

*மத்தேயு* எத்தியோப்பியாவிற்கு மிஷனரியாகச் சென்று இரத்தசாட்சியாய் மரித்தான். எகிப்துக்கு நற்செய்திப்பணிக்காய் அனுப்பப்பட்ட *மாற்கு* அலெக்சாந்திரியாவில் சபையை நிறுவினான். ரோமப் பேரரசன் நீரோ அவனைக் கொலை செய்தான். *லூக்கா* பவுலின் குழுவில் மருத்துவ மிஷனரியாயிருந்தான். *யோவான்* ஆசியாவுக்கு வந்து எபேசுவிலும் சுற்றியும்

மிஷனரியாகப் பணியாற்றினான். ஒன்றுமேயில்லாத பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்ட அவன் அங்கிருந்து ஏழு சபைகளுக்கு எழுதினான். *பவுலைப்* பற்றித் தெரியும்— உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அவன் ஒரு மிஷனரி! தனது நிருபங்களை மிஷனரிப் பயணங்கள்போது அல்லது நற்செய்திக்காய்ச் சிறையிலிருந்தபோது எழுதினான். *எபிரெயர் நிருபத்தின் தெரியாத ஆக்கியோனும்* ஒரு மிஷனரிதான். சுவிசேஷத்திற்காய்த் தான் கட்டப்பட்டிருந்ததைக் குறிப்பிடுகிறான் (எபி 10:34). இயேசுவின் சகோதரனாகிய *யாக்கோபு* எழுபது வயதில் இரத்தசாட்சியாகத் துடிதுடித்து மரித்தான். மிஷனரிப் பணியில் உருவாகிய பிரச்னை ஒன்றைத் தீர்க்க அப்போஸ்தலர் 15இல் அவன் உதவியது அவனது மிஷனரி உள்ளத்தைக் காட்டுகிறது. நிறுத்தாது நற்செய்தியைப் பரப்ப முயன்ற *பேதுரு* ரோமப் பேரரசனால் தலைகீழாய்ச் சிலுவையிலறையப்பட்டான்.

## மிஷனரி என்றால் யார்?

“அப்போஸ்தலன்” என அர்த்தங்கொள்ளும் “apostolos” எனும் கிரேக்கச் சொல்லின் லத்தீன் மொழியாக்கத்திலிருந்து “மிஷனரி” எனும் சொல் வருகிறது. அப்போஸ்தலன் என்றால் அனுப்பப்பட்டவன் என்று பொருள். “சீடர்கள்” அனுப்பப்பட்டபோதுதான் “அப்போஸ்தலர்” என அழைக்கப்படலாயினர் (மத் 10:1,2,5). அதுபோலவே அந்தியோகியாவின் உள்ளூர்ச் சபையில் “தீர்க்கதரிசிகளாகவும் போதகர்களாகவும்” இருந்த பவுலும் பர்னபாவும் உள்ளூர் ஊழியத்திலிருந்து இடம்விட்டு இடம் சென்று செய்யப்படும் பணிக்கு அனுப்பப்பட்டபோது “அப்போஸ்தலர்” எனும் பெயர் பெற்றனர் (அப் 13:1,4; 14:14). இந்தக் கோணத்தில் நோக்கினால் அப்போஸ்தலரை மிஷனரிகளென்றும் மிஷனரிகளை அப்போஸ்தலரென்றும் அழைக்கலாம். அவர்கள் அனுப்பப்பட்டுப் புறப்பட்டுச் செல்வோர்.

பொதுவான சபையில் ஐவகை ஊழியருண்டு. “அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர்” (எபே 4:13). அப்போஸ்தலர் முதலாவது வருவதைக் கவனியுங்கள்! “தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரை... ஏற்படுத்தினார்” (1 கொரி 12:28). ஆம், முதலாவது சென்று புதிய களத்தில் ஊழியத்தைத் துவங்குபவன் மிஷனரிதான். அவன்தான் அடித்தளமிடுகிறவன் (1 கொரி 3:10). மற்றவகை ஊழியரெல்லாம் அடுத்தே வருவர். இருளில் உட்கார்ந்திருப்போரைத் தேடி மிஷனரியானவன் தனது வீடுவாசல் வசதிகளை விட்டுப் புறப்படுகிறான். “கிறிஸ்துவின் பெயர் சொல்லப்பட்டிராத” இடங்களே அவனது இலக்கு (ரோ 15:20). அழுதுகொண்டும் கண்ணீரோடு விதைத்துக்கொண்டும் அவன் போகிறான் (சங் 126:5,6). ஆனால்—



நேற்றும் இன்றும் அப்போஸ்தலர் அல்லது மிஷனரிகள் தகுதியான கனம் பெறுவதில்லை. உலகமும், ஏன் சிலவேளை சபையும்கூட, அவர்களது மதிப்பையும் முக்கியத்துவத்தையும் உணருவதில்லை. இதோ மிஷனரி பவுலின் புலம்பல்: “எங்களுக்குத் தோன்றுகிறபடி, தேவன் அப்போஸ்தலராகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனிதருக்கும் வேடிக்கையானோம். ... இந்நேரம்வரை பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம்” (1 கொரி 4:9,11).

## முதலிடம் கொடுப்போம்!

மிஷனரிகளைக் குறித்த “நமது” மனப்பான்மை என்ன? தேவன் அவர்களை முதலாவது வைத்திருப்பாரெனில், அவர்களைத் தாங்குவதே நமது சபையின் பட்ஜெட்டில் முதலிடம் பெறவேண்டும். மலை போன்ற கடினமான பகுதிகளுக்குச் சமாதானத்தின் சுவிசேஷத்தைச் சுமந்துசெல்லும் அழகிய பாதங்களுக்காகவே கடவுளுக்காக நாம் மாதந்தோறும் பிரித்து வைக்கும் பணத்தின் முதற்பங்கு செல்லவேண்டும் (ரோ 10:15).

துர்ப்பாக்கியமாக, கிறிஸ்துவின் பெரும் கட்டளையே நமது பெரும் கவலையீனமாகிவிட்டது. நமது தன்னலத்தை என்னென்று சொல்வது! முதல் நூற்றாண்டில் மிஷனரி தோமாவும், சீர்த்திருத்தத்தை அடுத்து ஆயிரமாயிரம் மிஷனரிகளும் கடல்கடந்து சுவிசேஷத்தை இந்தியாவுக்குக் கொண்டு வராதிருந்தால் நீங்களும் நானும் இன்னும் அஞ்ஞானத்தில் தானே இருப்போம். அப்படியானால் இத்தலைமுறையில் இன்னும் சந்திக்கப்படாதோரைச் சந்திக்கச் செல்லும் மிஷனரிகளைத் தாங்குவது “நமது” பொறுப்பன்றோ? இலவசமாய்ப் பெற்றோம், இலவசமாய்க் கொடுப்போம்.

## செலவு அதிகம்!

மிஷனரிப்பணி செலவு மிகுந்தது. ஏராளம் பயணமுண்டு, வாகனங்கள் மற்றும் சாதனங்களின் விலையுயர்ந்துவிட்டது. வேதாகம மொழியாக்கம், வேதப்புத்தக அச்சடிப்பு, எழுத்தறிவு புகட்டல், மருத்துவ நிவாரணப் பணிகள், இவற்றிற்கெல்லாம் செலவு சாதாரணமா? அதுமட்டுமல்ல, தாங்கள் பணிபுரியும் இடங்களின் கல்வி வசதிக் குறைவினால் மிஷனரிகள் தங்கள் பிள்ளைகளை வேறிடங்களிலுள்ள விடுதிப் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும். இதனால் செலவு கூடுகிறது. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். எனவே நமது காணிக்கைகளில் பெரும் பகுதி மிஷனரிப் பணிக்கே செல்லவேண்டும் என்பது நியாயம்.

மிஷனரிப்பணியென்றால் விதைப்பும் அறுப்புமாகும். நாம் அதிகம் கொடுத்தால் இயக்கங்கள் கூடுதல் மிஷனரிகளை அனுப்பமுடியும். மிஷனரிகளுக்குப் போதுமான பணம் அனுப்பப்பட்டால், அவர்கள் கூடுதல் இடங்களுக்குச் செல்லமுடியும், கூடுதல் மக்களைச் சந்திக்கமுடியும், கூடுதல் நிகழ்ச்சிகளை நடத்தமுடியும். மோட்டார் சைக்கிள்கள் கொடுத்தால் சைக்கிள்களில் சென்று சந்திப்பதைவிடக் கூடுதல் கிராமங்களுக்குச் செல்லமுடியும். இப்படிப்பல. அதிகம் விதைத்தால் அதிகம் விளைச்சல்! "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் கடவுள் பிரியமாயிருக்கிறார்" (2 கொரி 9:6,7).

கனடாவிலுள்ள பெரிய சபையொன்றின் மேய்ப்பர் Dr. பால் ஸ்மித் என்பவர் கொடுப்பதில் நால்வகையைக் குறிப்பிடுகிறார்: மிஷனரிப்பணிக்கு ஒன்றுமே கொடாவிட்டால், களங்களிலிருந்து எல்லா மிஷனரிகளையும் ஊழியங்களை மூடிவிட்டு வரும்படி அழைக்கிறோம் என்றுதான் பொருள். முன்னைவிடக் குறைவாய்க் கொடுத்தால், மிஷனரிகளைக் குறைத்து விடுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். முன்னால் கொடுத்த அளவே கொடுத்தால், பிடித்த இடங்களைக் காப்போம், இனிப் பிடிப்பதைத் தவிர்ப் போம் என்று சொல்லுகிறோம். எப்பொழுதும் கொடுத்ததைவிடக் கூடுதல் கொடுத்தால் மட்டுமே, இறையரசின் விரிவாக்கத்திற்கு அவரோடு ஒத்து ழைக்கிறோம் எனப் பொருள்படுமாம். நாம் எதைத் தெரிந்தெடுப்போம்?

**வாரியிறைப்போம் வாரீர்!**

இயேசு ஒரு மிஷனரியாயிருந்தார். விண்ணரசின் நற்செய்தியைப் பட்டிதொட்டியெல்லாம் பரப்பிச் சென்றார். அவரது குழுவில் அவரோடு பன்னிரு மிஷனரிகள் இருந்தனர். மகதலேனாள் மரியாளும், யோவன்னாள் கூசாவும், சூசன்னாளும், மற்ற அநேகப் பெண்களும் இந்த மிஷனரிக் குழுவை வெகுவாய்த் தாங்கினார்கள். தங்கள் "சொத்துக்களால்"—வெறும் வருமானத்தினாலல்ல—இவர்கள் இயேசுவுக்கு ஊழியம் செய்தனர் என லூக்கா குறிப்பிடுகிறான் (லூக் 8:1-3).

தங்கள் "சொத்துக்களைக் கொள்ளையிட" விசுவாசிகள் சந்தோஷமாய் எபிரெயர் நிருப மிஷனரி ஆக்கியோனை அனுமதித்தார்களாம்! (எபி 10:34). மிஷனரி இயக்கங்களிடம் பஞ்சப்பாட்டு பாடக்கூடாது. நமது வருவாயிலி ருந்து கிரமமாய்க் கொடுப்பது தவிர்த்து, மிஷனரி ஊழியங்களைத் தங்கம், வெள்ளி மற்றும் நிலங்கள் கொடுத்துக் கனப்படுத்தவேண்டும். "உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்!" (மத் 6:21).



தனது தந்தை இறந்ததும் பாகப்பிரிவினையின்போது C. T. ஸ்டட்டுக்கு £ 29,000 (ரூ.13,00,000/–) கிடைத்தது. இன்று ஒரு நூற்றாண்டிற்குப்பின் அதன் மதிப்பு எவ்வளவென்று பாருங்கள்! அதில் £ 5000ஐ D. L. மூடிக்குக் கொடுத்தார். இன்றும் மிஷனரிகளைப் பயிற்சிவித்து உலகெங்கும் அனுப் பிக்கொண்டிருக்கும் மூடி வேதாகமக் கல்லூரிக்கு அத்தொகை பயன் படுத்தப்பட்டது. அடுத்த £ 5000 அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்க ஜார்ஜ் முல்லரிடம் கொடுக்கப்பட்டது. அடுத்த £ 5000 எளியோரிடையே பணியாற்றிக்கொண்டிருந்த ஹாலந்து என்பவரிடம் அளிக்கப்பட்டது. இன்னொரு £ 5000 இந்தியாவில் இரட்சணிய சேனையினரின் ஊழியத் திற்காய்க் கொடுக்கப்பட்டது. அடுத்து நற்செய்திப்பணியிலும் சமூக சேவையிலும் ஈடுபட்டிருந்த ஐவருக்கு ஆளுக்கு £ 1000 வீதம் ஸ்டட் கொடுத்தார். மீதம் £ 3400ஐ தான் மணக்கப்போகும் பெண்ணுக்காக வைத்திருந்தார். அவளுக்கு அதைக் கொடுத்தபோதோ அதையும் தேவ னுக்கே கொடுத்துவிடும்படி அவள் சொல்லிவிட்டாள். எனவே இருவருமாகச் சேர்ந்து தங்கள் ஆஸ்தியின் கடைசிப் பகுதியை பக்தன் வில்லியம் பூத் கையில் கொடுத்தனர். இறையரசுக்காய் இப்படியல்லவா வாரி வழங்க வேண்டும்!

உங்களுக்காக அருமையாய் எதை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? அதை இயேசுமீது ஊற்றிவிடுங்கள். பாரெங்கும் சாரோனின் ரோஜாவின் வாசனை வீசட்டும் (மத் 26:6-13; மாற் 14:3-9). அதை மிஷனரிகளுக்காய்ச் செலவிடுங்கள். அவர்கள் "எல்லா இடங்களிலும் அவரை அறிகிற அறிவின் வாசனையை" வெளிப்படுத்தட்டும்! (2 கொரி 2:14,15).

**ஊண்-உடை தந்தாதரிப்போம்!**

செல்வந்தரைவிட எளியோர்தான் எங்கும் சீக்கிரமாக, ஆர்வமாக நற்செய்தியை ஏற்றுக்கொள்கின்றனர் (மத் 11:5இ; யாக் 2:5). காடுகள், மலைகள், கிராமங்களில் விடப்பட்டோர் மற்றும் ஆதிவாசிகள் நடுவில் புதிதாக நிறுவப்படும் சபைகள் பெரும்பாலும் பொருளாதார வசதி குறைந்தவையே. அவைகளுக்கு உதவுவதும் நமது பொறுப்பாகும். இதை மிஷனரிப் பணியிலிருந்து பிரிக்க இயலாது.

ஆதிச்சபையில் கொடுத்தலைக் குறித்து முதலாவது அப்போஸ்தலர் 2:45; 4:34-37 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். ஏழை விசுவாசி களோடு உடைமைகளை மனமுவந்து பகிர்ந்ததைக் குறித்த தகவல் அது. புதிய ஏற்பாட்டில் கொடுத்தலைப் பற்றிய மிக விரிவான பகுதி 2 கொரிந்தியர் 8, 9 அத்தியாயங்களில் உள்ளது. தரித்திரத்திலுள்ள பரிசுத்தவான்களுக்கு

உதவுதலைப் பற்றியது அது. தனது நிருபங்களில் ஒரே ஓரிடத்தில் மட்டும் பவுல் கொடுத்தலுக்கென்று ஒரு வழிமுறையைச் சொல்லுகிறான். அதுவும் பரிசுத்தவான்களுக்கான தர்மசகாயக் காணிக்கையாகும் (1 கொரி 16:1,2). விசுவாச வீட்டாருக்கு உதவ எத்தருணத்தையும் இழந்துவிடாதிருக்க நம்மை அவன் உற்சாகப்படுத்துகிறான் (கலா 6:10). பொருளில்லாப் பரிசுத்தவான் களைப் பராமரிப்பது நமது கடனும் கடமையுமாகும் (ரோ 15:27).

பணிக்களங்களிலுள்ள புதிய விசுவாசிகளின் ஏழ்மை குறித்து மிஷனரி இயக்கங்கள் தங்கள் பத்திரிகைகளில் வெளியிடுவது வெறுமனே கண்ணை மூடி ஜெபிப்பதற்காக அல்ல. பரிதாபமும் ஜெபமும் செயலுக்கு மாற்றாகாது. உணவில்லா, உடையில்லா சகோதர சகோதரிகளுக்கு ஊணுடை தந்தா தரிக்கத் தவறுவோமானால் அது செத்த விசுவாசம், சொத்தை அன்பு! (யாக் 2:14-17; 1 யோ 3:17,18; ரோ 12:9அ, 13).

**உள்ளூர்ச் சபை**

மிஷனரிப் பணிகளுக்குக் கொடுக்கத் தங்கள் சபையாரை உற்சாகப் படுத்தினால் சபைக்கு வரவேண்டிய காணிக்கை பாதிக்கப்படுமோவென சில மேய்ப்பரும் போதகரும் அஞ்சுகின்றனர். அடித்தளமற்ற அச்சமது. மேய்ப்பரே, போதகரே, மிஷனரிப் பணிக்குக் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் சபைத் தேவைகளுக்குக் கொடுக்கப்படும். நீங்கள் எந்த அளவினால் மிஷனரிப்பணிக்கு அளக்கிறீர்களோ, அதே அளவினால் உங்கள் சபைக்கும் அளக்கப்படும். "மற்ற ஊர்களுக்குச்" சென்று "வேறே ஆடுகளையும்" மந்தைக்குள் கொண்டுவரப் புறப்படுவோரை உற்சாகமாய்த் தாங்கும் சபைகளை ஆன்மீக ரீதியிலும் பொருளாதாரத் துறையிலும் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிக்கிறார் என்பது சபைச் சரித்திரத்தில் அன்றும் இன்றும் சான்று. முதல் நூற்றாண்டு மக்கெதொனியா சபைகளே நமக்கு மாதிரியாகட்டும் (2 கொரி 8:1-4). கொடிய தரித்திரத்திலும் அவர்கள் மிகுந்த உதாரத்துவமாய்த் தங்கள் திராணிக்கு மிஞ்சிக் கொடுத்தார்கள். இவ்விதம் அள்ளிக்கொடுப்போரே "எல்லாவற்றிலும்... எப்பொழுதும்" சம்பூரணராய் இருப்பர் (2 கொரி 9:7,8).

நமது சபைகளில் தியோத்திரேப்பு போன்றோர் இருப்பது எத்தனை துக்கம். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் முதன்மைதான். அவர்கள் மிஷனரிகளுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, மிஷனரிப்பணியைத் தாங்க மனதாயிருக்கிறவர்களையும் தடை செய்வார் கள். சிலுவைக்குப் பகைஞரான இவர்களைப் புறம்பே தள்ளுங்கள்.



தேமேத்திரியு போன்றோரைப் பின்பற்றுங்கள்! (3 யோ 9-12). நேரடியாகவோ மறைமுகமாகவோ மிஷனரிப்பணியை எதிர்ப்போர் முள்ளில் உதைக் கிறீர்கள், ஜாக்கிரதை!

**தனக்குத்தானே கனி!**

"இஸ்ரவேல் பலனற்ற திராட்சைச் செடி, அது தனக்குத்தானே கனி கொடுக்கிறது" என்று தீர்க்கன் ஓசியா புலம்பினான் (ஓசி 10:1). இந் நூற்றாண்டுக் கிறிஸ்தவராகிய நாம் இஸ்ரவேலரையும் மிஞ்சிய தன்னலச் செம்மல்கள்! மிஷனரிப் பணி ஆராய்ச்சியாளர் டேவிட் பாரட் தரும் தகவல்: "கிறிஸ்தவ உலகு தனது காணிக்கையில் 99 சதவீதத்தைத் தனக்கென்றே செலவழித்துவிடுகிறது. 95 சதவீதம் ஊழியங்கள் கிறிஸ்தவருக்கே பயன் படுகின்றன. 90 சதவீதம் நற்செய்திக்கூட்டங்கள் கிறிஸ்தவரல்லாதோரை யல்ல, கிறிஸ்தவரையே குறிவைக்கின்றன." இப்படியும் ஒரு நிலையா?

கிறிஸ்தவ சமுதாயமானது தனக்கான செலவுகளைக் குறைத்து மிஷனரிப்பணிக்குக் கொடுப்பதைப் பெருக்கவேண்டும். ஏற்கனவே 100 ஆலயங்கள் உள்ள நகரொன்றில் ரூ. 10,00,000/– செலவில் இன்னொரு ஆலயம் கட்டுவதற்குப் பதிலாக ஆலயமே இல்லாத 100 கிராமங்களில் ரூ. 10,000/– செலவில் ஒவ்வொரு ஆலயம் கட்டலாமே! நமது ஆலயத் தரைக்கு விரிப்பும் இருக்கைகளுக்கு மெத்தையும் வாங்குவதற்குப் பதிலாக கிராமத்திலுள்ள ஆலயம் ஒன்றிற்கு தரையும் கூரையும் போடலாமே! எது தேவனுக்கு அதிகப் பிரியமாயிருக்குமென்று நாமே சிந்தித்துப் பார்ப்போம்!

சுயாதீன சுவிசேஷகர்கள் இங்கு கூடுதல் கவனமாயிருக்கவேண்டும். ஆண்டவர் அவர்களது ஊழியங்களை ஆசீர்வதிக்கையில் பணம் குவியத் துவங்கும். துவக்கத்திலிருந்தே அவர்கள் தங்கள் அடிப்படைத் தேவை களுக்கு மிஞ்சிக் கிடைக்கும் காணிக்கைகளை மிஷனரிப் பணிகளுக்கு அனுப்பிவிடப் பழகவேண்டும். இல்லையேல் கடவுளின் பரிபூரண சித்தத் திற்குள் அமையாத திட்டங்களைக் "கண்டுபிடிக்க" அவர்களுக்குச் சோதனையுண்டாகும். ஒருமுறை வளைகுடா சபையொன்றிலிருந்து ரூ. 10,000/– காணிக்கையுடன் கீழ்க்கண்ட கடிதம் எங்களுக்கு வந்தது. "இந்தியாவிலிருந்து ஒரு சுவிசேஷகர் எங்கள் சபைக்கு ஒருவார ஊழியம் நடத்த வந்திருந்தார். முடிவில் அவருக்கு நாங்கள் கணிசமான தொகை யொன்றைக் கொடுத்தபோது, தனது பயணம் மற்றும் செலவுகளெல்லாம் சந்திக்கப்பட்டுவிட்டதால் இப்பெரும் தொகையை இந்தியாவிலுள்ள மிஷனரி ஊழியங்களுக்கு அனுப்பிவிடுங்கள் என்றார். அவர் சிபாரிசு செய்த

இயக்கங்களில் நீங்களும் ஒன்று. கர்த்தர் நாமத்தில் இக்காணிக்கையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.'' இப்படியல்லவா இருக்க வேண்டும்!

கட்டிடங்கள் ஜாக்கிரதை! ஊழிய வேலைகளுக்கு வசதியான கட்டிடங்கள் தேவைதான். ஆனால் தேவனோடு முன்செல்ல முடியாதபடி கட்டிடங்கள் கட்டுகளாகிவிடலாம். பரவிச் சென்று பரப்பவேண்டுமென்பதே எப்பொழுதும் தேவனது சித்தம். பாபேல் போன்ற கோபுரங்களில் பணங்களை முடக்கிவிட வேண்டாம் (ஆதி 9:1; 11:1-9).

### இன்டர்நேஷனல் ஓவர்ஸ்கைஸ் பாங்க்

''எல்லா மனிதரும்'' சத்தியத்தை அறியக் கடவுளுக்கு இருக்கும் தணியாப் பிரியத்தை மிஷனரி ஊழியங்கள் நிறைவேற்றுவதால் மிஷனரிக் காணிக்கையைப் போல் அவருக்கு வாசனையானது எதுவுமில்லை (1 தீமோ 2:4).

மிஷனரிப்பணியை உத்தமமாய்த் தாங்குவோர் தேவனது கவுரவப் பட்டியலில் இடம் பெறுவர். மிஷனரிக் காணிக்கையில் மிஞ்சிய பிலிப்பிய சபையின் பெயர் பைபிளில் பொறிக்கப்பட்டுவிட்டது. ''பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதொனியாவிலிருந்து புறப்பட்ட போது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மட்டும் எனக்கு உடன் பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை. நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொரு தரம் அனுப்பினீர்கள்'' என மிஷனரி பவுல் அவர்களுக்குப் பாராட்டுக்கடிதம் எழுதினான் (பிலி 4:15,16). மிஷனரிப்பணிகளுக்காய் நாம் கொடுப்பது உடனே பரலோக வங்கியில் வரவு வைக்கப்படுகிறது (வச 17,18).

ஆனால் நாம் கொடுப்பது தன்னல நோக்கில்லாதிருக்கவேண்டும். நம்மீது, நமது வேலை, வியாபாரம், குடும்பம் ஆகியவைமீது ஆசீர்வாதங்களை ஜெபித்துக் கொட்டுவோருக்கே கொடுக்க விரும்புவது இயல்பு. ஆனால் இவ்விதம் நமது நலனுக்காகவே கொடுப்பது இழுக்கு. ''தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்'' (கலா 6:8).

ஆசீர்வாதங்களைப் பெறவேண்டுமென்ற ஒரே நோக்கோடு ஊழியங்களுக்குக் கொடுப்பது தவறு. கொடுத்தல் என்பது ஒரு தொழுகையா



யிருக்கவேண்டும். அதின் கண்கள் நமது தேவை மீதல்ல, தேவன் மீதிருக்கவேண்டும் (1 நாளா 29:3-20). பழைய உடன்படிக்கையின்கீழ் கொடுத்தோருக்குப் பிரதானமாக வாக்களிக்கப்பட்டது பூவுலகப் பொருளாதார ஆசீர்வாதங்களாகும். புதிய உடன்படிக்கையில் உள்ள நமக்கோ முக்கியமாகப் ''பரலோகில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம்'' மகிமையின் ஐசுவரியமாய் வாக்குப்பண்ணப்பட்டுள்ளது (மல் 3:10,11; பிலி 4:18,19; எபி 10:34). அடிப்படையான இந்த வேறுபாட்டை அறியாதிருப்பதே இன்றையப் பல தவறான உபதேசங்களின் மூலக் காரணமாகும்.

### இன்றே துவங்குங்கள்!

நண்பரே, இதுவரை மிஷனரிப்பணிக்கு நீங்கள் ஒழுங்காகக் கொடுத்து வராவிடில் பெரும் வாய்ப்பை இழந்து வந்திருக்கிறீர்கள். இன்றே பரலோகில் முதலிடத் துவங்குங்கள். ஓரிரு மிஷனரி இயக்கங்களைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு மாதந்தோறும் காணிக்கை அனுப்புங்கள். தியாகமாய்க் கொடுக்குமளவு வளருங்கள் (2 சாமு 24:24). நம்மைத் தனவந்தராக்கக் கிறிஸ்து தரித்திரரானார். உலகை ஆசீர்வதிக்க நாமும் அவரைப் பின்பற்றுவோம்!

## 12

# வா, உன்னை அனுப்புவேன்!

**மோசே** ஒரு போர் வீரன்; தமது மக்களை எகிப்திலிருந்து வெளியே நடத்திச்செல்ல கடவுள் அவனை அழைத்தார்!

தாவீது ஒரு மேய்ப்பன்; தமது மக்களை ஆண்டு நடத்த கடவுள் அவனை அழைத்தார்!

ஆமோசும் ஒரு மேய்ப்பன்தான்; தீர்க்கதரிசியாகும்படி கடவுள் அவனை அழைத்தார்!

இயேசு ஒரு தச்சன்; தமது முப்பதாம் வயதில் முழுநேரப் பணிக்கு அவர் அழைக்கப்பட்டார்!

பேதுரு ஒரு மீனவன்; வலைகளை விட்டுத் தம்மைப் பின்பற்றும்படி இயேசு அவனை அழைத்தார்!

மத்தேயு வரி வசூலிப்பவன்; தனது அலுவலகத்தைவிட்டுத் தம்மை முழு நேரமாய்ச் சேவிக்கும்படி இயேசு அவனை அழைத்தார்!

பவுல் கூடாரத் தொழிலாளி; அவனது நேரம் முழுவதும் தேவைப்படும் அகிலவுலகப் பணிக்குக் கடவுள் அவனை அழைத்தார்!

லூக்கா ஒரு வைத்தியன்; அவன் பவுலின் மிஷனரிப் பயணங்களில் இணைந்துகொண்டான்!



உங்கள் தொழில் எதுவாயிருந்தாலும் கடவுள் உங்களை அழைக்கலாம்!

பழைய ஏற்பாட்டிலும் புதியதிலும் இறைப்பணியாளர் தேவை குறையவில்லை!

"யாரை அனுப்புவேன்? யார் நமது காரியமாய்ப் போவான்?" (ஏசா 6:8).

"அறுப்பு மிகுதி; வேலையாட்களோ கொஞ்சம்!" (மத் 9:37).

இறைப்பணியில் எப்போதும் வேலை காலி உண்டு.

மருத்துவர், பொறியாளர், வழக்கறிஞர், ஆசிரியர் இன்னும் இதுபோன்ற வேலைகளுக்கு எப்போதும் கூட்டமும் போட்டியும் உண்டு. ஆனால் கிறிஸ்துவுக்கு ஊழியராக வருவோர் வெகுசிலர். இந்தச் சவாலை ஏற்பீர்களா?

கடவுளுக்கு இருந்தது ஒரே மகன்; அவரையும் ஒரு மிஷனரி இரத்தசாட்சியாக இவ்வுலகிற்குள் அனுப்பிவிட்டார்!

பிரிய பெற்றோரே, உங்கள் பிள்ளைகளில் ஒருவரைக்கூட ஊழியத்திற்கு அனுப்பக்கூடாதா? எங்கள் பெற்றோருக்கு நாங்கள் இரு மகன்கள். இருவரும் பொறியியல் பட்டம் பெற்றோம். என்னை அவர்கள் ஊழியத்திற்குக் கொடுத்துவிட்டார்கள்.

மன்னாதி மன்னரையும் கர்த்தாதி கர்த்தரையும் சேவிப்பதற்கு இணையேதுமில்லை! மண்ணுலகில் மிகச் சவாலானதும் விண்ணுலகில் மிகுதியான பலன் பெறுவதும் இதுவே! (மத் 10:29,30).

தேவ ஊழியரின் பட்டங்கள் மிகவுயர்ந்தவை! கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள்! தேவனின் உடன் வேலையாட்கள்! மனிதரைப் பிடிப்போர்!

இருப்பது ஒரே உயிர்! இறப்பது ஒரே முறை! இருப்போம், இறப்போம், இயேசுவுக்காகவே!

ஊழியமே மிக மகிழ்ச்சியானது! அது அறுவடையின் மகிழ்ச்சி! துலைந்துபோன தன் மகனைக் கண்டுபிடித்த தந்தையின் மகிழ்ச்சி!

ஊழியத்தில்தான் வேலை திருப்தி அதிகம்! முழுச் சுதந்திரம், குழுப் பணி, அன்பின் சகவாசம்!

தேவனற்ற அதிகாரியின் அரட்டல் இல்லை; ஆனால் தன்னலமற்ற நல்ல தலைவர்களின் ஊக்குவிப்பும், உதவியும் உண்டு!

உங்கள் ஆர்வம் அல்லது தாலந்து எது? கர்த்தரின் தோட்டத்தில் அதற்கேற்றப் பணிகள் உண்டு.

இலக்கியத்தில் ஆர்வமா? நீங்கள் வேத மொழிபெயர்ப்பாளராக மாறலாம். பரிசுத்த வேதம் இன்னும் மொழி பெயர்க்கப்படா 200 மொழிகள் இந்தியாவில் மட்டும் உண்டு.

இசையில் ஆர்வமா? எந்த நற்செய்திக் குழுவுக்கும் நீங்கள் பேராசீர் வாதமாயிருக்கலாமே.

நீங்கள் ஒரு மருத்துவரா? மருத்துவ மிஷனரிகள் எவ்வளவாய்த் தேவைப்படுகின்றனர்!

கணினி வல்லுநர்கள் தேவை!

டேவிட் லிவிங்ஸ்டன் ஒரு பூகோள ஆராய்ச்சியாளர்; அவர் மிஷனரி யாகச் சென்றார். சி. டி. ஸ்டட் புகழ் வாய்ந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்; அவரும் மிஷனரிப்பணியைத் தெரிந்துகொண்டார். வில்லியம் கேரி காலணி கள் செய்பவர்; அவர் வேத மொழிபெயர்ப்பாளரானார். இதுபோன்று ஆயிரக்கணக்கானோர் ஆண்டவரைச் சேவிப்பதில் சவாலும் ஆனந்தமும் கண்டனர்.

பெண்களும் விதிவிலக்கல்ல. நமக்கு இன்றும் மேரி ஸ்லெஸர்களும், ஐடா ஸ்கடர்களும், பண்டித ராமாபாய்களும் தேவை. இயேசுவின் நற் செய்திக் குழுவிலும் பவுலின் மிஷனரிக் குழுவிலும் பெண்கள் இருந்தனர் (லூக் 8:1-3; பிலி 4:3).

தங்களுக்கிருக்கும் அதே மிஷனரித் தரிசனத்தைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய வாழ்க்கைத் துணைவி வேண்டுமென மணமாகா மிஷனரிகள் பலர் விரும்பி நிற்கின்றனர். நீங்கள் மிஷனரித் தரிசனங்கொண்ட வாலிபப் பெண்ணாயிருந்தால், உங்களுக்கு ஏற்ற மிஷனரி ஒருவரை வாழ்க்கைத் துணைவராகக் கண்டுபிடிக்கும்படி நம்பகமான மிஷனரித் தலைவர்களுக்கு ஏன் எழுதக்கூடாது?



உங்களுக்கு அனுபவமோ வேதப் பயிற்சியோ இல்லையெனக் கவலை வேண்டாம். மாற்றுக் கலாச்சாரப் பணிக்கும், வேத மொழிபெயர்ப்புக்கும் குறுகிய காலப் பயிற்சிகள் பல மிஷனரி இயக்கங்களால் தரப்படுகின்றன.

கிரமமான இறையியற் கல்வி உங்களுக்குத் தேவையெனக் கருது வீர்களானால், நாட்டிலுள்ள தரமான, அடிப்படை விசுவாசத்தில் உறுதியான வேதாகமக் கல்லூரி ஒன்றிற்கு மனுச் செய்யுங்கள். இதவாதிகளுள்ள கல்லூரிகளில் மாட்டிக்கொள்ளாதிருங்கள்.

மேலை நாட்டுக்குச் சென்று திரும்புவதே மேலானது என நினைக்க வேண்டாம். அங்கு சில நல்ல கல்லூரிகள் உண்டென்பது உண்மைதான்; ஆனால் வேதப் பயிற்சிக்காக மேலை நாடுகளுக்குச் செல்லும் இந்திய மாணவரில் பாதிக்கப்படுவோரின் சதவீதம் அதிகம். அநேகர் தங்கள் ஆதித் தரிசனத்தை இழந்துவிடுகின்றனர். அங்கேயே இருந்தும்விடு கின்றனர்.

“நான் எனது உலக வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின் ஊழியம் செய்ய வருகிறேன்” என்று சிலர் சொல்வது என் காதில் விழுகிறது. நீங்கள் ஓய்வு பெற்றபின் உங்களுக்கு ஊழியம் செய்யவே ஆள் தேவைப்படுமே!

மிஷனரிப்பணியில் ஏராளம் நடக்கவேண்டும், சைக்கிள் ஓட்டவேண்டும், பயணம் செய்ய வேண்டும், இப்படிப் பல. வாழ்க்கையின் உசிதமான பகுதியை உன்னதருக்குக் கொடுங்கள். “முழு பலத்தோடு கர்த்தரைச் சேவியுங்கள்!”

“என்னுடைய சொந்த ஊரிலேயே இன்னும் நற்செய்தி கேட்காத எண்ணிறந்தோர் இருக்கிறார்களே” என்கிறீர்களா? கவலை வேண்டாம்! அழைப்புக்கு இணங்காது பின்தங்கிவிடுவோர் ஏராளம் எப்போதும் இருப்பர்! அவர்கள் அந்த வேலையைப் பார்க்கட்டும்.

“எனது மற்றும் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை எப்படிக் கவனிப்பது?” நல்ல கேள்வி. ஓர் அரசையும் ஒரு கம்பெனியையும் நம்பக்கூடுமானால் ஆண்டவரைக் கட்டாயம் நம்பலாமே! “சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களுக்கு அதினால் பிழைப்பு உண்டாகவேண்டும்” என்று கர்த்தரே சொல்லியிருக்கிறாரே (1 கொரி 9:14).

கொடூர பஞ்சத்திலும் எலியாவுக்கு உணவளித்த தேவன் இன்றும் உயிரோடிருக்கிறார். தமது ஊழியக்காரரின் சுகத்தை விரும்புகிறவர் அவர் (சங் 35:27).

ஒருவேளை நீங்கள் பணக்காரராக முடியாது. ஆனால் உங்கள் ஜீவனுக்கீடாக அவர் ஜனங்களைத் தருவாரே (ஏசா 43:4).

“என் சொந்தக்காரரையும் சொந்த ஊரையும் எப்படி விட்டுச் செல்ல முடியும்?” ஆபிரகாம் தன் “தகப்பன் வீட்டையும்” விட்டுப் புறப்பட்ட தினாலல்லவோ “பூவுலகிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும்” ஆசீர் வாதமாக மாற முடிந்தது! (ஆதி 12:1,2). மேலை நாட்டு மிஷனரிகள் தங்கள் வசதிகளையும் வீடுகளையும் விட்டு நமக்கு நற்செய்தியைக் கொண்டுவந்தார்கள். அவர்கள் வராதிருந்தால் நீங்களும் நானும் இன்று ஒரு விக்கிரகத்திற்குமுன் விழுந்து கிடப்போம். இருளிலிருக்கும் மக்களுக்கு இன்று சுடர் விளக்கை எடுத்துச் செல்வது நமது பொறுப்பல்லவா?

“எனது பிள்ளைகளின் படிப்பு என்னவாகும்?” நீங்கள் போகுமிடத்தில் நல்ல கல்வி வசதியில்லாவிடில் மிஷனரிப் பிள்ளைகளுக்காகவே நிறுவப் பட்டிருக்கும் டோனாவூர் சந்தோஷ வித்தியாலயம் போன்ற பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்க்கலாம்.

இந்தியாவில் தங்கள் பிள்ளைகளை விட்டுவிட்டுப் பிற நாடுகளுக்குக் கூடுதல் பணம் சம்பாதிக்கச் செல்லுவோரின் எண்ணிக்கைதான் என்னே! ஆத்துமாக்களைச் சம்பாதிக்க ஆண்டவருக்காக அதற்கும் குறைவாக நாம் செய்வோமோ?

“முதலாவது இறையரசையும் அதற்கு ஏற்புடையவற்றையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்” (மத் 6:33).

“கடைசிவரை நிலைநிற்பேனோ என்று பயமாயிருக்கிறது” என்கிறீர் களா? ஒருவேளை தோல்வியடைந்த அல்லது இடையில் விட்டுவந்த சிலரைச் சந்தித்துவிட்டீர்கள் போலும். இது சத்துருவின் தந்திரமாகும். ஏன் யூதாஸ் ஸ்காரியோத்தைப் பார்க்கவேண்டும்? பன்னிருவரில் பதினொருவர் வென்றனரே! அது நல்ல சதவீதமல்லவா?

சில சபை மேய்ப்பர்கள் மிஷனரிச் சிந்தையுள்ளவர்கள். அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். ஆனால் மற்றவர்களோ தங்கள் வாலிபரின் தரிசனத்தின் மீது குளிர்ந்த நீரை ஊற்றிவிடுகிறார்கள். நல்ல அங்கத்தினர் சிலரை இழந்துவிடுவோமோ என்பதே அவர்கள் பயம். ஞானமாயிருங்கள்!

சில மிஷனரிச் செய்திகளில் சிங்கக் கதையும் கரடிக் கதையும்தான். அதிர்ச்சி வேண்டாம்! எழுச்சி கொள்ளுங்கள்! வெளியே போய் அவற்றில்



சிலவற்றைப் பார்த்துதான் வரலாமே! “நான் எல்லா நாட்களிலும் உங்க ளோடிருப்பேன்!” என்றார் இயேசு. “புறப்பட்டுப்போங்கள்” என்ற கட்ட ளைக்குக் கீழ்ப்படிவோருக்கே இவ்வாக்குத்தத்தம் (மத் 28:19,20).

“எனக்கு அழைப்பு வேண்டாமா?” கட்டாயம் வேண்டும். அழைப் பில்லாமல் போகக்கூடாது. கிறிஸ்தியான் உவைஸ் என்ற தேவமனிதன் நாற்பரிமாண அழைப்பைக் குறித்து எழுதுகிறார்—

முதலாவது, உங்களுக்கு **உள்ளிருக்கும்** உலகின் அழைப்பு. நீங்கள் இப்பொழுது செய்யும் வேலையில் அதிருப்தி வளருகிறது; கர்த்தருக்காக இன்னும் அதிகம் செய்ய வேண்டுமென்ற ஆசையும் வளருகிறது.

இரண்டாவது, உங்களைச் **சுற்றியிருக்கும்** உலகின் அழைப்பு. கோடிக் கணக்கானோருக்கு இன்னும் சுவிசேஷம் எட்டவில்லை. போதுமான அறுவடையாளரில்லாததால் பயிர் நாசமாகிறது.

மூன்றாவது, உங்களுக்குக் **கீழிருக்கும்** உலகின் அழைப்பு. மரித்து கிறிஸ்தற்ற நித்தியத்திற்குள் சென்றுவிட்ட எண்ணிறந்தோரை நினைத்துப் பாருங்கள். லாசருவை அனுப்பிச் சுவிசேஷத்தை அறிவியுங்கள் எனக் கதறிய செல்வந்தனைப் போன்று அவர்கள் கதறுகின்றனர் (லூக் 16:27,28).

இறுதியாக, உங்களுக்கு **மேலிருக்கும்** உலகின் அழைப்பு. தேவ ஆவியானவர் உங்களை இயக்குகிறார், வழி நடத்துகிறார். அவர் இதயத் தில் ஒரு தூண்டுதலைத் தந்து, வசனத்தையும் சூழலையும் கொண்டு நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்களென உறுதிப்படுத்துகிறார்.

ஆண்டவரது சத்தத்தைக் கேளுங்கள். இயேசு அழைக்கிறார்! கீழ்ப்படியுங்கள்!

**இப்பொழுதே!**

*13*

# *ஆனாலும் புறப்பட்டுப் போங்கள்!*

**சாக்குபோக்கு** சொல்வதில் நாமெல்லாரும் கெட்டிக்காரர். “ஒரு வயலை வாங்கினேன், நான் அவசியமாய்ப் போய் அதைப் பார்க்கவேண்டும், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்... ஐந்து ஏர்மாடு வாங்கினேன், அதை ஓட்டிப்பார்க்கப்போகிறேன், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்... இப்பொழுதுதான் திருமணம் பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது” (லூக் 14:18-20).

தேவ அழைப்பு நமக்கு வருவது பெரும் சிலாக்கியமாம். நாம் செவி மடுக்கத் தவறினால் தேவன் நம்மைக் கடந்துசெல்வார். யாரைக்கொண்டு எவ்விதம் வேலையை முடிக்கவேண்டுமென்று அவருக்குத் தெரியும். அன்றொரு நாள் யூத குலம் முழுவதும் பேராபத்திலிருந்தது. அந்த மணி வேளைக்காய் தேவன் தெரிந்தெடுத்திருந்தது எஸ்தர்தான். அவளோ சாக்குப்போக்கு சொல்லிக் கொண்டிருந்தாள். மொர்தெகாய் இவ்விதம் எஸ்தரை எச்சரித்தான்: “நீ ராஜாவின் அரண்மனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்.” எஸ்தருக்குப் புத்தி வந்தது. “நான் செல்லுகிறேன்... நான் செத்தாலும் சாகிறேன்” என்றாள். முடிவை நாமறிவோம். மக்கள் காக்கப்பட்டனர்! (எஸ்தர் 4:10-16).



நம் மக்கள்மீது வரும் பொல்லாப்பை நாம் எப்படிப் பார்க்கக்கூடும்? அவர்கள் மீது வரும் அழிவை நாம் எப்படிச் சகிக்கமுடியும்? என்னதான் பிரச்னைகளும் தடைகளும் இருந்தாலும் அவற்றைச் சாக்குப்போக்காகச் சொல்லாமல் ஆண்டவரிடம் திரும்பி உதவிபெற்றுப் புறப்பட்டுச் செல்லுவோம்! இந்தியருக்கு இயேசுவை அறிவிக்க!

**போதுமான விவரங்கள் தெரியாவிட்டாலும் போங்கள்!** — *ஆபிரகாம்*

“தான் போகுமிடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்” (எபி 11:8).

**தாலந்துகள் இல்லாவிட்டாலும் போங்கள்!** — *மோசே*

“நான் வாக்குவல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்றான். அப்பொழுது கர்த்தர்: மனிதனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்?.. .கர்த்தராகிய நான் அல்லவா? ஆதலால் நீ போ!” என்றார் (யாத் 4:10-12).

**ஆபத்துக்கள் நிறைந்த இடமாயிருந்தாலும் போங்கள்!**
— *காலேப், யோசுவா*

“காலேப் மக்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்... அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை என்றான். அவனோடு போய்வந்த மனிதரோ: அந்த மக்களை எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மை விடப் பலவான்கள் என்றார்கள்” (எண் 13:27-31; 14:6-9).

**வெளிப்படை அடையாளங்கள் நிகழாவிட்டாலும் போங்கள்!**
— *கிதியோன்*

“அப்பொழுது கிதியோன்: எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?... என்றான். அப்பொழுது கர்த்தர்: உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ... என்றார்” (நியா 6:13,14).

**கடினமான இடமானாலும் போங்கள்!** — *ஏசாயா*

“நீ போய், இந்த மக்களை நோக்கி, நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல்” (ஏசா 6:9).

**அனுபவமில்லாவிட்டாலும் போங்கள்!** — *எரேமியா*

“சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் போ” (எரே 1:7).

**குறைகள் இருந்தாலும் போங்கள்!** — *சீடர்*

“அதன்பின்பு பதினொருவரும் சாப்பிட உட்கார்ந்திருக்கையில் அவர்களுக்கு இயேசு தரிசனமாகி... அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதய கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார். பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், படைப்பு அனைத்திற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்... என்றார்” (மாற் 16:14,15; மத் 28:17-19; யோ 21:20-22).

**பெண்ணாயிருந்தாலும் போங்கள்!**

—*மகதலேனா மரியாள், யோவன்னாள், சூசன்னாள்...*
(லூக் 8:1-3; யோ 20:16-18)

—*பிரிஸ்கில்லாள்*
(அப் 18:18)

**குடும்பப் பொறுப்புகள் இருந்தாலும் போங்கள்!** — *பிலிப்பு*

“பிலிப்பு என்னும் சுவிசேஷகன்... நங்கையராகிய நான்கு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள்” (அப் 8:5; 21:9).

**விருப்பு வெறுப்பு இருந்தாலும் போங்கள்!** — பேதுரு

“ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களோடே போகும்படி ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்டார்” (அப் 11:2-18).

**உள்ளூர் ஊழியத்தில் பயன்பட்டுக் கொண்டிருந்தாலும் போங்கள்!**

—பவுல், பர்னபா

“அந்தியோகியா நகரிலுள்ள சபையிலே பர்னபாவும்... சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும்



சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று ஆவியானவர் திருவுளம்பற்றினார். அப்பொழுது... அவர்களை அனுப்பினார்கள்” (அப் 13:1-3).

—*பிலிப்பு*

“பிலிப்பு செய்த அதிசயங்களை மக்கள் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்... பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து... போ என்றான்... அப்படியே அவன் எழுந்துபோனான்” (அப் 8:6,26,27).

**பிரிவினைகள், விலகுதல் இருந்தாலும் போங்கள்!** — பவுல், பர்னபா

“அவர்களுக்குள்ளே கடுங்கோபம் மூண்டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு... போனான். பவுலோ சீலாவைத் தெரிந்துகொண்டு... புறப்பட்டான்” (அப் 15:36-41).

**என்னவானாலும் போங்கள்!**

## 14

# பெற்றோருக்கு ஓர் அழைப்பு

**கடவுளுக்கு** இருந்தது ஒரே மகன். அவரையும் இவ்வுலகிற்குள் இரத்த சாட்சி மிஷனரியாய் அனுப்பிவிட்டார். உங்களுக்கு இரண்டு பிள்ளை களிருந்தால் ஊழியத்திற்காய்க் கொடுத்துவிட தேவனுக்கு இருந்ததைவிட ஒரு பிள்ளை அதிகம்!

இயேசுதான் பரம தந்தையின் செல்லப் பிள்ளை. நித்திய நித்தியமாயுள்ள அவர்களின் பாசவுறவை வேதம் அங்குமிங்கும் குறிப்பிடுகிறது. நீதி மொழிகள் 8:27-30 ஓர் எடுத்துக்காட்டு. ''அவர் வானங்களைப் படைக்கை யில் நான் அங்கே இருந்தேன்... நான் அவர் அருகே செல்லப் பிள்ளை யாயிருந்தேன்: நித்தம் அவரது மனமகிழ்ச்சியாயிருந்து எப்பொழுதும் அவர் சமூகத்தில் களிகூர்ந்தேன். அவரது பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடன் மகிழ்ந்துகொண்டிருந்தேன்.'' அவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்ததால் மனுமக்களுக்காய்ப் பிதாவானவர் தமது அன்பு மகனையே பலியாக்கினார் (யோ 3:16). தமது மகனிலும் மேலானது தேவனுக்கு ஒன்றுமில்லை. ஆனால் அவரையே தந்துவிட்டார் (ரோ 8:32). மற்றப்படி அழியவிருக்கும் நமது உடன் மாந்தர்க்காய் நாம் இதிலும் குறைவாய்ச் செய்யலாமோ?

ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் மகிழ்ச்சியென்றால் அது ஈசாக்குதான். அவனில்லாமல் சம்பத்தெல்லாம் அவர்களுக்கு அர்த்தமற்றது (ஆதி 15:2).



ஈசாக்கு என்றாலே ''சிரிப்பு'' என்றுதான் பொருள்! முதிர்ந்த இத்தம் பதியருக்கு அவன்தான் ஆனந்தம். தேவனோ அவர்களது சிரிப்பையே பலியாய்க் கேட்டார். தனது மகனைவிட கடவுளை ஆபிரகாம் அதிகமாய் நேசித்ததால் நொடிப்பொழுதும் அவன் தயங்கவில்லை. நாம் எப்படி? ஆபிரகாம் கனம் பெற்றான். பரிசுத்தமாக்கப்பட்ட சிரிப்பாக ஈசாக்கைத் திரும்பப் பெற்றான். ஈசாக்கு கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானான். ''நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்'' (கலா 4:28). சுவிசேஷத்திற்காய் இழக்கும் எவனும் நூறுமடங்காய்த் திரும்பப் பெறுவான் (மத் 19:29).

சாப்பாடும் வெறுப்பாகுமளவு அவளது மலட்டுத் தன்மை அன்னாளைத் துக்கத்தில் ஆழ்த்திற்று. கர்த்தரை நோக்கிக் கதறி உள்ளத்தை அவர்முன் ஊற்றினாள். தேவன் அவளுக்கு ஒரு மகனைத் தந்தபொழுது, பால் மறந்தவுடன் பிள்ளையைத் தேவனுக்கே கொடுத்துவிட்டாள்! தனது மார்புக் கும் மடிக்கும் நெருக்கமாயிருந்த செல்லத்தை தேவனுக்கு அர்ப்பணித்து விட அவள் தாமதிக்கவேயில்லை (1 சாமு 1:7,15,24).

''இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன், வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்'' (சங் 127:4,5). அம்புகள் எதற்காக? அவைகளை எய்துவிடுங்கள். அவைகள் போய் எதிரியின் கைக்கும் நரக வாசலுக்கும் மக்களைத் தப்புவிக்கட்டும் (சங் 127:6; லூக் 1:71).

மனோவாவின் மனைவி பிள்ளையில்லாதிருந்தாள். தூதனானவர் அவளுக்கொரு மகனை வாக்குப்பண்ணினார். அந்தப் பிள்ளை தனது வாழ்வில் தேவ சித்தத்தை நிறைவேற்ற பெற்றோராகிய அவர்கள் என்ன செய்யவேண்டுமென அறிவதே மனோவாவின் உடனடிக் கவலை. ''அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும் என்று கேட்டான்'' (நியா 13:3,8,12). நமது சுயநலக் கனவுகளைப் பிள்ளைகள் மீது திணிக்கிறோமா, அல்லது விருப்பு வெறுப்பின்றி அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் இறைச்சித்தத்தை அறிய ஜெபிக்கிறோமா?

கடவுள் மோசேயை நோக்கி, ''முதற்பேறு அனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது'' என்றார் (யாத் 13:2). உலகெங்கு முள்ள கிறிஸ்தவப் பெற்றோர் அனைவரும் தங்கள் முதல் குழந்தையை இறைப்பணிக்காய் அர்ப்பணித்திருப்பார்களானால் உலகம் என்றோ நற் செய்திமயமாகியிருக்கும். நாம் தவறியதால் கர்த்தரின் வருகையும் தாமதித்துவிட்டது.

எங்கள் பெற்றோருக்கு நாங்கள் இரு பிள்ளைகள். நான்தான் மூத்தவன். நாசரேத்து மருத்துவமனையில் பல்லாண்டு பணியாற்றிய டாக்டர் வேத போதகம் அம்மையார்தான் எனது ஞானத்தாய். அவர்களுக்குப் பண்டிதர் ஸ்டான்லி ஜோன்ஸ் அவர்களது ஊழியம் அதிகப் பிரியம். அந்நாட்களில் ஸ்டான்லி என்று ஒரு படைவீரனும் இருந்திருக்கிறான். நானும் ஒரு பிரசங்கியாகவும் கிறிஸ்துவுக்குச் சேவகனாகவும் மாறவேண்டுமென ஜெபித்து எனக்கு ஸ்டான்லி எனப் பெயரிட்டார்களாம். மட்டுமல்ல, எனது தந்தையும் ஓர் இராணுவ அதிகாரியாயிருந்தார். எனது படிப்பு முடிந்ததும் வேலூரில் டாக்டர் ஐடா ஸ்கடர் அம்மையார் நிறுவிய கிறிஸ்துவக் கல்லூரி மருத்துவமனையில் பொறியியலராகப் பணியாற்றிவந்தேன். 1975இல் எனது வேலையை விட்டு முழுநேர ஊழியத்திற்குச் செல்ல நான் எடுத்த தீர் மானத்தை எனது அம்மாவிடம் சொன்னபொழுது அவர்கள் ஆனந்தக் கண்ணீரைக் கொட்டினார்கள். என்னை அணைத்துக்கொண்டு, "எனது கனவு இன்று நனவாயிற்று" என்றார்கள்! நான் குழந்தையாயிருந்தபோதே என்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து, 25 ஆண்டுகளுக்கு மேல் அதன் நிறைவேறுதலுக்காய் ஜெபித்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் விண்ணகம் சென்றுவிட்டார்கள். உயிர்த்தெழுதலின் காலையில் நான் எழுந்து, அவர்களைப் "பாக்கியவதி" என்பேன்! (நீதி 31:28).

எனது வாழ்க்கை மாறுவதற்கு எனது பெற்றோர் பெரிதும் காரண மாயிருந்தனர். கிராமங்களிலும், சேரிகளிலும், வீடுகளிலும், மருத்துவ மனைகளிலும் நற்செய்தியை அறிவிக்க நெடுந்தூரம் எனது தாயார் நடந்து செல்வதைக் கவனித்திருக்கிறேன். தான் வெகுவாய் நேசித்த மிஷனரிப் பணிக்காய்ப் பணம் சேகரிக்க வீடுவீடாய் ஏறி இறங்குவதை மதிப்புக் குறைவாய் அவர்கள் நினைக்கவில்லை. 1981இல் புற்றுநோயால் இறக்கு முன், தனது கால்களால் நடக்கமுடியும்வரை, தனது கைகளால் கணக்கு களை எழுதமுடியும்வரை அப்பணியை உற்சாகமாய்ச் செய்தார்கள். 1973இல் என் அப்பா இறப்பதற்கு முந்திய நாள்வரை வேதாகமங்களையும் ஆன்மீக நூல்களையும் விற்பதில் தீவிரமாயிருந்தார்கள். கடனுக்கு வாங்கிய சிலர் அப்பா இறந்தபின் என்னிடம் பணத்தைக் கொடுத்தார்கள். காரைக் குடிக்கருகிலுள்ள கோட்டையூரில் ஆலயமேதுமில்லாததால் ஓர் ஆலயத் தைக் கட்டினார்கள். அவர்களுக்குப் பிரியமான சில பல்லவிகளைத் திரும்பத் திரும்பப் பாடும்படி நானும் என் தம்பியும் பல மணிநேரம் அப்பாவின் ஆர்மோனியத்திற்கு காற்றூதிக்கொண்டிருப்போம். இன்று நான் தொழு கையில் மெய்மறந்துவிடுவதில் ஆச்சரியமில்லை! மணமாகாத எனது பெரியம்மா ஒரு பிரசங்கி விடாமல் சந்தித்து நான் ஊழியக்காரனாகும்படி அவர்களை எனக்காய் ஜெபிக்கச் சொல்லுவார்கள்.



நான் இப்படி எழுதிக்கொண்டிருக்கையில், "நமது பிள்ளைகளை இப்படி யெல்லாம் நாம் திசை திருப்பக்கூடாது. அவர்கள் விருப்பத்திற்கே விட்டுவிடவேண்டும்" என யாரோ சொல்லுவது எனது காதில் விழுகிறது. பிரிய பெற்றோரே, சற்று பொறுங்கள். உங்கள் மகன் ஓர் என்ஜினியராக வேண்டும், மகள் ஒரு டாக்டராகவேண்டும் என்றெல்லாம் நீங்கள் வீட்டில் சொல்லிக்கொண்டிருப்பதில்லையோ? அவர்களது பள்ளிப்படிப்பையே உங்கள் விருப்பத்திற்கேற்றபடிதானே தெரிந்துகொள்ளுகிறீர்கள்? பொறி யியல் கல்லூரியிலோ, மருத்துவக் கல்லூரியிலோ, மகனையோ மகளையோ சேர்க்க ஒரு சொத்தை விற்றாவது லட்சக்கணக்கில் கொடுக்கத் தயங்கு வதில்லையே? உலகப் பணியொன்றுக்காக நீங்கள் இவ்வளவு ஆத்திரப் படும்போது, பிள்ளைகளை ஊழியக்காரராய் மாற்றி விடத் துடிப்பது தவறோ? கூடாதோ? பதில் சொல்லுங்கள்!

"அழைப்பில்லாமல் எனது மகனை அல்லது மகளை ஊழியத்திற்கு அனுப்புவது எப்படி?" என்று சப்பைக்கட்டு கட்டுகிறீர்கள். உங்கள் பிள்ளையை டாக்டராக்க அல்லது என்ஜினியராக்கத் தரிசனம் கிடைத் ததோ? அல்லது சத்தம் கேட்டதோ? இறைப்பணி என்றதும் ஏன் இந்தப் பாரபட்சம்?

தங்கள் பெற்றோரால் அவ்விதம் மாறிய விசுவாச வீரரால் சரித்திரம் நிறைந்துள்ளது. அவர் பிறக்குமுன்னரே தங்களுக்குத் தேவன் ஒரு மகனைத் தந்தால் அவன் சீனாவுக்கு மிஷனரியாகப் போகவேண்டுமென ஹட்சன் டெய்லரின் பெற்றோர் ஜெபித்தார்களாம். 8000க்கும் அதிகமான கிறிஸ்தவப் பாடல்களை இயற்றிய ஃபேன்னி கிராஸ்பி அம்மையார் தனது பாட்டியின் மடியிலிருக்கையில் தன்னை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத் தார்களாம். தனது தந்தை ஜெபிப்பதைப் பலமுறை கவனித்துக்கொண் டிருந்த ஜான் பேட்டன் தனது தந்தையைப் போலவே தானும் ஒரு தேவ மனிதனாய் மாறவேண்டுமென ஜெபித்தாராம். ஏமி கார்மைக்கேல் அம்மை யார் தன்னைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தபோது, "தேவன் எனது அம்மா, அப்பா ஜெபத்தைக் கேட்டார்" என்றார்களாம். சூசன்னா வெஸ்லியின் 19 பிள்ளைகளில் பெரும்பாலானோர் ஊழியத்திற்குச் சென்றதற்கு அந்த அம்மையாரே காரணமாயிருந்தார்கள். அவர்களிலிருவரான ஜான் வெஸ்லி யையும் சார்லஸ் வெஸ்லியையும் யார் மறக்கமுடியும்? அமரிக்கையான ஆனால் அனலான சாமுவேல் பிரெங்கிள் என்ற புனிதத் தீர்க்கதரிசிக்கு இணையானவர் இரட்சணிய சேனையில் எவருமிலர். போரில் இவரது தந்தை மரித்தபின், ஒரு கிறிஸ்துமஸ் தினத்தன்று இவரது தாயார் இவரைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தினார்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கு மிஷனரிகளின் பெயர்களைக் கொடுங்கள். ஓட்டக்காரர், விளையாட்டுவீரர் பெயர்களையெல்லாம் மக்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கும்போது, நாம் ஏன் பரலோகப் புகழ்மாலை சூடியோரின் பெயர்களைத் தெரிந்துகொள்ளக்கூடாது ? விளையாட்டு வீரரெல்லாம் இன்று வென்று நாளை நாணலாம். ஆனால் எப்பொழுதுமே வென்ற ஜெப வீரர், முன்னோடி மிஷனரிகள், வேத மொழிபெயர்ப்பாளர், எழுப்புதல் ஊழியர் ஆகியோரை நான் குறிப்பிடுகிறேன்! பெயரில் என்ன இருக்கிறது என்று கேட்காதீர்கள். வேதாகமக் காலங்களிலெல்லாம் ஓர் அர்த்தத்துடனும் நோக்கத்துடனுமே பெயர்களைக் கொடுத்தார்கள். உங்கள் தரிசனத்திற்கேற்றதோர் பெயரைத் தெரிந்துகொண்டு. பிள்ளையை அப்பெயரால் கூப்பிடும்போதெல்லாம் உங்களது அர்ப்பணிப்பை நினைவு படுத்திக்கொள்ளுங்கள்.

தேவைக்கு மிஞ்சி ஊழியர் இருந்த காலம் சபைச் சரித்திரத்தில் இல்லை. அறுப்பு எப்பொழுதுமே அதிகம்; பணியாளர் எப்பொழுதுமே பற்றாக்குறை (மத் 9:37). இறைப்பணியில் எத்துறையிலும் வேலை காலி உண்டு. உங்கள் மகன் இலக்கியத்தில் பட்டம் பெற்றதும் ஒவ்வொரு கல்லூரியாக ஏறி இறங்கி வேலையில்லை என்று திரும்புவானேன் ? வேதாகம மொழியாக்கச் சங்கங்களுக்கு ஏன் மனுச்செய்யக்கூடாது ? 1900 ஆண்டுகட்குமுன் வேதம் எழுதி முடிக்கப்பட்டது. இன்னும் ஒரு வரிகூட மொழிபெயர்க்கப்படாத 2000 மொழிகள் உண்டு. ஒரு பகுதியையாவது 2000 மொழிகளில் மொழிபெயர்க்க ஏறத்தாழ 2000 ஆண்டுகள் ஆகிவிட்டன. மீதிப் பணியை முடிக்க இன்னும் 2000 ஆண்டுகள் வேண்டுமோ ? வெளிப்படுத்துதல் 7:9ஐ விசுவாசித்தால் இலக்கியப் பட்டதாரியாகிய உங்கள் மகனை அல்லது மகளை உடனே வேதாகம மொழியாக்கப் பயிற்சிக்கு அனுப்பிவையுங்கள். செயலற்ற விசுவாசம் செத்தது !

உசிதமானதை உன்னதருக்குக் கொடுங்கள். நன்கு படிக்கிற, உழைக்கிற பிள்ளையை ஊழியத்திற்கு அனுப்புங்கள். தேவப் பணி சாதாரணமான தல்லவே. "தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்துகொண்டு பலியிடுகிற கபடன் சபிக்கப்பட்டவன்... நான் மகத்துவமான ராஜா... காலூனமானதையும் நசல் பிடித்ததையும் நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ ? என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்'' (மல் 1:14,8).

மருத்துவப் பட்டம் பெற்ற உங்கள் மகனோ மகளோ ஒருவேளை முழுநேர ஊழியத்திற்குச் செல்லாவிட்டாலும் மருத்துவரில்லாத கிராமப் பகுதிகளிலும் ஆதிவாசிகள் குடியிருப்புகளிலும் பணியாற்ற ஊக்குவித்தாலென்ன ?



மருத்துவப்பணி என்பது மக்களிடமிருந்து பணம் பிடுங்கும் வியாபாரம் அல்ல, அது மக்களுக்குப் பாசம் காட்டும் சேவை எனக் கற்பியுங்கள். பணம் திரட்டும் ஒரே நோக்கோடு மருத்துவத் துறையில் நுழையும் எவரும் தங்கமான இப்பணிக்குத் தீங்கு விளைவிக்கிறார்கள். மனிதர் மீது பரிவு அல்ல, மனிதரின் பணமே நோக்காயுள்ள கிறிஸ்தவ மருத்துவர் ஒரு கிறிஸ்தவரா ? எண்பது சதவீத இந்தியர் இருப்பது கிராமங்களில்தான். சந்திக்கப்படாதவொரு கிராமத்தில் பணியாற்றும் ஒரு கிறிஸ்தவ மருத்து வரைப்போல் அக்கிராமத்தில் நற்செய்தியைப் பரப்ப யாரால் முடியும் ? மருத்துவரை மதிக்காதோர் யார் ? வட மாநிலமொன்றில் வேலை செய்து கொண்டிருக்கும் மகனை எப்படியாவது தமிழ்நாட்டுக்கு மாற்றுதல் கேட்டு வந்துவிடு என்று கெடுக்காதீர்கள்.

உங்கள் இல்லத்தில் மிஷனரிச் சூழலை உருவாக்குவது உங்கள் கடமை. உலகப் படத்தையும் தேசப் படத்தையும் சுவரில் மாட்டுங்கள். மிஷனரி முழக்க வாசகங்களைத் தொங்கவிடுங்கள். மிஷனரிப் பத்திரிகைகளும் ஜெபச் சுற்றறிக்கைகளும் வீட்டிற்கு ஒழுங்காக வரட்டும். பிள்ளைகளுக்கு மிஷனரிச் சரிதைகளை வாங்கிப் படிக்கக் கொடுங்கள். சாப்பாட்டு மேசையில் மிஷனரிச் செய்திகளை உரையாடுங்கள். குடும்ப ஜெபத்தில் குறைந்தது ஒரு மிஷனரிக் குறிப்பைச் சேர்த்துக்கொள்ளுங்கள். மிஷனரி ஊழிய நிறுவனங்களோடு தொடர்புகொண்டு தங்கள் விடுமுறையின்போது மிஷனரிக் குடும்பமொன்று உங்களோடு ஒரு வாரம் செலவிட அழையுங்கள். பெற்றோரை விட்டுப் பிரிந்து தூர இடத்தில் படித்துக்கொண்டிருக்கும் மிஷனரிக் குழந்தைகள் குறுகிய விடுமுறைகளுக்கு வீட்டிற்குச் செல்ல முடியாவிட்டால் அவர்களை உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளுங்கள். நல்ல உடைகளில் ஒன்றை மிஷனரிப் பிள்ளைகளுக்குக் கொடுக்க உங்கள் பிள்ளைகளை ஊக்குவியுங்கள். பிள்ளைகளை அவர்களோடு கடிதத் தொடர்பு வைத்துக்கொள்ளச் செய்யுங்கள். கிறிஸ்துமஸுக்கு துணி வாங்கச் செல்லும்போது முதலாவது ஒரு மிஷனரிக்குத்தான் வாங்க வேண்டுமென்று குடும்பம் முழுவதும் எண்ணட்டும். ஊழியர் எவரையும் குறித்து ஒருபோதும் பிள்ளைகள்முன் தரக்குறைவாய்ப் பேசாதீர்கள். ஊழிய ரென்றதும் உயிரைக்கொடுக்க வேண்டும். இப்படித்தான் அவனது பாட்டியும் தாயும் எதிர்கால ஊழியத்திற்காய்த் தீமோத்தேயுவை ஆயத்தப்படுத்தி னார்கள் என்று எண்ணுகிறேன் (2 தீமோ 1:5,6). குடும்பமாக ஒரு விடுமுறையை மிஷனரிப் பணிக்களமொன்றில் செலவிடலாம். மகிழ்ச்சியும் உணர்ச்சியும் ததும்பும். களங்களை நேரே பார்ப்பதற்கு நிகரில்லை (யோ 4:35). மிஷனரிப் பணிக்குப் பணம் சேர்க்க ஒவ்வொரு பிள்ளைக்கும் ஓர் உண்டியல் கொடுங்கள். கொடுத்தலைத் துவக்கத்திலேயே கற்றுக் கொடுத்துவிடவேண்டும்.

இந்தியாவில் பொதுவாகத் திருமணங்களைப் பெற்றோரே ஒழுங்கு செய்கிறார்கள். ஊழிய வாஞ்சையுள்ள உங்கள் மகனுக்கோ மகளுக்கோ வேறுவித வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுத்து விடாதீர்கள். இப் பகுதியில் ஊழியத்தலைவர்களின் உதவி நாடுங்கள். சாதி, அந்தஸ்து, இவற்றிற்கெல்லாம் சலாம் போட்டுவிடுங்கள். உங்கள் குதிரையை ஒரு கழுதைக்குக் கட்டிக்கொடுத்துவிடாதீர்கள்! (உபா 22:10).

வயது சென்றுவிட்டது, சகரியாவுக்கும் எலிசபெத்துக்கும் பிள்ளை யில்லை, ஆனால் பிள்ளைக்காய் ஜெபிப்பதை நிறுத்தவில்லை. இறுதியில் அநேகருக்குச் "சந்தோஷமும் மகிழ்ச்சியும்" உண்டாக தேவன் ஓர் ஆண் மகவைக் கொடுத்தார். அதுதான் யோவான் ஸ்நானன். பெற்றோரோ அவனைத் தங்களுக்காக வைத்துக்கொள்ளவில்லை. "உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படி" அவனை அனுப்பிவிட்டார் கள் (லூக் 1:7,13,14,17,80). கிறிஸ்துவின் முதல் வருகைக்காய் யோவான் மக்களை ஆயத்தப்படுத்தினான். அவரது இரண்டாம் வருகைக்காய் மக்களை ஆயத்தப்படுத்த நமது பிள்ளைகள் உலகெங்கும் செல்ல நாம் அவர்களை அனுப்பிவைப்போமா? குடும்பத்திற்கோர் மிஷனரி புறப்படட்டும்!



# 15

# மிஷனரிகளின் பிரச்னைகள்

**ஆதியாகமம்** 12இல்தான் மிஷனரிப்பணி துவங்குகிறதென்றும், ஆபிரகாம்தான் முதல் மிஷனரி என்றும் மிஷனரிப்பணி ஆராய்ச்சி நூல்கள் குறிப்பிடுகின்றன. சபையின் முதல் இரத்தசாட்சியாகிய ஸ்தேவான் மீட்பின் சரிதையை ஆபிரகாமிலிருந்தே துவங்குகிறான் (அப் 7:2,3). விசுவாசத்தின் சுவிசேஷத்தை முதலாவது கேட்டது ஆபிரகாம்தான் என்று பவுலும் குறிப்பிடுகிறான் (கலா 3:8,9). அப்போஸ்தலன் என்றால் "அனுப்பப் பட்டவன்" என்று பொருள். இதற்கிணையான லத்தீன் சொல்லின் பொருள் "மிஷனரி" ஆகும். தேவனுக்காய் நாடுகளைச் சுதந்தரிக்கும்படி ஆபிரகாம் அழைக்கப்பட்டு, அனுப்பப்பட்டான். இதுதான் மிஷனரி ஊழியம். ஆபிர காமின் சரிதை ஆதியாகமம் 12 முதல் 25 வரையுள்ளது. ஒரு மிஷனரி என்ற வகையில் ஆபிரகாம் சந்தித்த பிரச்னைகளை இவ்வத்தியாயத்தில் விளக்குகிறேன்.

## 1. பொருளாதாரப் பிரச்னைகள்

தேவப் பணிக்காய் தன் நாட்டைவிட்டுப் புறப்பட்ட ஆபிரகாம் சந்தித்த முதல் பிரச்னை இதுவே. "ஆபிரகாம் புறப்பட்டு தெற்கே பயணம்பண்ணிக் கொண்டு போனான்... நாட்டிலே பஞ்சம் கொடிதாயிருந்தது" (12:9,10). இதுதான் அவனை எகிப்துக்குப் போகச் செய்தது.

தங்கள் உலக வேலையை விட்டு ஊழியத்திற்குச் செல்வோருக்குப் பொதுவாக மாத வருமானம் பெருமளவில் இறங்கிவிடுகிறது. இப்பொழு தெல்லாம் சாதாரண அலுவலக உதவிக்காரர்களெல்லாம் குறைந்தது மாதம் 2000 ரூபாய் பெறுகிறார்கள். ஆனால் மிஷனரிகளில் பெரும்பாலோர் 1000/– அல்லது 1500/–இல்தான் துவங்கவேண்டியதிருக்கிறது. மட்டுமல்ல, தங்கள் சொந்த மண், மாவட்டம், மாநிலத்தை விட்டுப் புது இடங்களுக்குச் செல்கையில் பொருட்களின் அகவிலையும், அடிப்படைத் தேவையான சில பொருட்களின் கிடையாமையும் குடும்பத்தை வெகுவாய்ப் பாதிக் கின்றன. வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், ஏன்தான் நமது பெற் றோர் மிஷனரிப் பணியைத் தெரிந்துகொண்டனரோ என்று பிள்ளைகள் நினைக்கத் துவங்குகின்றனர்; ஊழியத்தில் வெறுப்புக்கொள்கின்றனர். தியாகத்தைப் பிள்ளைகள் மீதும் திணிக்க வேண்டுமோ? மற்ற பிள்ளை களோடு தங்களை ஒப்பிட்டுப்பார்த்து மனமுடைவது சாதாரணம்.

## 2. கலாச்சாரப் பிரச்னைகள்

திருமதி ஆபிரகாம் "பார்க்க அழகுள்ளவளாய்" இருந்தாள். பஞ்சத்தின் காரணமாய் ஆபிரகாம் எகிப்துக்குப் போகவேண்டியதிருந்தது. ஆனால் பிறனது மனைவி அழகாயிருந்தால் அவளை எடுத்துக்கொள்ளும் பழக்க முள்ள எகிப்தியரைக் குறித்து அவன் பயந்தான். தங்கள் இச்சைகளை நிறைவேற்ற அப்பெண்ணின் கணவனையும் தேவையானால் கொன்று விடுவர். எகிப்தின் உயர் அதிகாரிகளிடமும் இந்த அஞ்ஞானக் கலாச்சாரப் பழக்கம் இருந்தது (12:11-20; 20:10-13).

மாற்றுக் கலாச்சார அதிர்ச்சிகளிலிருந்து எழ முடியாது திரும்பி வந்துவிட்ட மிஷனரிகள் ஏராளம். அவர்களைப் பழிக்காது அவர்களுக்காகப் பரிதபிக்கவேண்டும். மாற்றுக் கலாச்சார ஊழியம் எளிதல்ல. எவ்வளவோ காரியங்களை மிஷனரியானவன் தியாகம் செய்யவேண்டியதிருக்கிறது. இந்தியாவில் ஒரு கிலோ ஆட்டிறைச்சியின் விலை ரூ. 125/–; மாட்டிறைச்சி ரூ. 40/– மட்டும். பல கிராமங்களில் மாட்டிறைச்சி சாப்பிடுவோரை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். புதிதாய்க் கிராமத்திற்கு வருபவரிடம், நீங்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவதுண்டா என்று நேரடியாகக் கேட்டுவிடுவார்கள். இந்த இறைச்சி வகைகளைப் உண்பதில் இனவுணர்வுகளும், மதச் சடங்கு களும் பின்னியுள்ளன. மிஷனரிகள் சந்திக்கவேண்டிய பல பிரச்னைகளில் இது ஒன்று மட்டுமே. இந்தியாவில் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிக் கலாச்சாரம் உண்டு. நமது நாடு பல நாடுகளை உள்ளடக்கியது! தென்னகத்தில் ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் கரங்கூப்பி வாழ்த்துவர், வரவேற்பர். வட நாட்டிலோ பல இடங்களில் கரங்குலுக்குவர். இது மிகச் சாதாரணமாகத் தெரிந்தாலும் துவக்கத்திலாகிலும் மிகவும்



சங்கடமாயிருக்கும். இங்கிலாந்தில் ஆடவரும் பெண்டிரும் ஒருவரை யொருவர் கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்துவதைக் கண்டு திடுக்கிட்டேன். அதைவிடப் பெரிய அதிர்ச்சி அமெரிக்காவில் காத்திருந்தது — முத்தம் கன்னத்திலல்ல, உதடுகளில்!

## 3. உறவுப் பிரச்னைகள்

ஆபிரகாமின் பணியாட்களுக்கும் லோத்தின் பணியாட்களுக்குமிடையே வாக்குவாதம் உண்டாயிற்று. "எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர்" என்று ஆபிரகாம் அருமையானதொரு கிறிஸ்தவப் பண்பை வெளிப்படுத்தினான் (13:5-11). லோத்து அவனுக்கு விருப்பமான இடத்தைத் தெரிந்துகொள் ளட்டும், நான் அடுத்த பகுதிக்குச் செல்லுகிறேன் என்று பெருந்தன்மையாய் நடந்துகொண்டான்.

மிஷனரிகள் தேவதூதரல்ல என்பதை நாம் மறந்து விடக்கூடாது! தங்கள் ஆண்டவரோடு மூன்றாண்டுகளுக்கு மேல் நெருங்கி ஊழியம் செய்த பிறகும் கிறிஸ்துவின் சீடர்களுக்கு உறவுப் பிரச்னைகள் இல்லாமலில்லை. அப்போஸ்தலரிடையே நடந்த மோதல்களை நடபடிகள் புத்தகம் நடந்தபடியே எழுதிவைத்துவிட்டது! பணிக்களங்கள் பலமுறை போர்க்களங்களாகி விடுகின்றன! ஒரே இயக்க ஊழியரிடையே போர், அல்லது மற்ற இயக்க ஊழியருடன் மகா யுத்தம்! பல்வகை மொழிகள், பின்னணிகளிலிருந்து வருவோர் இணைந்து ஊழியம் செய்கையில் பல பிரச்னைகள் உருவா கின்றன. சபைப்பிரிவுப் பிரச்னைகளும் உண்டு. ஒரு ஊழியர் பெந்தெ கொஸ்தேகாரராயிருப்பார்; அடுத்தவர் சத்தமே போடாத பிரதரன் சபைக் காரராயிருப்பார்! ஒருவர் சிலுவைமுன் வணங்கும் ஆங்கிலிக்கனா யிருப்பார்; அவரது உடன் ஊழியரான பாப்திஸ்து நண்பருக்கோ இது பாவமாகும்! நகையணிதல், மருந்தெடுத்தல் போன்றவை பற்றிய கருத்து வேறுபாடுகள் உள்ளே மறைந்திருக்கும்; எதிர்பாராத வேளையில் தலை தூக்கும்! நன்றாகத் திட்டமிட்டு ஊழியம் செய்வது ஒருவரது பாணியா யிருக்கும்; உடன் ஊழியனோ "தனக்கு இஷ்டமான இடத்தில் வீசும்" காற்றில் சுமந்து செல்லப்பட விரும்புவார்! ஊழியர்களின் மனைவியர் அற்ப காரியங்களுக்கும் சண்டையிட்டுக்கொள்வதும் மிகச் சாதாரணம். பிள்ளை களுக்கிடையே வரும் சண்டைகளும் உண்டு. இது தவிர்த்து இயக்கங் களுக்கிடையே பிரச்னைகள். ஒரே இடத்தில் இரு இயக்கங்கள் இயங்கு வதைத் தவிர்க்க உதவும் இந்திய மிஷனரி இயக்கங்களின் ஐக்கியத் திற்காய் (India Missions Association) தேவனைத் துதிக்கிறோம். ஆனாலும் மறைவாக எத்தனையோ காரியங்கள் நடக்கின்றன.

## 4. அரசியல் பிரச்னைகள்

"ஐந்து ராஜாக்களோடு நாலு ராஜாக்கள்" பண்ணிய யுத்தத்தில் லோத்தும் அவனது உடைமைகளும் கைப்பற்றப்பட்டன. ஆபிரகாம் துடித்தெழுந்து தன்னைச் சேவித்தோரைச் சேவகராய் மாற்றி தனது சகோதரனின் மகனாகிய லோத்தை மீட்டுவரப் புறப்பட்டான் (14:8-16). தனது தாய் நாட்டையும் தகப்பன் வீட்டையும் விட்ட ஆபிரகாம், அப்பப்பா, எவ்வளவு பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியதிருந்தது! இன்னும் என்னவெல்லாம் வரப்போகிறதோ என்று கலங்கியிருந்திருப்பான். ஆனால் கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, "நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலமுமாயிருக்கிறேன்" என்றார் (15:1).

இந்தியாவின் பல மாநிலங்களில் அரசியல் நிலைமை சுமுகமாயில்லை. கலவரங்களும் இனவெறி மோதல்களும் அனுதின நிகழ்ச்சிகளாகிவிட்டன. இதில் சம்பந்தப்பட்டோர் நேரடியாகக் கிறிஸ்தவ ஊழியத்தைக் குறிவைக்காவிடினும் ஊழியம் பாதிக்கப்படாதிருப்பதில்லை. "இராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும்" விண்ணப்பம்பண்ண பவுல் எழுதியதேன்? "நாம் அமைதலுடன் வாழ்ந்து" எல்லா மனிதரையும் சத்தியத்தின் அறிவுக்குள் கொண்டுவரவே! (1 தீமோ 2:1-4). "வசனம் எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும், துர்க்குணராகிய பொல்லாத மனிதர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று தெசலோனிக்கேயருக்குப் பவுல் எழுதினான் (2 தெச 3:1,2). நமது நாடு மதச் சார்பற்றது எனப்பட்டாலும் சட்டத்தைத் திரித்து மிஷனரிகளை உபத்திரவப்படுத்தும் நாட்டுத் தலைவர்களும், மாநிலத் தலைவர்களும் உண்டு. குண்டர்களைக் கையாட்களாய்ப் பயன்படுத்தும் "மாண்புமிகு" அமைச்சர்கள் ஏராளம். தங்கள் குமாரர், குமாரத்திகள் மிஷனரிகளாய்ப் பணியாற்றும் பகுதிகளில் துப்பாக்கிச் சூடு, கொலைகள் என்றெல்லாம் வாசிக்கும் பெற்றோர் பதறாதிருப்பதெப்படி? நமது நாட்டிற்குள்ளேயே சில ஊர்களுக்குச் செல்ல கடிதங்களுக்கு 10 நாட்களும் தந்திகளுக்கு 7 நாட்களும் பிடிக்கும்! அஞ்சல் அலுவலகமோ அஞ்சல் பெட்டியோ இல்லாத கிராமங்களும் ஏராளம்.

## 5. கனியின்மைப் பிரச்னை

தேவன் ஆபிரகாமை அழைத்தபோது, "நான் உன்னைப் பெரிய இனமாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பெயரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்... பூவுலகிலுள்ள குடும்பங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று வாக்கருளினார் (12:2,3). அவன் தேவ வாக்குகளை அசையாது விசுவாசித்து அவரது அழைப்புக்கு அப்படியே கீழ்ப்படிந்தான். ஆனால் பல்லாண்டுகள் அவனுக்குப் புத்திரபாக்கியமில்லை! தனது அடிமைப்பெண் மூலம் பிள்ளைபெற அவனது மனைவி ஏவினாள். ஆபிரகாம் அதற்குச் செவிமடுத்தான்; அதன் விளைவு நாமறிந்ததே (15:2; 16:1,2).



ஊழியத்தில் கனியில்லாததால் எப்படியாவது ஏதாவொன்றைச் செய்து காட்டிவிட முயலுவது மிகச் சாதாரணம். எல்லாவித மாம்சீக முறைகளும் கையாளப்படும். இயக்கமானது ஒரு குறியை நியமிக்கிறது. "பெரிய காரியங்களை" இயக்கத் தலைவர்களுக்கு அறிக்கையாய் அனுப்ப மிஷனரி துடிக்கிறான். நல்ல அறுவடையை இன்னொரு பகுதியில் காணும் உடன் ஊழியரோடு தன்னை ஒப்பிட்டுப் பார்க்கிறான். இவையெல்லாம் மிஷனரியை ஒருவித அழுத்தத்திற்குள் கொண்டுவருகின்றது. தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்த்து, அவருக்காய்ப் பெரிய காரியங்களைச் செய்ய ஊழியருக்கு இயக்கமானது சவாலிடவேண்டியது அவசியம்தான். ஆனால் அதே வேளையில் நன்கு உழைத்தும் கனி காணாத ஊழியனைச் சுவிசேஷங்கள், நடபடிகளிலுள்ள எடுத்துக்காட்டுகளால் ஊக்குவிப்பதும் இயக்கத்தின் கடமையாகும். கப்பர்நகூமிலிருந்தது போல் இயேசுவின் ஊழியம் நாசரேத்திலிருக்கவில்லையே. அப்படியே அப்போஸ்தலரும் எல்லா இடங்களிலும் அமோக விளைச்சலைக் காணவில்லையே. அவர்களை ஏற்றுக்கொள்ளாத நகர்களும் இருக்கும் என்று இயேசு தமது சீடர்களை அனுப்பும்போது சொல்லவில்லையா? ஆபிரகாமின் அவசரம் ஓர் இஸ்மவேலைப் பிறப்பித்தது— "துஷ்ட மனிதன்!" (16:12). இப்படித்தான் வெறுமனே குறியையே நோக்காய்க் கொண்ட ஊழியரும் மனந்திரும்பாத மனிதருக்கும் ("துஷ்ட மனிதர்") திருமுழுக்கு கொடுத்து சபை வளர்கிறதென அறிக்கை அனுப்புவார்கள்! ஆதிவாசிக் கூட்டமொன்றிடம், "எத்தனை பேர் காலையில் சாப்பிட்டீர்கள்?" என்று மிஷனரி கேட்பார். பல கரங்கள் உயரும். உடனே அருகிலிருக்கும் உடன் ஊழியரின் காமிரா "கிளிக்" அடிக்கும்! "வாஞ்சையுள்ள" ஒரு மக்கள் கூட்டத்தைக் குறித்த இன்னொரு புகைப்படம் இயக்கத்தின் பத்திரிகைக்குக் கிடைத்துவிட்டது! ஆபிரகாம் தேவனுக்காய்க் காரியங்களை "நடத்தத்" துவங்கியபோது அவர் அவனை நோக்கி எனக்கு முன் "நடந்து" கொண்டு உத்தமனாயிரு என்றார். தென்னிந்தியாவுக்கு வந்த பெரிய மிஷனரிகளில் ஒருவர் "வாக்கர்" (Walker) ஆவார். ஆம், உத்தமமாய், "நடக்கிறவர்கள்" தேவை!

## 6. சமுதாயத்தின் பிரச்னைகள்

சோதோம், கொமோராவின் பாவத்தைக் குறித்தும் இவ்விரு நகர்கள் மீது கூறப்பட்ட தேவத் தண்டனையைக் குறித்தும் ஆபிரகாம் பெரிதும்

வருந்தினான். தேவனிடம் மன்றாடினான். ஐம்பது நீதிமான்கள் இருந்தால் என்று துவங்கி 45,40,30,20,10 என்று இறங்கி வந்தான்! ஆபிரகாம் நீதியாய் நடந்தவன். ஆனால் துன்மார்க்கத்திற்காக மக்களை அவன் பழிக்காமல், அவர்களுக்காய்ப் பதறினான் (18:20-33).

ஏன் தாங்கள் அங்கு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பதையே சில வேளை மிஷனரிகள் மறந்துவிடுகின்றனர். மக்களை இகழ அல்ல, இரட்சிக்கவே அனுப்பப்பட்டுள்ளனர். ஓர் இளம் மாணவியினிடம் பொறுமையிழந்த ஆசிரியை, “உங்கள் மகளுக்கு ஒன்றும் தெரியவில்லை” என்று வீட்டுக்கு எழுதி அனுப்பினார்கள். “அதனால்தான் அவளைப் பள்ளிக்கு அனுப்பியுள்ளேன்” என்று மாணவியின் தாயார் பதில் அனுப்பினார்கள்! மக்களிடம் அன்புகூராமல் அவர்களை ஆதாயப்படுத்த முடியாது. தமது குமாரனை அனுப்புமுன் தேவன் எவ்வளவாய் உலகை நேசித்தார்! மக்கள் மீதுள்ள பாசமும் பரிவும் நாளடைவில் பல மிஷனரிகளுக்குக் குறைந்து, குளிர்ந்து விடுகிறது. ஆனால் இனி வீட்டுக்குத் திரும்பிப்போவது கடினமாதலால் மிஷனரிப் பணியைத் தொடர்கின்றனர். அன்பில்லாமல் உடலைச் சுட்டெரிக்கக் கொடுக்க இயலுமே! (1 கொரி 13:3). தன் இனத்தவராகிய இஸ்ரவேலருக்காக தானே சபிக்கப்பட பவுல் ஆயத்தமாயிருந்தான் (ரோ 9:1-3; 10:1). இது பழக்கப்பட்ட மிஷனரி ஊழியத் தலைவர் ஒருவரின் வறட்டு வார்த்தைகளல்ல! பரிசுத்த ஆவியானவரே தனக்குச் சாட்சியென்றும், தான் சொல்வது பொய்யல்ல என்றும் சேர்த்துச் சொன்னான்!

## 7. குடும்பப் பிரச்னைகள்

இந்த முதல் மிஷனரியாகிய ஆபிரகாமிடம் அவன் வெகுவாய் நேசித்த அவனது ஒரே புதல்வனை ஒரு மலைமீது பலியிட தேவன் சொன்னபோது ஆபிரகாம் சோதனையின் உச்சக்கட்டத்தை அடைந்தான். “நம்பிக் கீழ்ப்படிதல்” ஒன்றுதான் வழி என்பதை இதற்குள் ஆபிரகாம் நன்கு கற்றறிந்தான் (22:1–3). தனது சிந்தனைகளையெல்லாம் சிறைப்படுத்தி முன் சென்றான். தேவன் ஆட்டுக்கடாவொன்றைக் காட்டி அவனை ஆச்சரியத்தில் வீழ்த்தினார் (22:13,14). தேவனை அவன் “யேகோவா-யீரே” எனக் கண்டான்!

பல பணிக்களங்களில் நல்ல கல்விவசதியில்லாததால் மிஷனரிகள் கட்டாயமாகத் தங்கள் பிள்ளைகளைத் தொலைவிலுள்ள விடுதிப் பள்ளிகளில் விடவேண்டியதிருக்கிறது. இப்பிரிவு வேதனை மிகுந்தது. பள்ளியில் அன்று நடந்த காரியங்களைக் கதையாய்ச் சொல்ல மாலையில் வீட்டுக்குக்



குதித்து வரும் பிள்ளைகளின் காட்சி இனி கிடையாது! இதனால் தந்தையைவிடத் தாய்க்குத்தான் மனநிலை அதிகமாய்ப் பாதிக்கப்படுகிறது. “அந்நியனும் பரதேசியுமாய்” ஆபிரகாம் தங்கியிருந்த அந்நாட்டிலேயே அவன் மனைவி இறந்தாள். அந்நாட்டவரிடம் ஒரு நிலத்தை வாங்கி அதிலுள்ள குகையில் மனைவியின் சடலத்தை அடக்கம்பண்ணினான். ஆப்பிரிக்க மண்ணில் தானே குழிதோண்டி தன் மனைவியின் சடலத்தைப் புதைத்த டேவிட் லிவிங்ஸ்டன் என் நினைவுக்கு வருகிறார். அடுத்து ஆபிரகாம் தன் மகனுக்கு மணமுடிக்கவேண்டும் (24:1-4). பிள்ளைகளின் திருமணத்தை நல்லவிதமாக நடத்திவைக்க இந்நாட்களில் தேவைப்படும் பல்லாயிர ரூபாய்களைக் குறித்த எண்ணம் மிஷனரிகளை வாட்டாமலில்லை. மிஷனரி ஊழியத்தில் சேமிப்பெல்லாம் எங்கே? அரசும், பிற நிறுவனங்களும் தங்கள் ஊழியருக்கு வீடு கட்டவும், பிற முக்கியத் தேவைகளுக்காகவும் பல திட்டங்களை வைத்துள்ளன. ஓய்வு கால ஊதியமெல்லாம் நிறைய உண்டு. ஆனால் பல்லாண்டுகள் உத்தமமாய் உழைக்கும் மிஷனரிகளுக்கு இயக்கங்கள் இறுதியாய்க் கொடுப்பதெதுவோ?

“ஆண்டவரே, மிஷனரிகளை ஆசீர்வதியும்!” எனும் வறட்டு ஜெபம், நண்பரே, இனி வேண்டாம். குறிப்பாயிருங்கள். அவர்களது பிரச்னைகளைக் கற்பனை செய்துபார்த்துத் திட்டமாய் எதையாவது செய்யுங்கள். உங்கள் விசுவாசம் செயலாகட்டும். மாதந்தோறும் மிஷனரிப் பணிக்கு அனுப்பும் சில ரூபாய் நோட்டுகளில் திருப்தியடைந்து விடாதீர்கள். கரிசனையுள்ள கிறிஸ்தவரோடு கலந்தாலோசித்து மிஷனரிகளின் கரங்களைப் பலப்படுத்த முடிந்த யாவற்றையும் செய்யுங்கள். புதுத் திட்டங்களை வகுத்திடுங்கள். அளவுக்குமீறி ஒருபோதும் நீங்கள் செய்துவிடமுடியாது. “தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக!” (சங் 35:27).

# 16

# துன்புறுத்தப்படும் மிஷனரிகளுக்கு ஒரு கடிதம்

*அன்புள்ள உடன் ஊழியருக்கு,*

பாசமும் பரிவும் கலந்த வாழ்த்துக்கள்!

மிஷனரிப் பணிக்களங்களில் நடக்கும் துன்புறுத்தல்களையும் உங்கள் பாடுகளையும் குறித்த செய்திகள் அமைதியான பகுதிகளில் வாழ்ந்து பணியாற்றும் எங்களை எட்டும்போதெல்லாம் எங்கள் இதயங்களில் இரத்தம் கசிகிறது. உடனே கிருபாசனத்திற்கு விரைந்து உங்களுக்குப் புதிய கிருபையும் புதிய பலமும் அருளப்பட அறுப்பின் ஆண்டவரை நோக்கி மன்றாடுகிறோம். ஒரே உடலின் உடனுறுப்புகளாய் உங்களோடு சேர்ந்து அழுகிறோம் (ரோ 12:15; யோபு 30:25; சங் 35:13,14; 1 கொரி 12:26; எபி 13:3). உடனே வந்து உங்களைப் பார்க்க முடியாவிட்டாலும் ஆவியில் உங்களோடுதானிருக்கிறோம் (1 கொரி 5:4). நற்செய்தியின் எதிரிகளால் நீங்கள் எவ்விதத்திலும் அரண்டுவிடக்கூடாதென உங்களுக்காய் ஜெபிக்கிறோம் (பிலி 1:28). அடிபடும்போதும் அச்சுறுத்தப்படும்போதும் சோர்புறுவது இயல்புதான். ஆனால் பன்னிரு சீடரை மிஷனரிப் பணிக்காய் அனுப்புகையில் இயேசு சொல்லியதை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறோம்—

“ஆன்மாவைக் கொல்ல இயலாமல் உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்ல



வருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்றுகூட உங்கள் பரம தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது. உங்கள் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. எனவே அஞ்சாதிருங்கள்!” (மத் 10:28-31).

இத்திருவசனப் பகுதியின் பொருள் என்னவெனில்: நாம் கடவுளுக்கு அருமையானவர்கள். நம்மைப் பற்றி யாவும் அவருக்குத் தெரியும். நமது வாழ்வின் ஒவ்வொரு சிறு காரியத்தையும் குறித்து அவர் கரிசனை கொண்டுள்ளார். பொதுவாக, அவர் நம்மைத் தமது கருவிழி போல் காத்துக் கொள்வார். ஆனாலும் அவரது ஏகாதிபத்தியச் சித்தத்தின்படி சில வேளைகளில் பொல்லாத மனிதர் கைகளில் நம்மைத் துன்புற விட்டுவிடுவார். துன்புறுத்தப்பட்டு நாம் கொல்லப்படவும் அவர் அனுமதிக்கலாம். ஆனால் அவரது பிரசன்னம் எப்பொழுதும் நம்முடனிருக்கும். எனவே நாம் கலங்கத் தேவையில்லை.

இந்த உணர்வுதான் அன்று அந்த மூன்று எபிரெய வாலிபரை, உயிரோடு எரிக்கப்படுவார்களென அச்சுறுத்தப்பட்டபோதும், தைரியமாய் உறுதியாய் நிமிர்ந்து நிற்கச் செய்தது. தங்களை விடுவித்துவிட தேவனால் முடியுமென அவர்களுக்குத் தெரியும். ஒருவேளை அவர் அப்படிச் செய்யாவிட்டாலும், தங்கள் விசுவாசத்தை மறுதலிப்பதைவிட அதற்காய் மரிக்கவே அவர்கள் ஆயத்தமாயிருந்தனர் (தானி 3:17,18). “மேன்மையான உயிர்த்தெழுதலை அடைவதற்காக, விடுதலை பெற மறுத்து, வதையுண்டு மடிந்த” விசுவாச வீரர் எத்தனையோ பேர்! (எபி 11:35).

நற்செய்திப்பணியில் இயேசு கிறிஸ்துவின் சபை தீவிரமாகிக் கொண்டிருக்கும் வேளையில் பிசாசும் தனக்கு இன்னும் கொஞ்ச நேரம் மட்டுமே உண்டென அறிந்து என்றுமில்லாத அளவு கோபங்கொண்டுள்ளான் (வெளி 12:12). துன்புறுத்துதல் என்பது ஓர் எதிர்ச்செயல்தான். எனவேதான் அது எங்கும் கூடிக்கொண்டேயிருக்கிறது. கி.பி. 2000இல் மட்டும் இந்தியாவெங்கும் கிறிஸ்தவர்க்கெதிரான வெளிப்படையான வன்முறைச் செயல்கள் 40க்கும் மேல் நடந்துள்ளன. இதயம் துவளவேண்டாம்! “ஏதோ, வினோதமானது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள். மாறாக, கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்குகொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள்... உலகெங்கிலுமுள்ள உங்கள் சகோதர சகோதரிகள் உங்களைப் போலவே துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்” (1 பேது 4:12,13; 5:9). இந்தப் போராட்டத்தில் நீங்கள் தனியாக இல்லை!

உங்கள்மீது எறியப்படும் ஒவ்வொரு கல்லும் உங்கள் கிரீடத்தில் ஒரு மாணிக்கமாய்ப் பதியும்! பரம தந்தையின் வலது பக்கம் "உட்கார்ந்திருந்த" இயேசுவை எழுந்து "நிற்கிறவராய்" ஸ்தேவான் கண்டான் (மாற் 16:19; அப் 7:56). அவ்வளவு மரியாதையுடன் சபையின் முதல் இரத்தசாட்சி யானவன் விண்ணில் வரவேற்கப்பட்டான்! உபத்திரவம் கொடுமையாயி ருந்தால் விளைவும் மகிமையாயிருக்கும். ஒரு ஸ்தேவானைக் கொன் றார்கள்; தேவனோ ஒரு பவுலை எழுப்பினார்! ஸ்தேவானின் இரத்தசாட்சி மரணமே பவுலின் மனமாற்றத்திற்கு மேடையமைத்தது (அப் 7:57,58). சுவிசேஷத்தை முழுமூச்சாய் எதிர்ப்பவர்களே பொதுவாக அதை முழு பலத்தோடு எடுத்துரைப்பவர்களாகவும் மாறுவர் (அப் 9:20-22).

பாடு பாடுதான்; ஆனால் தெய்வீகக் கண்ணோட்டத்தில் அது ஒரு பாக்கியம் என நீங்கள் நினைவிற்கொள்ள விரும்புகிறோம். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் எல்லார்மீதும் கல் விழுவதில்லை. பேதுருவும் மற்ற அப்போஸ் தலரும் தங்களது விடாத சாட்சியினால் உதைக்கப்பட்டபோது இயேசுவின் பெயருக்காய் அவ்விதம் பாடுபடத் தகுதி பெற்றதற்காய் அகமகிழத்தான் செய்தார்கள் (அப் 5:40,41). மற்றொரு சம்பவத்தில், பவுலும் பர்னபாவும் ஒரு பிராந்தியத்திலிருந்தே துரத்திவிடப்பட்டபோது அவர்களும் அவர் களைச் சேர்ந்தவர்களும் மகிழ்ச்சியால் பொங்கினர் (அப் 13:50-52).

நீங்கள் துன்புறுத்தப்படும்போது எவ்விதம் கிறிஸ்துவின் உடலிலுள்ள பிற உறுப்பினர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறீர்களென்று உங்களுக்குத் தெரியுமா? உபத்திரவங்களின் செய்திகள் அவர்களைத் தட்டியெழுப்பி ஜெபத்தில் ஊக்கமடையச் செய்கின்றன. அது மட்டுமல்ல, நற்செய்தியறி விப்பில் அவர்கள் கூடுதல் ஊக்கமும் உற்சாகமும் பெறுகின்றனர். பவுல் சிறையிலடைக்கப்பட்டது பிலிப்பிய விசுவாசிகளுக்கு என்ன செய்ததென்று பாருங்கள். இதோ அவன் அவர்களைக் குறித்து எழுதியது: "எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயின... என் சிறை வாழ்வினால் சகோதர சகோதரிகளுள் பெரும்பாலோர் கடவுள் வார்த் தையை அச்சமின்றி எடுத்துரைக்க மேலும் துணிவு பெற்றிருக்கிறார்கள்!" (பிலி 1:12-14). தேவ மக்கள் சொகுசாய் வாழ்ந்துகொண்டிருக்கும் இடங் களிலிருந்து அவர்களைச் சிதறியடித்து நற்செய்தியினால் சந்திக்கப்படாத பகுதிகளுக்கு அவர்களை அனுப்ப சிறந்த முறையாகவும் தேவன் உபத்திரவத்தைப் பயன்படுத்துகிறார் (அப் 8:1,4).

நீங்கள் துன்புறுத்தப்படும்போது உங்கள் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் எவ்விதம் கலங்குகின்றனரென்பதை நாங்களறிவோம். அவர்கள் சும்மா அமைதியாயிருந்துவிட முடியாது. பாலகனாக இயேசு தமது அன்னையின் கரங்களிலிருக்குபோதே, சிமியோன் அவளைப் பார்த்து, "உனது உள்ளத்தை



ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்றான் (லூக் 2:35). காரியங்களை இருதயத்தில் வைத்துச் சிந்தித்துக்கொண்டிருப்பது மரியாளின் வழக்கம் (லூக் 2:51). முப்பதாண்டுகளுக்குமேல் அவள் எவ்விதம் மனதில் இவ்விதச் சித்திரவதையுடன் வாழ்ந்திருப்பாளென்று சிந்தித்துப் பாருங்கள்! தனது மகன் சிலுவையில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும்போது அவள் எவ்வள வாய்த் துடித்திருப்பாள்! இயேசு அவள்மீது பரிதாபப்பட்டு யோவானை இன்னொரு மகனாய் அவளுக்கு ஈவருளி அவளைத் தேற்றினார் (யோ 19:25-27). மானிட உணர்வுகளையும் வேதனைகளையும் இயேசு நன் கறிவதால் அதே விதமாய் அவர் உங்கள் குடும்பத்தினரையும் தேற்றுவார் (எபி 4:15,16). நீங்களில்லாததால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப அவர் இன்னொருவரை அனுப்புவார்.

ஜெபம், உழைப்பு, பாடு எனும் "கண்ணீர், வியர்வை, இரத்தம்" ஆகியவை மூலமாகவே இறையரசு வளர்கிறது (வெளி 6:9-11). இரத்த சாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து. ஒரு விதை நிலத்தில் விழும்போது எத்தனை கதிர்கள் விளைந்துவிடுகின்றன! (யோ 12:24,25). கிரஹாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரு புதல்வரின் இரத்தசாட்சி மரணம் (1999) இந்தியாவைக் கிறிஸ்துவின் நறுமணத்தால் நிரப்பிற்று. "நான் எனது கணவரையும் மகன்களையும் கொன்றவர்களை மன்னிக் கிறேன்" என்று திருமதி கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் அவர்கள் பகிரங்கமாய் அறிக்கையிட்டபோதுதான் இத்தனை மதங்களும் தத்துவங்களும் நிறைந்துள்ள இந்நாடு முதன்முறையாக "மன்னிப்பு" என்ற சொல்லிற்குச் சரியான அர்த்தத்தை நடைமுறையில் புரிந்துகொண்டது!

நீங்கள் உபத்திரவப்படும்போது கிறிஸ்துவின் பாடுகளில் குறைவான வைகளை உங்கள் உடலில் நிறைவாக்குகிறீர்கள் (கொலோ 1:24). கர்த்தராகிய இயேசுவின் அடையாளங்கள் உங்கள் உடலில் பதிக்கப்படு கின்றன (கலா 6:17). மகிமையின் ஆவியானவர் உங்கள்மேல் தங்கியி ருக்கிறார். உபத்திரவப்படுத்துகிறவர்களால் கிறிஸ்து பழிக்கப்படுகிறார்; உங்களாலேயோ மகிமைப்படுகிறார் (1 பேது 4:14). ஒவ்வொரு சோதனைக் கும் வேதனைக்கும் அவரது கிருபை போதுமானதாயிருக்கும். அவர் தரும் பலத்திற்கு மேல் நீங்கள் சோதிக்கப்பட அவர் இடம் தரமாட்டார். கொந்தளிக்கும் கடலின் அலைகளுக்கும் அவர் வரம்பு விதிக்கிறாரே! (யோபு 38:10,11).

தேவன் உங்களுக்குப் பயமுள்ள ஆவியையல்ல, பலமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். காலைதோறும் அதை அனல்மூட்டி எழுப்புங்கள்! வெட்கப்படாதீர்கள்! (2 தீமோ 1:6-8). படுவேதனையையும் சிறைவாச கத்தையும் தாங்கமுடியாமல் தீர்க்கன் எரேமியா இனித் தீர்க்கதரிசனம்

சொல்லுவதில்லை என்று தீர்மானித்தான். எப்பக்கமும் பயமிருந்தது. ஆனால் அவனது இருதயத்திலிருந்த திருவார்த்தையோ எலும்புகளுக்குள் அடைபட்டு எரிந்துகொண்டிருந்த நெருப்பு போலிருந்தது. அவனால் அதை அடக்கி வைத்திருக்க முடியவில்லை! துணிந்தெழுந்த அவனது அறிக்கை இதோ: “கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார்; ஆகையால் என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறு வார்கள்; தங்கள் காரியம் வாய்க்காதபடியால் மிகவும் வெட்கப்படுவார்கள்; மறக்கப்படாத நித்திய அவமானம் அவர்களுக்கு உண்டாகும்” (எரே 20:1,2,9-11).

எதிர்க்கிறவர்களிடம் கோபப்படாதீர்கள். அவர்களுக்காய் ஜெபியுங்கள் (மத் 5:44இ). உங்களைத் துன்புறுத்துவோர்க்குப் பதில் செய்வதை ஆண்ட வரிடம் விட்டுவிடுங்கள் (2 தெச 1:6-8). இதோ, கிறிஸ்து உங்களுக் கருளும் வாக்கு: “நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே... இறக்கும்வரை உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்” (வெளி 2:10).

இப்போராட்டத்தில் உங்களோடு நிற்கும்,

*உங்கள்*
*சகோதர, சகோதரிகள்.*



# 17

# *வயலில் வீசும் காற்று*

**உலகம்தான்** வயல். பரிசுத்த ஆவியானவர்தான் அதில் வீசும் காற்று. உலகமானது இன்னும் நற்செய்திமயமாக்கப்படவில்லை. அகிலவுலக நற் செய்திப்பணி என்பது மலை போன்றது. உடல் பலத்தாலோ பண வசதி யினாலோ அதைச் செய்து முடித்துவிட முடியாது. செருபாபேலுக்குக் கடவுள் சொன்னதுபோல், அது “பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல; என் ஆவியானாலேயே ஆகும்” (சக 4:6,7). நாம் பரிசுத்த ஆவியானவர்மீது சார்ந்திருந்தால் அவர் மிஷனரிப்பணியில் எவ்விதம் நமக்கு உதவுவாரென்று இக்கட்டுரையில் படிப்போம்.

## 1. அவர் நம்மை ஜெபிக்கப் பாரப்படுத்துகிறார்.

மிஷனரிப்பணியில் வழிநடத்துதலுக்காக இறை மக்கள் கடவுளைத் தேடும்போது பரிசுத்த ஆவியானவர் “மன்றாட்டின் அல்லது விண்ணப் பத்தின் ஆவியாக” அவர்கள்மீது இறங்குகிறார் (சக 12:10). நற்செய்தியை எடுத்துச் செல்லவேண்டிய இடங்கள் மற்றும் அங்குள்ள இனங்கள் பற்றிய அனைத்துத் தகவல்களும் நமக்குக் கிடைத்துவிடாது. விபரங்கள் நமக்குத் தெரிந்த அளவிற்குத்தான் நாம் ஜெபிப்போம். நாம் ஆவியானவரின் ஏவுதல் களால் ஆட்கொள்ளப்படும்போதோ நமது கற்பனைகளுக்கு அப்பாலுள்ள உயர்மட்டத்திற்குள் சென்று ஜெபிக்க முடியும் (ரோ 8:26,27). ஜெபத்தில் பிறக்காத தீவிர மிஷனரி இயக்கம் எதுவுமில்லை.

1965ஆம் ஆண்டு ஞாயிறு பிற்பகல் ஒன்றில் எங்கள் கல்லூரி ஜெபக் குழுவில் பரிசுத்த ஆவியானவர் மன்றாட்டின் ஆவியாக வல்லமையாய் அசைவாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஆப்பிரிக்க நாட்டு வனவாசி களுக்காய் ஜெபிக்க எங்களைப் பாரப்படுத்தினார். ஏனென்று அப்பொழுது எங்களுக்குப் புரியவில்லை. அக்குழுவில் நாங்கள் யாவருமே மாணவர் தான். எங்களில் எவரும் தென்கோடி தமிழகத்திலிருந்து 300 கிலோ மீட் டர்கூட பயணம் செய்திருந்ததில்லை. ஆனாலும் அந்த வனவாசிகளைப்பற்றி நினைத்துக்கொண்டேயிருந்தோம். கர்நாடக மாநிலக் காடுகளில் நீக்ரோ இன உடலமைப்புள்ள ஆதிவாசிகளை 1970களில் எங்கள் ஊழியக்குழு ஒன்று சந்தித்தபோது வியப்பில் ஆழ்ந்தோம். அவர்கள் அடிமை வியாபாரி களிடமிருந்து தப்பி இவ்விதம் மறைந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனரென அறிந்துகொண்டோம். இப்பொழுது இவ்வினத்தாரிடையே வளர்ந்துவரும் சபையொன்று நமக்குண்டு.

நமது மிஷனரி ஜெபங்கள் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக் கும்போது ஆத்தும இரட்சிப்பின்றி தொலைந்துபோனோரைத் தேவனது கண்ணோட்டத்தில் பார்க்கவும் இயேசு அவர்களை நேசிப்பதுபோல் நாம் அவர்களை நேசிக்கவும் முடிகிறது. அக்கிரமக்காரருக்காய்க் கல்வாரியில் வெளிப்பட்ட தேவ அன்பைப் பரிசுத்த ஆவியானவர் நமது இருதயங்களில் அபரிமிதமாய் ஊற்றிவிடுகிறார் (ரோ 5:5,6). பவுலின் சாட்சி இதுவே: “எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டா யிருக்கிறது; நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மை யைச் சொல்லுகிறேன் என்று **பரிசுத்த ஆவிக்குள்** என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது” (ரோ 9:1-3). அப்படியே சுவிசேஷத்தைத் தைரியமாய்ப் பிரசங்கிப்பதற்காகவும் தனக்காய் “**ஆவியினாலே**” ஜெபிக் கும்படி அவன் விசுவாசிகளை வேண்டினான் (எபே 6:18-20).

## 2. அவர் நம்மைச் சாட்சிபகரப் பலப்படுத்துகிறார்.

பரிசுத்த ஆவியானவர் வந்ததின் பிரதான நோக்கத்தைப் பரமேறுமுன் கிறிஸ்து சொன்னதாய் எழுதப்பட்டுள்ள இறுதி வார்த்தைகள் விளக்கு கின்றன. அப் 1:8, “பரிசுத்த ஆவி உங்கள்மீது வரும்போது நீங்கள் வல் லமை பெற்று எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.” சுவிசேஷத்தை மக்களுக்கு எடுத்துச் செல்லவேண்டிய அவசரம் எப்பொழுதுமே இருந்திருந்தாலும், தமது சீடர்கள் உன்னத வல்லமையால் நிரப்பப்படும்வரை அப்பணிக்காய்ப் புறப்பட்டுச் செல்ல இயேசு அவர்களை அனுமதிக்கவில்லை (லூக் 24: 47-49). இயேசுவானவர் இறைமகனாயிருந்தாலும் தமது சொந்த வல்லமை யினால் மக்களுக்கு ஊழியம் செய்யவில்லை. மூன்றாண்டுகள் இயேசுவை



நெருங்கிக் கவனித்த பேதுரு கூறியது: “நசரேயனாகிய இயேசுவைத் தேவன் **பரிசுத்த ஆவியினாலும்** வல்லமையினாலும் அபிஷேகம் பண் ணினார்; அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார்” (அப் 10:38). ஆவியானவரின் வல்லமை இல்லையேல் வாய்ச் சாதுரியமும் விற்பனைத் திறனும் ஒன்றும் சாதிக்காது (1 கொரி 2:4).

ஏதோ ஒருமுறை பெற்ற அனுபவமல்ல, பரிசுத்த ஆவியானவரால் நெடுகவே நிறைந்துகொண்டிருப்பது தைரியமாய்ப் பயனுள்ள வகையில் சாட்சி பகர இன்றியமையாதது. பெந்தெகொஸ்தே நாளன்று மேலறையில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மறுபடியும் நிரப்பப்பட்டு “தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்” (அப் 4:31). எவ்வித அச்சுறுத்தலுக்கும் பலியாகிவிடாதபடி அடிக்கடி நாம் நமக்குள்ளே அனல் மூட்டப்படவேண்டும் (2 தீமோ 1:6,7).

பெந்தெகொஸ்தேக்கு முன்னர் பேதுரு சரியான கோழையாயிருந்தான். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவனை மனித பயத்திலிருந்து விடுவித்து ஆயிரங்களுக்குச் சவால்விடும் தைரியத்தால் நிரப்பினார். வெறும் உற்சாகத் தினாலல்ல, “பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட **பரிசுத்த ஆவியினாலே**” சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்பதை அவன் புரிந்துகொண்டான் (1 பேது 1:12; மத் 26:34; மாற் 14:31). ஆலோசனைச் சங்கத்தினர் முன் அவன் சுவிசேஷத்திற்காய்ப் பதில் சொல் லியதில் அவன் எவ்வளவாய்ப் பரிசுத்தாவியானவர் மீது சார்ந்திருந்தான் என்பது தெளிவாகிறது: “மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்குக் கீழ்ப்படிவதே அவசியம்... நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்... **பரிசுத்த ஆவியும்** சாட்சி” (அப் 5:29,32).

சாத்தான் தனது கைதிகளைச் சும்மா ஒப்படைத்துவிடமாட்டான். மிஷனரிப்பணி ஓர் ஆன்மீகப் போராட்டம். அழகிய பாதங்கள் நற்செய்தியின் காலணிகளை அணிந்துகொண்டு எதிரியின் கோட்டை நோக்கி நடை போடும்போது, துரைத்தனங்கள், அதிகாரங்கள், இருட்டதிபதிகள், பொல் லாத ஆவிகள் அத்தனையும் தடுக்க முயலும் (எபே 6:12,15). மாய வித்தை, கள்ளத் தீர்க்கதரிசனம் போன்றவை கொண்டு வசனம் கேட் போரைத் திசைதிருப்ப எலிமாஸ் போன்ற பிரதிநிதிகளைச் சாத்தான் ஆங்காங்கே வைத்திருப்பான். சாட்சி பகர்வோர் “**பரிசுத்த ஆவியினால்** நிறைந்திருக்கும்போதுதான்” அவர்கள் சத்துருவை முறியடித்துச் சிறைப் பட்டோரை விடுவிக்க முடியும் (அப் 13:6-10; ஏசா 61:1).

“ஆவிக்குரிய வரங்களை நாடுங்கள்” என்று வேதம் நமக்குப் போதிக் கிறது (1 கொரி 14:1). புதிய ஏற்பாட்டில் முதன்முதல் வரங்களின் பட்டியல்

நற்செய்தியறிவிப்புப் பணியை அடுத்தே கொடுக்கப்பட்டுள்ளது (மாற் 16:15-18). ஆவியின் வரங்களில் (1 கொரி 12:7-10), ஞான வசனம் (அப் 15:13-21), அறிவு வசனம் (அப் 8:23), விசுவாசம் (அப் 28:3-6), குணமாக்கும் வரங்கள் (அப் 9:33-35), அற்புதங்களைச் செய்தல் (அப் 14:3) மற்றும் ஆவிகளைப் பகுத்தறிதல் (அப் 16:16-18) ஆகியவை மிஷனரிப் பணிக்கு அத்தியாவசியமானவை. நாம் அவரிடம் கேட்டால் இவ்வரங்களை நமக்கருள தேவன் ஆவலாய்க் காத்து நிற்கிறார் (மத் 7:11). தமது படைவீரரை யுத்தக்களத்திற்கு அனுப்புமுன் போராயுதங் களையும் தளவாடங்களையும் கொடுத்துவிடுவதில் சேனைகளின் கர்த்தர் கவலையீனமாயிருப்பாரோ ?

## 3. அவர் நம்மைப் புறப்பட்டுச்செல்ல நடத்துகிறார்.

பேராணையின்படி நாம் எங்கும் எவருக்கும் நற்செய்தி அறிவிக்க வேண்டும். ஆனால் நிலத்திற்கு நிலம் வேறுபடும். சில நிலங்கள் இன்னும் உழப்பட்டிருக்காது. சில நிலங்கள் விதைப்புக்கு ஆயத்தமாயிருக்கும். இன்னும் சில அறுவடைக்கே ஆயத்தமாயிருக்கும். அப்படியே தேவனுடைய அழைப்பும் கிருபாவரங்களும் மிஷனரிக்கு மிஷனரி வேறுபடும். சில ஊழியர் உழுவதில் கெட்டிக்காரராயிருப்பர்; மற்றவர்களோ விதைப்பதிலோ அறுப் பதிலோ திறமைசாலிகளாயிருப்பர் (யோ 4:37,38; 1 கொரி 3:5-7). மிஷனரிப் பணியின் பிரதமரான பரிசுத்த ஆவியானவரே எவரை, எங்கு, எப்பொழுது என்பதையெல்லாம் நிர்ணயிக்கிறார். தமது விருப்பத்தின்படி அவர் நடை யையும் நபரையும் மாற்றிவிடுவார். வளைந்து கொடுப்போர் பாக்கிய வான்கள்; அவர்கள் முறிந்துபோவதில்லை!

நடபடிகள் புத்தகமே மிஷனரிப் பணிக்குப் பாட நூலாகும். ஆவியான வரின் சத்தத்திற்குச் செவிமடுத்தால் நாம் எல்விதம் மிஷனரிப்பணியில் வெற்றிகாணலாம் என்பதை எடுத்துக்காட்டுகள் மூலம் அது நமக்குப் போதிக்கிறது. கீழ்க்கண்ட மூன்று சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை.

• சமாரியாவில் சுவிசேஷகன் பிலிப்பு வெற்றிகரமான சுகமளிப்பு ஊழியம் நடத்திக்கொண்டிருந்தான் (அப் 8:5-7). ஊரெங்கும் அதுதான் பேச்சு (வச 8). அவனைக் கேட்கவும் அற்புதங்களைக் காணவும் திரள்கள் கூடிவந்தன. மக்கள் திருமுழுக்கு பெற்றனர்; ஆவியினால் நிரப்பப்பட்டனர் (வச 16,17). இவ்வளவு பெரிய திரள்கூட்ட ஊழியத்தின் நடுவிலிருக்கும் போது **பரிசுத்த ஆவியானவர்** பிலிப்புவை ஒரேயொரு நபருக்கு நற் செய்தியறிவிக்க காசா எனும் பாலைவனம் செல்ல நடத்தினார்! (வச 26,29). மனித அறிவுக்கு இது ஒவ்வாததாயிருக்கலாம்; ஆனால் பரலோகக்



காற்றானவர் தமக்குப் பிரியமான இடத்தில் வீசுவார்! ஆவியினால் பிறந்தவர்கள் ஆவியினால் சுமந்து செல்லப்படவும் தங்களை விட்டுக் கொடுக்கவேண்டும்! (யோவா 3:8).

• தோல் பதனிடும் சீமோன் வீட்டில் சீமோன் பேதுரு கடற்காற்றை அனுபவித்து, ஓய்வெடுத்து, ஜெபத்தில் நேரம் செலவழித்துக்கொண்டி ருந்தான் (அப் 9:43; 10:5,6,9). புறவினத்தாரின் உலகிலிருந்து அந்த வேளையில் தனக்கொரு மிஷனரி அழைப்பு வருமென அவன் சற்றும் எதிர்பார்த்திருக்கமாட்டான். அவன் இனவுணர்வு கொண்ட ஒரு யூதன். ஆனால் "**ஆவியானவர்:** இதோ, மூன்று மனிதர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து ஒன்றும் சந்தேகப்படாமல் அவர்களுடன் போ; நானே அவர்களை அனுப்பினேன்" என்றார் (அப் 19:19,20; 11:12 அ). அடிப்படையில் பேதுரு யூதருக்கு அப்போஸ்தலனாகவே அழைக்கப்பட்டிருந்தான் (கலா 2:7,8). யூதரல்லாதவர்மீது அவனுக்குப் பிரியமும் கிடையாது. ஆனால் விண்ணர சின் சாவிகளைக் கிறிஸ்து முதலாவது பேதுருவிடம் கொடுத்திருந்ததால், யூதரல்லாத புறவினத்தார் நடுவில் ஊழியத்தைத் துவக்கிவைக்கப் **பரிசுத்த ஆவியானவர்** அவனையே பணித்தார் (மத் 16:16-19). தேவனு டைய மிஷனரித் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் ஆவியானவரின் உந்துதல்களுக்கு உடனடியாய் உடன்படும் மனப்பக்குவம் நமக்குத் தேவை.

• அந்தியோகியா சபையில் தீர்க்கதரிசிகளாகவும் போதகர்களாகவு மிருந்த ஐவரில் பவுலும் பர்னபாவும் இருவர். இந்தச் சபையிலுள்ள சீடர்கள்தான் முதன்முதலாவது கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டனர் (அப் 11:26; 13:1). இந்த உள்ளூர்ச் சபையில் பவுலும் பர்னபாவும் எவ்வளவு ஆசீர்வாதமாயிருந்திருப்பார்கள்; ஆனாலும் **பரிசுத்த ஆவியானவர்** அங் குள்ள மற்ற தலைவர்களிடம் பேசி இவ்விருவரையும் இடம் விட்டு இடம் செல்லும் வெளியூர் ஊழியத்திற்குப் பிரித்துவிடச் சொன்னார் (அப் 13:2). இவர்களை அனுப்பிவைத்தது அங்குள்ள பிற தலைவர்களெனினும் அவர்கள் "**பரிசுத்த ஆவியினால்** அனுப்பப்பட்டுப்" புறப்பட்டுச் சென்றார்களெனச் சொல்லப்படுமளவிற்கு ஆவியானவர் அக்காரியத்தில் ஈடுபாடு கொண்டிருந் தார் (வச 3,4ஐ ஒப்பிடுக). தங்களுக்கிருக்கும் தலைசிறந்த ஊழியரை மிஷனரிப் பணிக்காய் அனுப்பிவிடும் சபைகள் நம்மிடை உண்டோ ? இந்த நாட்களில் பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் பேசுவதில்லையோ ? அல்லது நாம்தான் கீழ்ப்படியாமலிருக்கிறோமா ?

ஆவியானவர் நம்மைப் பணிக்களங்களுக்கு அனுப்பிவைப்பது மட்டு மல்ல, பணியிலும் நமக்கு நடத்துதல் தருகிறார். அவரது வழிநடத்துதல் திறந்த வாசல்கள் அல்லது மூடிய கதவுகள் மூலமாய் இருக்கலாம் (அப்

16:6-9). மிஷனரிகளின் இருதயங்களிலும் குறிப்பிட்ட இடங்கள் அல்லது இனங்களைக் குறித்துத் தணியா தாகத்தை வைத்துவிடுகிறார். இதோ வோர் எடுத்துக்காட்டு: "எருசலேமுக்குப் போகவேண்டுமென **ஆவியில்** தீர்மானித்துக்கொண்டு ரோம் நகரையும் பார்க்கவேண்டுமென்று பவுல் சொல்லிக்கொண்டான்'' (அப் 19:21). எல்லா மக்களுக்கும் செய்தி ஒன்று தான் எனினும் கலாச்சாரத்திற்கேற்ப செயல்முறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் (1 கொரி 9:20-22). "ஞானத்தையும் அறிவையும் அருளும் ஆவியாக'' பரிசுத்த ஆவியானவர் நாம் சூழ்நிலைக்கேற்ப விவேகமாய் நடந்துகொள்ள நம்மை நடத்துவார் (ஏசா 11:2).

## 4. அவர் நம்மைக் கொடுக்க உற்சாகப்படுத்துகிறார்.

மிஷனரிப் பணிக்குப் பணம் முதன்மையானதல்ல, ஆனால் முக்கிய மானது. ஏற்கனவே நிறுவப்பட்ட சபைகளைப் பராமரிக்க ஆகும் செலவை விட புதிய இடங்களில் மிஷனரிப் பணி செய்வதற்குக் கூடுதல் பணம் தேவைப்படும். தசமபாகம் கொடுத்தல் ஆரோக்கியமானதொரு பழக்க மாயினும், பத்திலொன்றிற்குமேல் கிறிஸ்தவர்கள் கொடாவிடில் அகிலவுலக நற்செய்திமயமென்பது வெறும் கனவாய்த்தானிருக்கும்.

பெந்தெகொஸ்தேயின் ஆவியானவர் அவரைப் பெற்றுக்கொண்டவர் களிடையே தயாளமாய்க் கொடுக்கும் ஆவியைக் கிளறிவிட்டார். வேதத்தி லிருக்கும் விபரத்தின்படி, நேரடியாகவோ மறைமுகமாகவே, அப்போஸ் தலர்கள் சீடர்களைத் தங்களது உடைமைகளையெல்லாம் விற்றுத் தேவை யுள்ளோருடன் பகிர்ந்துகொள்ளும்படிப் பொதுவாய் வைத்து அனுபவிக்க வேண்டுமென்று சொல்லவேயில்லை. தாங்களாகவே அவர்கள் அப்படிச் செய்ததுதான் அற்புதங்களிலெல்லாம் அற்புதம்! (அப் 2:44,45; 4:34,35).

ஆவியானவர் அபரிமிதமாய் ஊற்றப்படுகிறாரென்று உலகெங்கும் பேசப்படுகிறது. மக்கள் நவநாவுகளில் பேசுகிறார்கள், சத்தம் போடு கிறார்கள், குதிக்கிறார்கள், நடனமாடுகிறார்கள், கீழே விழுகிறார்கள், உருளுகிறார்கள், இப்படிப் பல. ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுவிட்டதால் தனது செல்வத்தை ஏழை எளியவர்க்கு வாரி வழங்கு கிறாரென்று எவரைக் குறித்தாவது கேள்விப்படுகிறோமோ? ஆவியின் அபிஷேகத்திற்கு நடைமுறையில் நிரூபணமான அடையாளம் அப்போஸ்தலர் இரண்டு நான்கா, இரண்டு நாற்பத்தினான்கா? கொடுப்பதில் முதன்மை யாயிருக்கும் இருபது அமெரிக்க சபைகளில் ஒன்றுகூட பெந்தெகொஸ்தே சபையல்ல என்று மிஷனரிப்பணி ஆய்வாளர் டேவிட் பேரட் என்பவர் கூறுகிறார். நாம் எங்கே தவறிவிட்டோம்?



பரிசுத்த ஆவியானவர் மகிமையின் ஆவியானவர் (1 பேது 4:14). அவர் நம்மை ஆட்கொள்ளும்போது நித்திய மகிமையின் காட்சிகளை நமது விசுவாசக் கண்களுக்குக் காட்டுகிறார். அதின் விளைவாக இவ் வுலகச் செல்வத்தின் மீதுள்ள நமது பிடிப்பு தளர்கிறது. சாலேமின் ராஜா வாகிய மெல்கிசெதேக்கிடமிருந்து அப்பமும் ரசமும் பெற்றுக்கொண்ட ஆபிரகாம் சோதோமின் ராஜா கொடுத்த பொருட்களை வாங்க மறுத்து விட்டான் (ஆதி 14:18-24). பரிசுத்த ஆவியானவரது ஊழியத்தின் இப் பரிமாணம் நமது வாழ்விலும் போதனையிலும் திரும்பப் பெறப்படவேண்டும். அப்பொழுதுதான் கொடுத்தலில் இதுவரை எதிர்பார்த்திருக்கும் எழுப்புதல் வரும்.

## 5. அவர் நமக்கு அறுவடைசெய்ய உதவுகிறார்.

விளைந்த பலனை அறுப்பதுதான் மிஷனரிப் பணியில் மிகக் குதூகல மான கட்டம். ஆவியானவரின் கடைசிக்கால அருள்மாரியானது இறுதிக் கால ஆத்தும அறுவடையைத் துரிதப்படுத்துகிறது. யோவேலின் தீர்க்க தரிசனத்தைப் பேதுரு தனது பெந்தெகொஸ்தே பிரசங்கத்தில் மேற் கோள் காட்டி, "கடைசி நாட்களில் மானிடர் யாவர்மீதும் என் **ஆவியை** ஊற்றுவேன்... அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளு கிறனெவனும் இரட்சிக்கப்படுவான்'' என்று கூறினான் (அப் 2:16,17,21). முழுநேர ஊழியரை மட்டுமல்ல, முழுச்சபையையும்— "குமாரர்... குமாரத் திகள்... வாலிபர்... முதியோர்... வேலைக்காரர்... வேலைக்காரிகள்''— பரிசுத்த ஆவியானவர் திரட்டி தானியத்தைச் சேகரிக்க வைக்கிறார் (வச 17,18). பரிசுத்த ஆவியானவரது எழுப்புதலின் விளைவே தீவிர நற்செய்திப்பணியாகும். தமது மலைமீதிருக்கும் தமது மக்கள்மீது ஆண் டவர் ஆசீர்வாதமான மழையைப் பொழியும்போது அவர்கள் தவறாமல் சுற்றியிருப்போருக்கு ஆசீர்வாதமாகிறார்கள் (எசேக் 34:26).

சபை மொத்தமாக மட்டுமல்ல, தனிநபர் ஒவ்வொருவரும் ஆவியின் நிறைவினால் வல்லமையான ஆத்துமாதாயகராய் மாறுகின்றனர். பர்னபா வைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறதைக் கவனியுங்கள்: "அவன் நல்லவனும் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனுமாயிருந்தான்; அநேகர் கர்த்தரிடம் சேர்க்கப்பட்டார்கள்'' (அப் 11:24).

வாயின் அறிக்கை மற்றும் திருமுழுக்கு மூலம் கிறிஸ்தவ வாழ்க்கைக்குள் வெளிப்படையாய் நடத்தப்படுமுன்னரே சுவிசேஷத்தைக் கேட்போர்மீது ஆவியானவர் அருளப்படுவதை மிஷனரிப் பணிக்களங்களில் அடிக்கடி கண்டிருக்கிறோம். இவ்வித நிகழ்வுகளிருந்தால் சபை வளர்ச்சி அமோக

மாயிருக்கும். கொர்நெலியுவின் வீட்டில் நடந்தது இவ்விதத் தெய்வீகச் செயலுக்குச் சிறந்ததொரு சான்று (அப் 10:44-48). யூதரோ கிரேக்கரோ, அடிமைகளோ சுயாதீனரோ, எக்கலாச்சாரத்திலும் எத்தரத்திலும் இருப்பவர்களைக் கிறிஸ்துவின் ஒரே உடலுக்குள் ஞானஸ்நானப்படுத்துகிறவர் (உட்படுத்துகிறவர்) பரிசுத்த ஆவியானவர்தானே! (1 கொரி 12:13).

அறுவடை குறைவு அல்லது பிந்துகிறது என்றால் பரிசுத்த ஆவியானவரின் செயல் அங்கு இல்லை என்றும் முடிவுகட்டிவிடக் கூடாது. எல்லா நிலமும் ஒன்றுபோலிராது. விதைப்பதிலும் நீர்ப்பாய்ச்சுவதிலும் நாம் உத்தமமாயிருக்கவேண்டும்; கனி தருதலைக் கர்த்தர் கரத்தில் விட்டுவிட வேண்டும். "நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலேயே எல்லாம் ஆகும்" என வேதம் அழுத்திக் கூறுகிறது (1 கொரி 3:7). எல்லாம் செய்து முடித்தபின், கர்த்தர் நமது நிலங்களில் மழையைப் பெய்யப்பண்ணும்படி அவருக்குக் காத்திருக்கவேண்டும் (ஓசி 10:12). அவர் நம்மை வெட்கப்படுத்தமாட்டார். நமக்காக **முன்மாரியையும் பின்மாரியையும்** அருளிச்செய்வார் (யோவேல் 2:23). சாதகச் சிந்தையுடன் எதிர்பார்த்துக் காத்திருப்போம் (வச 21). நமது உழைப்பு வீண் போகாது (1 கொரி 15:58). "நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்" (கலா 6:9ஆ).

### 6. அவர் சபைகளை வளரச் செய்கிறார்.

தனது மகன் ஈசாக்கிற்குப் பெண் தேட எலியேசரை ஆபிரகாம் அனுப்பியதுபோல், பிதாவாகிய தேவன் தமது மகனுக்கு மணப்பெண்ணை ஆயத்தம்பண்ணப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பியுள்ளார். சபையைத் தேவாட்டுக்குட்டியானவருக்கு மணமுடிக்க இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அதை அலங்கரித்துக்கொண்டிருக்கிறார். கிறிஸ்து திரும்பி வருமளவும் சபையின் வளமைக்காகவும் வளர்ச்சிக்காகவும் பரிசுத்த ஆவியானவர் வைராக்கியமாய்ச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். ஆதிச் சபைகளைக் குறித்து அவைகள் "**பரிசுத்த ஆவியின்** ஆறுதலோடு நடந்து பெருகின" என வாசிக்கிறோம் (அப் 9:31).

தேவ சபையை மேய்ப்பதற்காய்க் கண்காணிகளை ஏற்படுத்துவது பரிசுத்த ஆவியானவரே (அப் 20:28). ஞான வசனம், அறிவுணர்த்தும் வசனம், பகுத்தறிதல் ஆகிய தமது வரங்களை அவர் அவர்களுக்கு அளித்து தலைமைத்துவத்தில் அவர்களை நடத்துகிறார்.

அவர் சத்திய ஆவி என்ற பாணியில் சபையை எல்லாச் சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறார் (யோ 16:13). மணவாளனுக்குப் பிரியமாய் மணவாட்டி



நடந்துகொள்ளும்படி அவருடைய வார்த்தைகளை அவளுக்கு ஆவியானவர் நினைவூட்டுகிறார் (யோ 14:26). உபதேசத்துக்கடுத்த சர்ச்சைகள் உருவாகும்போது ஆவியானவர் வசனத்தின்மீது புது வெளிச்சம் வீசி கூடுதல் தெளிவுக்குள் நடத்துகிறார். விருத்தசேதனப் பிரச்னைக்குத் தீர்வு காண எருசலேம் சங்கத்திலிருந்த தலைவர்களை ஆவியானவர் எவ்வளவு அழகாய் நடத்தினார் பாருங்கள்! "**பரிசுத்த ஆவிக்கும்** எங்களுக்கும் நலமாய்க் கண்டது" என்பதல்லவா அவர்களது முடிவாயிருந்தது (அப் 15:28).

ஒவ்வொரு மூட்டும் ஒவ்வொரு உறுப்பும் முழுமையாய்ச் செயல்படும்போதுதான் கிறிஸ்துவின் உடலாகிய சபையின் வளர்ச்சி சமநிலையாயிருக்கும் (எபே 4:16). அமைதியாயிருப்போரே பெரும்பான்மையினர் என்றிருக்கும் திருச்சபை புதிய ஏற்பாட்டுச் சபையே அல்ல. பரிசுத்த ஆவியானவருக்கு முழுச் சுதந்திரம் கொடுக்கப்படும்போது அவர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஊக்கமும் உற்சாகமும் தந்து தேவன் ஒவ்வொருவருக்கும் அளித்துள்ள முழுக் கிருபையுடன் அவர்கள் செயல்படச் செய்கிறார். சபைக்குள் உள்ள எதையும் அது ஆன்மீகப் பணியல்ல என்று சொல்லவே முடியாது. அது கலைத்திறனோ தலைமைத்துவமோ அதற்கு விசை கொடுப்பவர் **ஆவியானவரே** (யாத் 31:1-5; அப் 6:3).

### 7. அவர் நம்மைப் பாடுபடப் பலப்படுத்துகிறார்.

பாடுகளில்லாது மிஷனரிப்பணியில்லை. பரிசுத்த ஆவியானவரை "வேறொரு தேற்றரவாளன்" என்று ஆண்டவராகிய இயேசு அறிமுகம் செய்தார். தேற்றுகிறவரான அவர் துன்புறுத்தல்களை மிஷனரிகள் சந்திக்கு முன்னரே அவர்கள் இருதயங்களைப் பலப்படுத்திவிடுகிறார். மிஷனரி பவுலின் அறிக்கை: "கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று **பரிசுத்த ஆவியானவர்** நகர்தோறும் தெரிவிக்கிறதை அறிந்திருக்கிறேன்" (அப் 20:23).

பன்னிருவரைப் பணிக்கு அனுப்பிவைக்கும்போது தாம் கொடுத்த உரையில் இயேசு, "எனக்காய் அதிபதிகள், அரசர்கள் முன் கொண்டுபோகப்படுவீர்கள்; அவர்கள் உங்களை ஒப்படைக்கும்போது, எப்படி என்ன பேசுவோம் என்று கவலைப்படாதிருங்கள்; பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் **ஆவியானவரே** உங்களிலிருந்து பேசுகிறவர்" என்று தைரியப்படுத்தினார் (மத் 10:18-20). ஸ்தேவானில் இது அப்படியே நிறைவேறியதைக் காண்கிறோம். அவன் பிரதானமாக ஒரு பிரசங்கியோ போதகனோ அல்ல, சபையின் நிர்வாகக் காரியங்களைக் கவனிக்க நியமிக்கப்பட்ட உதவிக்காரன்தான் (அப் 6:2-5). ஆனால் அவனது

எதிராளிகள் "அவன் பேசிய ஞானத்தையும் **ஆவியையும்** எதிர்த்து நிற்கக் கூடாமல் போயிற்று" (வச10). அவன் "**பரிசுத்த ஆவியினால்** நிறைந் தவனாய்" இரத்தசாட்சி மரணத்தைத் தழுவினான் (அப் 7:55). படியாத ஆனால் ஆவியினால் நிரம்பிய சில ஊழியர் புதிய மிஷனரிக் களங்களில் எதிர்ப்பாளர்களுக்குக் கொடுக்கும் பதில்கள் தேர்ந்த இறையியல் நிபுணர் களையும் திகைக்க வைத்துவிடும்!

பாடு பாடுதான். வேதனை வேதனைதான். ஆனால் விளங்கிக்கொள்ள முடியாத மகிழ்ச்சியினால் ஆவியானவர் துன்புறுவோரை நிரப்புகிறார் (அப் 13:50-52). இது துன்புறுத்துவோரும் துன்புறுவோரும் புரிந்துகொள்ள முடியாத ஒன்று. நெடுகவே சபைச் சரித்திரத்தில் வரும் இரத்தசாட்சிகளின் சரிதைகள் இதற்குச் சான்று. வெளிப்படுத்துதல் 2 மற்றும் 3 ஆம் அத்தி யாயங்களிலுள்ள ஏழு சபைகளில் கடிந்துகொள்ளப்படாத இரண்டும் மிஷனரிச் சபைகளாம். சிமிர்னா கிறிஸ்தவர்களுக்கு "ஜீவ கிரீடம்" வாக்க ளிக்கப்பட்டது. பிலதெல்பியா விசுவாசிகள் "ஆலயத்தில் தூண்களாய்" நிறுத்தப்படுவரென வாக்களிப்பட்டனர். இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும்?

ஆவியானவர் சபைக்கு வெளியிலிருப்போரைக் குறித்துச் சபையின ருக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்!



# *18*

# *ஏழைக்கு இரங்கும் இறைவன்*

**அவன்** நரகத்திற்குச் சென்றதேன்? வேறொருவனுடைய மனைவியைத் திருடிக்கொண்டானோ? யாரையும் கொலை செய்தானோ? அச் செல்வந்தன் காரணம் தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தான். ஆபிரகாம் அவனுக்குக் கொடுத்த பதில் இதோ: "மகனே, நீ பூவுலகில் உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமை களை அனுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்" (லூக் 16:25). செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டதே அச்செல்வந்தனின் பாவம். "விலை யுயர்ந்த" ஆடைகள் தரித்திருந்த அவன் "பருக்கள்" நிறைந்திருந்த லாசருவின் வேதனையை நீக்க ஒன்றும் செய்யவில்லை. "சுகபோகமாய்" வாழ்ந்துகொண்டிருந்த அவன் "வாசலருகே கிடந்து" மேசையிலிருந்து விழும் ரொட்டித்துண்டுகளுக்காக நாய்களோடு போட்டியிடவேண்டி யிருந்த மனிதனுக்கு எளியதோர் உணவும் உறைவிடமும் அளிக்கவும் தவறிவிட்டான் (வச 19-21).

இடது பக்கத்தில் நின்றவர்களை விண்ணரசர் நித்திய அக்கினிக்குள் துரத்தியதேன்? பசியாயிருந்தோர்க்கு அவர்கள் ஆகாரம் கொடுக்க வில்லை, தாகமாயிருந்தோரின் தாகத்தைத் தீர்க்கவில்லை, அன்னியரைச் சேர்த்துக்கொள்ளவில்லை, உடையில்லாதோரை உடுத்தவில்லை, நோயி லும், சிறையிலும் வருந்துவோரைச் சந்திக்கவில்லை. ஏன் என்று திகைத்துக்

கொண்டிருந்தோருக்கு அவரது பதில் இதுதான். செய்யவேண்டியதைச் செய்யத் தவறிய பாவமே அவர்களைப் "பிசாசுக்காகவும் அவன் தூதருக்கா கவும் ஆயத்தம்பண்ணப்பட்ட" இடத்திற்கு அனுப்பிற்று (மத் 25:41-46).

நமது நித்தியத்தையே நிர்ணயிக்கும் இவ்வளவு முக்கிய உபதேசத்தைச் சபை போதுமான அளவு போதிக்காதது குறித்து வியக்கிறேன்: தசமபாகம், சபைக்குக் கொடுத்தல், இவைகளையெல்லாம் குறித்து ஏராளம் கேட்கிறோம், வாசிக்கிறோம். ஆனால் "தரித்திரரை நினைத்துக்கொள்ளுங்கள்" என்ற அப்போஸ்தல உபதேசத்தை முக்கியமாய்க் கருதாததேனோ ? (அப் 2:20).

## முக்கிய உபதேசம்

ஏழைகளுக்கு நாம் செய்யவேண்டியதைக் குறித்த உபதேசத்தை அளவுக்கு மீறி வலியுறுத்தி விடமுடியாது. வேதம் முழுவதிலும் இவ்வுபதேசம் தெளிவாகப் போதிக்கப்பட்டிருக்கிறது.

"மனந்திரும்புங்கள்" என்று முழங்கினான் வனாந்தரத்தில் அந்த முரட்டுப் பிரசங்கி. மக்களை முழுக்குமுன் மனந்திரும்புதலை நிரூபிக்கும் செயல்களை வலியுறுத்தினான். மக்கள் அவனிடம், "அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும் ?" என்றனர். "இரண்டு ஆடைகளை யுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கட்டும்; ஆகாரத்தை உடைய வனும் அப்படியே செய்யட்டும்" என்றான் அவன் (லூக் 3:10,11).

"வார்த்தை" வந்ததும் "சத்தம்" செய்து வந்த ஊழியம் முடிந்தது. இப்பொழுது யோவான் சிறையில்; இயேசு மேடையில். இவர்தான் வரவேண்டியவரா அல்லது வேறொருவருக்காய்க் காத்திருக்க வேண்டுமா என்று சிறையிலிருந்த யோவானுக்குச் சந்தேகம். தனது சீடர் இருவரை அனுப்பி விசாரித்தான். "நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவா னிடத்தில் போய் அறிவியுங்கள்... தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப் படுகிறது" என்று இயேசு சொல்லியனுப்பினார் (மத் 11:5). ஆம் எளிய வருக்குச் செய்த ஊழியம் அவரது மேசியா ஊழியத்திற்கு அத்தாட்சி யாயிருந்தது.

"விசுவாசம் அத்துடன் செயல்" எனும் உபதேச அப்போஸ்தலன் சுத்தமான பக்திக்கு தரும் வரையறை இதோ: "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடித் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதா



வாகிய தேவனுக்குமுன் மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது." (யாக் 1:27). "சுத்த" சுவிசேஷம் என்று பேசுகிறோம்; "சுத்த" பக்தி வேண்டாமா ?

"என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டேன்று சொல்லியும், செயல்களில்லாதவனானால் அவனுக்குப் பயனென்ன ? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா ?" எனச் சவாலிடுகிறான் அப்போஸ்தலன். இக் குறிப்பை விளக்க உடனே அடுத்து அவன் கையாளும் எடுத்துக்காட்டைக் கவனியுங்கள். "ஒரு சகோதரனாவது சகோதரியாவது ஆடையில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களிலொருவன் அவர் களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், உடலுக்கு வேண்டியவைகளை அவர் களுக்குக் கொடாவிட்டால் பயனென்ன ?" (2:14-16). வழங்காது வாழ்த்து வது வறட்டு விசுவாசம் !

## ஏழைகளின் இறைவன் !

அடிக்கடி வேதத்தில் தேவன் "ஏழைகளின் தேவன்" எனப்படுகிறார். "திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர் நீரே" என்றான் தாவீது (சங் 10:14). "தமது புனிதத் தலத்திலிருக்கும் தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்" (68:5). தேவனது இக்குணாதிசயத்தைச் சொல்லி அவரை ஆராதிப்பதில் தாவீதுக்குப் பேரானந்தம். "சிறுமைப்பட்டவனை அவனிலும் பலவானுடைய கைக்கும், சிறுமையும் எளிமையுமானவனைக் கொள்ளையிடுகிறவனுடைய கைக்கும் தப்புவிக்கிற உமக்கொப்பானவர் யார், கர்த்தாவே, என்று என் எலும்புகளெல்லாம் சொல்லும்" என்றான் அவன் (சங் 35:10). எளியோர் மீது தேவனுக்கிருந்த கரிசனை தாவீதின் எலும்புகளுக்குள்ளும் சென்று விட்டது.

எளியோரின் நியாயத்தைக் கேட்க எவ்வளவு தூரமும் செல்ல நாம் ஆயத்தமா ? எளியோர், தள்ளப்பட்டோர் மீது செல்வந்தரும் வசதியுள் ளோரும் காட்டும் அநியாயம், அக்கிரமம் எல்லாம் நாமறியாததோ ? எளியோருக்கெனவே தனி நீதிமன்றங்களை அரசு நிறுவிவருகிறது. ஆனால் இக்காலங்களில் நீதிமன்றங்களும் அரசியல் குட்டைகளாக மாறுவது கடினமா ?

சபை என்ன செய்துகொண்டிருக்கிறது ? தமது பிரிய குமாரன் மீது பிதாவானவர் ஆவியை வைத்ததேன் ? "நியாயத்தை உண்மையாக

வெளிப்படுத்த!'' எளியோர்தான் நெரிந்த நாணலும், மங்கியெரிகிற திரியுமாம். ''அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துமட்டும் இளக் கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை'' (ஏசா 42:1-4). அவரது பிள்ளைகளாகிய, அவரது பிரதிநிதிகளாகிய நாம் அவரது குணத்தைப் பிரதிபலிக்கிறோமா?

## தேவனுக்கு உகந்த உபவாசம்

உபவாசத்தில் காணப்படும் புதிய உற்சாகத்திற்காய்த் தேவனைத் துதிப்போம். ஏதோ ஒரு வேளை, இரு வேளை உணவை விட்டுவிடுவது தேவனை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிடாது. உணவை விடுவதில் மட்டும் பெரிதாக ஒன்றுமில்லை, பக்தியற்றோர் பலரும் உடல் நலனுக்காய் உணவை அவ்வப்போது விடுவதில்லையா? பக்தியைப் பகட்டாய்ப் பறைசாற்றும் பயிற்சியாகவும் உபவாசம் மாறிவிடமுடியும். அதைத்தான் மாய்மாலம் என்றார் இயேசு (மத் 6:16). பிறர் மீது, குறிப்பாக எளியோர் மீது, கரிசனை யாக வெளிப்படும்படி அவருக்குமுன் முழுவதும் அர்ப்பணிக்கப்பட்ட உபவாசத்தையே அவர் விரும்புகிறார். தேவனுக்கு உகந்த உபவாசத்தை தீர்க்கன் ஏசாயா இவ்விதம் விளக்குகிறான்: ''அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப் பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளை யும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்திவிடப்பட்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், ஆடையில்லாதவனைக் கண்டால் அவனுக்கு ஆடை கொடுக்கிறதும், உனக்குத் தெரிந்தவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக் கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்?'' (58:6,7). ''திருச்சட்டத்தில் கற்பித்திருக்கிற முக்கியமானவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும்'' விட்டுவிடும் வெறும் சட்டரீதியான மார்க்கத்தைக் குறித்து எச்சரிக்கை!

கண்ட சகோதரனை நேசியாத நாம் காணாத தேவனை நேசிப்ப தெப்படி? எளியோருக்குச் செவியடைக்கிறவன் மீது தேவனது புன்முறுவ லிராது. ''ஏழையைப் பகடிபண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்'' (நீதி 17:5).

## சில்லரைப் பயன்கள்

திருச்சட்டத்தில் தேவன் தமது மக்களுக்குப் போதித்துள்ளது எளியோர் மீதுள்ள அவரது அக்கறையை அழகாய் வருணிக்கிறது. எடுத்துக்காட்டாக லேவியராகமம் 19:9,10ஐக் கவனியுங்கள். ''நீங்கள் பயிரை அறுக்கும்போது,



உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், உன் திராட்சத்தோட்டத்தில் பின் அறுப்பை அறுக்காமலும், அதில் சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.''

எங்கள் வீட்டின் முன்புறம் ஐந்து தென்னை மரங்கள் நாட்டினோம். காய்க்கத் துவங்கியதும் எங்களுக்குப் பெருத்த மகிழ்ச்சி. அடிக்கடி ஓலைகளையும் தும்புகளையும் அகற்றி மரங்களைச் சுத்தம் செய்யவேண்டிய திருந்தது. இதையெல்லாம் உலரவைத்து வீட்டிற்குப் பின்னால் ஓர் அடுப்பு கட்டி இந்த விறகையெல்லாம் பயன்படுத்தலாமே என்று ஒரு பெரிய சோதனை! ஒழுகும் தங்கள் கூரைமீது பரப்ப இந்த ஓலைகளையெல்லாம் சுற்றியுள்ள குடிசைவாழ் மக்களுக்குக் கொடுத்தாலென்ன? லேவியராகமம் 19:9,10ஐ நினைவுபடுத்தி தேவன் எங்களைக் கடிந்துகொண்டார். இந்தச் சில்லரைப் பயன்களைக்கூட, பிறருக்குக் கொடுக்க விரும்பாத அந்தக் கஞ்சத்தனம் எங்களுக்கு ஏனோ? தேவன் திட்டமாக எங்களோடு இடை பட்டார். உடனே ஓலையும் தும்பும் மட்டுமல்ல, தேங்காய் எல்லாமுமே எளியோருக்குத்தான் எனத் தீர்மானித்துவிட்டோம். இப்பொழுது எங்கள் சொந்தத் தேவைக்கு எடுக்கும் தேங்காய்க்குரிய பணமும் எளியோருக்குப் போய்விடும். எளியோருக்குக் கொடுப்பதாலுண்டாகும் மகிழ்ச்சிதான் என்னே!

புகைவண்டியில் நாங்கள் ஒருமுறை பயணம் செய்துகொண்டிருந்தபோது கண்ணியமாய் உடையணிந்திருந்த இரு உயர் அதிகாரிகள் போன்றவர்கள் அவசரமாக நாங்கள் உட்கார்ந்திருந்த இருக்கையருகில் வந்து காலைச் சற்று உயர்த்திக்கொள்ளும்படிக் கேட்டனர். ஏன் என்றேன். ஐம்பது பைசா நாணயம் தவறி விழுந்தோடிவிட்டது என்றனர். ''இதற்காகவா?'' என்றேன்! தெருவிலோ, புகைவண்டியிலோ, பேருந்திலோ நாணயங்கள் கீழே விழுந்துவிட்டால் அதைப் பொறுக்கும் தரக்குறைவான பழக்கம் வேண்டாம் என்று விசுவாசிகளுக்குப் போதித்துவருகிறேன். அதை எளியோருக்கென விட்டுவிடுவோம். புகைவண்டிகள் முடிவான நிலையத்தை அடைந்ததும், பயணிகள் இறங்கியதும், உள்ளே ஏதாவது கிடைக்காதா என்று அலை மோதியடித்துத் தேடியலையும், கந்தையுடையணிந்த சிறுவரும் எளியோரும் எத்தனை! ''சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமல் அவைகளை எளியவனுக்கு விட்டுவிடு'' என்று தேவன் சொல்லவில்லையா? சாக்கடைத் தண்ணீரையும் அலசிப்பார்த்து ஏதாவது கிடைக்காதா எனத் தேடும் மக்கள் நம் நாட்டில் உண்டு தெரியுமா? கிறிஸ்தவனே, சிந்தித்துப்பார்! மிஞ்சிப் போனால் ஆண்டு முழுவதும் சேர்த்துப் பார்த்தால் அப்படி எத்தனை தடவைதான் காசுகளைக் கீழே தவறவிடுவீர்கள்? அற்பப் புத்தி வேண்டாம்.

## இரப்போமா, இரங்குவோமா?

யோபுவின் நீதி நடைமுறையில் வெளிப்பட்டது. அவனது சாட்சியைக் கேளுங்கள்: "முறையிடுகிற ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவி யற்றவனையும் இரட்சித்தேன்... விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணினேன்... நான் குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலுமாயி ருந்தேன். நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து, நான் அறியாத வழக்கை ஆராய்ந்துபார்த்தேன். நான் அநியாயக்காரருடைய கடைவாய்ப் பற்களை உடைத்து, அவர்கள் பறித்ததை அவர்கள் பற்களிலிருந்து ÃL § » nd ‹ " (nahò 29:11-17). எளியோரின் விவகாரங்களில் இந்தப் பழம் பரிசுத்தன் தானாகவே எவ்வளவு ஈடுபட்டான் என்று பாருங்கள். நமது அனாதைகளைப் பராமரிக்க நாம் ஏன் எப்பொழுதும் அமெரிக்கா விலிருந்தும் ஜெர்மனியிலிருந்துமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண் டும்? வீட்டிற்கொரு அனாதைப் பிள்ளையைத் தாங்கும் குடும்பங்கள் நமது சபைகளில் இல்லையோ? முழு அனாதை இல்லம் ஒன்றைத் தாங்கக் கூடிய சபைகள் நமது நாட்டில் இல்லாமலா இருக்கின்றன? ஆனால் நாம் இந்தப் பாணியில் நமது விசுவாசிகளுக்குப் போதிப்பதில்லை. எப்பொழுது பார்த்தாலும் நமது கைகள் மேற்கு நோக்கியே இருக்கின்றன.

மேலை நாடுகளிலுள்ள நிவாரண நிறுவனங்கள் இந்தியச் சபைக்கு அளித்துவரும் உதவிகளுக்காய்த் தேவனுக்கு நன்றி. ஆனால் எளியோ ரையும் வருந்துவோரையும் ஆதரிக்கும்படி தன்னாலியன்ற அத்தனை யையும் கொடுக்காத எவருக்கும் இப்பணங்களை வாங்கவோ பகிரவோ உரிமை கிடையாது. தன்னால் முடிந்த அத்தனையையும் கொடுக்கும்வரை, பணத்திற்காக ஜெபிப்பது மாய்மாலம் என்றார் அனாதை விடுதிகளின் முன்னோடிகளில் ஒருவரான ஜார்ஜ் முல்லர்! மேலைநாட்டுப் பணம் நாம் கொடுப்பதைக் கூடுதல் பலப்படுத்தலாமே ஒழிய, அதற்குப் பதிலானதாகக் கூடாது. ஒருபோதும் கொடாது எப்போதும் வாங்கிக் கொண்டிருப்பவன்தான் பிச்சைக்காரன். இரப்போர் இரங்குவோராக மாற இதோவோர் அழைப்பு!

## ஏழையின் சிரிப்பு

யோபுவின் சாட்சியைத் தொடர்ந்து வாசிப்போம். "எளியவர்கள் வாஞ்சித்ததை நான் கொடாதிருந்து, விதவையின் கண்களைப் பூத்துப் போகப்பண்ணி, தாய் தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில் சாப்பிடா மல், நான் ஒருவனாய்ச் சாப்பிட்டதுண்டோ? ...ஒருவன் உடுப்பில்லாததினால் மடிந்து போகிறதையும், ஏழைக்கு மூட ஆடையில்லாதிருக்கிறதையும், அவன் என் ஆட்டுமயிர்க் கம்பளியினாலே அனல் கொண்டதினால், அவன் இடை என்னைப் புகழாதிருந்ததும் உண்டானால் என் கைப்பட்டை தோளி



லிருந்து சரிந்து, என் புயத்து எலும்பு முறிந்துபோவதாக" (31:16-22). இப்படி நம்மில் எத்தனைபேர் சாட்சிகூற முடியும்? அங்கத்தினர் அத்தனைபேரும் இவ்விதமாய்த் துணிந்து அறிக்கையிட்டால் சபை முழு வதும் முடவர் கூட்டமாகிவிடும் என்றுதான் நினைக்கிறேன்! "இரங்காத கரங்கள் இருந்து எதற்கு?" — இதுதான் யோபுவின் தத்துவம்!

பயணமாய்ச் செல்லும்போதெல்லாம் பெருவழிகளில் கந்தலிலும், நிர்வாணமாயுமிருக்கும் எளியோரை உடுத்துவிக்க எனது மாமனார் மாமியார் எப்போதும் புதுத் துணிகள் எடுத்துச் செல்வர். துணியை வாங்கி யதும் இம்மக்களின் முகங்களில் பளிச்சிடும் புன்முறுவலைக் கண்டு பலமுறை திகைத்துப் போயிருக்கிறேன். எளியோருக்கு உதவும் உபதேசத் தின் பல அத்தியாயங்களை என் மாமனார் மாமியாரிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன்.

நமது பழைய துணிகளையாகிலும் ஏழைகளுக்குக் கொடுத்தாலென்ன? இரண்டிருந்தால் ஒன்றைக் கொடுத்துவிடு என்றான் யோவான் ஸ்நானன். இது நமக்குச் செமிக்காது; எனவே சற்றுத் தண்ணீர் கலந்து தருகிறேன். பத்து இருந்தால் ஒன்றைக் கொடுங்களேன்! நமக்குத் தசமபாகம்தானே தெரியும்! பத்து உடைகளுள்ள அத்தனைக் கிறிஸ்தவரும் ஆளுக்கொரு உடையை இன்று எளியவருக்குக் கொடுத்துவிட்டால், அதுதான் ஓர் அன்பின் புரட்சியின் துவக்கமாயிருக்கும். ஆயிரமாயிர எளியோரின் முகங்கள் மலரும். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பார் முன்னாள் முதல்வர் அண்ணாத்துரை அவர்கள். புத்தாடை ஒன்று கிடைத்ததும் பழையது ஒன்றைக் கட்டாயம் கொடுத்துவிடுவது நல்ல பழக்கமாகும்.

எளியவருக்குச் செய்ய விரும்புவதை உடனே செய்துவிடவேண்டும். "நன்மை செய்யும்படி உனக்குத் திறனிருக்கும்போது, அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே. உன்னிடத்தில் பொருள் இருக்கை யில் உன் அயலானை நோக்கி: நீ போய்த் திரும்பிவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே" (நீதி 3:27,28). உடன் தர்மம்தான் உசிதம். உடனே கொடுப்பவன் இரட்டிப்பாய்க் கொடுக்கிறானாம். எவ்வளவு சீக்கிரம் அது பிந்திப்போகுமென நாமறியாததால் சீக்கிரம் கொடுத்துவிட்டேன் என்று ஒருபோதும் சொல்ல முடியாதென்றார் ஒருவர்.

## தந்தையைப் போல் பிள்ளை!

யாருக்குக் கொடுக்கவேண்டும்? இதுதான் அடுத்த கேள்வி. விசுவாச வீட்டாருக்கு சிறப்பாய்க் கொடுக்கவேண்டுமென்பது உண்மைதான் (கலா

6:10). ஆனால் நமது ஈகையானது இந்த வேலிகளையெல்லாம் தாண்டியும் செல்லவேண்டும். கிறிஸ்தவரோ, கிறிஸ்தவரல்லாதவரோ, தேவையிலுள்ள எவருக்கும் உதவவேண்டும். தீயோர் மீதும் நல்லோர் மீதும் தமது சூரியனை உதிக்கப்பண்ணும், நீதியுள்ளோர் மீதும் அநீதியுள்ளோர் மீதும் மழையைப் பொழியும் விண்தந்தைக்கு அல்லவோ நாம் பிள்ளைகள் ? (மத் 5:45).

இந்தியரில் ஐம்பது சதவீதத்தினர் இன்னும் வறுமைக்கோட்டிற்குக் கீழ்தான். தினம் இருவேளை சாப்பாடு கிடைத்தால் நாம் இந்தியாவில் பணக்காரர்தான். கொடுக்குமளவு என்னிடத்திலில்லை என்று எந்தக் கிறிஸ்தவனும் சொல்லமுடியாது. எவ்வளவு இருந்தால்தான் போதும் ? "கொடுத்தான் பெருகினான், சேர்த்தான் உருகினான்" என்ற ஜெர்மானியப் பழமொழி ஒன்றுண்டு. பகிரத் தெரியாதவனே பட்டையேந்துவான் என்றார் பக்தன் ஸ்பர்ஜன். எளியோருக்கான உணர்வெல்லாம் உன் பாக்கெட்டில் உதிக்கட்டும் என்றும் கூறினார் அப்பிரசங்க வேந்தன்!

**இன்னொரு தசமபாகமா?**

எளியவருக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் ? வேதத்தில் இதற்குச் சட்டமில்லை, ஆனால் "உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்றிருக்கிறது (2 கொரி 9:7). கூட்டத்திற்கென் றாலும், ஆலயக் கட்டிடத்திற்கென்றாலும் சொல்லப்படும் வாசகம் இதுதான். ஆனால் இவ்வசனம் வரும் பகுதி எளியவருக்கு உதவுதலை அடுத்தது என நீங்கள் கவனித்ததுண்டா ? (வச 1,9,12). முதலாம் கட்டளை தேவனை நேசிக்கவேண்டும் என்பது; அதற்கு இணையான இரண்டாம் கட்டளை மனிதரை நேசிப்பது என்றார் இயேசு. தேவனது ஊழியத்திற்குத் தசமபாகம் கொடுக்கவேண்டுமென்பது நமது தாற்பரியமானால், அப்படியே எளிய வருக்கும் ஒரு தசமபாகம் கொடுத்தாலென்ன ? கூடாதா ? இரண்டாம் கட்டளை இரண்டாந்தரமானதோ ? இரண்டாம் கட்டளை முதலாம் கட்ட ளைக்கு "ஒப்பானது" என்றல்லவோ இயேசு போதித்தார் ? (மத் 22:39). இதை விளக்கத்தான் நல்ல சமாரியனைக் குறித்துப் பேசினார். அதற்கும் ஆன்மீக அர்த்தம் கொடுத்துவிட்டோமோ ?—அபத்தம்! ஆசாரியருக்கும், லேவியருக்கும் தசமபாகம் வசூலிப்பதிலேயே கவனம், நேரம் எல்லாம் போய்விடுகிறது. நீங்களாவது ஒரு நல்ல சமாரியனாய் மாறுவீர்களா—தயவுசெய்து ? (லூக் 10:29-37).

அன்னை தெரசாவுக்காக கடவுளைத் துதிக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர் இல்லையோ ? இதயம் நோகிறது. சபைகளில் "எளியோர் பண்டிகை" ஒன்று கொண்டாடினாலென்ன ? பெருவழிகள்,



தெருக்கள், சந்திகளிலிருந்து பிச்சைக்காரர், முடவர், குருடர் போன்றோரை அழைத்து ஆலயத்தை நிரப்பி, அவர்களுக்கு உடையும் உணவும் கொடுக்கும் பண்டிகை! எவ்வளவு குதூகலமாயிருக்கும்! இரக்கம் செவிடருக்குக் கேட்கும்; குருடருக்குத் தெரியும்!

ஒரு தடவைக்குமேல் எளியவனொருவன் கேட்டுவிட்டால் நமக்கு எரிச்சல் வந்துவிடுகிறது. கடவுளிடம் மட்டும் நாம் கேட்டுக்கொண்டேயிருக் கிறோமே! அவரும் கொடுத்துக்கொண்டேயிருக்கிறாரே! நாளில் மூன்று முறை அல்லது நான்குமுறை வயிறு புடைக்க உண்டுவிட்டு, இரவில் "அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று ஜெபிக்கிறோம். எங்கே கொட்ட ? இவ்வளவு இருந்தும் திருப்தியில்லையே. இல்லாத எளியவன் அடிக்கடி கேட்பது தவறோ ?

**எதிர்ப்புகள்**

இவ்வித உபதேசத்திற்கு எதிர்ப்புகள் ஏராளம். இது என்ன சுவிசேஷம் என்பர். எளியோரைக் கவனியாத சுவிசேஷம் ஆண்டவருடையதல்ல. Soap-Soup-Salvation என்று வேண்டாம்; Salvation-Soap-Soup என்றிருக் கலாமே! "இவைகளையும் செய்யவேண்டும்; அவைகளையும் விடாதிருக்க வேண்டும்" என்றுதானே போதித்தார் ? சமநிலைக் கிறிஸ்தவராயிருங்கள்.

ஆன்மீக வாழ்வின் ஆசீர்வாதத்திற்கு இதில் என்ன இருக்கிறது என்பார் ஒரு சிலர். நித்திய ஜீவன் மீது நாட்டங்கொண்டிருந்தான் ஒரு வாலிபன். திருச்சட்டங்களை இயேசு வரிசைப்படுத்தியபோது அவற்றையெல்லாம் தன் சிறுவயதிலிருந்தே கடைப்பிடித்து வருவதாக வாலிபன் பதிலளித்தான். "இன்னும் என்ன குறைவுண்டு ?" என்றான். அதற்கு இயேசு, "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்றுத் தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்தில் உனக்குச் சொத்து இருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா" என்றார் (மத் 19:16-21). எளியவருக்குக் கொடுத்தலென்பது பூரணமாகுதலின் உபதேசத்தில் இரண்டறக் கலந்ததாகும். வீட்டில் பரண், அலமாரி எல்லாம் புரட்டிப் பாருங்கள். சும்மா கிடக்கும் பொருட்கள் ஏராளம் கண்டுபிடிப்பீர்கள். முதலா வது இவற்றையாவது எளியவருக்குக் கொடுக்கத் துவங்குங்கள்.

தேவ பயமில்லாததாலேயே மக்கள் ஏழ்மையிலிருக்கிறார்களென்பது இன்னும் சிலரது வேதாந்தம். இது வேத ஆதாரமற்ற, சிறுபிள்ளைத் தனக் கூற்றாகும். "கடவுள் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் செல்வந்தராகத் தெரிந்துகொள்ளவில்லையா ?" (யாக் 2:5). இயேசுவின்

தாயாகிய மரியாள் "பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள்." ஆட்டுக் குட்டியைக் கொண்டுவர அவளுக்குச் வசதியில்லாதிருந்ததால் ஒரு ஜோடிப் புறாக்களைத்தான் காணிக்கையாகக் கொண்டுவந்தாள் (லூக் 2:23,24; லேவி 12:8). பத்தில் பத்தையும் கர்த்தருக்குக் கொடுக்கும் அவ்வளவு பெரிய விசுவாசமிருந்த அந்த விதவையும் ஏழையாய்த்தானிருந்தாள். இரண்டே காசுதான் அவளிடமிருந்தது (மாற் 12:41-44). எருசலேம் பரிசுத்தவான்கள் தங்கள் நிலங்கள், உடமைகள் யாவற்றையும் விற்று அப்போஸ்தலர் பாதம் வைத்தனர். யாரும் சொல்லாமல், ஆவியின் நிறைவைப் பெற்றபோது தாங்களாகவே அப்படிச் செய்தார்கள். அவர்களும் ஏழ்மைக்குள்ளாயினர். மற்ற சபைகள் அவர்களுக்கு உதவவேண்டியதொரு நிலை உருவாயிற்று (அப் 4:34,35; ரோ 15:25,26). எனவே பொருளில்லாமையை ஆசீர்வாதமின்மை என்று அவ்வளவு எளிதாய்ச் சொல்லிவிட முடியாது.

## ஆசீர்வாதங்கள்

எளியவருக்கு அள்ளிக்கொடுப்போர் மீது வரும் ஆசீர்வாதங்கள் ஏராளம். **பொருளாதார** ஆசீர்வாதம் உண்டு. "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" (நீதி 19:17).

அப்படியே **உடலுக்கடுத்த** ஆசீர்வாதமும் உண்டு. பசியுள்ளோரோடு உங்கள் அப்பத்தைப் பகிர்ந்து ஆடையில்லாதோரை உடுத்துவிக்கும்போது உங்கள் "சுகவாழ்வு சீக்கிரம் துளிர்க்கும்" (ஏசா 58:8). "சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்... படுக்கையில் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவார்" (சங் 41:1-3).

**ஆன்மீக** ஆசீர்வாதமும் உண்டு. "ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்... உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்" (2 கொரி 9:9,10). "உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது" என்று தூதன் கொர்நேலியுவிடம் அறிவித்தான். பிரசங்கியார் பிரசங்கத்தை முடிக்குமுன் ஆவியின் அபிஷேகம் பெற்றது இவன்தான்! (அப் 10:4,44,47). எளியவரோடு அதிகமாக ஈடுபாடு கொள்ளும்போது நமது ஆவியும் எளிமையாகிறது. செல்வந்தருக்கே சொந்தமான பெருமையும் இறுமாப்பும் நம்மை விட்டகல்கின்றன. குனிந்து உதவுவதே இருதயத்திற்கு நல்ல உடற்பயிற்சியாகுமாம்!



இறுதியாக, **நித்திய** ஆசீர்வாதம். நற்செயல்களில் செல்வந்தராகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களாகவும் இருக்கையில் "நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி... நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக" வைக்கிறோம் (1 தீமோ 6:18,19).

## எந்த வகுப்பு?

மக்கள் எவ்வளவு "வைத்திருக்கிறார்கள்" எனும் அடிப்படையில் இந்திய அரசு அவர்களை வகுப்பு வாரியாகப் பிரித்துள்ளது. தேவனோ நாம் எவ்வளவு "கொடுக்கிறோம்" என்ற அடிப்படையிலேயே பிரிப்பார். உங்களுக்கு இயன்றதற்கும் அதிகமாய்க் கொடுத்தால் நீங்கள் முன்னேறிய வகுப்பினர். உங்களுக்கு இயன்றதை மட்டும் கொடுத்தால் நீங்கள் பின்தங்கிய வகுப்பினர். உங்களுக்கு இயன்றதற்கும் குறைவாகக் கொடுத்தால் அதிகம் பின்தங்கிய வகுப்பினராம். Forward Community, Backward Community, Most Backward Community!

நீங்கள் எந்த வகுப்பு ?

# 19

# எளியவரை ஆசீர்வதிப்பது எப்படி?

**இடம்** பொருள் காலத்தைக் கவனியாது கையாளப்படும் வேத வசனங்களில் ஒன்று, "உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்பதாகும் (2 கொரி 9:7). எளியவருக்கு நிவாரணப் பணிக்கென பணம் திரட்டுவதற்காக அல்ல, ஆலயக் கட்டிடங்கள், எழுப்புதல் கூட்டங்கள் மற்றும் நற்செய்திப் பெருவிழாக்கள் போன்றவற்றிற்குப் பணம் சேகரிக்கவே இவ்வசனம் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இவ்வசனம் காணப்படும் பகுதியாகிய 2 கொரிந்தியர் 8,9 அத்தியாயங்களோ தானதர்மத்தைப் பற்றியே பேசுகின்றன. அநேகருக்கு இது ஆச்சரியமாயிருக்கலாம். அது உண்மைதானாவென இவ்விரு அத்தியாயங்களை நீங்களே வாசித்துப்பாருங்கள்.

இவ்விரு அத்தியாயங்களின் கருத்துக்களைப் பொதுவான காணிக்கைகளை ஊக்குவிக்கப் பயன்படுத்துவதில் தவறில்லையெனினும், இப்படிப்பினைகள் குறிப்பாகவும் பிரதானமாகவும் எளியவருக்குக் கிறிஸ்தவரின் கடமையை, அதிலும் சபையிலுள்ள எளியவருக்கு உதவுவதையே போதிக்கின்றன என்பதை மறப்பது மடமை. பிரசங்கியாகிய நானும் இத்தவற்றைச் செய்திருக்கிறேன். பல ஆண்டுகள் இவ்விரு அத்தியாயங்களையும் வைத்துப் பொதுவான காணிக்கை கொடுத்தலைப் பற்றியே பேசி வந்திருக்கிறேன். ஆனால் எளியவர்மீது தமக்குள்ள அலாதிக் கவனத்தை அடிக்கோடிடும் இவ்வேதப் பகுதியிலுள்ள அதிசயங்களைக் காண



இப்பொழுது ஆண்டவர் என் கண்களைத் திறந்துள்ளார். புதிதாக இவ்விரு அத்தியாயங்களைப் படித்ததில் கிடைத்த சத்தியங்களை இங்கு எழுதுகிறேன்.

## 2 கொரிந்தியர் 8

***வச 1, "சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்."***

பவுல் அப்போஸ்தலன் மக்கெதோனியா விசுவாசிகளை மேற்கோள்காட்டி கொரிந்தியக் கிறிஸ்தவர்களுக்குச் சவாலிடுகிறான். மிஷனரிச் சுவிசேஷகர் மற்றும் சிறந்த பரிசுத்தவான்களின் வாழ்க்கைச் சரிதைகளை வாசிப்பதோடு எளியவரின் நலனுக்காகவே தங்களை ஊற்றிவிட்டவர்களின் வாழ்க்கையையும் பணிகளையும் நாம் படிக்கவேண்டும். அதிலிருந்து நமக்குக் கிடைக்கும் கிளர்ச்சியினால் தானதர்மத்தை நடைமுறையில் வெளிக்காட்டும் முறைகள் பல நமக்குப் புலப்படும்.

***வச 2, "அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்."***

பணக்காரர்தான் எளியவருக்கு உதவ முடியுமெனக் கருதுவது தவறு. சொல்லப்போனால், கொடுக்கமுடியாத அளவு எளியவர் எவருமில்லை. நமக்கிருப்பதைவிடக் குறைவாகவே வைத்திருக்கும் மக்கள் எப்போதும் இருக்கின்றனர். 40 சதவீதத்தினர் வறுமைக்கோட்டிற்குக் கீழேயிருக்கும் இந்தியாவைப் போன்றதொரு நாட்டில் "உண்ணவும் உடுக்கவும்" நமக்கிருந்தால் நாம் செல்வந்தர்தான் (1 தீமோ 6:8). இரண்டே ஆடைகளுள்ளவர்களும் ஒன்றை ஒன்றுமே இல்லாத ஒருவருக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கட்டளையிட்டான் யோவான் ஸ்நானன் (லூக் 3:11). இயேசுவின் "சகோதர சகோதரிகள்" பலருக்கு உணவில்லை, உடையில்லை, உறைவிடமில்லை (மத் 25:35-40). செல்வப் பெருக்கில் வாழ்பவரோடு நாம் நம்மை ஒப்பிடக்கூடாது. மாறாக, எளியவரிலும் எளியவரைக் கவனித்துப் பார்த்தால், நாம் எவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோமெனப் புரிந்துகொள்வோம். "கொடிய தரித்திரத்திலிருந்து" கொடுப்பது தேவனுக்குமுன் "மிகுந்த உதாரத்துவமாகும்." இவ்விதம் கொடுப்பவர்களைத் தேவன் "பரிபூரண சந்தோஷத்தினால்" நிரப்புகிறார். "கால்களே இல்லாத ஒருவனைக் காணும் வரை எனக்குப் புதிய காலணிகள் வாங்க முடியவில்லையே என்று முறுமுறுத்துக்கொண்டிருந்தேன்" என்று சாட்சி கூறினார் ஒருவர்!

***வச 3, "அவர்கள் தங்கள் திறனுக்குத்தக்கதாகவும், தங்கள் திறனுக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள் என்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்."***

அளவுக்குமீறி எளியவருக்குக் கொடுத்துவிட்டோமென்று நாம் ஒரு போதும் சொல்லமுடியாது. கிரமமாய்க் கொடுப்பது தியாகமாய்க் கொடுப்பதற்கு நம்மை வழிநடத்தவேண்டும். நம்மைப் பாதிக்கும்வரை நாம் கொடுத்துக்கொண்டேயிருக்கவேண்டும். எளியவர் ஒருவரது இக்கட்டான நிலையில் உதவி அவரைத் தூக்கிவிட நமது நியாயமான சில இன்பங்களைத் தியாகம் செய்வது ஏழைகளின் தேவனுக்குமுன் சுகந்த வாசனையாய் மேலேறும். சாரிபாத்தின் விதவையிடமிருந்து தீர்க்கன் எலியா கேட்டது தியாகக் காணிக்கைதான். அவளிடமிருந்ததெல்லாம் தானும் தனது மகனும் சாவதற்குமுன் சாப்பிட இறுதி உணவை ஆயத்தம் செய்வதற்காகக் கொஞ்சம் மாவும் எண்ணெயுந்தான்! (1 இரா 17:7-12).

***வச 4, "தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்."***

ஏழைகளுக்குக் கொடுப்பதை மக்கெதோனியா விசுவாசிகள் ஒரு பாரமாக அல்ல, பாக்கியமாய்க் கருதினார்கள். நமது சபைகளில் தேவையான எழுப்புதல் இதுவே. தானதர்மம் நமது கடமையெனினும், அது நமக்குக் களிப்பாகவேண்டும். அப்படியானால் எவரும் நம்மை வற்புறுத்தத் தேவையில்லை. கொடுப்பது, அதுவும் ஏழைகளுக்குக் கொடுப்பது, தன்னார்வமாய் வரவேண்டும். இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும்படி நிலங்களையும் உடைமைகளையும் விற்றுப் பணத்தைக் கொண்டுவாருங்களென்று சீடர்களுக்கு அப்போஸ்தலர்கள் கட்டளை கொடுத்ததாக நாம் வாசிப்பதில்லை. அது நூற்றுக்குநூறு தன்னார்வச் செயலாகும் (அப் 2:45). சீடர்களை மண்ணுலகப் பற்றிலிருந்து விண்ணுலக ஆவியானவர் விடுவித்தார். சகேயுவின் இல்லத்தில் இயேசு நுழைகையில் அவன், "ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்" என்று தானாக முன்வந்து சொன்னான் (லூக் 19:8). ஆவியின் அபிஷேகத்திற்கு அன்னிய பாஷைகள் ஓர் "அடையாளமாய்" இருக்கலாம்; ஆனால் தானதர்மமே அதற்கு "நிரூபணமாகும்!" தலைவர்கள் மக்களைக் கொடுங்கள் கொடுங்களென்று அரிப்பதற்குப் பதிலாக மக்களே தலைவர்களை பெற்றுக் கொள்ளுங்கள் பெற்றுக்கொள்ளுங்கள் என்று அழுத்தும் நிலை வந்தால் தான் எதிர்பார்த்திருக்கும் பரலோக எழுப்புதல் வந்துவிட்டதெனலாம்!



***வச 5, "மேலும் நாங்கள் நினைத்தபடி மட்டும் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாங்களே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்."***

கிறிஸ்தவமே தானதர்மம்தான்; ஆனால் தானதர்மமே கிறிஸ்தவமல்ல. நாம் "நற்செயல்களினால்" அல்ல, "நற்செயல்களுக்காக" இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபே 2:9,10). தானதர்மமோ வேறெந்த நற்செயலோ நமக்கு இரட்சிப்பைச் சம்பாதிக்க முடியாது. ஒருவருக்கும் தீங்கு செய்யாமல், தேவையுள்ளோருக்கு உதவிக்கொண்டு வாழ்க்கை நடத்தும்வரை நித்தியத்தைக் குறித்துக் கவலைப்படவேண்டியதில்லையெனப் பலர் தங்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றனர். இத்தத்துவம் கோடிக்கணக்கானோரை நரகத்திற்கு அனுப்பிவிடப்போகிறது. இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினாலுண்டாகும் இரட்சிப்பே நற்பணிகள் யாவற்றிற்கும் அடித்தளமாகும். எனது முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் தேவனிடத்தில் அன்புகூரும்வரை என்னைப் போல் நான் பிறனை நேசிக்கமுடியாது. "முதல்" கட்டளையே "இரண்டாம்" கட்டளைக்கு வழிநடத்துகிறது (மத் 22:37-40). மனிதாபிமானப் பணிகளுக்கு முன்னர் கடவுளுக்கு நேரான பக்தி வரவேண்டும். தொழுகையற்ற சேவையைக் கடவுள் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

***வச 6,16,17, "ஆதலால் தீத்து இந்தத் தர்மக் காரியத்தை உங்களிடத்தில் தொடங்கினபடியே, அதை முடிக்கவும் வேண்டுமென்று அவனைக் கேட்டுக்கொண்டோம்... மேலும் உங்களுக்காக இப்படிப் பட்ட கரிசனை உண்டாயிருக்கும்படி தீத்துவின் இருதயத்தில் அருளின தேவனுக்கு ஸ்தோத்திரம். நாங்கள் கேட்டுக்கொண்டதை அவன் ஏற்றுக்கொண்டதுமல்லாமல், அவன் அதிகக் கவனமாயிருந்து தன் மனவிருப்பத்தின்படியே உங்களிடம் வரப் புறப்பட்டான்."***

எளியவருக்கும் வேதனைப்படுவோருக்கும் உதவும்படி உலகெங்கும் செயல்படும் சேவை நிறுவனங்களுக்காகத் தேவனைத் துதிக்கிறோம். ஆனால் இவ்வித நிறுவனங்களில் வேலைசெய்யும் எல்லாருமே உண்மையாகவே எளியவர்மீது பாரங்கொண்டுள்ளனரென்று சொல்லமுடியாது. வேலை வாய்ப்புக்காகவே இந்நிறுவனங்களில் சேர்பவர்களுமுண்டு. இதை நான் குறைகூறாமல், இந்நிறுவனங்களின் தலைவர்கள் தீத்துவைப்போல இருதயங்கொண்ட பணியாளர்களைத் தேடவேண்டுமென்று வலியுறுத்துகிறேன். உற்சாகமும் தன்னார்வமும் தணிந்துவிடாதவாறு பணியாளர் யாவரும் தேவனருளும் தரிசனத்தோடும் தாகத்தோடும் சேவைசெய்யும்படி

அவர்களுக்கு எளியவருக்குதவும் பணி குறித்த வேதத் தத்துவங்களை நன்கு போதிக்கவேண்டும்; இதற்கென்றே அவ்வப்போது சிறப்பு முகாம்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தவேண்டும்.

***வச 7, "அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவிதக் கவனத்திலும், எங்கள் மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும் நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மக் காரியத்திலும் பெருகவேண்டும்."***

கொரிந்து சபை "கிருபா வரங்கள்" நிறைந்த சபை. அங்குள்ள விசுவாசிகளுக்கு எந்த வரமும் குறைவில்லை (1 கொரி 1:5-7). ஏழைகளுக்குத் தர்மம் செய்வதை அப்போஸ்தலன் பவுல் ஒரு "கிருபாச் செயல்" என்றழைக்கிறான் (2 கொரி 8:1,6,7; 9:14). விசுவாச வரங்கள், பாஷைகள், தீர்க்க தரிசனம், அறிவு ஆகியவற்றில் கொரிந்து விசுவாசிகள் பெருகியிருந்தனர். இப்பொழுது அவர்கள் எளியவருக்குதவும் பணியிலும் பெருகும்படி அப்போஸ்தலன் பாரப்பட்டான். கிறிஸ்தவத்தில் கடந்த இருபது முப்பது ஆண்டுகளில் ஏராளம் விசுவாசக் கருத்தரங்குகளும், வல்லமை முகாம்களும் நடந்துள்ளன. நாம் தானதர்மக் கருத்தரங்குகள் நடத்தாதது ஏனோ? ஆண்டுதோறும் கேட்கும் 52 ஞாயிறு பிரசங்கங்களில் தானதர்மத்தைப் பற்றியவை எத்தனை? திரள் திரளாய் வெளியிடப்படும் பத்திரிகைகள் எத்தனையில் தானதர்மம் பற்றிய கட்டுரைகள் இடம்பெறுகின்றன?

***வச 8, "இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய கரிசனையையும் கவனத்தையும் கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும்படியே சொல்லுகிறேன்."***

மக்கெதோனியா கிறிஸ்தவரின் உதாரத்துவத்தைப் பவுல் மேற்கோள் காட்டியது கொரிந்து விசுவாசிகளைக் குற்றவுணர்வுக்குள்ளேயோ வற்புறுத்துதலுக்குள்ளேயோ கொண்டுவர அல்ல, அது அவர்களை ஊக்குவித்து இன்னும் உந்தித் தள்ளுவதற்காகவே. ஒவ்வொரு சபையிலும் பலமான காரியங்களும் பலவீன காரியங்களுமுண்டு. ஒரு சபையில் நற்செய்திப்பணி தீவிரமாயிருக்கும், மற்றதில் ஆராதனை உற்சாகமாயிருக்கும்; ஒன்றில் வேத போதனை அதிகமிருக்கும், அடுத்ததில் வல்லமை வரங்கள் நிறைவாயிருக்கும்; இப்படிப் பலவிதம். நாம் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளவேண்டும். சில சபைகள் சமூகத் தொண்டுகளில் திறமையானவையாயிருக்கும். அவைகள் நற்செய்திப்பணியிலோ தொழுகையிலோ அவ்வளவு உற்சாகமாயிருக்காது. அவைகளைக் குறைகூறி இதவாதச் சபைகளென்று



ஒதுக்கிவிடாது, அவைகளது சமூகநலக் கரிசனையைப் பாராட்டி அப்பரிமாணத்தை நமது சபை வாழ்விலும் கூட்டிக்கொள்ளவேண்டும்.

***வச 9, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் செல்வந்தராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே செல்வந்தராகும்படிக்கு, உங்களுக்காகத் தரித்திரரானாரே."***

நமது கர்த்தர் ஒருபோதும் பொருளாதார ரீதியில் செல்வந்தனாயிருந்ததில்லை. "அவர் தரித்திரரானார்" என்றால் அவர் தமது நித்திய, விண்ணக மகிமையைத் துறந்தார் என்றே பொருள் (பிலி 2:5-8). உன்னதங்களில் அவரோடு ஆன்மீக நன்மைகள் அனைத்தையும் நாம் அனுபவிக்கும்படி நிர்ப்பாக்கியமுள்ள பாவிகளாகிய நம்மைத் தூக்கியெடுக்க இயேசு விண்ணுலகிலிருந்து இறங்கிவந்து நம்மோடு தம்மை அடையாளப்படுத்திக்கொண்டார். சிலாக்கியமற்றோரையும் தள்ளப்பட்டோரையும் உயர்த்தவேண்டுமானால் நாமும் நமது ஆண்டவரின் முன்மாதிரியையே பின்பற்றவேண்டும். நேசிக்கப்படாதவரையும் நேசிக்கப்படமுடியாதவரையும் சந்திக்கவேண்டுமானால் அவர்களோடு அடையாளப்படுத்திக்கொள்ளுதல் இன்றியமையாதது. தானதர்மமென்றால் எளியவருக்காய்ச் "செலவழிப்பது" மட்டுமல்ல, அவர்களுக்காய்ச் "செலவழிக்கப்படுவதும்" ஆகும். மிஷனரியாய் மாறிய கிரிக்கெட் வீரர் C. T. ஸ்டட் கிறிஸ்தவ ஊழிய நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாக ஜார்ஜ் முல்லர் நடத்திவந்த அனாதை இல்லங்கள் போன்றவற்றிற்குத், தனது செல்வத்தைப் பகிர்ந்துகொடுத்துவிட்டு, ஆப்பிரிக்கக் காடுகளில் ஏழ்மையிலேயே வாழ்ந்து மடிந்தார். உண்மையாகவே அவர் அநேகரை ஆன்மீக ரீதியிலும் பொருளாதாரத்திலும் செல்வந்தராக்கினார். மற்றவர்களின் வாழ்க்கைத் தன்மையை மேம்படுத்தும்படி நமது வாழ்க்கைத் தரத்தைக் குறைத்துக்கொள்வோம்.

***வச 10-12, "இதைக்குறித்து என் யோசனையை உங்களுக்கு அறிவிக்கிறேன்: இதைச் செய்கிறதற்கு மட்டுமல்ல, செய்யவேண்டுமென்று உற்சாகப்படுகிறதற்கும் ஓர் ஆண்டாய் ஆரம்பம்பண்ணின உங்களுக்கு இது தகுதியாயிருக்கும். ஆகையால் அதை இப்பொழுது செய்து நிறைவேற்றுங்கள்; கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக. ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே ஏற்றுக்கொள்ளப்படும்."***

இந்தியாவெங்கும் முடிக்கப்படாத சாலைகள் மற்றும் பாலங்கள் நிறைந்திருப்பது போல இந்நாட்டிலுள்ள சபைக்கும் அறைகுறையாய் நிற்கும் திட்டங்கள் மற்றும் பணிகள் ஏராளம் உண்டு. எழுப்புதல் கூட்டங்கள் அல்லது முகாம்களின் உற்சாகத்தின்போது கிறிஸ்தவர்கள் ஏராளம் வாக்குப்பண்ணிவிடுவர்; ஆனால் நிறைவேற்றுவது கிடையாது. விசுவாசிகள் எடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்ற தொடர்பணி செய்து உதவுவதில் மேய்ப்பர்கள் மற்றும் தலைவர்களுக்குப் பொறுப்புண்டு. பவுல் நட்டியதற்கு அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சவேண்டும். தனது நிருபங்கள் எல்லாவற்றிலும் பவுல் ஏதாவதொன்றை விசுவாசிகளுக்கு நினைப்பூட்டுகிறான் பாருங்கள். எளியவர் சத்தம் கேட்கப்படாததால் அவர்களை மறப்பது மிக மிக எளிது. நற்செய்திப் பணியில் தீவிரமாயிருக்கும்போதும் இது சாத்தியமே. எனவேதான் பவுலையும் பர்னபாவையும் யூதரல்லாதவருக்கு நற்செய்தியறிவிக்கப் பணித்து அனுப்புகையில் தரித்திரரை அவர்கள் "நினைத்துக்கொள்ளும்படி" அவர்களுக்கு எருசலேம் சபைத் தலைவர்கள் நினைப்பூட்டினார்கள் (கலா 2:10).

"நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைவிட நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம்" (பிர 5:5). இவ்வசனம் பொதுவாக எதிர்மறைப் பாணியில் விளக்கப்படுவதால் விசுவாசிகள் பலர் வாக்குகள் பண்ணத் தயங்குகின்றனர். வாக்குப்பண்ணக்கூடாதென்பதற்கல்ல, வாக்குப்பண்ணி அதை நிறைவேற்ற நம்மை ஊக்குவிப்பதே இவ்வசனத்தின் கருத்தாகும் (வச 4). வாக்குப்பண்ணுவது நடைமுறைக்கேற்ப இருக்கவேண்டும். அதே வேளையில் நாம் எவ்வளவு கொடுக்க "முடியும்" என்பதில் அல்ல, எவ்வளவு கொடுக்க "விரும்புகிறோம்" என்ற அடிப்படையிலேயே வாக்குகள் அமையவேண்டும். இருதயமே கைகளுக்குக் கட்டளை கொடுக்கும்.

***வச 13-15, "மற்றவர்களுக்கு வசதியும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன். எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிறபடி சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படி இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக."***

வாய்ப்புகளிருந்தாலும் வேலை செய்ய மனமில்லாத எளியவர்களுண்டு. நமது தானதர்மம் எவரையும் சோம்பேறியாக்கிவிடக்கூடாது. "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது" என்பது அப்போஸ்தலக் கட்டளை (2 தெச 3:10). ஆனாலும், வாய்ப்பொன்றுமில்லாது



தங்கள் அடிப்படைத் தேவைகளுக்கும் தானதர்மத்தையே சார்ந்திருக்கும் ஏழைகள் பலருண்டு. நமது தேவைக்கும் கூடுதலாய் நம்மிடமிருக்குமானால் அது தேவையிலிருப்போருக்குப் பகிர்ந்தளிக்கவே. "சமநிலை" என்றால் ஒருவரும் இன்னொருவரைவிடச் செல்வந்தராகவோ எளியவராகவோ இருக்க கடவுள் விரும்பவில்லை என்பது பொருளல்ல. இது அடிப்படைத் தேவைகளையே குறிக்கும். அதாவது, ஆகாரமோ ஆடையோ இல்லாது எவரும் வாழ ஆண்டவர் விரும்பார் (யாக் 2:15,16). இங்கு எடுத்தாளப்பட்ட பழைய ஏற்பாட்டு வசனம் "அனுதின" மன்னாவையே குறிப்பிடுகிறது (யாத் 16:18); அது எல்லாருக்கும் வேண்டும் என்பது தேவ சித்தம் (மத் 6:11).

பணக்காரர் எப்பொழுதும் பணக்காரராகவோ வறியவர் எப்பொழுதும் வறியவராகவோ இருந்துவிடுவதில்லை. நிலைமைகள் மாறும். நமது செழிப்பின்போது நாம் தாராளமாய்க் கொடுத்தால், நமது வறட்சியின்போது மக்கள் நமக்குத் தாராளமாய்க் கொடுப்பர். "நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக் 6:38).

***வச 18-23, "சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சிபெற்ற ஒரு சகோதரனை அவனோடுகூட அனுப்பியிருக்கிறோம்... எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப் பணத்தைக் குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடி நாங்கள் எச்சரிக்கையாயிருந்து, கர்த்தருக்கு முன்பாக மட்டுமல்ல, மனிதருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம். மேலும், அநேகக் காரியங்களில் கவனமுள்ளவனென்று நாங்கள் பலமுறை கண்டறிந்தவனாகிய... நமது சகோதரனையும் இவர்களோடுகூட அனுப்பியிருக்கிறோம்... எங்கள் சகோதரரைக் குறித்து ஒருவன் விசாரித்தால், அவர்கள் சபைகளுடைய ஸ்தானாபதிகளும், கிறிஸ்துவின் மகிமையுமாயிருக்கிறார்களென்றும் அறியக்கடவன்."***

பொருள்படைத்த நாடுகள் இந்தியாவிலுள்ள எளியவருக்கென அனுப்பும் துணி மற்றும் உணவுப்பொருட்களைச் சபை மேய்ப்பர்களும் பிற தலைவர்களும் சுரண்டிவிடுகின்றனரென்ற பேச்சு சகஜம். அனாதை இல்லங்களுக்காகப் பெறப்படும் பணம் தங்களது டாம்பீக வாழ்க்கைக்காய் சில ஊழியர்களால் செலவழிக்கப்படுகிறது. ஏழைக் குழந்தைகளுக்கு அமெரிக்காவிலிருந்து வந்த பால் பவுடரை விற்றுவிட்டாரென ஆயர் ஒருவர்மீது பேராயரிடம் குற்றம்சாட்டப்பட்டது. அதற்குப் பேராயர், "எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலைக் குடியாதிருப்பான்?" என்று பதிலளித்தார் (1 கொரி 9:7இ). பொருளாசைக்கு மூடலாக இவ்விதம் திருவசனங்களை

மேற்கோள்காட்டுவது நிறுத்தப்படவேண்டும். எளியவருக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டிய பணக்காரியத்தில் தலைவர்களை ஏமாற்றியதொரு தம்பதியர் மீதுதான் புதிய ஏற்பாட்டில் எழுதியுள்ளபடி முதல் நியாயத்தீர்ப்பு கடவுளால் வந்தது என்பதைக் கவனிக்க (அப் 4:34; 5:10).

நிர்வாகக் காரியங்களுக்காகவே உதவிக்காரர் முதலாவது நியமிக்கப் பட்டனர் (அப் 6:1-6). இவர்கள் "இழிவான ஆதாயத்தை" வெறுத்து, இத்துறையில் "சோதிக்கப்பட்டவர்களாய்" (நிரூபிக்கப்பட்டவர்களாய்) இருக்க வேண்டும் (1 தீமோ 3:8,10). "மக்கள் என்னைக்குறித்து என்ன நினைக்கிறார்களென எனக்கு அக்கறையில்லை. நான் கடவுளுக்குமுன் உண்மையாயிருக்கிறேன், அது போதும்" என்று பணத்தைக் கையாளும் ஊழியர் எவரும் சொல்லக் கூடாது. எளியவருக்கென்று திரட்டப்பட்ட மிகுதியான பணத்தைக் குறித்துப் பொதுமக்களுக்கு முன்னரும் நற் சாட்சியைக் காத்துக்கொள்ள அப்போஸ்தலன் எவ்வளவு கவனமாயிருந்தா னென்று பாருங்கள்! பணத்தைக் கையாண்டது ஒரு தனி நபரல்ல, ஒரு குழு.

## 2 கொரிந்தியர் 9

***வச 1-5, "பரிசுத்தவான்களுக்குச் செய்யவேண்டிய தர்ம உதவியைக் குறித்து, நான் அதிகமாய் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. உங்கள் மன விருப்பத்தை அறிந்திருக்கிறேன்... நான் மக்கெதோனி யருடனே சொல்லி உங்களைப் புகழ்ந்தேனே; உங்கள் உற்சாகம் அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு. அப்படியிருந்தும், உங்களைக் குறித்து நாங்கள் சொன்ன புகழ்ச்சி இந்தக் காரியத்தில் வீணாய்ப்போகாமல், நான் சொன்னபடி நீங்கள் ஆயத்தப்பட்டவர்களாயிருப்பதற்கு, இந்தச் சகோதரரை அனுப்பினேன்... வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தானதர்மமானது கஞ்சத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதா ரத்துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப் படுத்துகிறதற்குச் சகோதரரை ஏவி, உங்களிடத்தில் முன்னதாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது."***

துவக்கத்தில், மக்கெதோனிய விசுவாசிகளை மேற்கோள்காட்டிப் பவுல் கொரிந்து சபையினருக்குச் சவாலிட்டான். அச்சவால் நன்கு ஏற்றுக்கொள் ளப்பட்டதால், இப்பொழுது கொரிந்தியரைக் குறித்து மக்கெதோனியரிடம் பாராட்டிப் பேசுகிறான். ஆம், தானதர்மம் தொற்றும். எளியவரைக் குறித்த கடவுளின் பாரத்தைத் தனது அப்போஸ்தலக் கண்காணிப்பிலுள்ள சபைகள் புரிந்துகொண்டது பவுலுக்குப் பெருமை.



சபைகள் மற்ற சபைகளோடு தொடர்பில்லாது அடைக்கப்பட்டிருக்கும் போது அவை ஒன்றுக்கொன்று பயன் தரா. கலந்துரையாடல்களுக்கும் பொதுவான நிகழ்ச்சிகளுக்கும் பல்வேறு சபைகளின் மேய்ப்பர்களும் உறுப்பினர்களும் முடிந்தபோதெல்லாம் ஒருவரையொருவர் சந்திக்க வேண்டும். எந்தவொரு தனிச் சபையும் கிறிஸ்துவின் முழுவுடலின் முழு வெளிப்பாடல்ல. நற்செய்திப்பணியில் தீவிரமாயுள்ள சபையைக் கால் களுக்கும், தானதர்மத்தில் தாராளமாயுள்ள சபையைக் கைகளுக்கும் ஒப்பிலாம். இவைகள் ஒன்றுக்கொன்று தேவையில்லையா?

மக்கெதோனியாவிலிருந்து ஒருவேளை ஒருசில சகோதரருடன் கொரிந் தியரைச் சந்திக்க தான் வரும்போது அவர்கள் ஏழைப் பரிசுத்தவான் களுக்காகச் சேகரித்த காணிக்கையை ஆயத்தமாய் வைத்திருக்கவேண்டு மென்று பவுல் விரும்பினான் (2 கொரி 9:4). தனது முந்திய நிருபத்தில் இதற்கென நடைமுறை ஆலோசனையொன்று கொடுத்திருந்தான்: "பரிசுத்த வான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்திய நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங் கள்: நான் வந்திருக்கும்போது பணம் சேர்க்குதல் இராதபடி, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்" (1 கொரி 16:1,2). இன்று அநேக சபைகளில் ஞாயிறு ஆராதனையில் இரண்டு காணிக்கை எடுக்கின்றனர். அப்போஸ்தலக் கரிசனையை மனதிற்கொண்டு, இவ் விரண்டு காணிக்கைகளில் ஒன்றை ஏன் ஏழைகளுக்கென்றே வைத்து விடக்கூடாது? முதலில் எடுக்கும் காணிக்கை கர்த்தருடைய ஊழியத் திற்கும் ஊழியக்காரருக்குமென்று இருக்கட்டும். அது தேவனுக்குக் கொடுக்கும் "காணிக்கை." ஏழைகளுக்கான அடுத்த காணிக்கை தேவனுக்குக் கொடுக்கும் "கடன்!" (நீதி 19:17).

***வச 6, "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்."***

இந்த இடத்திலிருந்து அப்போஸ்தலன் எளியவருக்கு நாம் கொடுப்பதால் நமக்குக் கிட்டும் ஆசீர்வாதங்களைச் சொல்லத் துவங்குகிறான். நாம் ஏழைகளுக்குக் கொடுக்கும் அத்தனையையும் பன்மடங்காய்த் தேவன் நமக்குத் தந்துவிடுவார். அவரால் படைக்கப்பட்ட மனிதருக்கு நாம் காட்டும் இரக்கச்செயல்களை அவர் ஒருபோதும் மறவார். எளியவருக்குக் கொடுப் பது அவருக்குக் கடன் கொடுப்பதாகும்; அவர் ஒருவருக்கும் கடனாளி யாயிருக்கமாட்டார். "உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" (நீதி 11:25).

***வச 7, "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்."***

நாம் கொடுப்பதின் அளவையல்ல, அதின் தன்மையையே தேவன் கவனிக்கிறார். நமது இதயத்தின் நிலைமையே கொடுத்தலின் தன்மையை நிர்ணயிக்கும். ஏழைகளுக்குக் கொடுப்பது கட்டாயத்தினாலல்ல, கரிசனையினாலிருக்கவேண்டும். எளியவனின் இருதயத்தை மகிழப்பண்ணுவதில் நாம் மனங்குளிரவேண்டும் (யோபு 29:13). நம்மால் உதவப்பட்ட எளியவன் நமக்குக் கடன்பட்டிருக்கவேண்டுமென்ற இரகசிய எதிர்பார்ப்பு நம்மிடம் இருக்கவே கூடாது. நம்மிடம் உதவி பெற்றவர்களின் நன்றியின்மை நம்மில் பலரையும் சோர்புறச் செய்துள்ளது. அனுதின சூரிய வெளிச்சத்திற்காய் நாம் தேவனுக்குக் கடைசியாய் நன்றி செலுத்தியது எப்போதோ? அதினால் அவர் சூரியனை உதிக்காது தடுத்துவிட்டாரோ? நமது நன்றியின்மையினால் பாதிக்கமுடியாத அளவு அவரது தயாளம் பெரிது. நாமும் மனிதரது புகழிச்சைக்குச் சாகவேண்டும். அன்று விசுவாசிகளில் பலர் எளியவருக்கான தங்கள் தர்மக் காணிக்கையை பெரிய அப்போஸ்தலன் பவுலின் கரங்களில் தாங்களே நேரடியாய்க் கொடுக்க விரும்பியிருப்பர்! அவனோ, "நான் வந்திருக்கும்போது பணம் சேகரிப்பு இருக்கவேண்டாம்" என்று சுலபமாய்ச் சொல்லிவிட்டான்! (1 கொரி 16:2). மறைவில் நம்மைப் பார்க்கும் தேவன் பகிரங்கமாய் நமக்குப் பதிலளிப்பார் (மத் 6:1-4; அப் 10:4,31).

***வச 8-10, "மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், எல்லாவித நற்செயல்களிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும். விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்."***

எளியவரோடு தங்கள் "பொருளாதார" நன்மைகளைத் தாராளமாய்ப் பகிர்ந்துகொள்வோருக்குத் தேவன் "ஆன்மீக" ஆசீர்வாதங்களை உத்திரவாதமாய் வாக்களிக்கிறார். தானதர்மத்தினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறதில்லை; ஆனால் அது நமது நீதியை வர்த்திக்கப்பண்ணுகிறது. கிறிஸ்து



வுக்குள்ளான நமது வாழ்வு பரிபூரணமும் கூடுதல் நறுமணமும் பெறுகிறது. தேவையிலிருந்தோருக்குத் தயாளமாய்த் தர்மம் பண்ணியதில் கொர்நேலியு ஒருவன். பிரசங்கியார் தனது பிரசங்கத்தை முடிக்கவோ, அல்லது குழுமியிருந்தோர் மீது கரம்வைத்து ஜெபிக்கவோ முன்னரே தூயாவியானவர் அவன் மீதும் அவனது வீட்டார்மீதும் இறங்கிவிட்டார்! (அப் 10:2,44).

***வச 11-14, "தேவனுக்கு எங்களால் துதியுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாகிறீர்கள். இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனைத் துதிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்."***

எளியவருக்குக் கொடுப்பதில் இன்பம் கண்டவர்கள் அதை ஒருபோதும் நிறுத்தமாட்டார்கள்; இன்னும் எப்படியெல்லாம் இல்லாதோரை இன்புறச் செய்யலாமென்று வழிதேடிக்கொண்டிருப்பார்கள். பொதுவாக கஞ்சத்தனமுள்ளோர் இன்னும் கஞ்சிகளாகவும், தயாளர் இன்னும் தயாளராகவுமே மாறுவர். கொடுத்தலின் துவக்கக் கட்டத்தில் "நான் எவ்வளவு கொடுக்கட்டும்?" என்பது நமது கேள்வியாயிருக்கலாம். ஆனால் கொடுத்தலில் நாம் வளர வளர "நான் எவ்வளவு வைத்துக்கொள்ளட்டும்?" என்று அக்கேள்வி மாறும்!

இப்பொழுது பவுல் தானதர்மத்தைப் பற்றிய தனது உபதேசத்தின் உச்சநிலைக்குச் செல்லுகிறான். ஏழைப் பரிசுத்தவான்களுக்கு நாம் கொடுப்பதால் அவர்கள் கடவுளைத் துதிப்பதற்கு வழியுண்டாக்குகிறோம். வேறு வார்த்தைகளில் சொன்னால், தானதர்மம் தொழுகையில் முடிவடையும். இதைவிட மேலான ஆசீர்வாதமுண்டோ?

***வச 15, "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!"***

கடவுளுடைய ஒரே பேறான குமாரனே அவரது பெருஞ்சொத்து. முதல் கிறிஸ்துமஸ் நாளன்று அவர் நமக்குக் கொடுக்கப்பட்டார். கடவுளின் மடியிலிருந்து நமக்கு வந்த இம்மாபெரும் ஈவை முழுவதும் வர்ணிக்க உலகில் மொழியே கிடையாது. கடவுள் கொடுத்துவிட்ட தமது குமாரனாகிய ஈவுக்கு நமது தானதர்மமெல்லாம் இணையாகுமோ?

# 20

# சங்கங்களும் சபைகளும்

ஆதித் திருச்சபையானது மிஷனரி நோக்குள்ள சபையாயிருந்ததினால், புதிய ஏற்பாட்டில் காணப்படும் சபையினர், சங்கங்கள் உதவி நாடிச்செல்லும் சபையினருக்கு இலட்சியமாக அமையலாம். இன்று போலல் லாமல் அன்று அவர்கள் மாம்சீக முறைகளைக் கையாளவில்லை. இங்கு குறிப்பிடப்படும் ஆதிச்சபை சூழ்நிலைகள் நமது இன்றையச் சூழ்நிலைக்கு ஒத்ததாயிருக்கும். இஸ்ரவேலைப் பற்றியோ சபையைப் பற்றியோ வேதத்தில் இடம்பெற்றுள்ள சரித்திரத்தின் உள்நோக்கை 1 கொரிந்தியர் 10:11இல் பவுல், "இவைகளெல்லாம் எடுத்துக்காட்டுகளாக அவர்களுக்குச் சம்பவித் தன; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கின்றன" என்று கூறுகிறார்.

## 1. ஜெபம்

கண்ணைக் கவரும் ஓர் அற்புதத்திற்குப் பின்பு, அப்போஸ்தலராகிய பேதுருவும் யோவானும் பயங்கரமாய்ப் பயமுறுத்தப்பட்டு அனுப்பிவிடப் பட்டனர். உடனே அவர்கள் தங்களைச் சேர்ந்தவர்களிடத்திற்கு வந்து யாவற்றையும் அறிவித்தார்கள். உடனடியாக சபையினர் ஆக்ரமிக்கும் ஆரவார ஜெபத்தினால் நிரம்பி வழிவதைக் காண்கிறோம் (அப் 4:23,24).

தேவன் ஊழியத்தளங்களில் கவனத்தை ஈர்க்கும் அற்புதங்களைச் செய்யும்போது மக்கள் கூட்டங்கூட்டமாக மனந்திரும்புகின்றனர். இது



சுவிசேஷத்தை விரோதிக்கும் பிறமதத் தலைவர்களைச் சீண்டிவிடுகிறது. மிஷனரிகள் பயமுறுத்தப்படுகின்றனர். அப்போஸ்தலர் தங்கள் குழுவினரை ஜெபிக்கச் சொல்லி கெஞ்சிக் கூத்தாடத் தேவையில்லாமற் போனதுதான் இங்கு அதிசயம். தானாகவே பொங்கி அற்புதமாய் ஓடியது அவர்கள் ஜெபம். இப்படிப்பட்ட ஜெப ஆவியை சபையினருக்குள் உருவாக்குவது மிஷனரிச் சங்கங்களின் கடமையாகும்.

அப்படியே "பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்" என்று அப்போஸ்தலர் 12:5இல் வாசிக்கிறோம். ஊக்கமாய் ஜெபிக்க ஜெபச் சங்கிலி ஒன்றை அவர்கள் அமைத்திருந்தனர். 12ஆம் வசனத்தைப் பார்த் தால் பெண்கள் இரவு வேளையைத் தெரிந்தெடுத்திருப்பர் போலும்! உண்மை பாரமும் கரிசனையும் இல்லாவிடில் அது அரிதன்றோ? சபையின் பிரதிவார ஒருமணி நேர மிஷனரி ஜெபக்கூட்டத்தில், ஜெபச் சுற்றறிக்கையின் நீண்ட பட்டியலை வாசிப்பதினால் அபூர்வமானதொன்றையும் சாதித்துவிட முடியாது—இந்த ஒருமணி நேரத்தில் இரண்டு பாட்டும் ஒரு பிரசங்கமும் கூட!

மிஷனரி மேதை பவுல் ரோம் நகர் சபைக்கு, அவர்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், அவர்களும் தன்னோடுகூடப் "போரா டும்படி" அழைப்புவிடுக்கிறான் (ரோ 15:30). கொரிந்து சபைக்கும் அதே வேண்டுகோள்தான். "நீங்கள் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள்" (2 கொரி 1:11).

### அ) ஆவிக்குரிய வாழ்க்கைத்தரம்

சரியான வாழ்க்கைதான் சரியான ஜெபத்தைப் பிறப்பிக்கும். இறை யரசின் மக்களது வாழ்வும் மூச்சும் ஜெபமே. ஆனால் ஒருவன் தூயாவி யினால் பிறவாவிட்டால் அவன் இறையரசைக் காணவோ அதில் நுழையவோ மாட்டான். அதாவது, இறையரசின் தத்துவங்களும் இரகசியங்களும் அவனுக்குப் புரியாது. ஆகவே சபையினரை மறுபிறப்பின் அனுபவத்திற்குள் வழிநடத்துவதே இயக்கங்களின் முதல் கடமையாகும். இந்தியாவில், மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களின் சதவீதம் பழைய பெரிய சபைகளில் மிகச் சொற்பமே. மனந்திரும்பாத கிறிஸ்தவனை ஊழியங்களுக்காக ஜெபிக்கக்கோருவது செத்தவனைச் சுவாசிக்கக் கேட்பதாகும்.

இங்கு சபைத் தலைவர்களைக் குறித்தும் நாம் சிந்திக்கவேண்டும். மறுபடி பிறவாத சபைகுருக்களைக் காண்பது இன்று அபூர்வமல்லவே.

ஜான் வெஸ்லியின் அனுபவ சாட்சியில் வாசிப்பது போல, கிறிஸ்துவோடு தனிப்பட்ட அனுபவம் இல்லாமலேயே பிரசங்கித்துக் கடந்துபோவது கேள்விப் படாத ஒன்றல்ல. மிஷனரித் தலைவர்கள் குருமாரோடு அளவளாவக் கிடைக்கும் தருணத்தை அவர்களை இரட்சிப்பிற்குள் வழிநடத்த ஆதாயப் படுத்திக்கொள்ளவேண்டும். இரட்சிக்கப்பட்ட ஆயர்களும், பேராயர்களுமே பெரும்பாலும் மிஷனரி ஊழிய முன்னேற்றத்திற்குக் கைகொடுப்பவர்கள் என்பது மிஷனரித் தலைவர்களின் அனுதின அனுபவந்தானே!

மிஷனரிகளோ, மிஷனரிச் சங்கத் தலைவர்களோ தாங்கும் சபையினரை சந்திக்கச் செல்லும் வேளைகள் அவர்களுக்கு ஆன்மீக எழுப்புதலும் ஆசீர்வாதமும் அருளும் வேளைகளாயிருக்கவேண்டும். ரோம் நகர் பரிசுத்த வான்களுக்கு எழுதும்போது பவுல், "நான் உங்களிடத்தில் வரும்போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன்" என்று எழுதுகிறார் (15:29). சபை களுக்குச் செல்லும் நோக்கம் முதலாவது "கொடுக்கவும்" அடுத்துதான் "வாங்கவும்" என்று இருக்கவேண்டும்.

சபையினரை முகாம்களுக்கு அழைக்கும்போதும் அவர்களுக்கு அதை ஓர் ஆன்மீக விருந்தாக்கவேண்டும். எல்லா நேரமும் மிஷனரிச் சவாலையே கொடுத்துக்கொண்டிருக்கத் தேவையில்லை. புள்ளி விவர விமரிசனங்கள் நல்லதுதான்; ஆனால் கேட்போரின் ஆன்மீக வாழ்வு ஆழப்படுத்தப்படா விடில் அது வாயில் கைநிறைய மணல்போட்ட கதைதான். ஊழிய தரி சனத்தைப் பணிக்களப் புள்ளி விவரங்கள், கதைகளினால் மட்டும் பிர தானமாகக் கொடுக்காமல், அதை வேதத்திலிருந்து உருவாக்க முயற்சிக்க வேண்டும். ஏதோ சுற்றும் முற்றும் ஆத்துமாக்கள் அங்கலாய்ப்பதினால் நாம் ஊழியத்தில் இறங்கிவிடவில்லை; வானலோக இரட்சகரின் பேராணை யினாலேயே ஊழியத்தை மேற்கொண்டுள்ளோம். ஏசாயாவைப் போல சபையினர் முதலாவது *"ஐயோ;"* இரண்டாவது *"இதோ;"* மூன்றாவது *"போ"* என்ற வரிசையில் வழிநடத்தப்படவேண்டும். உள்நோக்கு, மேல் நோக்கு, அடுத்து வெளிநோக்கு!

### ஆ) ஈடுபாடு

சுவிசேஷகன் பிலிப்புவின் ஊழியத்தினால் சமாரியர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட செய்தி எருசலேம் சபைக்கு எட்டினபோது, இப்புது விசுவாசிகள் கூடுதல் ஆசீர்வாதத்தை அடையும்படி உடனே பேதுருவும் யோவானும் அனுப்பிவைக்கப்பட்டனர். அதாவது, தாங்கும் அல்லது அனுப்



பும் சபையினர் பணியில் நேரடி ஈடுபாடுகொண்டனர். அப்படியானால் தாங்கும் சபையானது புதிதாக நிறுவப்படும் சபைகளுக்குக் "கொடுக்கும்" அளவிற்கு ஆன்மீகத்தில் முதிர்ச்சியுற்றிருத்தல் அவசியம்.

பதினோராம் அத்தியாயத்திலும் இதையே காண்கிறோம். அந்தியோகி யாவில் திரளானோர் விசுவாசித்துக் கர்த்தரிடம் திரும்பினர். எருசலே மிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக் குறித்துக் "கேள்விப்பட்ட போது" புது விசுவாசிகளுக்குப் புத்திசொல்லித் திடப்படுத்தும்படி பர்ன பாவை அனுப்பிவைத்தனர். அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகளும் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.

பங்கனுப்பும் சபைகள் பாரப்படுவதோடு நில்லாமல் பங்கேற்கவும் வேண்டும். புதிதாக எழும்பிய சபை விசுவாசிகளைக் குழுக்களாகச் சென்று உற்சாகப்படுத்தி, புத்திசொல்லி ஆறுதல்படுத்தும் ஊழியத்திற்கென, தாங்கும் சபையில் ஊழிய பாரமுள்ள ஆண்களையும் பெண்களையும் ஒருங்கிணைத்து அனுப்பும் திட்டங்களை இயக்கங்கள் செயலாற்றவேண் டும். இவை குறுகியகாலத் திட்டங்களாயிருந்தாலும், குழுக்கள் திரும்பும் போது தனியாள் ஆத்தும ஆதாயப் பணியிலும் சுவிசேஷ ஊழியத்திலும் மற்றும் பலவகையிலும் தங்கள் சொந்த சபையின் ஓட்டத்தை இன்னும் விறுவிறுப்பாக்குவர்.

### இ) உள்ளூர் ஊழியம்

மிஷனரி ஊழிய முக்கியத்துவம் மிகுதியாய் வலியுறுத்தப்படும் இந் நாட்களில் "ஆத்தும ஆதாயகர்" அல்லாத வெறும் "தாங்குவோராலும்" "அனுப்புவோராலும்" பழம் சபைகளை நிரப்பும் ஆபத்தைக் குறித்து நாம் அசட்டையாயிருத்தல் கூடாது. உதாரணமாக தமிழ்நாட்டு சபைகளிலெங் கும் வட இந்தியாவின் தேவையைக் குறித்த மிஷனரி முழக்கம் ஒலித்துக் கொண்டிருக்கும் வேளையில் தமிழ்நாட்டிலும் கிறிஸ்தவரின் எண்ணிக்கை 5 சதவீதம்தான் என்பதை நாம் மறந்துவிட முடியாது. முதலாவது தமிழ்நாடு, பின்பு வட இந்தியா என்றல்ல. அப்போஸ்தலர் 1:8இல் "முதலாவது" எருசலேமில் "பின்பு" யூதேயாவில் என்று குறிக்கப்படாமல் எருசலேமி"லும்," யூதேயா முழுவதி"லும்" என்றே குறிக்கப்பட்டுள்ளது! இன்று 90 சத வீதத்திற்கும் அதிகமானோர் ஆத்தும ஆதாயகரல்லாமல் வெறுமனே கொடுப்பவர் என்பதே நான் வேதனையோடு கண்ட உண்மை. மாதம் ஒரு காசோலை அனுப்புவதையோ, மாதாந்திர வாக்காளருக்கு ரசீது அளிப் பதையோ "நாகரிக" ஊழியமாகச் செய்யும் பலர் தம் சொந்த ஊரைச் சுற்றிய கிராமங்களுக்குச் சுவிசேஷத்தைச் சுமந்துசெல்வதையும் சந்தைவெளிகளில் நற்செய்திப் பிரதிகள் விநியோகத்தையும் "குறைவாக" எண்ணுவது ஏனோ?

தாங்கும் அங்கத்தினர் ஒவ்வொருவரையும் நல்ல ஆத்தும ஆதாயக ராக்குவது மிஷனரிச் சங்கங்களின் மேல் விழுந்த கடமையாகும். "சபை வளர்ச்சி" தொலைவிலுள்ள ஊழியத்தளத்திற்கு மட்டுமல்லாமல், உள்ளூர்ச் சபைக்கும் தேவை.

இயேசு முதலாவதாக ஆத்தும ஆதாயகராகவும், அடுத்துதான் அனுப்புபவராகவும் திகழ்ந்தார். மத்தேயு 9:35இல் அவர் புறப்பட்டுப் "போனார்;" பின்பு 10:5இல் அவர் "அனுப்பினார்."

### ஈ) ஆதிநிலை ஏகுதல்

அப்போஸ்தலர் 13இல் வாசிப்பது போல, "முதல்" மிஷனரிகள் அந்தி யோகியாவிலிருந்து அனுப்பப்பட்டபடியால் மிஷனரி ஊழியக் காரியங்களில் அந்தியோகியா சபை அடிக்கடி குறிப்பிடப்படும். ஆனால் அந்தியோகியா சபை "செயல்படும்" சபையாயிருந்தது எனும் இரகசியம் கவனிக்கப்படு வதில்லை. அதாவது எபேசியர் 4:13இல் வரையறுக்கப்பட்டுள்ள சபைக்கு அளிக்கப்பட்ட வரங்களாகிய கிறிஸ்துவின் ஊழியங்கள் அங்கே செயல் பட்டுக்கொண்டிருந்தன. முடிவாகவும் முறையாகவும் தாங்கும் சபையினரே அனுப்புவோராகவும் மாறிவிடவேண்டும். கிறிஸ்துவின் ஐந்து ஊழியங் களையும் ஆவியின் ஒன்பது வரங்களையும் நாம் திரும்பப் பெற்றுக்கொள் ளும்பொழுதே இது நாம் எட்டிப்பிடிக்க இயலும் இலட்சியமாகிறது. பரந்த ஊழியத்தில் இடம்பெறும் மிஷனரித் தலைவர்களே சபையை இக்குறிக்கு நேரே வழிநடத்த இயலும் (ரோ 1:11; தீத்து 1:5).

இருண்ட காலத்துக்குப்பின் துவங்கப்பட்ட ஆதிநிலை ஏகுதலின் ஊழியம் வழியில் நின்றுவிடக்கூடாது. நீதிமானாக்கப்படுதலின் சத்தியத்தைத் திரும்பப்பெற ஒரு மார்ட்டின் லூத்தர் தேவைப்பட்டது; பரிசுத்தமாக்கப்படு தலின் சத்தியத்துக்கு ஒரு ஜான் வெஸ்லி வரவேண்டியதாயிருந்தது. அடுத்து மகிமைப்படுதலின் சத்தியத்தைக் குறித்தென்ன? "தேவனால் அன்புகூரப்பட்ட" திருச்சபை "மகிமையான" சபையாகப் பரிசளிக்கப்பட வல்லவோ "பரிசுத்தமாக்கப்படவும்" "சுத்திகரிக்கப்படவும்" வேண்டும்? இதையே அவர் திருவசனத்தைக்கொண்டு செய்கிறார் (எபே 5:25-27). "உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும்" முழுக்க முழுக்க பயனுள்ளதாயிருக்கிற திரு வசனத்தைச் சபைக்கு அருளும் ஊழியத்தில் நமது பங்கை ஈடேற்ற வேண்டும் (2 தீமோ 3:16). மிஷனரித் தலைவனாய் மட்டுமல்லாமல், தானே மிஷனரியாகவும் துலங்கிய பவுல், தெசலோனிக்கே ஜெப ஆலயத்தின் சம்பிரதாய மக்களுக்கு வேதவாக்கியங்களை விளக்கிக்காட்டினான் (அப் 17:1-3). சில சலசலப்புகள் ஏற்படலாம்; அதையெல்லாம் காணாததுபோல் போய்விடவேண்டும்.



முழுச் சத்தியத்தையும் மக்களுக்கு எடுத்துரைக்க முடியாத முடக்கு வாதத்தால் "காசுக் கரிசனை" நம்மை மவுனமாக்கும். "எவரையும் புண் படுத்தமாட்டேன்" என்ற கொள்கையை பிரசங்கபீடத்தில் கடைப்பிடிப்போ மாகில் தேவனுக்கும் தேவ மக்களுக்கும் முன்பாக குற்றவாளிகளாவோம். யோவான் ஸ்நானகனும், இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலன் பவுலும் தங்கள் நாட்களில் பெரிதும் தாக்கும் பிரசங்கிகளாயிருந்தனர். பவுல் இவ்விதமாக எபேசு மூப்பர்களிடம் அறிக்கையிடுகிறான்: "ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் ஆடையையாகிலும் நான் இச்சிக்கவில்லை. பயனுள்ளவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப் பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன்... இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொன்னேன்... நீங்கள் பக்திவிருத்தியடைய... அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கு உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்" (அப் 20:33,20,26,27,31,32). இப்படியே நம்மைத் தாங்கும் சபைகளின் தரவுயர்வுக்காய், வளர்ச்சிக்காய் பாடு படுவோம்.

## 2. பணம்

ஊழியங்களுக்காக முதலெழுப்பும் காரியத்தில், "நம்முடைய" தேவைகள் மட்டுமே சந்திக்கப்பட விரும்பும் கிட்டப் பார்வையுடையவர்களாய் ஆகி விடாதிருத்தல் அவசியம். கொடுத்தல் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் தத்துவமாகப் போதிக்கப்படவேண்டும். சந்திக்கச்செல்லும் சமயங்களில் காணிக்கையைக் குறித்த உபதேசத்தைப் பழைய புதிய ஏற்பாடுகளிலிருந்து தாங்கும் சபையாருக்குத் தீர்க்கமாய் போதிக்கவேண்டும். பணத்தைக் குறித்துப் பிரசங்கிக்கப் பயப்படக்கூடாது. உடலை ஊற்றித்தானே பணம் கிடைக்கிறது. "ஜெபிக்க" மக்களை எவ்வளவாய்க் கேட்கிறோமோ அவ்வளவாய் எள்ளளவும் தயக்கமின்றி "கொடுக்கக்" கேட்கலாம். மறை முகமாக பணம் கேட்பது முறையற்றது. "கொடுங்கள்" என்று சொல்ல விரும்பி, ஆனால் "ஜெபியுங்கள்" என்று நாகரிகமாகச் சொல்லுவது மாய்மாலம்.

கொடுத்தல் உண்மையான எழுப்புதலைத் தொடரும். பெந்தெ கொஸ்தேயை அடுத்து தாமாகவே பணப்பைகள் திறக்கவில்லையா? (அப் 2:44,45; 4:32-35).

1 கொரிந்தியர் 16:1-3இல் பவுல் கிரமமாகக் கொடுத்தலைச் சபைக்குப் போதிக்கிறார். 2 கொரிந்தியர் 9:6-9இல், வாரியிறைத்தலையும் உற்சாக மாய்க் கொடுத்தலையும் ஊக்குவிக்கிறார். 8ஆவது அத்தியாயத்தில், சபையினர் தங்கள் பொருத்தனையை நிறைவேற்ற அவசரப்படுத்துகிறார் (வச 10:12). பலர் ஊழியத்தைத் தாங்கத் "தொடங்குகின்றனர்," ஆனால் வெகு சிலரே "தொடருகின்றனர்." உக்கிராணத்துவத்தைக்குறித்த வேத போதனையின்றி பணத்திற்காக வெறுமனே உணர்ச்சிகளை உருக்கும் திறமையான சவாலில் பிறந்த பொருத்தனைகள் அதற்கு ஒரு காரண மாயிருக்கக்கூடும்.

மக்கெதொனியா விசுவாசிகள் "தங்களுடையதைக்" கொடுக்குமுன் "தங்களைத் தாங்களே" கொடுத்தனர் என்பது கவனிக்கவேண்டிய அடுத்த குறிப்பாகும் (2 கொரி 8:5). கொடுத்தலை ஊக்குவிக்கும் வேளையிலேயே, கொடுப்பது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும்படி, தேவனோடும் மனித ரோடும் சரியான உறவு வைத்திருக்கவேண்டிய நிபந்தனையையும் அழுத்தந் திருத்தமாய்ப் போதிக்கவேண்டும் (ஏசா 1:3; மத் 5:23,24). பணம் போய்விடுமோ என்ற நமது ஆத்திரத்தில், கொடுப்பவருக்கு வீண் நம்பிக்கை அளித்து, உயிர்த்தெழும் நாளில் ஏமாற்றத்திற்கு அவர்கள் விழித்தெழும் நிலையில் அவர்களை வைக்கக்கூடாது.

மிஷனரிக் குடும்பம் ஒன்றை முழுமையாய்த் தாங்க முன்வரும் வசதி யான குடும்பங்கள் உண்டு. அக்காணிக்கை அவர்கள் தங்கள் "அதிகத்தி லிருந்து" விசிறும் பிச்சையாயிருக்கலாம். அன்னாரது வீடுகளைச் சந்திக் கும்பொழுது செல்வந்தருக்கு 1 தீமோத்தேயு 6:17-19இல் பவுல் கூறியுள்ள ஆலோசனைகளை விளம்பத் தயங்கக்கூடாது. பணக்காரர்கள் இறையர சிற்குள் நுழைய இயேசுவானவர் சொல்லிய நிபந்தனைகள் கடூரமானவை. அதைக் கவனியாது, "அவர்களது மேசையிலிருந்து விழும் துணிக்கை களுக்காக" அவர்களைப் புகழ்பாடிக்கொண்டிருப்போமானால் அவர்களை நரகத்தில் சேர்த்த இரத்தப்பழி நம்மையே சாரும்.

பணக்காரியங்களில் தங்களது உண்மையையும் கணக்கீட்டில் உத்த மத்தையும் குறித்துச் சங்கங்கள் தாங்கும் சபைகளுக்கு உக்கிராணத்துவ உறுதி கூறவேண்டும். "எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப் பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத் தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து, கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனிதருக்கு முன்பாகவும் யோக்கியமானதைச் செய்ய நாடுகிறோம்" (2 கொரி 8:20,21).



## 3. ஊக்கமளித்தல்

மிஷனரித் தலைவர்களும், மிஷனரிகளும் சுவிசேஷத்தில் தங்கள் உடன் பங்காளிகளை ஜெபத்திற்காகவும் ஸ்தோத்திரத்திற்காகவும் இருதயத்தில் சுமந்து திரிதல் அவசியம் (பிலி 1:7-11). தேவன் அவர்களது நீதியின் விளைச்சலைப் பெருகப்பண்ணும்படி அவர்களது காணிக்கைக்காக நாம் ஏறெடுக்கும் துதியும் ஜெபமும் அவர்கள் மேல் தேவனது கிருபைப் பெருக்காக இறங்குகிறது (2 கொரி 9:8-15).

தாங்குவோருக்கு ஊக்குவிப்பு இன்றியமையாதது. பிலிப்பு சபையின் தர்மசகாயத்தை மற்ற சபைகளின் ஈகையோடு பவுல் ஒப்பிட்டுப் பேசுகிறான் (பிலி 4:10-17). சபையோரின் ஆவியைத் தட்டிக்கொடுத்து அவர்கள் ஆழமான ஈடுபாடுகொள்ள இவ்விதப் பாராட்டல் செய்யத்தகுந்தது.

சிமிர்னா, பிலதெல்பியா ஆகிய இவ்விரண்டு சபைகள் மட்டுமே வெளிப்படுத்தல் புத்தகத்தில் கிறிஸ்துவினால் கடிந்துகொள்ளப்படாதவை. ஒன்று பாடுபட்டு துன்புறுத்தப்பட்ட சபை; அடுத்தது மிஷனரிச் சபை. தாங்கும் சபைகளுக்கு இவ்வுண்மையைக் கூறி உற்சாகப்படுத்தவேண்டும். **மிஷனரிச் சிந்தையுள்ளோர் ஆண்டவருக்கு ரொம்பப் பிடிக்கும்!**

## 21

# திருச்சபைகளில் பரிதாபங்கள்

இது மிஷனரி எழுச்சி நாள். இம்மிஷனரி எழுப்புதலின் உதிப்பில் பல மிஷனரி இயக்கங்கள் தோன்றியதோடல்லாமல் இந்தியாவில் கிறிஸ்தவரின் எண்ணிக்கையும் கூடிவருகிறது. ஆனாலும் ஊழிய உணர் வுடன் ஆவிக்குரிய கண்ணோட்டங்கொண்டால் இன்றையப் பல சபைகளில் சில பரிதாப நிலைகளைக் காணலாம்.

### 1. அமைப்பாளர் பலர், அழுவோரோ சிலர்!

மிஷனரிச் சவால் கூட்டங்களையும், காணிக்கை சேர்ப்புப் பணிகளையும், மிஷனரி ஜெபக்கூட்டங்களையும்கூட முன்னின்று நடத்த பலர் முன்வரலாம். ஆனால் ஜெபத்தில் அழுது புலம்புவோருக்கோ பஞ்சம். திட்டமிட திறன் தேவை; கதறி ஜெபிக்கவோ கண்ணீர் தேவை. ஒழுங்குபடுத்துவது ஒய்யார வேலை; வேதனைப்படுவதோ வெளிக்கு வராத மூலை. அரங்கேற்றுவது அம்பலத்தில்; அழுவது அந்தரங்கத்தில். மாம்சீக உற்சாகத்தில் அமைப்புகளை ஒழுங்குபடுத்தலாம்; ஆனால் நாம் உருக்கப்படாமல் ஓலமிட முடியாது.

அமைப்போர் தேவைதான்; ஆனால் அவர்கள் அழுவோருக்குப் பதிலாக முடியாது. பவுல் காரியசித்திக்காரனாகும் முன்பு கண்ணீர் விடுபவனா யிருந்தான். அவன் ஒரு மிஷனரி இயக்கம். “போகவேண்டிய இடங்கள் பலவுண்டு, போடவேண்டிய திட்டங்கள் அநேகம், பார்க்க வேண்டிய



புள்ளிகள் ஏராளம், தீர்க்கவேண்டிய தொல்லைகள் திரட்சி, சமாளிக்க வேண்டிய சங்கடங்கள் சொல்லவே தேவையில்லை; எனவே தயவுசெய்து எனக்காக ஜெபியுங்கள்” என்று அவன் மக்களிடத்தில் கோரவில்லை. மாறாக, “நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், *நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப்* போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியான வருடைய அன்பினிமித்தமும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்” என்கிறான் (ரோமர் 15:32). வசனம் 15 இலிருந்து 32 வரை அவனது மிஷனரித் திட்டங்களும் ஒழுங்குகளும் வரையறுக்கப்பட்டுள்ளன.

எப்பாப்பிரா மற்றோர் எடுத்துக்காட்டு. கொலோசெ சபையிலிருந்து கொண்டு அப்பாலுள்ள லவோதிக்கேயருக்காகவும், ஏராப்போலியருக்காக வும் தூர தரிசனம் கொண்டிருந்தான். ஆனால் அவனது முதல் வேலை போராடி ஜெபித்தலே. பவுல் இவனைக் குறித்து, “உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்த மானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர் களாயும் நிலைநிற்கவேண்டுமென்று தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்” என்று சாட்சி பகருகிறான் (கொலோ 4:12,13). அழுபவர் பலரும் அமைப்பவர் சிலருமானால் அல்லல்கள் அற்பமும் சொற்பமுமாகிவிடுமே. போட்டியில்லாத ஊழியம் ஜெப ஊழியம் ஒன்றே! ஏன்? ஜெபம் வீரத்தின் வெளிப்பாடு அல்ல, அது சுயத்தின் சாவு!

### 2. அனுப்புவோர் பலர், ஆத்துமாதாயகரோ சிலர்!

இயேசு ஊழியரை அனுப்புகிறவராயிருந்தார். “இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்பினார்;” “இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்” (மத் 10:5,16). ஆனால் அவர் மிஷனரிப் பணியைத் தாங்குகிறவராகவோ, ஆதரிக்கிறவராகவோ, மேற்பார்க்கிறவராகவோ மட்டுமிருந்து ஓரிடத்தில் தங்கிவிடவில்லை. தாமும் ஆத்தும ஆதாயகராகப் புறப்பட்டுச் சென்றார். “இயேசு தம்முடைய பன்னிரெண்டு சீடர்களுக்கும் கட்டளைகொடுத்து முடித்த பின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும், பிரசங்கிக் கவும் அவ்விடம் விட்டுப் போனார்” (மத் 11:1).

திருச்சபை முழுவதும் தாங்குவோராலேயே நிறைந்திருத்தல் பரிதாபம்! அது ஆலயம் முழுவதும் தூண்களால் நிறைந்திருப்பது போலாகுமே. சிந்தித்துப் பாருங்கள்!

நாம் ஆத்துமாக்களோடு தனிப்பட்ட ஈடுபாடுகொள்வது மிஷனரி முயற்சிகளுக்காகக்கூட பலியாகிவிடக்கூடாது. இயேசு முதலும் கடைசியும் ஓர் தனியாள் பணியாளனாயிருந்தார். யோவான் சுவிசேஷம் இயேசுவைத் தேவனாக வரைந்துள்ளது. முதல் அத்தியாயத்தில் அவர் பிலிப்புவைச் சந்திக்கிறார். இரண்டாம் அத்தியாயத்தில் கலியாண வீட்டு வேலைக் காரரையும், மூன்றாவதில் நிக்கொதேமுவையும், நான்காம் அத்தியாயத்தில் சமாரியப் பெண்ணையும், ஐந்தாம் அத்தியாயத்தில் 38 வருட பிணியாளி யையும் சந்திக்கிறார். இப்படிப் பல. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவரது பிரதான அழைப்பு மனிதரைப் பிடிப்போனாயிருக்கவே (மத் 4:19). ஆத்து மாக்களோடுள்ள தனிப்பட்ட இடைபாடே மிஷனரி ஊழிய ஊக்கியாகிய ஆத்தும பாரத்தை வளர்க்கிறது.

ஆளெடுத்து ஆத்தும ஆதாயத்திற்குப் பழக்குவிக்கும் தளங்களாக சபைகள் மாறவேண்டும். உங்கள் சபையில் ஆத்தும ஆதாயப் பயிற்சி கிரமமாய் நடைபெறுகிறதா? (உங்கள் சபை எத்தனை ஊழியரை அனுப்பியிருக்கிறதென்று நான் கேட்கவில்லை.) ஆத்தும ஆதாயம் செய்து ஆத்தும ஆதாயகரை உருவாக்காத சபையை மிஷனரிச் சபை என அழைக்கத் தயங்குகிறேன். கிறிஸ்தவரல்லாத ஒரு தமிழனைவிட வட இந்தியன் ஒருவனின் ஆத்துமாவின் விலை அதிகம் என்னும் தவறான எண்ணத்தை அகற்றுங்கள்.

### 3. செலுத்துவோர் பலர், செல்லுவோரோ சிலர்!

ஊழியரைவிட அவர்கள் ஊதியத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துவிட்டோமோவென அஞ்சுகிறேன். சபைக்கு முன் நிறுத்த மிஷனரி நிறுவனங்களுக்குப் போதுமான ஊழியரில்லாமையால் சில சபைகளின் மிஷனரிக் காணிக்கைகள் வாளாவிருப்பதாகக் கேள்வியுற்றேன். வார மொருமுறை கூடி மிஷனரி ஜெபச் சுற்றறிக்கையை ஜெபித்து முடித்து விட்டால், ஊழியத்திற்கு ஒரு தொகையை ஒதுக்கிவிட்டால், வருடாந்திர மிஷனரிக் கன்வென்ஷனில் பங்குகொண்டு ஒரு மிஷனரிப் படக்காட்சி யைப் பார்த்துவிட்டால், தங்கள் மிஷனரிக் கடமை தீர்ந்துவிட்டதென இன்று பலரும் கருதுகிறார்கள். இல்லை, இது பரிதாப நிலை. நமது முதற்கடமை பணம் செலுத்துவதல்ல, களம் செல்லுவது. "யார் போவார்?" (ஏசா 6:8).

இருபதாண்டுகட்கு முன்னர் அநேக இளைஞர் மிஷனரிப் பணிக்காய் முன்வந்தனர். ஆனால் தற்போது ஊழியர் எண்ணிக்கை சடிதியாய்க்



குறைந்து ஊழியக் காணிக்கையோ படிப்படியாய் ஏறிவிட்டது. "மிஷனரி களைத் தாருங்கள்" என்பதே மிஷனரிச் சங்கங்களின் ஓலமாகிவிட்டது. சற்றே நமது நிதி திரட்டும் திட்டங்களை நிறுத்திவைத்து வாலிபரை அழைக்கச் சவால் விடுப்பதில் கவனத்தைத் திருப்பினால் நலமாயிருக்கும். ஆஸ்வால்டு J. ஸ்மித் கூறிய "நீ போ, அல்லது யாரையாவது அனுப்பு" என்ற மிஷனரிச் சவாலைத் தவறாய்ப் புரிந்துள்ளோம். "அனுப்பு அல்லது போ" அல்ல, "போ அல்லது அனுப்பு." முதலாவது போக எத்தனிக்க வேண்டும்; போகாமல் தங்கியிருக்கத் திட்டந் தெளிவான அழைப்பு இருந்தால் மட்டுமே அனுப்புவதைக் குறித்து எண்ணவேண்டும்!

வாலிப நண்பனே, வாலிபச் சகோதரியே, உனக்கு ஊழிய அழைப்பு இல்லையா? (ஊழிய அழைப்பு இருக்கிறதா என்று நான் கேட்கவில்லை) யோவான் 3:16, மத்தேயு 28:19, ரோமர் 10:14 போன்ற பகுதிகளை உன் வேதத்தில் வாசிக்கும்போது *"மேலிருந்து"* ஒரு தொனி உன் செவிகளில் விழவில்லையா? உன்னைச் சூழக் கிறிஸ்தற்ற ஆயிரமாயிரம் பேரைக் காணும்போதும், தூர தேசங்களில் கோடிக்கோடியாய் சுவிசேஷம் இல்லாமல் அழிவோரைக் கேள்விப்படும்பொழுதும் உன்னைச் *"சுற்றிலுமிருந்து"* ஒரு குரல் உனக்கு எட்டவில்லையா? கிறிஸ்தற்று மரிப்போரின் அடக்கத்தைக் காணும்போதும், யாருமே மீட்பின் அன்பை அறிவிக்காததினால் வினாடிக்கு வினாடி கிறிஸ்தற்ற நித்தியத்திற்குள் ஆயிரங்கள் கடந்துவிட்டதை எண்ணும்போதும் *"கீழிருந்து"* ஏறிவரும் தொனி ஒன்றை நீ கேட்க வில்லையா? ஒவ்வொரு மிஷனரிச் சவாலைக் கேட்டுவிட்டு தலைவணங்கி ஜெபிக்கும்போதும், உன் உலக வேலையில் அதிருப்தி அதிகரிக்கும்போதும், இப்போது செய்வதைவிட தேவனுக்காய்க் கூடுதல் சாதிக்க விருப்பம் உன்னில் விழித்தெழும்போதும், உன் ஆவியைப் பரிசுத்த ஆவியானவர் கலக்கும்போதும் உனக்கு *"உள்ளிருந்து"* அழைக்கும் ஒரு சத்தத்தை நீ கேட்கவில்லையா? இந்த நாற்பரிமாண சத்தத்தைக் கேட்டும் நீ பின் தங்குவாயோ?

### 4. தத்தெடுப்போர் பலர், பெற்றெடுப்போரோ சிலர்!

மிஷனரி நிறுவனத்தாராகிய நாங்கள் மிஷனரிகளைக் கருத்தாய் தாங்க முன்வந்த சபைகளுக்காகத் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருக் கிறோம். இதைச் சரியாய்ச் சொல்லப்போனால் "தத்தெடுத்தல்" எனலாம். இதுவே நமது இலட்சியமாகிவிடக்கூடாது.

முதல் மிஷனரிகளை அனுப்பின அந்தியோகியா சபை நமக்கு நல்ல முன்மாதிரி. அப்போஸ்தலர் 13:1-3ஐ வாசியுங்கள். இச்சபையினால்

மிஷனரிகளாக அனுப்பப்பட்ட பர்னபாவும் சவுலும் அதே சபையின் உறுப்பினர்களாயிருந்தே பிரித்தெடுக்கப்பட்டனர்.

சபைப் போதகர்களுக்கு எங்கள் வேண்டுகோள்: உங்கள் பிரசங்கங்களில் போதிய மிஷனரிக் கருத்துக்களைச் சேருங்கள். பிள்ளைகளுக்கும் வாலிபருக்கும் மிஷனரிக் கதைகளையும் சரித்திரங்களையும் போதிக்க ஞாயிறு பள்ளி ஆசிரியர்களை ஊக்குவியுங்கள்; மிஷனரித் தலைவர்களையும் மிஷனரிகளையும் மாதமொருமுறையாவது அழைத்து சபையோருக்குப் பணிக்களத்திலுள்ள பணியாளர் பஞ்சத்தை பகிரச் செய்யுங்கள். விடுப்பு நாட்களில் நேரில் பார்த்துப் பயன்பெறும்படியாய் மாணவர் மாணவியர் குழுக்களை ஊழியக்களங்களுக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் சபையாரிலிருந்தே இத்தனை மிஷனரிகளை இந்த நாளுக்குள் அனுப்பி விடவேண்டுமென்கிற குறியோடு செயல்படுங்கள். அப்பொழுது உங்கள் உணர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் தத்தெடுப்பதற்கும் பெற்றெடுப்பதற்குமுள்ள வேறுபாட்டைக் கண்டுகொள்வீர்கள்!



# 22

# அடைக்க முடியாத கதவுகள்

"இ**தோ,** திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்ட முடியாது" (வெளி 3:8). பிலதெல்பியா சபைக்குக் கிறிஸ்து அளித்த இவ்வாக்குத்தத்தம் தேவன்மீதும் அவரது குமாரன் தமது இரத்தத்தைச் சிந்தி நேசித்த ஆத்துமாக்கள் மீதும் பாசங்கொண்ட ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் திரும்பச் சொல்லப்படுகிறது.

கதவுகள் *இப்பொழுது* திறந்திருக்கின்றன. எனவே காலையும் மாலையும் விதை விதைத்து, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் பிரசங்கம் பண்ணவேண்டும் (பிர 11:6; 2 தீமோ 4:2). காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் (எபே 5:16). இன்றைக்குச் செய்யக்கூடியதை நாளைக்குத் தள்ளிப்போடக்கூடாது. தள்ளிப்போடுதல் வளர்ச்சிக்குப் பெருந்தடையாகும்.

கதவுகள் *ஒவ்வொரு விசுவாசிக்கும்* திறந்திருக்கின்றன. எனவேதான் தேவன் தம் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் தாலந்துகளினாலும் ஆவியின் வரங்களினாலும் நிரப்புகிறார். வேலையில்லையென்று ஒருவரும் சும்மா நிற்கவேண்டியதில்லை (மத் 25:14,15; 2 கொரி 12:7-11; மத் 20:1-7).

இரட்சிக்கப்படாத *எண்ணற்றோருக்காகக்* கதவுகள் திறந்திருக்கின்றன. தமது மந்தைக்குள் இன்னும் கொண்டுவரப்படாத "வேறே ஆடுகளுக்காக"

வாசலாகிய கிறிஸ்து கரிசனை கொண்டுள்ளார் (யோ 10:9,16). அவிசுவாசி ஒவ்வொருவனும் ஒரு மிஷனரிக் களம்; விசுவாசி ஒவ்வொருவனும் ஒரு மிஷனரி.

திறந்த வாசல் பற்றிய வாக்குகள் ஏசாயா தீர்க்கதரிசனத்தில் பலவுண்டு: "வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, இருட்டறையிலிருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்திலிருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்" (45:2,3). "உன்னிடத்திற்கு மக்களினங்களின் பலத்த சேனையைக் கொண்டுவரும்படிக்கும், அவர் களுடைய ராஜாக்களை அழைத்துவரும்படிக்கும், உன் வாசல்கள் இரவும் பகலும் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும்" (60:11).

நாடுகளையும், மக்கள் கூட்டங்களையும் விசுவாச ஜெபத்தினால் உரிமை பாராட்டிக் கேட்க தேவன் விரும்புகிறார். "என்னைக் கேளும், அப்பொழுது மக்களினங்களை உமக்குச் சுதந்தரமாகவும், பூவுலகின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங் 2:8). தமது குமாரனுக்குப் பிதா கொடுத்த இவ்வாக்கைக் கிறிஸ்துவின் உடலாகிய சபையும் உரிமை பாராட்டலாம். "திருவசனம் செல்லும்படியான வாசலை" தனக்கும் தன் உடன் ஊழியருக்கும் திறக்கும்படி ஜெபிக்கப் பவுல் கொலோசே விசுவாசி களைக் கேட்டுக்கொண்டான் (கொலோ 4:3).

திறந்த வாசல் என்றதும் பிரச்னைகளும் எதிர்ப்புகளும் கிடையாது எனப் பொருள்படாது. சொல்லப்போனால் இரண்டும் இணைந்தே செல்லும்! எடுத்துக்காட்டாக 1 கொரிந்தியர் 16:9, "இங்கே பெரிதும் அனுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதம் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்!"

எருசலேமின் மதில்களைக் கட்ட நெகேமியாவுக்குத் திறந்த வாசல் இருந்தது. அனுமதியும், கட்டிடப் பொருட்களும் மனப்பூர்வமாய் இராஜாவால் வழங்கப்பட்டதைக் குறிப்பிட்டு தேவ கரம் தன்மீது நன்மையாயிருந்தது என அறிவிக்கிறான் (நெகே 2:8,18). ஆனால் உடனேயே அவன் சத்து ருக்களின் பயமுறுத்தலையும் கேலியையும் சந்திக்க வேண்டியதிருந்தது (வச 19). அவனது மக்களின் ஒத்துழைப்பும் எதிரிகளின் சூழ்ச்சியும் இணையாய்ச் சென்றன.

"என் சபையைக் கட்டுவேன்" என்ற இயேசு உடனே, "பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை" என்றும் மொழிந்தார் (மத் 16:18). இதின் பொருளென்ன ? கட்டுதலும் போராட்டமும் இணைந்தே செல்லும்!



பிரச்னைகளும் எதிர்ப்புகளும் இருக்கும், ஆனால் பணியும் வாய்ப்புகளும் நின்றுபோகாது. இரத்த சாட்சியாய் இறக்கும்வரை பவுலுக்கு எதிர்ப்புகள் வந்துகொண்டே இருந்தன. ஆனாலும் அப்போஸ்தலர் நடபடிகளின் இறுதி வசனத்தைப் பாருங்கள்: "மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல்... பிரசங்கித்து... உபதேசித்துக்கொண்டிருந்தான்" (அப் 28:31). இதுதான் திறந்த வாசல் என்பது!

சில கதவுகள் மூடப்பட்டிருக்கும். மூடப்பட்டிருந்தால் பூட்டப்பட்டிருக்கிறது என்று பொருளல்ல! "தட்டுங்கள், திறக்கப்படும்" என்றார் இயேசு! (மத் 7:7). கதவு மூடியிருந்தால் என்ன செய்யவேண்டுமென பூனைக்குக்கூடத் தெரியும். தள்ளிக்கொண்டு வந்துவிடும்! இந்த எளிய சத்தியத்தைச் சபை அறிந்துகொள்ளவேண்டும். Operation Mobilization எனும் இயக்க நிறுவனர் ஜார்ஜ் வெர்வர் இந்த எடுத்துக்காட்டைச் சொல்லக் கேட்டேன்.

ஆபிரகாமின் அழைப்பில்தான் தேவனது மிஷனரித் திட்டம் துவங்கியது. "உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்று தேவன் அவனுக்கு வாக்கருளினார் (ஆதி 22:17). இதே வாக்கு ரெபெக்காளுக்கு வாழ்த்துதலாய்ச் சொல்லப்பட்டது (ஆதி 24:30). ஈசாக்கு கிறிஸ்துவுக்கு அடையாளமானதால் ரெபெக்காள் சபைக்கு அடையாளமானவள்.

நாமே ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோரின் ஆன்மீக வழித்தோன்றல்கள்; எனவே நாமும் இவ்வாக்குகளை உரிமை பாராட்டலாம். இதை விசுவாசித்த ஆதிச்சபை "எங்கும் சென்று" வசனத்தைப் பிரசங்கித்தது (மாற் 16:20). கர்த்தர் "புறவினத்தவருக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார்" (அப் 14:27).

நமது வெளிக்கிளம்புதலையும், நற்செய்தி பரப்புதலையும் தடுப்பது போன்ற சூழல்களில் நாம் சிலவேளை சிக்கிக்கொள்ளலாம். அப்போஸ் தலரின் சிறைச்சாலை அனுபவங்கள் இதற்கு எடுத்துக்காட்டு. தமது ஊழியரை வெளிநடத்த சிறைச்சாலைக் கதவுகளை அற்புத வல்லமையால் தேவன் உடைத்தெறிந்த மூன்று முக்கிய சம்பவங்களை நடபடிகளில் காணலாம். தூதனை அனுப்பினார்; அல்லது பூமியதிர்ச்சியை உண்டாக் கினார்; தம் ஊழியரை விடுவித்தார் (அப் 5:19; 12:6,7,10; 16:26). அவர் மாறாதவர். அவரது தூதர் எப்பொழுதும் போல் சுறுசுறுப்பாயுள்ளனர் (சங் 34:7). அவர்கள் மின்னல் வேக விமானங்களைவிட வேகமானவர்கள் (தானி 9:21).

தேவனுக்காய்ச் செயல்படக் குதிக்கையில் இன்னல்கள் நம்மைச் சூழத்தான் செய்யும். ஆனால் "அந்தகாரத்திலும் மரண இருளிலும்" இருந்து நம்மை வெளிப்படப்பண்ணி, "கட்டுகளை" அறுத்து, "வெண்கலக் கதவுகளையும் இருப்புத் தாழ்ப்பாள்களையும்" தேவன் தகர்த்தெறிவார் (சங் 107:13-16).

வழியில் பிரமாண்டமான பிரச்னைகளைச் சந்திக்கலாம். "கல்லை நமக்காய் எவன் புரட்டித் தள்ளுவான்?" என்ற கேள்வி நம்மை வாட்டும். ஆனால் நாம் முன்சென்றுகொண்டேயிருந்தால் தேவதூதன் நமக்காகக் கல்லை ஏற்கனவே புரட்டித் தள்ளியிருப்பதைக் காண்போம்! (மாற் 16:3,4; மத் 28:2).

மலை எதிர்ப்படும்போது செய்யவேண்டியதை இயேசு போதித்துள்ளார். "இடம்பெயர்ந்து போ" என மலையைப் பார்த்துப் பேசவேண்டும்! உபவாச ஜெபம் அதற்கு ஆயத்தமாகும் (மத் 17:20,21).

பிலதெல்பியா சபைக்குக் கிறிஸ்து அனுப்பிய செய்தியிலிருந்து (வெளி 3:7-13), திறந்த வாசலை வாக்களிக்கும் கர்த்தர் சபையை ஏழு வித அர்ப்பணிப்புக்கு அழைக்கிறார் என அறிகிறோம்.

## 1. பரிசுத்தம்

"பரிசுத்தமுள்ளவர்" என்று கர்த்தர் தம்மை அறிமுகப்படுத்துகிறார் (வச 7). பரிசுத்தம் என்பதே நமது வாசகமாயிருக்கவேண்டும். நாம் என்ன தான் சாதித்தாலும் பரிசுத்தமில்லையேல் எல்லாம் வெறுமைதான். எல்லாக் காவலோடும் இருதயத்தைக் காத்துக்கொள்ளவேண்டும்; ஏனெனில் அதினி டத்திலிருந்தே ஜீவ ஊற்று புறப்படும் (நீதி 4:23). பாளையத்தில் பாவம் இருக்கும்போது தோல்வி நிச்சயம். தேவனது நாளைய அற்புதத்திற்கு நமது இன்றையப் பரிசுத்தம் தேவை (யோசு 3:5). நமது வாழ்விலும் ஊழியத் திலும் பாவத்தை அனுமதித்தால் தேவ மகிமை விலகுவது திண்ணம். அதற்குப் பிறகு எல்லாம் வறட்டுக் கூச்சல்தான் (1 சாமு 2:17; 3:13; 4:5,21). உடன் விசுவாசிகளும் உடன் ஊழியரும் காணக்கூடாத பின் மாற்றத்தைக் குறித்து எச்சரிக்கை! நமது பாவம் நம்மைத் தொடர்ந்து பிடிக்கும்! (எண் 32:23).

## 2. உண்மை

அடுத்து தம்மை "உண்மையுள்ளவர்" என்கிறார் கர்த்தர் (வச 7). ஊழியத்தில் ஒருநாளும் நாம் உண்மையைக் கிரயமாக்கிவிடக்கூடாது.



உலகம் இருளிலும் ஊழலிலும் இருக்கிறது. நாமே உலகிற்கு வெளிச்சம் (மத் 5:14). நேர்மை, உண்மை இவையெல்லாம் நமக்கே உரிய பண்பு களாயிருக்கவேண்டும். சபையிலும் ஊழியத்திலும் பொய் இருக்கக்கூடாது (அப் 5:4). குறிப்பாக ஊழிய அறிக்கைகளில் மிகைப்படுத்தல் இருக்கவே கூடாது. பாதி உண்மையைச் சொல்லுவதும் அகற்றப்படவேண்டும். இயேசு சத்தியமானவர்; பிசாசு பொய்யன். இரண்டையும் கலக்கக்கூடாது. பணக் காரியங்களில் நமது கைகள் சுத்தமாயிருக்கவேண்டும். அற்பக் காரியங் களிலும் உண்மை அவசியம் (லூக் 16:10,11). கடவுளுடைய பிள்ளை களாகவும் பணியாளராகவும் நாம் "அவரது வீடெங்கும்" உண்மையா யிருக்கவேண்டும் (எபி 3:1,2,5,6).

## 3. கீழ்ப்படிதல்

பிலதெல்பியா சபையானது வசனத்தைக் காத்துக் கொண்டதால் கர்த்தர் அதை மெச்சுகிறார் (வச 8). ஆன்மீகத் தோற்றமுள்ளது யாவும் வேதத் திற்கு உகந்ததெனச் சொல்லிவிட முடியாது. என்ன செய்கிறோமென்பதல்ல, எப்படிச் செய்கிறோமென்பதே காரியம். "ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்" (2 தீமோ 2:5). முழுக்க முழுக்க வசனத்தின்படி செய்யும்போது மட்டுமே நமது கட்டிடம் புயலையும் வெள்ளத்தையும் தாங்கமுடியும் (மத் 7:24,25). தேவன் தந்த முறையின் படியே நோவா பேழையைக் கட்டினான். ஆசரிப்புக்கூடாரத்தை மோசே தேவன் தந்த மாதிரியின்படியே அமைத்தான். வசனத்திற்கு மாறான யாவையும் எறிந்துவிடவேண்டும். முடிவைவைத்து முறை சரியென சொல்லி விடக்கூடாது. வெற்றியாயிருப்பதால் வேதத்தின்படியானது எனக் கூற முடியாது. நமது ஊழிய முறைகளையும் தத்துவங்களையும் அலசிப்பார்க்க போதுமான நேரம் தனித் தியானத்திலும் கூட்டு வேத ஆராய்ச்சியிலும் செலவழிக்கவேண்டும். தேவ பக்தியுள்ள ஆலோசகரைப் பெருக்கிக்கொண் டேயிருக்கவேண்டும். தவறு எனச் சுட்டிக்காட்டப்பட்டால் ஒத்துக்கொள்ளக் கூடிய ஆண்மை நமக்கு இருக்கவேண்டும்.

## 4. தைரியம்

"உனக்குக் கொஞ்சம் பலம் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலிக்க வில்லை" என்றார் கர்த்தர் (வச 8). நம்மைப் பார்த்து அவர் சொல்வது: "திடன்கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள்... நான் உங்களுடனே இருக்கிறேன்... என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டி ருப்பாராக; பயப்படாதேயுங்கள்!" (ஆகாய் 2:4,5). சேனைகளின் கர்த்தர் நம்முடனிருக்கையில் மனிதனும், இருளின் சக்திகளும் நமக்கு என்ன

செய்யமுடியும்? கொரிந்து நகரில் உண்டான பலத்த எதிர்ப்பை அடுத்து இரவில் தரிசனத்தில் தேவன் பவுலிடம், "நீ பயப்படாமல் பேசு, மவுன மாயிராதே... இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக மக்கள் உண்டு" என்றார் (அப் 18:9,10). தேவனுக்காய்ப் பெரிய காரியங்களை முயற்சிப் பதைப் பயம் தடுக்கிறது. யோவான் தவிர பன்னிரு அப்போஸ்தலரும் இரத்தசாட்சியாய் இறந்தனர். மரணமானாலும் தைரியமாய்ச் சாட்சிபகரவே பரிசுத்த ஆவியின் வெடி மருந்து போன்ற வல்லமை நமக்கருளப்பட்டுள்ளது (அப் 1:8; 15:26).

## 5. பொறுமை

"என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டாய்" (வச 10). பாடுகளென்பது கிறிஸ்தவ வாழ்க்கை அல்லது ஊழியத்திலிருந்து பிரிக்கமுடியாதது. தேவபக்திக்குக் கிரயமே துன்பம் தான் (2 தீமோ 3:12). திருவசனத்தினால் உண்டாகும் உபத்திரவத்தைக் குறித்து இயேசு விதைக்கிறவன் உவமையில் கூறினார் (மத் 13:21). மட்டுமல்ல, ஒழுங்குக்காகவும் படிப்பினைக்காகவும் அன்புள்ள தகப்பன் கையாளும் பிரம்பு என்ற பாடும் உண்டு (எபி 12:7-11). மற்றவர்களுடைய பாடுகளைப் புரிந்து அவர்களுக்கு உதவும் கரிசனையைப் பெறவும் நமக்குப் பாடுகள் வரும் (2 கொரி 1:3-5). சிலவேளை நமக்குப் பாடுகளின் காரணமே புரியாது (ஏசா 50:10). அப்பொழுது கர்த்தரது வசனத்தைப் பிடித்துக் கொண்டு அவர்மீது சார்ந்திருக்க வேண்டியதுதான். பொறுமைக்குப் பலன் உண்டு. "யோபுவின் பொறுமையைக்" குறித்தும் "இயேசுவின் பொறுமை யைக்" குறித்தும் வேதம் பேசுகிறது (யாக் 5:11; வெளி 1:9). இருவரும் மேன்மை அடைந்தனர். பொறுமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்!

## 6. மனவுறுதி

"ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள் ளதைப் பற்றிக்கொண்டிரு" (வச 11). கிரீடம் என்பது மதிப்புள்ளது, மேன்மை யானது. நமது மீட்பு பொன்னினாலும் வெள்ளியினாலுமல்ல, அதிலும் விலையுயர்ந்த கிறிஸ்துவின் இரத்தத்தால் உண்டானது (1 பேது 1:18,19). நாம் கிறிஸ்துவோடு உன்னதங்களில் உட்கார்ந்திருக்கிறோம் (எபே 1:3). கிறிஸ்துவில் உள்ள நமது நிலையை ஒருபோதும் சந்தேகிக்கக்கூடாது. விண்ணகத் தந்தையின்முன் நாம் ராஜாக்களும் ஆசாரியருமாக்கப்பட் டோம் (வெளி 1:6). நாம் கிருபாசனத்திற்குத் தைரியமாய்ச் செல்லலாம் (எபி 4:16). "நமது நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல்" உறுதியாயிருப்போம் (எபி 10:23). பிசாசின் குற்றச்சாட்டுக்கு செவியடைப் போம். பரிசுத்தவான்களுக்கும் பொல்லாத ஆவிகளுக்குமிடையே போர் தொடர்கிறது. இரட்சிப்பின் தலைச்சீரா சரியாய் அணியப்பட்டிருக்க வேண்டும் (எபே 6:11,12,17). சிந்தையானது கிறிஸ்துவிலுள்ள செல்வங் களைத் தைரியமாய் அறிக்கையிட்டவண்ணமிருக்கவேண்டும்.



## 7. சகோதர பாசம்

"பிலதெல்பியா" என்ற கிரேக்கச் சொல்லுக்கு "சகோதர பாசம்" என்று பொருள். புதிய ஏற்பாட்டில் இன்னும் ஐந்து இடங்களில் இச்சொல் சகோதர அன்பிற்கு மூலமொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது (ரோ 12:10; 1 தெச 4:9; எபி 13:1; 1 பேது 1:22; 2 பேது 1:7). பழுதடைந்த உறவுகளோடு தேவனுக்காய் அதிகம் சாதிக்க முடியாது. தேவையான பகுதிகளிலெல்லாம் ஒப்புரவாகி காரியங்களைச் சரிசெய்ய நம்மைத் தாழ்த்துவோம். அதுவரை தேவனுக்கான நமது சேவை ஏற்றுக்கொள்ளப்படாது (மத் 5:23,24). கல்வாரியின் அன்பானது நமது இதயத்தை உருக்கி கசப்பு, புறங்கூறுதல், கோபம், வைராக்கியம் ஆகிய யாவையும் அகற்றட்டும். தேவனின் மன் னிப்பை இலவசமாய் அனுபவிக்கும் நாம் பிறரையும் மனப்பூர்வமாய் மன்னிப்போம். ஊழியங்களும் தன்னலமாய்ச் செயல்படாது தங்கள் ஆசீர்வாதங்களைப் பிற ஊழியங்களோடு பகிர்ந்து, வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் கூட்டுறவில் செயல்படவேண்டும். பிறரது குறைகளை வெளி யரங்கமாக்காமல் அன்பினால் மூடவேண்டும். போட்டியும், மேன்மை பாராட்டலும் அகலவேண்டும். எல்லாரும் சேர்ந்து தேவ இராஜ்யத்தை, நமது சாம்ராஜ்யத்தையல்ல, கட்டவேண்டும்.

இந்த ஏழு வித அர்ப்பணிப்புக்குள் வந்து ஆவியானவர் சொல்லு கிறதற்குச் செவிமடுத்து (வச 13) நடந்தால், கர்த்தரிடம் நாம் பெற்றுக் கொண்ட ஊழியத்தை நிறைவேற்றுவதில் வெற்றிகாண்போம். கதவுகள் அடைபடாது!

23

# அது முடியும், அது நடக்கும்!

இன்று உலகில் நடப்பதையும், சபை என்னதான் சாதித்துவிட்டது என்பதையும் நோக்குங்கால் நம்பிக்கையே அற்றுப்போகிறது. உலகை நற்செய்திமயமாக்குவது உண்மையாகவே சாத்தியந்தானா எனக் கேட்கத் தோன்றுகிறது. பதில்களைவிடக் கேள்விகள்தான் அதிகம். ஆனால் தேவன் சொல்லிவிட்டார்; நாம் நம்பிவிடவேண்டும்; அதுதான் காரியம்.

"வேதத்தின் இறுதிப் புத்தகத்தை நான் வாசித்துவிட்டேன்; எனவே நான் ஒரு சாதகவாதி" என்றார் பண்டிதர் பில்லி கிரஹாம்! வெளிப்படுத்தல் புத்தகத்தின் இரத்தினச் சுருக்கம் "இயேசுவுக்கே வெற்றி!" என்றான் ஒரு சிறுவன். அப்படித்தானே?

அகிலவுலக நற்செய்திப்பணி குறித்த நமது கேள்விகளுக்குப் பதில் தரும் ஏழு கேள்விகளை வேதத்தில் கவனித்தேன். அவற்றை வேத வரிசையில் இங்கு தருகிறேன்.

## 1. நமது மலட்டுத்தன்மை

*"ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே!" (ஆதி 15:2).*

தாம் காட்டும் நாட்டிற்குப் புறப்பட்டுச் செல்லும்படி ஆபிரகாம் பணிக்கப்பட்டபோது அவன் கடவுளைக் கேள்வி கேட்காது அவருக்கு அப்படியே கீழ்ப்படிந்தான். சிறுபிள்ளைபோல் எளிமையாக அவரை நம்பினான். "தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்" (எபி 11:8). தேவன் அவனுக்களித்த வாக்குகள் பிரமாண்டமானவை. "பூமியின் தூள்...வானத்தின் நட்சத்திரங்கள்...கடற்கரையின் மணல்" ஆகிய யாவையும்விட அவனது சந்ததி அதிகமாயிருக்குமென்றார் தேவன் (ஆதி 13:16; 15:5; 22:17). அண்டசராசரத்தையும் தேவன் இங்கு சொல்லிவிட்டார்! பூமி, கடல், வானம்! ஆபிரகாம் கீழே பார்த்தால் தரையின் தூளெல்லாம் தேவ வாக்கை அவனுக்கு நினைப்பூட்டும். மேலே பார்த்தால் நட்சத்திரங்கள். எட்டிப் பார்த்தால் கடற்கரையின் மணல். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை—பல்லாண்டாகியும்! மனைவி மலடாய்த்தானிருந்தாள்; அவனுக்கும் வயது சென்றுக்கொண்டிருந்தது. நம்பிக்கையிழக்கும் இச்சூழலை அவன் எவ்விதம் மேற்கொண்டான் தெரியுமா? அவன் விசுவாசித்தான்—தேவனை! (15:6). வயது சென்ற தனது உடலையும், சாராளின் செத்த கர்ப்பத்தையும் விட்டுக் கண்களைத் திருப்பி "தேவனது வாக்குத்தத்தத்தை" நோக்கினான் (ரோ 4:19,20). தேவன் அவனது விசுவாசத்தைக் கனப்படுத்தினார். ஏனென்றால் விசுவாசம் அவரைக் கனப்படுத்துகிறதல்லவா?

நமது ஊழியங்களில் நம்மில் எவருக்கும் மலட்டுத்தன்மை இல்லாது இல்லை. ஆனால் நமது கண்களை இறைவனது வாக்குகள்மீது பதிக்க அவர் நம்மை அழைக்கிறார். "இந்தச் சுவிசேஷம் மண்ணுலகெங்கும் பிரசங்கிக்கப்படும்" என்று அவர் திட்டமாய்ச் சொல்லவில்லையா? (மத் 24:14). வாக்குரைத்தவர் உண்மையுள்ளவராச்சுதே!

## 2. அறிவிலும் அனுபவத்திலும் குறைவு

*"அந்த மனிதனைக் கண்டீர்களா?" (1 சாமு 17:25).*

கோலியாத்தின்முன் தாவீது! இராட்சதன்முன் இளங்கன்று! போர் வீரன்முன் ஆட்டிடையன்! வல்லவன்முன் விபரமறியா வாலிபன்! சவுல் கொடுத்த போருடைகளுடன் தாவீதுக்கு நடக்கக்கூட முடியவில்லை! (வச 38,39). தாவீதின் அண்ணன் அவனிடம் கோபங்கொண்டான் (வச 28). அரசன் அவனைக் குறையாய்க் கணித்தான் (வச 33). அரக்கன் அவனைச் சபித்தான் (வச 43). ஆனால் தாவீதின் பலமும் நம்பிக்கையுமோ தேவன் மீதிருந்தன (வச 45). விஞ்ஞானம், தொழில்நுட்பம், நவீன இயந்திரங்கள் போன்ற அரக்கர்களைக் கண்டு நாம் அஞ்சிவிடக்கூடாது. ஒரு மனிதனும் தேவனும் போதும்! அதற்கு நிகரில்லை!

நாம் துணிந்து இறங்கவேண்டும். தாழ்வு மனப்பான்மைக்கு இடமளிக்கக் கூடாது. நாம் சிறுபான்மையோராயினும் முக்கியமான சிறுபான்மையினராம். "சிறு மந்தைக்குத்தானே" விண்ணகத் தந்தையானவர் இறையரசைக் கொடுக்கப்போகிறார்? (லூக் 12:32).

தாவீது பேசியது சவுலுக்கும் அவனது படையினருக்கும் அன்னிய பாஷை போலிருந்தது! உண்மைதான்! அவன் அதை வனாந்தரத்தில் கற்றுக்கொண்டான்—தனிமையில் தேவனுடன்! தடியையும் கவணையும் எப்படிப் பயன்படுத்துவதென தேவனே அவனுக்குக் கற்றுக்கொடுத்திருந் தார் (வச 40). ஐந்து கூழாங்கற்கள் எடுத்தான். ஆனால் ஒன்றுதான் தேவைப்பட்டது. மீதி நான்கை நாளையக் கோலியாத்துக்களுக்காய் வைத்துக்கொண்டானோ? இயேசுவின் ஐந்து காயங்களிலிருந்து பீறிட்ட இரத்தம் ஐந்து கண்டங்களுக்கும் போதாதா? பயம் வேண்டாம். "ஐந்து இராஜாக்களின் கழுத்துக்கள் மீது" நமது கால்களை அவர் வைக்கச் செய்வார் (யோசு 10:24,25).

### 3. சபையின் செத்த நிலை

*"இந்த எலும்புகள் உயிரடையுமா?" (எசேக் 37:3).*

பின்வாங்கிப்போன தேவமக்களைக் குறித்த தரிசனம் எசேக்கியேல் தீர்க்கனுக்குக் கிடைத்தது. "மகா திரளான" எலும்புகள்; "மிகவும் உலர்ந்த" எலும்புகள்! இதைவிட விளக்கம் தேவையில்லை. இனி திரும்ப முடியாது எனும் நிலைக்குச் சென்றுவிட்டதுபோல் தோன்றுகிறது. "எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று" என்று மக்களே கதறுகிறார்கள் (வச 11). "இந்த எலும்பு கள் உயிரடையுமா?" என்று தேவன் தீர்க்கனைக் கேட்கிறார். "அது உமக்குத்தான் தெரியும்" என்று தீர்க்கன் கேள்வியைத் திரும்ப தேவன்மீது போடுகிறான். மனிதக் கோணத்தில் பார்த்தால் எதுவும் நடக்க வாய்ப் பேயில்லை!

சபையின் இன்றைய நிலை இதுவன்றோ? வேஷம் உண்டு, வல்லமை இல்லை (2 தீமோ 3:5). பெயர் உண்டு, உயிர் இல்லை (வெளி 3:2). பணம் உண்டு, தரிசனம் இல்லை (வெளி 3:17). ஊழியம் உண்டு, உருக்கம் இல்லை (வெளி 2:2-4). பெருக்கல் இல்லை, வகுத்தல்தான்! பிரசங்கியின் வார்த்தைகளில் சொன்னால், "நியாய மேடையைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது; நீதிமன்றத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது" (பிர 3:16). ஆனால் தேவன் இன்னும் விட்டுவிடவில்லை.



பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளப்போவதில்லை (மத் 16:18). நம்மைப் பொறுத்தவரை தீர்க்கதரிசியைப்போல் தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டே—வசனத்தை அறிவித்துக்கொண்டே—இருக்கவேண்டும். "சத்த மிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே!" (ஏசா 58:1).

அப்பொழுது திருச்சபையானது தான் இருக்கவேண்டிய இடத்திற்கு வந்து சேரும். அது "மகா பெரிய சேனையாய்" எழுந்து நின்று உலகைக் கிறிஸ்துவுக்காய்ப் பிடிக்கும் (எசேக் 37:10).

### 4. வேலையின் பிரமாண்டம்

*"மாபெரும் மலையே, நீ எம்மாத்திரம்?" (சக 4:7).*

இன்னும் சந்திக்கப்படாத மக்கள் வகுப்புகள், வேதம் மொழிபெயர்க் கப்படாத மொழிகள், நற்செய்திக்குச் சாட்சிகளில்லாத கிராமங்கள், மிஷ னரியைக் கண்டிராத ஆதிவாசிகள், ஜெபக் குழுக்கள் இல்லாத கல்லூரி கள், இவைகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் மயக்கம் வந்துவிடும் போலிருக்கிறது. மிஷனரி ஊழிய விரிவையெல்லாம் மக்கட்பெருக்கம் எனும் அரக்கன் விழுங்கிவிடுகிறானோ? இன்றைய நிலையில் 35 ஆண்டுக்கொருமுறை இந்தியாவின் மக்கட்தொகை இருமடங்காகிறது; சீனா இருமடங்காக 49 ஆண்டாகிறது. இதுவும் போதாதென்று ஆதிவாசி களின் பழமையான சில மார்க்கங்களும் உயிர்மீட்சியடைகின்றனவாம்!

இன்னும் சந்திக்கப்படாத உலகம் ஒரு பெரிய மலைதான். சபையின் கையிலிருப்பதெல்லாம் ஒரு தலைக்கல்தான்! (வச 7). ஆனால் அதுதான் கிறிஸ்துவின் அதிகாரத்தையும் ஆவியின் வல்லமையையும் குறிக்கும். கட்டாயம் மலையானது சமபூமியாகும்! ஏற்கனவே மிஷனரி எழுப்புதல் துவங்கிவிட்டது. காரியங்கள் நிகழத் துவங்கிவிட்டன. "அற்பமான ஆரம் பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்?" (வச 10). இப்பொழுதிருப் பதெல்லாம் "கையளவு" மேகம்தான்! (1 இரா 18:44,45). ஆனால் சீக்கிரம் "வானம் கறுத்துப் பெருமழை" உண்டாகும்! இத்தனை நூற்றாண்டுகளில் முடிக்கப்பெறாதது அடுத்த சில ஆண்டுகளில் முடிந்து தீரும்! தேவ ஆவியினால் அது சாத்தியமாகும் (சக 4:6,14).

### 5. நமது வசதிக் குறைவு

*"இத்தனை பேருக்கு அப்பங்களை எங்கே வாங்க முடியும்?" (யோ 6:5,9).*

அவர்களிடமிருந்ததெல்லாம் ஐந்தப்பமும் இருமீனும்தான். ஆண்கள் மட்டும் ஐயாயிரமானால் பிள்ளைகளும் சேர்த்து எத்தனைபேர் இருந்திருப்பார்கள்! இருந்த ஆகாரத்தைத் தேவையோடு ஒப்பிட்டால் கடலில் காயம் கரைத்த கதைதான்! ஆனால் அது காரியமல்ல. நம்மிடம் இருப்பதை அர்ப்பணித்துவிடவேண்டும். அதை எவ்வளவு வேண்டுமானாலும் பெருக்குவார் தேவன். ஆனால் நம்மிடமிருப்பதைக் கொடுக்கும்வரை ஒன்றும் நடக்காது.

இளைஞன் உள்ளதையெல்லாம் கொடுத்தான். விதவை உள்ளதையெல்லாம் கொடுத்தாள். பத்திலொன்றைப் பற்றிப் பேசியது போதும்; பத்தில் பத்தையும் கொடுக்கவேண்டிய காலமிது!

ஓர் அச்சகம் அமைக்க மட்டும் பணமிருந்தால்... இன்னும் இரு வாகனங்கள் மட்டுமிருந்தால்... இன்னும் கூடுதல் தாங்குவோர் மட்டும் கிடைத்துவிட்டால்... இதுவே ஊழியங்கள் எப்போதும் பாடும் பல்லவி. இதை நிறுத்துவோம். “நம்மால்” இயன்ற அத்தனையும் கொடுக்கத் துவங்கினால் தான் அற்புதங்கள் நிகழும். தன்னால் முடிந்த யாவற்றையும் கொடுக்கும் வரை ஊழியத்திற்குப் பணத்துக்காக ஜெபிப்பதை ஜார்ஜ் முல்லர் மாய்மாலமாகக் கருதினார். ஆலயம் கட்ட தான் சேர்த்தது போக தாவீது “எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்திற்கென்று கொடுக்கிறேன்” என்றான் (1 நாளா 29:3).

கொடுப்பதைக் குறித்த போதனைகள் துவங்கிவிட்டன. கொடுத்தலில் இதுவரையில்லாத எழுப்புதல் வரப்போகிறது. உலகிற்குப் போதுமான அளவு ஜீவ அப்பம் விநியோகிக்கப்படும்.

### 6. நிறைவேறுவதில் தாமதம்

*“அவனை எங்கே வைத்தீர்கள்?” (யோ 11:34).*

லாசரு இறந்து நாலு நாளாயிற்று. “இப்பொழுது நாறுமே” என்றாள் மார்த்தாள் (வச 39). உண்மைதான், அவளைப் பொறுத்தவரை இயேசு பிந்தியே வந்தார். ஆனால் அற்புதம் செய்ய அவருக்கு எப்பொழுதுமே காலம் கடந்திடுவதில்லை. லாசரு தூங்குகிறான் என்றார்!

தூங்கும் இராட்சதன் என்று திருச்சபையை ஒருவர் அழைத்தார்! இன்னொருவர் அதைத் தூங்கும் அழகி என்றார்! ஆனால் இதோ சபைக்கு



வரும் கர்த்தரின் அழைப்பு: “எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது... மக்களினங்கள் உன் ஒளியினிடத்திற்கு வருவார்கள்” (ஏசா 60:1,3).

கிறிஸ்துவின் பேராணையை நிறைவேற்றத் தாமதித்ததற்காய் நாம் மனந்திரும்பவேண்டியது அவசியம்தான்; ஆனால் நாம் தைரியமிழக்கக் கூடாது. இத்தனை ஆண்டுகளில் நிறைவேற்றப்படாததை தேவனால் இனிவரும் ஒருசில ஆண்டுகளில் நிறைவேற்றிட முடியும். முன்மாரி முடிந்துவிட்டது. நாம் “பின்மாரி காலத்தில்” இருக்கிறோம். “கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்!” (சக 10:1). எங்கும் நற்செய்திமயம்!

மனதைத் தளரவிடவேண்டாம்; கல்லையும் தடையாயிருக்கும் யாவற்றையும் அகற்றுவோம். மானிடர் யாவரும் தேவ மகிமையைக் காணுவர்! (யோ 11:40,41; ஏசா 40:3-5).

### 7. நமது உடலின் பலக்குறைவு

*“கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான்?” (மாற் 16:3).*

அவர்கள் யாவரும் பெண்கள். உற்சாகம் இருந்தது, உடல் பலம் இல்லை. அவ்வளவு அதிகாலையில் ஆடவரான சீடர் யாரும் இவர்களோடு கூடச் செல்லாததேனோ? காவல் காத்த போர்ச் சேவகருக்குப் பயமோ என்னவோ? ஆனால் இப்பெண்மணிகளுக்கு ஆண்டவர் மீதிருந்த நேசத்தை எதுவும் தடுத்து நிறுத்த முடியவில்லை. நேசம் “மரணத்தைப் போல்” வலியதல்லவா? அதைத் தண்ணீரால் அவிக்கமுடியாது, வெள்ளத்தால் தணிக்க முடியாது! (உன் 8:6,7).

நம்மில் யாருக்குத்தான் சுகவீனமில்லை, பலவீனமில்லை? ஆனால் உலகைப் படைத்த ஆண்டவர் சோர்ந்துபோகிறவனுக்குப் பலமளித்து சக்தியில்லாதவனுக்குச் சக்தியைப் பெருகப்பண்ணுகிறார். எதற்கு? உலகின் கடைசிவரை “பறந்து, ஓடி, நடந்து” நற்செய்தி அறிவிக்க! (ஏசா 40:28-31). தமது ஊழியத்தை இப்பூவுலகில் நிறைவேற்ற ஆண்டவர் வலுவற்றவரையே தெரிந்துகொள்கிறார் (1 கொரி 1:27).

வந்தது வரட்டும்! உபத்திரவமா, வியாகுலமா, துன்பமா, பசியா, நிர்வாணமா, நாசமோசமா, பட்டயமா? எதுவும் நம்மைத் தடுக்க முடியாது! கிறிஸ்துவின் அன்பு நம்மை உந்தித் தள்ளுகிறதே!

புறப்பட்டுப் போவோம்! கல்லைப் புரட்டி வழியை ஆயத்தம்பண்ண ஆண்டவர் ஏற்கனவே தூதரை அனுப்பிவிட்டார்.

விசுவாசித்துப் புறப்படுங்கள்—ஆபிரகாம் போல்!

துணிந்து இறங்குங்கள்—தாவீது போல்!

கீழ்ப்படிந்து அறிவியுங்கள்—எசேக்கியேல் போல்!

அபிஷேகம் பெற்று செய்துகொண்டேயிருங்கள்—செருபாபேல் போல்!

அர்ப்பணித்து எதிர்பாருங்கள்—சிறுவனையும், சீடரையும் போல்!

தைரியமாய்ச் சாதகச் சிந்தையுடனிருங்கள்—இயேசு மார்த்தாளுக்குச் சொன்னதுபோல்!

தேவனை நேசித்துத் துடிப்பாயிருங்கள்—மகதலேனா மரியாள் மற்றும் அவளது சிநேகிதிகள் போல்!

அப்பொழுது அது முடியும், அது நடக்கும்!

உலகம் நற்செய்தி மயமாகும்—நமது தலைமுறையில்!



# 24

# மிஷனரி பாக்கிய வசனங்கள்

ஆத்தும பாரமுடையோர்
**பாக்கியவான்கள்;**
விண்ணரசு அவர்களுடையது!

அழியும் மாந்தருக்காய்க் கண்ணீர் சிந்துவோர்
**பாக்கியவான்கள்;**
அவர்கள் அறுவடை நாளில் ஆனந்திப்பர்!

கீழ்ப்படிந்து செல்லுவோர்
**பாக்கியவான்கள்;**
அவர்கள் மண்ணுலகைச் சுதந்தரித்துக்கொள்ளுவர்!

தங்கள் பிள்ளைகளை மிஷனரி ஊழியத்திற்கு அர்ப்பணிப்போர்
**பாக்கியவான்கள்;**
அவர்கள் தகுந்த பலனடைவர்!

தாராளமாய்க் கொடுப்போர்
**பாக்கியவான்கள்;**
அவர்கள் மறுவாழ்வில் பன்மடங்காய்ப் பெறுவர்!

மிஷனரிச் சிந்தையுள்ள சபைகள்
**பாக்கியமுள்ளவை;**
அவை இறைவனது புன்னகையால் பொலிவு பெறும்!

தங்கள் உயிரைப் பணயம் வைப்போர்
**பாக்கியவான்கள்;**
அவர்கள் கடவுளின் படைவீரர் என்னப்படுவர்!

துன்புறுத்தப்படுவோர்
**பாக்கியவான்கள்;**
அவர்கள் கனம் பெறுவர்!

பெயர்க் கிறிஸ்தவர்கள் உங்கள் மிஷனரிப்பணியை
அசட்டைசெய்து குறைகூறுவரானால் நீங்கள்
**பாக்கியவான்கள்;**
மகிழ்ந்து களிகூருங்கள்,
விண்ணுலகில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.
உங்களுக்கு முன்னிருந்த மிஷனரிகளையும்
அப்படியே துன்பப்படுத்தினார்களே!

**கிறிஸ்தவ வாழ்வில்**
**நிறைவாய் வளர உணவளிக்கும்**
**ஒரு தினசரித் தியான நூல்...**




*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும்...**
**அனைத்து வயதினரும்...**
**அனைத்துத் துறையினரும்...**
**விரும்பி வாசிக்கும்**
**ஒரு புதிய படைப்பு**

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
பெங்காலி, மராத்தி, மலையாளம், தெலுங்கு
ஆகிய மொழிகளிலும் உண்டு.

*432 பக்கங்கள்*
*விலை ரூ. 100/– அனுப்பச் செலவு ரூ. 25/–*

கிடைக்குமிடம்:

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*
*00 91 98437 07600* <stanleyonbible@hotmail.com>

# ‘‘பைபிள் புதையல்கள்’’

by **R. ஸ்டான்லி**

ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல் இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்; உறையுடன் தடித்த அட்டை; ரூ. 500/-
அனுப்பச் செலவு ரூ. 50/-
*ஆங்கிலத்திலும் உண்டு.*

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
*ஆங்கிலத்திலிருந்து தமிழ்.*

■

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/- அனுப்பச் செலவு ரூ. 100/-

■

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/- அனுப்பச் செலவு ரூ. 25/-

■

***100 மணி நேரத் திடமான வேத போதனை***

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்தை வைத்துக்கொண்டு இந்த ஒலி-ஒளித்தட்டுகளைப்
பயன்படுத்துவது 3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*



## ஆசிரியரது பிற நூல்கள்

- *அறிவூட்டும் அகவுணர்வுகள்*
- *ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?*
- *இரட்சிக்கப்படுவது எப்படி?*
- *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?*
- *உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்*
- *ஊழியரும் மக்களும்*
- *எதிர்நீச்சல் வாலிபர்*
- *எப்படி உதவக்கூடாது?*
- *எப்படிக் கொடுக்கக்கூடாது?*
- *எப்படித் தியானிக்கக்கூடாது?*
- *எப்படி ஜெபிக்கக்கூடாது?*
- *ஐந்தப்பம் இருமீன்*
- *கண் திறக்கும் கட்டுரைகள்*
- *காட்டுத் தேன்*
- *கீழ்ப்படிதலே மேல்படி!*
- *சமநிலைக் கிறிஸ்தவன்*
- *சிறு நரிகள்*
- *திறந்த வானம்*
- *திரும்பிய மனிதன்*
- *நெஞ்சில் நெருப்பு*
- *பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!*
- *பொற்பழங்கள்*
- *பைபிள் பதில்கள்*
- *பைபிள் புதையல்கள்*
- *மாணவ மணிகளுக்கு...*
- *வல்லமை தேவனுடையது!*
- *விசுவாச வாழ்வு*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச் செய்திகள்
அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

**StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

**CONTENTS**

***My Letters***

Stanley talks heart to heart with the Visitors of this Website.

❒

***General Messages***

Enlightening Articles for Christian Growth

❒

***Sermon Outlines***

Outlines on miscellaneous subjects for Personal Meditation and Pulpit Preaching

❒

***Bible Studies***

Studies on specific themes and select books of the Bible

❒

***Doctrinal Essays***

Corrective Teaching to uphold Sound Doctrines of the Bible

❒

***Youth Matters***

Practical Guidelines to Young Men and Young Women for Successful Living

❒

***Leaders Column***

Biblical Insights and Practical Lessons on Christian Leadership

❒

***Missionary Challenge***

Calling Christians to obey the Great Commission of Christ

❒

***My Answers***

Answers to Questions frequently asked but rarely answered

❒

***Quotable Quotes***

Stanley's analytical Statements about Christian Life and Ministry

❒

***Video Talks***

Freely downloadable video and audio sermons of Stanley

*(Register your e-mail id on this website to receive updates instantly.)*



# *ஆசீர்வாத இளைஞர் இயக்கம்*

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு 1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத, ஒரு திருப்பணி***

❒

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள், பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❒

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❒

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின் குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள், மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❒

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம், ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

❒

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை, புத்தகங்கள் மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❒

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல் மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
*தொலைபேசி: 00 91 416 2242943, 2248943*
*<hq@bymonline.org>   www.bymonline.org*